
# பாரதப் பண்பாட்டு தளத்தில் பாரதி



அ. சீனிவாசன்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# பாரதப் பண்பாட்டு தளத்தில் பாரதி

No. 3892

ஆசிரியர்

**அ.சீனிவாசன்**

வெளியீடு

**அ.சீனிவாசன்**

10/6 வேதாசலம் தெரு

சாலிகிராமம்

சென்னை - 600 093.

நூலின் பெயர்

பாரதப் பண்பாட்டுத் தளத்தில்
பாரதி

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | **அ.சீனிவாசன்** |
| மொழி | : | தமிழ் |
| வெளியீட்டு எண் | : | முதல் பதிப்பு |
| ஆண்டு | : | 1999 |
| தாள் | : | 16 Kg மேப் லித்தோ |
| நூல் அளவு | : | 1/8 டெம்மி |
| விலை | : | ரூபாய்.50 மட்டும் |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| வெளியீடு | : | ஆசிரியர்<br>அ.சீனிவாசன்<br>10/6 வேதாசலம் தெரு<br>சாலி கிராமம்<br>சென்னை - 600 093. |
| அச்சும் வடிவமைப்பும் | : | **மாணவர் மறுதோன்றி மையம்**<br>பாரிமுனை, சென்னை - 600 001.<br>தொலைபேசி 5382513 |

* தமிழக அரசு தமிழ் வளர்ச்சித்துறை சிறந்த நூலுக்கு உதவித்திட்டத்தின் உதவியுடன் வெளியிடப்படுகிறது.

8892

# பாரதப்பண்பாட்டு தளத்தில் பாரதி

## பொருளடக்கம்


*தோற்றுவாய்

1. பாரதியின் பண்பாட்டு தளத்தின் அடிப்படை :
* பொது நெறியில் புதுநெறி - குலதர்மம் - பெண்ணின் மேன்மையும் பெருமையும் பற்றி - பெண் விடுதலை.

2. தெய்வீகப்பாத்திரங்களைப்பற்றி :
* பாரத மாதா - கண்ணனைப் பற்றி - கண்ணன் என் தாய் கண்ணன் என் தந்தை - கண்ணன் என் அரசன் என்னும் கவிதையில் - பாஞ்சாலி சபதத்தில் பாரதி.

3. வரலாற்றுச் சிறப்புமிக்க பேரறிஞர்கள், ஞானிகள், பெரியோர்கள் பற்றி :
* சுய சரிதையில் - சிவாஜியும் குரு கோவிந்தரும்.

4. தேசியத்தலைவர்கள் பற்றி :
* தாதாபாய் நவுரோஜி - லோகமான்ய பாலகங்காதரத்திலகர் லாலா லஜபதி ராய் - வ.உ.சிதம்பரம் பிள்ளை - ஞானபானு - காரைக்குடி இந்து மகாபிமான சங்கம்.

5. பாரதியின் புது நெறி :
* தன்னிலை விருப்பம் - பாரதியின் பாரத சமுதாயம் - பாரதியின் விடுதலை நோக்கின் பன்முகப்பரிமாணங்கள் - பாரதியின் கவிதையில் தமிழ் நாட்டின் தனித்தன்மை - பாரதியின் உலகளாவிய தத்துவம் - கலியின் வீழ்ச்சியும் கிருதயுகத்தின் தோற்றமும்.

# பாரதப்பண்பாட்டு தளத்தில் பாரதி

**முன்னுரை :**

மகாகவி சுப்ரமணிய பாரதி இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளிப்பட்ட மாபெரும் தமிழ்ப்புலவனாகும். அவருடைய மொத்த வாழ்நாள் 1882 டிசம்பர் 11 பிறப்பு 1921 செப்டம்பர் 12 மறைவு ஆக 39 ஆண்டுகள் நிறைவு பெறவில்லை. இதில் சுமார் 20 ஆண்டுகளுக்கும் குறைவானதுதான் அவருடைய பொது வாழ்க்கை என்று கூறலாம். இந்த இருபதுக்கும் குறைவான ஆண்டுகளுக்குள்தான் அவருடைய கவிதைகளும் கதைகளும் கட்டுரைகளும் எழுத்துரைகளும் வெளிப்பட்டுள்ளன.

1920ம் ஆண்டுகள் 30ம் ஆண்டுகளில் தமிழகத்தில் தேசிய இயக்கங்களும் போராட்டங்களும் பரவியபோது, தேசபக்தர்களுக் கிடையிலும் தேசீய இயக்கத்துடன் தொடர்பு கொண்டிருந்த மக்களுக்கிடையிலும் பாரதியாரின் பாடல்கள் பிரபலமாயின. ஆயினும் பாரதியின் முழுவடிவம் தமிழ் மக்களுக்கிடையில் வெளிப்படுவதில் பல பரச்சனைகள் இருந்திருக்கின்றன. ஆயினும் மகாகவி பாரதி இன்று தமிழ் கூறும் நல்லுகத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களில், வீடுகளில் இடம் பெற்றுள்ள மாபெரும் கவிஞனாகும். இருப்பினும் பாரதியை தமிழ் மக்களுக்கிடையிலும் இந்திய மக்களுக்கிடையிலும், உலக மக்களுக்கிடையிலும், இன்னும் அதிகமாக அறிமுகப்படுத்த வேண்டிய பணிகள் இன்னும் ஏராளமாக இருக்கின்றன. அவை தொடரவேண்டும் மேலும் தொடர வேண்டியதிருக்கிறது.

பாரதியைப் பற்றி ஏராளமான பல நூல்களும் ஆய்வுரைகள் வெளியாகியுள்ளன. பாரதி விழாக்களும் ஏராளமாக நடைபெற்றுள்ளன, நடைபெற்று வருகின்றன. பாரதி பெயரில் பாரதியின் கருத்துக்களைப் பரப்பும் பல மன்றங்களும் அமைப்புகளும் இன்று நாடெங்கும் செயல்பட்டு வருகின்றன. மும்பை, டில்லி, கல்கத்தா முதலிய நாட்டின் முக்கிய நகரங்களிலும் பாரதி பெயரிலான அமைப்புகளும் மன்றங்களும் சங்கங்களும் செயல்படுகின்றன.

ஆயினும், பாரதியின் பெயரும் தியாகமும் பரவியுள்ள அளவில் அவருடைய கவியுள்ளமும், கருத்துக்களின் ஆழமும் மக்களிடத்தில் பரவுவதில் இன்னும் இடைவெளி இருக்கிறது. 1982ம் ஆண்டில் பாரதியின் நூற்றாண்டு விழா நடைபெற்றபோது பாரதி சற்று அதிகமாக அறிமுகமானார். பல அறிஞர்களும், அன்பர்களும் பாரதியைப் பற்றி பல செய்திகளை வெளிப்படுத்தினார்கள். பாரதி இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தைச் சேர்ந்தவர் என்னும் முறையில், அவருடைய சமகாலத்தவர்களும், அவரை நேரில் அறிந்தவர்களும் வெளிப்படுத்திய பல செய்திகளும், தகவல்களும் அவரைப்பற்றிய அவருடைய வாழ்க்கை விவரங்களைப் பற்றிய, அவரது

பணிகளையும் படைப்புகளையும் பற்றிய விவரங்களை அறிந்து கொள்வதற்கு பயனுள்ளதாக அமைந்திருக்கிறது.

சுப்ரமணிய பாரதி ஒரு மாபெரும் கவிஞன், ஒரு எழுத்தாளன், ஒரு பத்திரிகையாளன், ஒரு தேசபக்தன் என்றும் முறையில் அவருடைய படைப்புகளும், கருத்துக்களும் இன்னும் விரிவாக மக்களிடம் செல்ல வேண்டும். நமது கல்வி நிலையங்களுக்குள் செல்ல வேண்டும். பாரதி ஒரு புரட்சிகர ஜனநாயகப் பெரும்புலவன் என்னும் முறையில் அவருடைய கவியுள்ளத்தின் விரிவை நாம் காணவேண்டும்.

கம்பன், திருவள்ளுவர், இளங்கோவடிகள் வரிசையில் பாரதி உயர்ந்து நிற்பதை நாம் காண்கிறோம். பாரதி சிந்தனைகளின் சிறப்பை அதன் அனைத்து பரிமாணங்களிலும் கண்டு தெளிய வேண்டும். பாரதியின் படைப்புகளைப்பற்றி விளக்கியும் விரிவுபடுத்தியும் எண்ணற்ற பல நூல்களும் வெளிவரவேண்டும். பாரதி பாடியுள்ள ஒவ்வொரு பகுதி பாடல்களுக்கும் விளக்கவுரைகள் வெளிவரவேண்டும். நமது பல்கலைக்கழகங்களில் கம்பன், வள்ளுவன், இளங்கோவடிகள், பாரதிக்கும் தனித்துறைகள் நிறுவி ஆய்வுகளும் சிறப்பு நிகழ்ச்சிகளும் நடத்த வேண்டும்.

பாரதி ஒரு அறிய நூலை, ஒரு சிறப்பான காவியத்தை, முக்கிய அறநெறிக்கருத்துக்களைக் கொண்ட தொகுப்பை மட்டும் எழுதவில்லை. பாரதி, பாரத பூமி இதுவரை தோற்றுவித்திருக்கும் நல்ல அனைத்தையும் கிரகித்து, அல்லன அனைத்தையும் நிராகரித்து ஒரு புதிய திசை வழியை சமுதாய முன்னேற்றத்திற்கான திசை வழியைக் காட்டியுள்ளான். ஒரு புதிய மார்க்த்தைக் காட்டியுள்ளான்.

பாரதி பாரத நாட்டின் பண்பாட்டு தளத்தில் நின்று, நாட்டு மக்களின் பல்வேறு பிரச்னைகளுக்கு தீர்வு காணவும், வழி காணவும், முன்னேற்றம் காணவும் தனது கவிதைகளின் உள்ளடக்கத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

1980-ம் ஆண்டுகளில் நான் ஜனசக்தி நாளிதழின் ஆசிரியராக இருந்த போது பாரதி நூற்றாண்டு விழாவின் போது ஜன-சக்தி பாரதி சிறப்பு மலர் கொண்டு வருவதற்கு முயற்சிகள் எடுத்து ஒரு அறிய சிறப்பு மலர் கொண்டு வந்தோம். 1982-83ம் ஆண்டு முழுவதிலும் ஜன சக்தி நாளிதழில் பாரதியின் பல பரிமாணங்களைப் பற்றியும் பல கட்டுரைகளும் வெளியிடப்பட்டன. சிறப்பு மலரிலும் பல அறிஞர்கள் பாரதியைப் பல கோணங்களிலும் ஆய்வு செய்து கட்டுரைகள் எழுதியிருந்தனர். அந்த சிறப்பு மலரை உருவாக்கி வெளியிடுவதில், பாரதியின் புதிய கருத்துக்களில் முழுமையாக ஈடுபாடு கொண்டிருந்த அறிஞர் ஆர்.கே.கண்ணன் அவர்கள் பெரும் துணையாக இருந்து சிறந்த

ஆலோசனைகளைத் தெரிவித்து உதவியிருந்தார்.

அது முதல் பாரதியைப் பற்றி, பாரதியின் பல்வேறு பரிமாணங்களைப் பற்றி பல நூல்கள் எழுத வேண்டும், வெளியிட வேண்டும் என்ற எண்ணம் உருவாயிற்று. அந்த எண்ணம் நிறைவேறுவதில் வழக்கம் போல் பல சிரமங்கள் ஏற்பட்டன. ஆயினும் இப்போது அந்த வழியில் பாரதி பற்றிய நூல்கள் பலவும் எழுதப்பட்டு அவை வெளியிடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் பகுதியாகவே பாரதப்பண்பாட்டுத் தளத்தில் பாரதி என்னும் இந்த நூல் வெளியாகிறது.

சென்னை க.க. நகரில் நான் குடியிருந்தபோது சிறந்த தமிழறிஞரும் இலக்கிய சொற் பொழிவாளருமான திரு.புலவர் தமிழ்முடி அவர்களை சந்தித்து அவருடன் கலந்துரையாடும் வாய்ப்பு ஏற்பட்டது. புலவர் தமிழ்முடி அவர்கள் பாரதி வளர்ச்சி சங்கம் என்னும் அமைப்பை நடத்தி கொண்டிருக்கிறார். அந்த அமைப்பின் மூலம் வாரம் தோறும் சிறந்த சொற்பொழிவுகளை நடத்திக் கொண்டிருக்கிறார். அவருடைய சிறந்த சொற்பொழிவுகளைக் கேட்பதற்காக அக்கூட்டங்களில் நானும் கலந்து கொண்டேன். அப்போது பாரதியைப் பற்றி ஒருநாள் தனியாக ஒரு சிறப்புரை நிகழ்த்த வேண்டும் என்று என்னை வற்புறுத்தக் கேட்டுக் கொண்டார். அவருடைய வற்புறுத்தலைத் தட்ட முடியாமல் நானும் ஏற்றுக் கொண்டு " பாரதப் பண்பாட்டு தளத்தில் பாரதி" என்னும் தலைப்பில் ஒரு நாள் பாரதி வளர்ச்சி சங்கத்தின் கூட்டத்தில் சிறப்புரை நிகழ்த்தினேன். அந்த உரை ஓரளவில் சிறப்பாகவே அமைந்தது. அதன் குறிப்புகளை நான் திரும்பவும் பார்த்த போது அதனடிப்படையில் அக்கருத்துக்களை விரித்து ஒரு நூலாகவே எழுதிவிடலாம் என்று தீர்மானித்து இந்த நூல் எழுதி முடிக்கப்பட்டது.

இந்த நூலை அச்சிட்டு வெளியிடுவதற்காக நிதிஉதவி கேட்டு மாநில அரசின் தமிழ்வளர்ச்சித்துறைக்கு விண்ணப்பம் செய்யப்பட்டு தமிழ் வளர்ச்சி - சிறந்த நூல்கள் வெளியிட நிதி உதவித் திட்டத்தின் கீழ் இந்த நூல் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த நூலை சிறந்த முறை அச்சிடுவதற்கு மாணவர் மறுதோன்றி அச்சகத்தார் முன்வந்துள்ளார்கள்.

இந்த நூல் தொடர்பாக எனக்கு ஊக்கமளித்து உதவி செய்துள்ள அனைத்து நண்பர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூலை வாங்கிப்படித்தும், அடுத்து வரும் நூல்களுக்கும் ஆதரவளித்தும் ஊக்கமூட்டும்படி வாசகர்களைக் கேட்டு, இந்த நூலை தமிழ் கூறும் நல்லுகத்திற்கு சமர்ப்பிக்கிறேன்.

அ.சீனிவாசன்
நூலாசிரியர்

# பாரதப் பண்பாட்டுதளத்தில் பாரதி

## தோற்றுவாய்

பாரதி இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகத்தில், பாரத நாட்டில் தோன்றிய இணையற்ற பெரிய கவிஞன். பாட்டுக் கொரு புலவன், கவிக்குயில். தேசீய உணர்வையும் நாட்டுப் பற்றையும் ஊட்டிய பெரும்புலவன். நாட்டு விடுதலைக்கும், சமூக சீர்திருத்தத்திற்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் தனது கவிதைகள், கட்டுரைகள், கதைகள் மூலம் நாட்டு மக்களைத் தட்டி எழுப்பிய, புரட்சிகரஜனநாயகப் பெரும் புலவன். பாரதி நாட்டு மக்களிடையில் நிலவிய பல பிரிவு வேறுபாடுகளையும், பாகுபாடுகளையும் சாடினான். பாரத நாட்டின் அனைத்து மக்களின் ஒற்றுமைக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் பாடினான். பெண்விடுதலையைப் பற்றி உணர்ச்சி வேகத்துடன் பாடினான். எழுதினான். சாதிவேறு பாடுகளையும் மூடப்பழக்க வழகங்களையும் சாடினான். பாப்பாவைப் பாடினான். நாட்டின் ஒளி மிக்க எதிர்காலத்தை வரவேற்றான்.

"நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல் என்று தனது வாழ்க்கையின் இலட்சியத்தை வகுத்துக் கொண்டிருந்தான். இந்த வழியில் அவன் கர்மயோகியாக வாழ்ந்தான்.

பாரதியின் பாடல்களை நாட்டுப்பாடல்கள், தெய்வப்பாடல்கள், ஞானப்பாடல்கள், சுயசரிதை, சமூகப்பாடல்கள், பாஞ்சாலிசபதம், கண்ணன்பாட்டு, குயில்பாட்டு என்றெல்லாம் இன்னும் தேசபக்திப் பாடல்கள். தெய்வபக்திப்பாடல்கள், பாப்பாப்பாட்டு, புதுமைப்பெண், புதிய ஆத்திசூடி, தனிப்பாடல்கள் பலவகைப்பாடல்கள் வசனகவிதை என்றெல்லாம் பிரித்தும் தொகுத்தும் வெளியிடப்பட்டுள்ளன. அவர் எழுதிய பலகட்டுரைகளும், கதைகளும் கூட தனியாக வெளியாகியுள்ளன.

பாரதி நமது நாட்டு மக்கள் வழிபடும் பல்வேறு தெய்வங்களைப்பற்றியும், தெய்வீகப் பாத்திரப்படைப்புகளைப் பற்றியும், பாரத தேசத்தைப்பற்றியும் தமிழ்நாட்டைப் பற்றியும் தேசீய விடுதலை இயக்கத்தின் தலைவர்களைப் பற்றியும், வரலாற்று சிற்பிகளைப்பற்றியும் கவிஞர்களைப்பற்றியும், இலக்கியச் செம்மல்களைப்பற்றியும், பிற நாட்டு விடுதலை இயக்கங்களைப்பற்றியும் சமுதாயத்தைப்பற்றியும் பெண்விடுதலைபற்றியும், எதிர்காலச் செல்வங்களின் முன்னேற்றம் பற்றியும் தீர்க்கமான தெளிவான கருத்துக்களைக் கொண்ட பாடல்களைப் பாடியிருக்கிறான்.

தனிச் சிறப்பான பாடல்களாக கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, வசன கவிதைகள், இயற்கையைப் பற்றிய பாடல்கள் அமைந்துள்ளன.

தமிழின் தற்காலத்தில் ஒரு காவியம் எழுத வேண்டும் என்று கருதி பாஞ்சாலி சபதம் என்னும் பெயரில் ஒரு சிறப்புமிக்க சிறு காவியத்தைப் பாடியுள்ளான்.

பாரதியின் பாடல்களைப்படிக்கும்போது, பாடும்போது, பாடுவதைக்கேட்கும் போது, பாரதியின் தேச பக்தியை, மொழிப்பற்றை, தமிழ்ப்பற்றை, தெய்வபக்தியை, மனிதாபிமானத்தை, அவனுடைய தத்துவதரிசனத்தை, தலை சிறந்த கவித்வத்தை கருத்தாழத்தைக்காண முடிகிறது. பாரதியின் பன்முகப்பரிமாணங்களையும் உலகப் பெருவடிவத்தையும்காண முடிகிறது.

பாரதி எதைப்பற்றிப் பாடினாலும்,எந்தத்துறையைத் தொட்டுத்தனது கவிதைகளை வடித்தாலும் பாரத நாட்டு பண்பாட்டு தளத்தில் நின்றும் தமிழ் நாட்டின் தனித்தன்மையில் நின்றும் பாடியுள்ளான்.

பாரத மண்ணில் வேர்விட்டு ஆலவிருட்சமாய்ப் படர்ந்து நமக்கு நிழல்தருகிறான். பாரதி பாரதப்பண்பாட்டிலும் பாரதத்தின் மரபு வழியிலும் உறுதியாக வேர் ஊன்றி நிற்கும் அதே தருணத்தில் அவன் சிதைந்து போன, காலத்திற்கு ஒவ்வாத பழமை வாதக்கருத்துக்களை உதரி எரிந்து விட்டு புதுமைக்கருத்துக்களை உருவாக்கி பாரதத்தின் பண்பாட்டு தளத்தை மேலும் விரிவு படுத்தியுள்ளான், செழுமைப் படுத்தியுள்ளான். பாரதியின் கவிதா மண்டலத்தின் அகலத்தையும் ஆழத்தையும் விரிவையும் பரப்பையும் பன்முகப்பரிமாணங்களையும் மென்மேலும் இடைவிடாமலும் தொடர்ச்சியாகவும் பல வழிகளிலும் மக்களிடம் கொண்டு சென்று சமுதாயமுன்னேற்றத்திற்கான பங்கைச் செலுத்த வேண்டும்.

பாரதி தான் வாழ்ந்த காலத்தில் வறுமை, வாய்ப்பின்மை, வசதிக்குறைவுகள், அன்னிய ஆட்சியின் அடக்கு முறைக்கொடுமைகள், இடைவிடாத போலீஸ் வேட்டை காரணமாக அனுபவித்த துன்பதுயரங்களுக்கு அளவே இல்லை. அந்த கோரங்களைத் தாண்டித்தான் பாரதி ஒரு மாபெரும் கவிஞனாக ஒரு மாபெரும் மனிதனாக நமது நாட்டின் தலை சிறந்த அறிவுச் செல்வர்களின் ஞானிகளின் சித்தர்களின் வரிசை யில் நின்று தனது உலகப் பெருவடிவத்தை தனது விஸ்வரூபத்தைக் காட்டியுள்ளான்.

பாரதி தனது தேசபக்திப் பாடல்களுக்கான முன்னுரையில் சமர்ப்பணமாகக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விஸ்வரூபம்காட்டி ஆத்துமநிலை விளக்கிய தொப்ப எனக்கு பாரத தேவியின் சம்பூரண ரூபத்தைக்காட்டி ஸ்வதேச பக்தியுபதேசம் புரிந்தருளிய குருவின் சரணமலர்களில் இச்சிறுநூலைச் சமர்ப்பிக்கிறேன்" என்று கூறுகிறார்.

பாரதி பாரத நாட்டின் விடுதலையைப் பற்றிப் பேசும்போது அன்னிய ஆட்சியிலிருந்து அரசியல் விடுதலை என்பதைப்பற்றி மட்டும் சிந்திக்கவில்லை. பாரத நாட்டின் வரலாற்றுப்பெருமையைக் கண்டான். இன்றயதுக்கங்களைக் கண்டான். நாட்டின் ஒளி மிக்க எதிர்காலத்தையும் கண்டான். அதையே பாரத அன்னையின் முழுமையான வடிவத்தைக் காண்பதாகக் கூறுகிறான்.

"முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்" அடுத்த வரியாக "மூண்டிருக்கும் இந்நாளின் இகழ்ச்சியும் பின்னர் நாடுறு பெற்றியும்" என்று குறிப்பிடுகிறார்.

பாரதி கண்டது ஒரு புதிய மார்க்கமாகும். "சூரியன் உதித்தவுடனே, சேதனப்பிரகிருதி மட்டுமேயன்றி அசேதனப்பிரகிருதியும் புதிய ஜீவனையும் உற்சாகத்தையும் பெற்றுத்திகழ்கின்றது. இவற்றினை யொப்பவே நாட்டில் ஓர் புதிய ஆதர்சம், ஓர் தர்மம், ஓர் மார்க்கம் தோன்றுமேயானால் மேன் மக்களின் நெஞ்சமனைத்தும் இரவியை நோக்கித் திரும்பும் சூரிய காந்த மலர் போல அவ்வாதர்சத்தை நோக்கித்திரும்புகின்றன' என்றும் அதைப்போல சர்வசுபங்களுக்கும் மூலாதாரமாகிய 'தேசபக்தி' என்னும் நவீன மார்க்கம் தோன்றியுள்ளது என்றும் பாரதி கூறுகிறார். பாரதியின் தேசபக்தி அனைத்தாளவிய தன்மை கொண்டதாகும். நெஞ்சில் உரமும் நேர்மைத்திறமும் கொண்டதாகும். அச்சத்தையும் பேடிமையையும் அடிமைச்சிறு மதியையும் தூக்கித்தூர எரிவதாகும். ஊக்கமும் உள்வலியும் உண்மையிற்பற்றும் கொண்டதாகும். கலியின்வலுவினை வீழ்த்தி கிருதயுகத்தினைக்கேடின்றி நிறுத்துவதற்கான புதிய மார்க்கமாகும். எனவே,

நமது அறிவுக்கண்களைத்திறந்து பாரதியின் கவியுள்ளத்தை உணர்ந்து, அவருடைய கவிதைகளின் விஸ்வரூபத்தை உலகப்பெருவடிவத்தைக் காண வேண்டும். அதற்கான வகையில் சிறு துரும்பான முயற்சியாக இந்நூலின் அடுத்து வரும் கட்டுரைக்கருத்துக்களைக் காணவேண்டும். பாரதியின் பன்முகவடிவத்தைக்காண முயலும் பல்வேறு துறை அறிஞர்களையும் பேண வேண்டும்.

பாரதியின் படைப்புகளில் காலத்தை வென்றவைகளில் ஒன்று பாரதியின் பகவத்கீதையின் மொழிபெயர்ப்பாகும். பாரதி வட மொழியையும் தமிழ் மொழியையும் நன்கு அறிந்தவன். பாரதி கண்ணனையும் பார்த்தனையும் பாரத நாடாகவே கண்டு பகவத்கீதையை தமிழாக்கம் செய்துள்ளான். பகவத்கீதை என்றும் மகத்தான பாரதத்தின் அறிவுக்களஞ்சியம், தெய்விகப் சக்தி மிக்க ஒரு மகத்தான் பேரிலக்கியம், மறை பொருளாகப்போய்விடாமல், வழிபாட்டு அறைகளிலே மட்டுமே முடங்கி விடாமல், மக்கள் அனைவருக்குமான பொதுச் சொத்தாக புதிய ச காப்தத்தில் புதிய பொலிவோடும் தெளிவோடும் நமது பாரம்பரிய பண்பாட்டுச் செல்வமான அந்த பகவத்கீதையை பாரதி தனது தனித்தன்மையோடு தமிழுக்குக் கொண்டுவந்த பெருமைநமது தவப்பயனாகும்.

பாரதி பகவத்கீதையைத் தமிழில் மொழியாக்கம் செய்ததுடன் அந்த மொழி பெயர்ப்பு நூலுக்கு அவர் எழுதியுள்ள முன்னுரை ஒரு தனியான தனிச் சிறப்பான பேரிலக்கியமாகும்.

பாரதியின் கவிதைத் தொகுப்புகளிலே கண்ணன் பாட்டும், பாஞ்சாலி பதமும் தனிச்சிறப்புமிக்க கவிதைகளாகும், என்பதை ஏற்கனவே குறிப்பிட்டுளோம்.

கண்ணன் பாட்டிற்கு முகவுரை எழுதிய நெல்லையப் பிள்ளையவர்கள் பாரதியாருக்கு கண்ணபிரான் மீதுள்ள அதி தீவிர பக்தி காரணமாக இந்நூலில் உள்ள பாடல்கள் வெளியாயின. இவை தமிழர்களுக்கு நல்விருந்தாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

" பாரத நாட்டின் குல தெய்வமாகிவிட்ட கண்ணனுக்கு பாமாலை சூட்டாத கவிகள் அருமை. தன்னை நெடுநாட்களாக மறந்திருந்த பாரத நாடு திடீர் என விழித்துக் கொண்டதும், அதன் எதிரே முதலில் தோன்றிய ஒளி கீதா சாஸ்திரத்தைக் கூறிப்பார்த்தனுடைய ரதத்தை வெற்றிபெற ஓட்டிய கண்ணபிரானுடைய உருவமே. இந்த உருவமானது நமது கவியின் இருதயத்திலும் எழுந்து அவருடைய கவிதைக்கு ஒரு சோபையைக் கொடுத்தது" என்று வா.வே.சுப்பிரமணிய அய்யர் குறிப்பிடுகிறார்.

பாரதியின் பாஞ்சாலி சபதம் ஒரு தனிப் பெரும்காவியம். மகாபாரதக்கதையின் ஒரு முக்கிய திருப்பத்தைக்குறிக்கும் முக்கியமான நிகழ்ச்சியை வைத்து இக்காவியம் எழுதப்பட்டது. எனினும் பாஞ்ச ாலியின் வடிவத்தில் பாரதி பாரத தேவியையே கண்டார். பாண்டவர்கள் அடிமைப்பட்டதை, பாரததேசம் அடிமைப்பட்டதாகவே பாரதி காண்கிறார். பாண்டவர்களும் பாஞ்சாலியும் சபதம் செய்வதை பாரத நாட்டின் விடுதலைக்காக பாரத மக்கள் சபத மேற்பதாகவே பாரதியின்

கண்முன்னே காட்சியாக வருகிறது. வீட்டுமனும் துரோணனும் கர்ணனும் விதுரனும் வேறுபல சபையோரும் இருந்த திருதராட்டிரன் சபைக்கு இழுத்து வரப்பட்ட பாஞ்சாலியை நீதி கேட்டு வாதாடியதை பெண்ணுரிமை கேட்டு வாதாடும் புதுமைப் பெண்ணாகவே பாரதி கருதினார்.

பாரதியின் பல வகை பரிமாணங்களையும் மேலும் மேலும் அதிகமாக நாம் கண்டரிய முயல்வதன் மூலம் பாரத நாட்டின் பண்பாட்டுதளத்தின் விரிவையும், கனத்தையும், பரப்பையும் உயர்வையும் அறிந்து கொள்ளவும் புரிந்து கொள்ளவும் சாத்தியமாகிறது.

# 1. பாரதியின் பண்பாட்டு தளத்தின் அடிப்படை

இந்தியப் பண்பாட்டு தளமே பாரதியின் பண்பாட்டுதளமாகும். இந்தியப்பண்பாட்டு தளத்தில் அடிப்படையாக "தர்மம்" என்று வழங்கப்படுகிறது. இந்த தர்மம், இந்திய தர்மம் என்று வழங்கப்படுகிறது. "தர்மம்" என்னும் சொல்லிற்கு தமிழில் "அறம்" என்றும் சொல்லை வழங்குகிறோம். வள்ளுவப்பெருமானின் முப்பாலில் முதல் பால் அறத்துப்பாலாகும்.

இங்கு தர்மம் என்னும் சொல்மிகவும் பரந்த பொருளில் கையாளப்படுகிறது. இந்து என்னும் சொல் இன்று பொதுவாக இந்து சமயம் அல்லது மதம் என்று பொருள் கொள்ளப்படுகிறது. அப்பொருள் தற்காலத்திய நடைமுறையில் நிலை கொள்ளப்படுகிறது.

இந்து தர்மம் என்பது பண்டய கால பாரத தேசத்தில் சநாதன தர்மம் என்று அறியப்பட்டிருக்கிறது. நிலை நிறுத்தப்பட்ட உறுதிப்பட்ட மனித கடமைகளை வலியுறுத்திக் கூறப்பட்டதாகவே சநாதன தர்மம் கருதப்பட்டது.

இந்து தர்மத்தைப் பொதுவாக ஏற்றுக்கொண்டு பல மதங்கள், சமயங்கள், வழிபாடுகள் வழிபாட்டு தெய்வங்கள் இந்தியமக்களிடையே நிலவிவருகின்றன. சிவ வழிபாடு, வைணவ வழிபாடு, சக்தி வழிபாடு, கணபதி வழிபாடு, அக்கினி வழிபாடு, முருக வழிபாடு, சிறுதெய்வ வழிபாடுகள், முதலிய சிலவகை மதங்கள் அல்லது சமயங்கள் இந்திய மக்களிடையில் பழக்கத்தில் உள்ளன. அத்துடன் புத்தம், சமணம் ஆகியவையும் தொடக்கத்தில் முரண்பட்டிருந்தன வாயினும் அவையும் பொது நீரோட்டத்தில் கலந்துவிட்டன. பின்னர் சீக்கியமும் சேர்ந்து விட்டது. பாரதி தனது கவிதைகளில் இந்திய இஸ்லாமியத்தையும் கிறிஸ்துவத்தையும் சேர்த்து விட்டார். அல்லாவும், யேஹோவாவும் பாரதி மூலம் இந்திய கடவுளர்களின் வரிசையில் சேர்ந்துவிட்டன. இன்னும் இந்தியதத்துவ ஞானத்தில் நாத்திகமும் ஒரு பகுதியேயாகும்.

தர்மம் என்னும் சொல்லிற்கு வெறும் மதம் அல்லது சமயம் என்பது மட்டும் பொருளல்ல (இந்து) தர்மம் என்பது ஒரு பொதுவான கருத்து வடிவமாகும். மதம் சமயம், மரபு, பாரம்பரியம், பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறை, நடைமுறை செயல்பாடுகள், நீதி நெறிமுறை, குணச்சிறப்புகள், குணத்தன்மைகள், சமுதாய ஒழுக்க நெறிமுறைகள், இன்னும் பல வேறுபட்ட கடமைகள் முதலிய பலவும் தர்மம் என்னும் சொல்லில் அடங்கும். தர்மம் என்னும் சொல் கடமை என்னும் சொல்லுடன் விரிவுபடும். எனவே இந்து தர்மம் என்பது வாழ்க்கை நெறிமுறையாக விரிவுபடும். தர்மம் என்பதையே அறம்

என்னும் சொல்லில் வள்ளுவப்பெருமானும், கம்பநாடரும் தங்களது பேரிலக்கியங்களில் விளக்குகிறார்கள். வள்ளுவர் தனது அறத்துப்பாலில் மனிதனுடைய கடமைகளை இல்லறம் துறவறம் என்னும் தலைப்புகளில் விளக்கிக்கூறுகிறார். கம்பன் அறம் வெல்லும் என்னும் மகத்தான லட்சியத்தையும் அதை நிறைவேற்ற வேண்டிய கடமையின் கடமையாக தனது மகா காவியத்தில் பல இடங்களிலும் குறிப்பிட்டுக்கூறுகிறார்.

பாரதி தனது விநாயகர் நான்மணிமாலையில்

" கடமையாவன், தன்னைக்கட்டுதல்
பிறர்துயர் தீர்த்தல் பிறர்நலம் வேண்டுதல்
விநாயக தேவனாய் வேலுடைக்குமரனாய்
நாராயணனாய், நதிச்சடைமுடியனாய்,
பிற நாட்டிருப்போர் பெயர் பல கூறி
அல்லா, யெஹோவா எனத்தொழுதன்புறும்
தேவரும் தானாய், திருமகள், பாரதி
உமையெனும் தேவியருகந்த வான்பொருளாய்,
உலகெலாம் காக்கும் ஒருவனைப் போற்றுதல்
இந்நான்கே இப்பூமியில் எவர்க்கும்
கடமையெனப்படும் பயனிதில் நான்காம்
அறம்பொருள் இன்பம் வீடெனும் முறையே
தன்னையாளும் சமர்த்தெனக்கருள்வாய்"

என்று குறிப்பிடுகிறார்.

அறம், பொருள், இன்பம், வீடு என்பதையே இந்து தர்மம் நான்கு புருஷார்த்தங்களான தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்று வகைப்படுத்திக் கூறுகின்றது.

நமது நாட்டில் சிலர், மேலைநாடுகள் பொருளாயத வாழ்க்கையை அதாவது லௌகீகவாழ்க்கையை அதிகமாக வலியுறுத்துகின்றன என்றும் அதற்கு மாறாக பாரத நாடு ஆன்மீக வாழ்க்கைக்கே அதிக அழுத்தம் கொடுக்கிறது எனவும் கூறிவருகின்றனர். இது முழு உண்மையல்ல.அந்தக் கருத்துக்களால் பாரதம் பாதிக்கப்பட்டிருக்கிறதே யொழிய அதனால் மேன்மையுறவில்லை. ஆன்மீக வாழ்க்கையைப்பற்றி அதிகமாகக் கூறிவரும் அறிவுச் செல்வர்களும் தங்கள் வாழ்க்கையில் எல்லா இன்பங்களையும் வசதிகளையும் அனுபவிக்க முயன்றுள்ளார்கள். யாரும் அவைகளைத் துறந்துவிடவில்லை.

நமது வேதங்களும் இந்து தர்மசாத்திரங்களும் வாழ்க்கையை வெறுக்கச்சொல்லவில்லை. வாழ்க்கையை முழுமையாக அனுபவித்து முடிவில் வீடு பெற வேண்டும். முழுவிடுதலை பெற வேண்டும். அதாவது ஒரு குறிப்பிட்ட வயதிற்குப்பின் வாழ்க்கைச்சுமைகளிலிருந்து முழுவிடுதலை பெற வேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றன. தர்மம் (அறம்) அர்த்தம் (பொருள) காமம் (இன்பம்) மோட்சம் (வீடு) என்னும் புருஷார்த்தங்கள் (பயனீடுகள்) மனித வாழ்க்கை அனைத்து வழிகளிலும் செறிப்புறவே வழி வகுத்துக் கூறுகின்றன.

நல்ல வாழ்க்கை அமைவதற்கு அவ்வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் அனைத்தும் வேண்டும். சமுதாய வாழ்க்கை மேன்மையடைய ஏராளமான அளவில் பொருள்கள் செய்துகுவிக்கப்பட வேண்டும். அதற்கான தொழில்கள் தீதில்லாதவைகளாக அறவழியிலான தொழில்களாக இருக்க வேண்டும் என்பதை நமது சாத்திரங்கள் வலியுறுத்துகின்றன. "செய்யும் தொழில் உன் தொழிலே காண் சீர்பெற்றிட நீ அருள் செய்வாய்" என பாரதி விநாயகரை வேண்டுகிறார். இன்னும், "அச்சம் தீரும், அமுதம் விளையும், வித்தைவளரும்" என்றும், "வேலைத்தவறு நிகழாது, நல்ல வினைகள் செய்து என்றும், "ஆக்கத்திலே, தொழில் ஊக்கத்திலே" என்றும், "உலகத்தொழில் அனைத்தும் உவந்து செய்வோம்" என்றும், "இதம்தரு தொழில்கள் செய்து எனவும்,

"திறமைகொண்ட தீமையற்ற
தொழில்புரிந்து யாவரும்
தேர்ந்தகல்வி ஞானம் எய்தி
வாழ்வம் இந்த நாட்டிலே" என்றும்

" உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்றும், "தருவாய் தொழிலும் பயனும்" என்றும், "சக்தி செய்யும் தொழில்களை எண்ணு" என்றும் " தொழில் பண்ணப்பெருநிதியம் வேண்டும், அதில் பல்லோர் துணை புரிதல் வேண்டும்" என்றும்,
"கூடுந்திரவியத்தின் குவைகள் - திறல்,
கொள்ளுங் கோடிவகைத் தொழில்கள் - இவை
"நாடும்படிக்கு வினைசெய்து - இந்த நாட்டோர் கீர்த்தி எங்கும் ஓங்க"
என்றும் " பாயும் ஆயிரம் சக்திகளாகியே பாரில் உள்ள தொழில்கள் இயற்றுவை" என "ஆடுகளும் மாடுகளும் அழகுடைய பரியும் வீடுகளும் நெடுநிலமும் விரைவினிலேதருவாய்" "நாடு மணிச்செல்வம் எல்லாம் நன்கருள்வாய் பொருளே பெருங்களியே திருவே" எனவும் "வீரர்தம் தோளினிலும் - உடல் வெயர்த்திட உழைப்பார் தொழில்களிலும் பாரதி சிரத்தினிலும் - ஒளி பரவிடவீற்றிருந்தருளாய்" என்றும் "வஞ்சமற்ற தொழில் புரிந்து உண்டு வாழும் மாந்தர்குல தெய்வமாவாள்" என்றும் "செல்வங்கள் பொங்கிவரும் - நல்ல தெள்ளறிவெய்தி நலம்பல சார்ந்திடும்" என்றும் "திருவைப்பணிந்து நித்தம் செம்மைத்தொழில் புரிந்து" என்றும் " கூடித்தொழில் செய் கைத்தொழில் போற்று "பணத்தினைப்பெருக்கு" என்றும்,
" அரும்பும் வேர்வை உதிர்த்துப்புவிமேல் ஆயிரம் தொழில் செய்திடுவீரே" என்றெல்லாம் பாரதி தொழிலைப்பற்றியும் தொழிலின் மேன்மையைப் பற்றியும் செல்வப்பெருக்கத்தைப் பற்றியும் நுகர்வைப்பற்றியும் அழுத்தம் கொடுத்து தன்னுடைய பல பாடல்களிலும் குறிப்பிடுகிறார்.

உலக நன்மையைக் கருதி எல்லோரும் தொழில் செய்யவேண்டும் என்பதை கீதை வலியுறுத்திக் கூறுவதை பாரதி தனது பகவத்கீதை மொழிப் பெயர்ப்பு நூலுக்கு எழுதியுள்ள முன்னுரையில் தெளிவாக வலியுறுத்திக் கூறுகிறார்.

இந்து தர்மமே, வழிபாட்டு சுதந்திரம் கொண்டதாகவும், சமய சம்ரசத்தைக் கொண்டதாகவும், எம்மதமும் சம்மதம் என்னும் பரந்த நெறிமுறையை, பண்பாட்டுதளமாகக் கொண்டது என்பதையும், உலகியல் வாழ்க்கையைப் பற்றி அதிகமாக வற்புறுத்துவது என்பதையும் காண முடிகிறது. மிகப்பெரும்பாலான இந்தியதத்துவ ஞானிகளும், உலக வாழ்க்கை, தனிமனித வாழ்க்கை, இயற்கை, இயற்கையுடன் இணைந்து நிற்கும் மனித வாழ்க்கை, பஞ்சபூதங்களின் பயன்பாடு, தொழில், தொழில்பயன், பொருளியல், அரசியலோடு இணைந்த பொருளியல், அறவழியில் அனைத்து செயல்பாடுகள் ஆகியவற்றையே அதிகமாக வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

பாரத நாட்டின்ஆதார நூல்களில் மனுநீதி தர்மமும், கௌடில்யரின் அர்த்த சாஸ்திரமும் வத்சாயனருடைய காம சூத்திரமும் அதே போல வேதங்கள், உபநிடதங்கள், பிரமசூத்திரம் பகவத்கீதை மற்றும் சுக்கிரநீதி, விதுரநீதி, வியாச நீதி மற்றும் இராமாயணம் மகாபாரதம் ஆகிய இதிகாசங்கள், புராணக்கதைகள் மூலம் எடுத்துரைக்கப்படும் அரச நீதி ஆகியவை வாழ்க்கை நெறிமுறைகளை இணைத்தே வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. இவைகளில் பொதுநீதி, தனி மனிதன் மற்றும் சமுதாயக் கடமைகள், பொருளியல் உற்பத்தி முறைவினியோக முறை, குடும்பவாழ்க்கை முறை ஆகியவை எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. இவைகளை நன்கு கற்றுணர்ந்து, அக்கருத்துக்களில் வேர்ஊன்றி நின்று, அவைகளில் காலம் கடந்து போனவைகளையும் தவறான முறையில் திரித்துக்கூறப்பட்டவைகளையும் உதரி எரிந்துவிட்டு புது நெறியை பாரதி வகுத்துக் கூறியுள்ளார்.

பாரதி தனது கண்ணன் பாட்டுகளில் கண்ணன் - என்தாய் என்னும் தலைப்பிலான பாடலில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"சாத்திரம் கோடிவைத்தாள் - அவை
தம்மில் உயர்ந்ததோர் ஞானம் வைத்தாள்
மீத்திடும் பொழுதினிலே - நான்
வேடிக்கையுறக் கண்டு நகைப்பதற்கே
கோத்த பொய் வேதங்களும் - மதக்
கொலைகளும் அரசர்தம் கூத்துக்களும்
மூத்தவர் பொய்நடையும் - இள
மூடர்தம் கவலையும் அவள் புனைந்தாள்

என்றும், கண்ணன் என் தந்தை என்றும் தலைப்பில்,

"வேதங்கள் கோத்துவைத்தான் - அந்த
வேதங்கள் மனிதர் தம் மொழியில் இல்லை
வேதங்கள் என்று புவியோர் - சொல்லும்
வெறுங்கதைத் திரளில் அவ்வேதமில்லை
வேதங்கள் என்றவற்றுள்ளே -அவன்
வேதத்திற் சில சில கலந்த துண்டு
வேதங்களன்றி யொன்றில்லை - இந்த
மேதினி மாந்தர் சொலும் வார்த்தையெல்லாம்"
என்று குறிப்பிடுவதைக் காண வேண்டும்.

## பொதுதர்மங்களும் குறிப்பிட்ட தர்மங்களும்

இந்து சாத்திரங்களில் சில பொதுவான தர்மங்கள், கடமைகள், நெறிமுறைகள் ஒழுக்கங்கள் கூறப்பட்டுள்ளன. அவை எல்லாக் காலங்களுக்கும் எல்லா மக்களுக்கும் பொதுவானவை. இத்தகைய ஒழுக்கங்கள் பலவும், இந்திய சாத்திரங்களில் மட்டுமல்ல, உலகின் இதர பல வேறு சமயநூல்களிலும், பொது நூல்களிலும் இலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளன.

உண்மை பேச வேண்டும், பொய் சொல்லக்கூடாது, திருடக்கூடாது, சுத்தமாக இருக்க வேண்டும். புலனடக்கம் கொள்ள வேண்டும், யாருக்கும் கெடுதல் செய்யக்கூடாது. ஈதல், இரக்கம் காட்டுதல், எளிமையாக இருத்தல், சிக்கனமாக இருத்தல், கோபம் கொள்ளதிருத்தல், பொறாமை கொள்ளாதிருத்தல், எல்லோரிடமும் அன்பாக இருத்தல், மனிதன் தனது சக மனிதர்களிடத்திலே காட்ட வேண்டிய பண்பு, வாழ்க்கை நெறிமுறை, தாயன்பு, தந்தையிடம் மரியாதை, சகோதர அன்பு, பரிவு, பாச உணர்வு, இத்தியாதி, இத்தியாதி.

பாரதி காலத்தில் நாடு அன்னிய ஆட்சிக்கு அடிமைப்பட்டுக் கிடந்தது. அடிமைப்பட்டுகிடந்த மக்களைத்தட்டி எழுப்ப பொருந்துவதுமான பலதர்மங்களையும் கடமைகளையும், ஒழுக்க நெறிகளையும் மிகுந்த உள்ளுணர்வுடன், நாட்டுப்பற்றுடன், நமது பண்பாட்டிலும் பழக்க வழக்கங்களிலும் நடைவுடைபாவனைகளிலும் திளைத்து தெய்வங்களை வேண்டி வரமாகக் கேட்கிறான். தனது சொந்த ஆணையாகவும் கட்டளை இடுக்கிறான்.

பாரதி தனது பாப்பாப் பாட்டு மூலம், பொய் சொல்லக்கூடாது. புறம் சொல்லல் ஆகாது, பாதகம் செய்பவரைக் கண்டால் நாம் பயம் கொள்ளலாகாது, துன்பம் நெருங்கிவந்தபோதும் நாம் சோர்ந்திடலாகாது,

சோம்பல் மிகக் கெடுதி, தாய் சொன்ன சொல்லைத்தட்டாதே, உயிர்களிடத்தில்அன்பு வேணும். வயிரமுடைய நெஞ்சு வேணும் என்று எக்காலத்திற்கும் பொருந்துவதான பொதுக்கருத்துக்களை, நெறிகளை எடுத்துக்கூறுகிறார்.

புதிய ஆத்திசூடி என்னும் தலைப்பில், அச்சம் தவிர், ஆண்மை தவறேல், உடலினை உறுதி செய், எண்ணுவது உயர்வு, ஏறுபோல் நட, ஐம்பொறி ஆட்சிகொள், ஒய்தல் ஒழி, கூடித்தொழில் செய், கொடுமையை எதிர்த்து நில், செய்வது துணிந்து செய், தீயோர்க்கு அஞ்சேல், நன்று கருது, நேர்படப்பேசு, புதியனவிரும்பு, யாரையும் மதித்து வாழ், வீரியம் பெருக்கு, வேதம் புதுமை செய், முதலிய பழயன புதியன வான நெறிகளை எடுத்துக் கூறுகிறார்.

பாரத நாடு என்னும் பாடலில் 'பாருக்குள்ளே நல்ல நாடு' என்று தொடங்கி, ஞானம், பரமோனம், உயர்மானம், கானம், தீரம், படைவீரம், நெஞ்சில் ஈரம், நன்மை, உடல் வன்மை, செல்வப்பன்மை, மறத்தன்மை, கற்பு, ஆக்கம், தொழில் ஊக்கம், புயவீக்கம், உயர்நோக்கம், வண்மை, உளத்திண்மை, மதிநுண்மை, முதலியபண்புகளைப் பொதுமைப் படுத்தி பாரத நாட்டினைப்பெருமைப்படுத்திப் பேசுகிறார். இவை எக்காலத்திற்கும் பொருந்தும் பண்புகளாகும்.

இந்து பண்பாட்டு தளத்தில் சிறப்பு தர்மங்களாக தனித்தன்மையான கடமைகளாக ஆசிரமதர்மங்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஆசிரமங்கள் என்பது, பிரம்மச்சரியம், கிரகஸ்தம், வனப்பிரஸ்தம், சந்நியாசம், என்று நான்கு பிரிவுகளாக விரிக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு மனிதன் பிறந்து குழந்தைப்பருவம் முடிந்தவுடன் மாணவப்பருவம் தொடங்குகிறது. மாணவப்பருவம் (பிரம்மச்சரியம்) முடிந்த பின்னர், கிரகஸ்தம் (இல்லறம்) தொடங்குகிறது. இல்லற ஆசிரமம் முடிந்த பின்னர், வாழ்க்கையின் நேரடிப்பொருப்புகளிலிருந்து படிப்படியாக விலகி அடுத்த தலைமுறைக்கு வழிகாட்டி உதவி செய்யும் வனப்பிரஸ்தம் தொடங்குகிறது. வனப்பிரஸ்தப்பணிகள் முடிந்த பின்னர் வாழ்க்கைச் சுமைகளை விடுவித்துக் கொண்டு சந்நியாசம் அதாவது முழுமையான துறவறம் கொண்டு, இறுதியில் மோட்சம் (வீடு பேறு) வாழ்க்கையிலிருந்து முழுவிடுதலை பெறவேண்டும், என்பதை இந்து தர்ம சாத்திரங்கள் விளக்கிக் கூறுகின்றன.

மாணவப் பருவத்தில் (பிரம்மச்சரிய ஆசிரமத்தில்) கல்வி கற்றல், சகல கலைகளிலும் பயிற்சி பெறுதல், சிறந்த மனிதனாக, அறிவு ஆற்றல், உடல்பலம் முதலிய சிறப்புகளைப் பெற்று பக்குவடைதல் ஆகியவை முக்கியமான கடமைகளாக சிறப்பு தர்மங்களாகக் கூறப்படுகின்றன. இப்பருவத்தில் மாணவன் சகல நல்ல ஒழுக்கங்களையும் கற்றுக் கொள்கிறான். எளிமையான வாழ்க்கை சக மாணவர்களுடன் நட்புறவு சூழ்ந்த கவனத்துடன் சகல கலைகளையும் கற்றுக் கொள்ளுதல், உடற்பயிற்சி செய்தல், வாழ்க்கையில் கட்டுப்பாடுகளை வளர்த்தல், வாழ்க்கையில் எதிர்காலத்தில் ஏற்படும் எந்த பிரச்சனையையும் சமாளிக்கும் திறனைப் பெறுதல், நாட்டின் சிறந்த பிரஜையாக சகல விதத்திலும் பயிற்சி பெற்று, வீட்டிற்கும் நாட்டிற்கும் பயனுள்ள வகையில் பக்குவமடைதல் முதலியன வலியுறுத்தப்படுகின்றன. இன்றைய நிலையில் அந்த கடமைகள், ஆண் பெண் இருபாலருக்கும் பொருந்தும்.

அவ்வாறே கிரகஸ்தன் இல்லறத்தில் உள்ளவன், பொருள் சேர்த்தல், குடும்பத்தைப் பராமரித்தல், குழந்தைகளைப் பராமரித்தல், முதியோர்களைப் பாதுகாத்தல், சமுதாய நலன்களைப் பேணுதல், நாட்டு நலன்களைப் பேணுதல், நாட்டு நலன்களைக் காத்தல் முதலிய சிறப்புக் கடமைகள் தருமமாக வலியுறுத்தப்படுகின்றன. இவ்வாறே இந்து சாத்திரங்கள் இதர ஆசிரமங்களின் கடமைகளையும் விரித்துக் கூறுகின்றன.

நமது தமிழ் அற நூல்களும் இவைகளை விரித்துக் கூறுகின்றன. வள்ளுவப்பெருந்தகை தனது முப்பால் நூலில் மிகவும்விரிவாகவும் துல்லியமாகவும் அடிப்படை அறங்களைப் பற்றி மிகவும் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளார்.

இந்த நான்கு ஆசிரம தர்மங்கள் இந்து வாழ்க்கை நெறி முறையின் அடிப்படையான தர்மங்களாகும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களின் அடிப்படையிலேயே நான்கு பிரிவான சிறப்புக் கடமைகள், தனித்தனி தர்மங்கள் வகுக்கப்பட்டு விவரிக்கப்படுகின்றன. இவை மிகவும் துல்லியமாக வகுக்கப்பட்ட சமூக நெறியாகும். கல்வி, தொழில், செல்வப் பெருக்கம், சீரிய செழிப்பான வாழ்க்கை முறை அறவாழ்க்கை மனிதகுலம் தலைமுறை தலைமுறையாக வாழையடி வாழையாக வளம்பெற்று சகல நலன்களும் சக்தியும் கல்வியும் செல்வமும் பெற்று வாழ்வாங்குவாழ்தல், மனிதன் தனது பிறப்பின் கடமைகளை முழுமையாக நிறைவேற்றி இறுதியில் முக்தி பெறுதல், வீடு பேறு ஆகியவை, நெறிமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன. இங்கு சீரும் சிறப்புமாக வாழ்க்கையை அமைத்துக் கொண்டு அனுபவித்தல் என்பது மிக முக்கியமானதாகும். எனவே இந்து தர்மம் என்பது அடிப்படையில் வாழ்வியல் உலகியல், அனைத்து சமய சமரசம், அறவழியில் அனைத்து உறவுகளையும் வளர்த்தல் அறிவியல் சமுதாய வளர்ச்சி ஆகியவைகளை ஆதாரமாகக் கொண்டு அறவியல் பொருளியல் சீரான குடும்ப வாழ்க்கை ஆகியவைகளை அமைத்துக் கொள்வதாகிறது. இக்கருத்துக்களை பாரதி தனது கவிதா மண்டலம் முழுவதிலும் சுடர்விட்டு ஒளிவீசச் செய்கிறார்.

"கன்னலும் தேனும் கனியும் இன்பாலும் கதலியும் செந்நெலும் நல்கும் எக்காலும் உன்னத ஆரிய நாடெங்கள் நாடே" என்று நாட்டின் சிறப்பைக் குறிப்பிடுகிறார்.

"நாட்டைத்துயர் இன்றி நன்கமைத்திடுவதும்
உளமெனும் நாட்டை ஒரு பிழையின்றி
ஆள்வதும் பேராளி ஞாயிறேயனைய
சுடர்தரு மதியொரு துயரின்றி வாழ்தலும்
நோக்கமாகக் கொண்டு நின்பதம் நோக்கினேன்"

என்று பாரதி விநாயகரை வேண்டுகிறார்.

இன்னும்

" மண்மீதுள்ள மக்கள், பறவைகள், விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டு மரங்கள், யாவும்என்வினையில் இடும்பை தீர்ந்தே இன்பமுற்று அன்புடன் இணங்கி வாழந்திடவே செய்தல் வேண்டும்" என்றும்
'பூமண்டலத்தில் அன்பும் பொறையும் விளங்குக, துன்பமும் மிடிமையும் நோவும் சாவும் நீங்கிச் சார்ந்த பல்லுயிரெல்லாம் இன்புற்று வாழ்க என்பேன்' என்றும் விநாயகர் நான்மணி மாலையில் குறிப்பிடுகிறார். மனித சமுதாயம் மட்டுமல்ல, உலகில் உள்ள அனைத்து உயிர்களும் நல்வாழ்வு பெறவேண்டும், இயற்கை சக்திகள் அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டும். மனிதனுக்கும் இதர உயிர்ப்பொருள்களுக்கும் இயற்கை சக்திகளுக்கும் இடையில்நல்லுறவு அமைய வேண்டும் என்பது இந்திய சாத்திரங்களின் பொதுக் கொள்கையாகும். இது இந்திய சாத்திரங்களுக்கே உரிய தனித்தன்மையாகும். இதை பாரதியும் தனது கவிதைகளில் தெளிவாகப்பல இடங்களிலும்பேசுவதைக் காணலாம்.

புதுவினை காட்டவும், மதியினை வளர்க்கவும் இச்சை, கிரியை, ஞானம், ஆகியவற்றை ஆக்கவும் வளர்க்கவும் விநாயகரைப்பாரதி வேண்டுகிறார். சமுதாய வளர்ச்சிக்கு இவை ஆதாரமாகும். இச்சையென்றால் எந்த ஒரு காரியத்தைச் செய்வதற்கும் ஒரு எண்ணம். ஓர் ஆசை, ஆவல் தூண்டுதல் ஒரு விருப்பம் வேண்டும். அதை அடுத்து கிரியை - செயல் நிகழ்கிறது. அதாவது செயல்பாடு, எண்ணத்தை நிறைவேற்றல் நிகழுகிறது. முதிர்ச்சி பெற்று அடுத்தகட்ட வளர்ச்சிக்குப் பயன்படுகிறது. இக்கருத்துக்கள் இந்தியப் பண்பாட்டின் ஆதாரங்களில் ஒன்றாகும்.

முருகனை வேண்டும்பொது "தருவாய் தொழிலும் பயனும்" என்றும் "என்றும் கேடற்ற வாழ்வினைத்தருவாய்" என்றும், "நீறுபடக் கொடும்பாவம், பிணி, பசி, யாவையும் இங்கு நீக்குவாய்" என்றும் பாரதி கூறுவதைக் காண்கிறோம்.

"சிவசக்தி" என்னும் பாடலில்,

"நின்னருள் வேண்டுகிறோம் - எங்கள்
நீதியும் தர்மமும் நிலைப்பதற்கே
பொன்னவிர் கோவில்களும் - எங்கள்
பொற்புடை மாதரும் மதலையரும்
அன்னநல் அணிவயல்கள் - எங்கள்
ஆடுகள், மாடுகள் குதிரைகளும்
இன்னவை காத்திடவே -அன்னை
இணை மலர்த்திருவடி துணை புகுந்தோம்
எம்முயிர் ஆசைகளும் - எங்கள்
இசைகளும் செயல்களும் துணிவுகளும்
செம்மையுற்றிட அருள்வாய் - நின்றன்
சேவடி அடைக்கலம் புகுந்து விட்டோம்"

என்று பாடுகிறார்.

" வல்லமைதாராயோ - இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே என்றும்", எண்ணிய முடிதல் வேண்டும், நல்லவே எண்ணல்வேண்டும், திண்ணிய நெஞ்சம் வேண்டும், தெளிந்த நல்அறிவு வேண்டும் என்றும் வேண்டுகிறார்."பராசக்தி" என்னும் பாடலில்

"நாட்டு மக்கள் பிணியும் வறுமையும்
நையப்பாடென்றொரு தெய்வங்கூறுமே
கூட்டி மானுடச் சாதியை ஒன்றெனக்
கொண்டு வையம் முழுதும் பயனுறப்
பாட்டிலேயறங்காட்டெனுமோர் தெய்வம்"
"நாட்டு மக்கள் நல முற்று வாழவும்
நானிலத்தவர் மேனிலை எய்தவும்"
என்று பாடுகிறார். "சக்தி" என்னும் தலைப்பில்
"வாழ்வு பெருக்கும் மதியே சக்தி
மாநிலம் காக்கும் மதியே சக்தி
தாழ்வுதடுக்கும் சதிரே சக்தி
சஞ்சலம் நீக்கும் தவமே சக்தி
வீழ்வு தடுக்கும் விறலே சக்தி
விண்ணையளக்கும் விரிவே சக்தி
ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி
உள்ளத் தொளிரும் விளக்கே சக்தி"

என்று மிகவும் அற்புதமான முறையில் பாரதி வாழ்வியலை சக்தி யோடிணைத்துப் பாடுகிறார். "திரு வேட்கை" என்னும் பாடலில்

"செல்வம் எட்டும் எய்தி - நின்னால்
செம்மையேறி வாழ்வேன்
இல்லையென்ற கொடுமை - உலகில்
இல்லையாக வைப்பேன்"

என்று பாடுகிறார்.

"திருமகள் துதி" என்னும் பாடலில்,
"அன்னம் நறுநெய்பாலும் அதிசயமாய்த் தருவாய்"
"ஆடுகளும் மாடுகளும் அழகுடைய பரியும்
வீடுகளும் நெடுநிலமும் விரைவினிலே தருவாய்
"நாடு மணிச்செல்வம் எல்லாம் நன்கருள்வாய்"

என்றெல்லாம் பாடுகிறார்.

"செல்வங்கள் பொங்கிவரும் - நல்ல
தெள்ளறி வெய்திரு நலம்பல சார்ந்திடும்"

என்றும்,

"மதியுண்டு செல்வங்கள் சேர்க்கும்
வலியுண்டு தீமையைப் போக்கும்
விதியுண்டு தொழிலுக்கு விளைவுண்டு"

எனவும்,

"பொருளிலார் பொருள் செய்தல் முதல் கடன்"

என்றும், பலவகையாக மனித வாழ்க்கைக்கு உலக வாழ்க்கைக்கு அவசியமான பண்புகளையும் கடமைகளையும் பாரதி எடுத்துக் கூறுவதையும் காண்கிறோம்.

## பொது நெறியில் புதுநெறி

தெய்வப் பாடல்களில் வாழ்க்கைத் தேவைகளைக் கேட்டு தெய்வங்களை வேண்டுவது பாரததின் பண்பாட்டு வழியிலாகும். அதே சமயத்தில் அக்கருத்துக்களில் பாரதி காலத்திற்கேற்ற புது நெறிகளையும் காட்டுகிறான்.

"அச்சமில்லை, அமுங்குதலில்லை
நடுங்குதலில்லை, நாணுதல் இல்லை
பாவமில்லை, பதுங்குதலில்லை
ஏது நேரினும் இடர்ப்பட மாட்டோம்
அண்டஞ்சிதறினால் அஞ்சோம்
கடல் பொங்கி எழுந்தால் கலங்கமாட்டோம்
யார்க்கும் அஞ்சோம் எப்பொழுதும் அஞ்சோம்
எங்கும் அஞ்சோம் எப்பொழுதும் அஞ்சோம்
தீயும் மண்ணும் திங்களும் மீன்களும்
உடலும் அறிவும் உயிரும் உளவே
தின்னப் பொருளும் சேர்ந்திடப் பெண்டும்
கேட்கப்பாட்டும் காணநல்லுலகும்
களித்துரை செய்யக் கணபதி பெயரும்
என்றுமிங் குளவாம் சலித்திடாய் ஏழை
நெஞ்சே, வாழி, நேர்மையுடன் வாழி"

என்று அச்சத்தைப் போக்கி கவலையை நீக்கி சலிப்பு இல்லாமல் வாழ்க்கையிலும் வாழ்க்கைத் தொழிலிலும் ஈடுபட பாரதி ஊக்க மூட்டுகிறார்.

"நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்குழைத்தல்
இமைப்பொழுதும் சோராதிருத்தல்"

என்றும்,

"நாட்டினைத் துயரின்றி நன்கமைத்திடுவதும்
உளமெனும் நாட்டை ஒரு பிழையின்றி
ஆள்வதும் பேரொளி ஞாயிறேயனைய
சுடர்தரு மதியொரு துயரின்றி வாழ்தலும்
நோக்கமாக்கொண்டு நின்பதம் நோக்கினேன்"

என்றும்,

"பண்டைச் சிறுமைகள் போக்கி
என் நாவில் பழுத்த சுவைத்
தெண்டமிழ்ப்பாடல் ஒரு கோடி
மேவிடச் செய்குவையே"

என்றும் தனது வாழ்க்கைக் குறிக்கோள்களை நாட்டுப்பணிகள் கடமைகளுடனும்சமுதாயக் கடமைகள் பணிகளுடனும் இணைத்து நமக்கு எடுத்துக்காட்டாக தனது கருத்துக்களை பாரதி தனது கவிதைகளில் வகுத்துக் காட்டியுள்ளார்.

"அகண்ட வெளிக்கண் அன்பே சூழ்க, துயர்கள் தொலைந்திடுக, தொலையா இன்பம் விளைந்திடுக, வீழ்க கலியின் வலியெலாம் கிருதயுகம் தான் மேவுகவே" என்றும் "வையகத்தில் அன்பிற் சிறந்த தவமில்லை" என்றும்

"முயலும் வினைகள் செழிக்கும்" எனவும், "கலியை நான் கொன்று, பூலோகத்தார் கண்முன்னே, மெய்க்கும் கிருதயுகத்தினையே கொணர்வேன்" என்றும், "புதுவினை காட்டும் புண்ணியா, மதியினை வளர்க்கும் மன்னே", என்றும் " பாரிடை மக்களே, கிருதயுகத்தினைக் கேடின்றி நிறுத்த விரதம் நான் கொண்டனன்" என்றும், நமது நாட்டின் பண்பாட்டு தளத்தில் நின்றுபாரதி புது நெறி வகுத்து நமக்கு புது வழி காட்டி நாட்டு மரபிற்குப் புதிய அறிவுச் செல்வத்தைச் சேர்க்கிறான். கலிவீழ்ந்து கிருதயுகம் வரவேண்டும் என்று, பொய்யும் அடிமையும் அச்சமும் நீங்கி, சத்தியமும் விழிப்பும், விடுதலையும் பெற்று பாரத சமுதாயம் முதன்மை பெறவேண்டும் என்று கூறுகிறார்.

"செய்யும் வினைகள் அனைத்திலுமே வெற்றி
சேர்ந்திட நல்லருள் செய்கவென்றே
பூதங்கள் ஐந்தில் இருந்தெங்கும் கண்ணில்
புலப்படும் சக்தியைப் போற்றுகின்றோம்
வேதங்கள் சொன்னபடிக் மனிதரை
மேன்மையுறச் செய்தல் வேண்டுமென்றே
வேகம், கவர்ச்சி முதலிய பல்வினை
மேலிடும் சக்தியை மேவுகின்றோம்.

உயிரெனத் தோன்றி உணவு கொண்டே
வளர்ந்தோங்கிடும் சக்தியை ஓதுகின்றோம்.

இத்தரை மீதினில் இன்பங்கள் யாவும்
எமக்குத் தெரிந்திடல் வேண்டுமென்றே
மாறுதல் இன்றிப் பராசக்தி தன்புகழ்
வையமிசை நித்தம் பாடுகின்றோம்
நூறு வயது புகழுடன் வாழ்ந்து உயர்
நோக்கங்கள் பெற்றிட வேண்டுமென்றே
ஓம் சக்தி, ஓம் சததி, ஓம் சக்தி ஓம் சக்தி
ஓம் சக்தி என்றுரை செய்திடுவோம்"

என்று பாரதி இந்து தர்மக் கடமையின் இந்து தர்ம நோக்கத்தின், குறிக்கோள்களின் சாரத்தைத் தன் சக்தி வழிபாட்டின் மூலம் எடுத்துக் கூறுகிறார். பாரதி சக்தியை மாயையாகக் காணவில்லை. மகா சக்தியாகக் காண்கிறார்.

இன்னும் மாயை என்னும் சொல்லை வைத்து நமது நாட்டில் மாயாவாதம் என்னும் ஒரு தத்துவம் எழுந்தது. உலகமே பொய் என்றும், "காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா" என்னும் கருத்து வாதம்

பிற்காலத்தில் ஏற்பட்ட ஒரு போலி சோம்பேறிவாதமாகும். இதை இந்து தர்மத்தின் ஆதார நூல்கள் குறிப்பிடவில்லை. இடைக்காலத்தில் ஏற்பட்ட இந்த மாயாவாதம் என்னும் போலி வேதாந்தத்தை பகவத் கீதை முழுமையாக மறுத்து அதை நிராகரித்து விட்டது என்பதை பாரதி மிகவும் அழுத்தமாகக் குறிப்பிடுகிறார். அதன் வெளிப்பாடாகவே அவருடைய பராசக்திப் பாடல்கள் எழுந்துள்ளன எனக் கூறலாம்.

பாரதி, தனது பகவத் கீதை மொழிபெயர்ப்பு நூலுக்கு எழுதிய முன்னுரையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"உபநிடதங்களிலும் வேதத்திலும் "மாயா" என்ற சொல் பராசக்தியைக் குறிப்பது. இடைக்காலத்தில் மாயை பொய்யென்ற தொரு வாதம் உண்டாயிற்று. இதனால், ஐகத் பொய், தேவர்கள் பொய், சூரிய நட்சத்திராதிகள் பொய், மனம்பொய், சைதன்யம் மாத்திரம் மெய். ஆதலால் இந்த உலகத்துக்கடமைகள் எல்லாம் எறிந்து விடத்தக்கன, இதன் இன்பங்கள் எல்லாம் துறந்துவிடத்தக்ன, என்ற தொருவாதம் எழுந்தது. "இந்த உலக இன்பங்கள் எல்லாம் அசாசுவதம், துன்பங்கள் சாசுவதம் இத்தகைய உலகத்தில் நாம் எந்த இன்பங்களையும் செய்யப்புகுதல் வீண் சிரமமாகும்" என்ற கட்சி ஏற்பட்டது.

" ஆனால் இவர்கள் எல்லா இன்பங்களையும் துறந்து விட்டதாக நடிக்கிறார்களேயன்றி இவர்கள் அங்ஙனம் உண்மையிலேயே துறக்கவில்லை. இவ்வுலகத்தில் ஜீவர்கள் எல்லா இன்பங்களையும் துறப்பது சாத்தியமும் இல்லை. கடமைகளைத் துறந்துவிட்டுச் சோம் பேறிகளாகத் திரிதல் சாத்தியம். இது மிகச் சுலபமும் கூட, இந்த சோம் பேறித்தனத்தை ஒரு பெரிய சுகமாகக் கருதியே அநேகர் துறவு பூணுகிறார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது.

" இவர்கள் கடமைகளைத் துறந்தனரேயன்றி இன்பங்களைத். துறக்கவில்லை. உணவின்பத்தைத் துறந்து விட்டார்களா? சோறு இல்லாவிட்டால் உயிர் போய்விடுமே என்றால் அப்போது நீங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டுத் தொழில் செய்து ஜீவிக்க வேண்டும். ஆடையின்பத்தை இவர்கள் துறக்கவில்லை. ஸ்நானவின்பத்தை இவர்கள் துறக்கவில்லை. தூக்கவின்பத்தைத் துறக்கவில்லை. கல்வியின்பத்தைத் துறக்கவில்லை. புகழின்பத்தைத் துறக்கவில்லை. உயிரின்பத்தைத் துறக்கவில்லை. வாதின்பத்தைத் துறக்கவில்லை. அவர்களில் முக்கியஸ்தர்களாகிய மடாதிபதிகள் பண வின்பத்தைத் துறக்க வில்லை. அவர்களுடைய போலி வேதாந்தத்தை அழிக்கும் பொருட்டாகவே

பகவத் கீதை எழுதப்பட்டது" என்று குறிப்பிடுகிறார்.

இதுவே, வாழ்க்கைத்தத்துவத்தைப் பற்றி, பாரதியின் தெளிவான கருத்தாகும். வாழ்க்கை இன்பங்களை முழுமையாக அனுபவிக்க வேண்டும் என்பதை பாரதி வலியுறுத்துகிறார். அப்படியானால் மனித வாழ்க்கைக்கு அவசியமான எல்லா பொருள்களும் உற்பத்தி செய்யப்பட வேண்டும். உயிர் வாழ்வதற்கான உணவு, உடை, உறைவிடம் முதலியவை மட்டுமல்லாமல், மனித வாழ்க்கை மகிழ்ச்சியாக அமைவதற்காக நாடகம், சினிமா, வானொலி, தொலைக்காட்சி, சங்கீதம், கவிதை, கல்வி, கல்வி கற்பதற்கான சாதனங்கள் வசதிகள், விளையாட்டு வசதிகள், நூல்கள், மன்றங்கள், வைத்தியவசதிகள் சுகாதாரம், கோயில் குளங்கள், திருவிழாக்கள் அவைகளுக்கு வேண்டிய சாதனங்கள் முதலியனவும் மற்றும் அதற்கு துணையான பல பொருட்கள் அவசியமானது ஆகும். அவைகள் எல்லாம் ஆக்கப்படவேண்டும், படைக்கப்படவேண்டும்.

வாழ்க்கை வசதிகள் அனைத்தும் வேண்டும் என்பதற்காக அதை எந்த வழியிலும் சம்பாதிக்க வேண்டும் என்னும் வழிமுறையை பாரதி ஏற்றுக்கொள்ள வில்லை. அத்தகைய முறைகளை பாரதி கடுமையாகச் சாடுகிறார். அவைகளை முற்றிலும் நிராகரித்து விடுகிறார்.

**"திறமைகொண்ட, தீமையற்ற தொழில் புரிந்து யாவரும், தேர்ந்த கல்வி ஞானம் எய்தி வாழ்வோம் இந்த நாட்டிலே"** என்பது பாரதியின் வாக்காகும். இன்னும் **" வஞ்சமற்ற தொழில் புரிந்து வாழும் வாழ்க்கை வேண்டும்"** என்பதும் **"திருவைப்பணிந்து நித்தம் செம்மைத்தொழில் புரிந்து வருக"** என்பதும், **" பயிற்றி உழுதுண்டு வாழ்வீர் - பிறர் பங்கைத்திருடுதல் வேண்டாம்"** என்பதும், **" தன்னலம் பேணி இழிதொழில் புரியோம்"** என்பதும் பாரதியின் கவிதை வாக்குகளாகும்.

சூதும் வாதும், பொய்மையும் வஞ்சகமும் நிறைந்த விலங்கினவாழ்க்கை நிலைக்கு மாறாக சத்தியத்தின் வழியிலான அறவியல், அறிவியல் வாழ்க்கை மனித குலத்திற்கு அமைய வேண்டும் என்பதை பாரதி நமது நாட்டின் மரபு வழியில் எடுத்துக் கூறுகிறார்.

"வேதவானில் விளங்கி அறம் செய்மின்
சாதல் நேரினும் சத்தியம் பூணுமின்,
தீதகற்று மின்' என்று தொடங்கி,

"ஒப்பிலாத உயர்வொடு கல்வியும்
எய்ப்பில்வீரமும் இப்பு வியாட்சியும்
தப்பிலாத தர்மமும் கொண்டுயாம்
அப்பனே நின் அடிபணிந்துய்வமால்
மற்று நீயிந்த வாழ்வு மறுப்பையேல்
"சற்று நேரத்துள் எம்முயிர் சாய்த்தருள்
கொற்றவா! நின் குவலயம் மீதினில் வெற்று
வாழ்க்கை விரும்பியழிகிலோம்.
நின்றன்மாமரபில் வந்து நீசராய்ப்
பொன்றல் வேண்டிலம் பொற்கழல் ஆணைகாண்
இன்று இங்கு எம்மை அதம்புரி இல்லையேல்
வென்றியும் புகழும் தரல் வேண்டுமே!!

என்று கண்ணன் மாரபிலே வந்த பாரதி கண்ணனை வேண்டிப்பாடுகிறார்.

குலதர்மம்

இந்து பண்பாட்டு தளத்தில் ஒன்றாக சாதி அமைப்பு இன்று இந்திய சமுதாயத்தில் நிலை கொண்டிருக்கிறது. சாதி அமைப்பு இந்திய சமுதாயத்தில் தோன்றி வளர்ந்து நிலைபெற்ற வரலாறு பற்றி பல ஆராய்ச்சிகள் நடைபெற்றுள்ளன. எல்லா ஆய்வுகளும் இந்திய சமுதாயத்தின் பன்முகத்தன்மைகளையும் முன்வைத்துப் பேசியிருக்கின்றன. இந்து தர்ம சாத்திரங்கள் பலவும் நான்கு வர்ணங்களைப் பற்றியும்அவைகளின் தனிதர்மங்கள் பற்றியும் விவரித்துக் கூறுகின்றன. அவைகளைக் குலதர்மங்கள் என்று விவரித்துக் கூறுகின்றன.

வேதங்கள் நான்கும் முதல்முதலில் தோன்றிய சாத்திரங்களாகும். அவ்வேதங்கங்களில் நான்கு வர்ணங்களைப் பற்றியோ குலங்களைப் பற்றியோ, குல தர்மங்களைப்பற்றியோ குறிப்புக்கள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. பின்னர் வந்த உபநிடதங்களில்குலங்களைப்பற்றிய குறிப்புகள் உள்ளன. அதன் பின்னர் வந்துள்ள ஸ்மிருதிகள் குலங்களைப் பற்றியும் குல தர்மங்களைப்பற்றியும் குறிப்பிட்டு கூறுகின்றன. மனு ஸ்மிருதி தான் வர்ணங்கள், குலங்கள், குல தர்மங்கள் பற்றி கட்டுக்கோப்பான கருத்துக்களையும் விதிமுறைகளையும் வகுத்துள்ளது. குலங்களின் தோற்றங்கள் வளர்ச்சிகள் பற்றிய ஆராய்ச்சிகள் பலவகையாக இருப்பினும் பிறப்பி ன்அடிப்படையில் எவ்வாறு குலங்கள் (சாதிகள்) நிலைகொண்டன, இந்தக்குலங்களுக்கிடையில் எவ்வாறு பாகுபாடுகளும் வேறுபாடுகளும் தோற்றுவிக்கப்பட்டன, என்பதும் மேலும் விரிவான ஆய்வுக்குறியனவாகும். இந்த சாதிப்பிரச்சினையால் பாரத சமுதாயத்திற்கு ஏற்பட்ட தீங்குகளும் கேடுகளும் சீரழிவுகளும் கோரமான கொடுமைகளும் கொஞ்சம் அல்ல.

பாரத நாட்டின் தலைசிறந்த பேரிலக்கியங்களில் ஒரு பிரிவு இதிகாசங்கள், அந்த இதிகாசங்கள் இரண்டு. அவை இராமாயணமும் மகாபாரதமுமாகும். இந்த இரு இதிகாசங்களிலும் சாதிப்பிரிவுகள் பற்றியும் அதிலுள்ள முரண்பாடுகள் பற்றியும் ஒற்றுமை பற்றியும் பலசெய்திகள் கிடைக்கின்றன. அந்தணர் குலத்திற்கும் அரச குலத்தினர்களுக்கும் இடையிலான மோதலாக வசிட்டர் விஸ்வாமித்திரர் மோதல் தென்படுகிறது. பரசுராமன் என்ற பிராமணன் மிகப்பெரிய மேதை. நான்கு வேதங்களையும் இதர துணை வேதங்களையும் நன்கு கற்றறிந்தவர். கல்வியில் அறிவாற்றலில் அவருக்கு ஈடு இணையே இல்லை. ஆயினும் அவருக்கும் அரசர் குலத்தவருக்கும் கடுமையான போர்களும் சண்டைகளும் நிகழ்ந்திருக்கின்றன. அவர் தான் கற்றிருந்த அறிந்திருந்த கல்வி அறிவை இதர ஞானத்தை வித்தைகளை பிராமண குலத்தில் பிறந்தவர்களுக்கு மட்டுமே கற்றுக் கொடுத்ததாகவும் மற்றவர்களுக்கு பாகுபாடு காட்டி மறுத்ததாகவும் கதைகள் கூறுகின்றன. அந்தப் பரசுராமனின் ஆற்றல் சக்தி அனைத்தும் கடைசியில் இராமனிடத்தில் சென்று விட்டதாகவும் இராமாயணம் கூறுகிறது. இராமன் அரச குலத்தில் பிறந்தவன் திருமாலின் அவதாரம். இந்த இராமன் குகனையும் சுக்கிரீவனையும் வீடணனையும் குல வேறுபாடுகளைக் காட்டாமல் சகோதர்களாக ஏற்றுக்கொண்டதைக் கதையின் வாயிலாக அறிகிறோம்.

மகாபாரதத்தில் வரும் துரோணாச்சாரியார் மிகப் பெரிய கல்வி மான். சகல வேதங்களையும் வித்தைகளையும் கற்றவர், அறிந்தவர். கல்வி, அறிவில், அறிவின் ஆற்றலில் அக்காலத்தில் யாரும் அவருக்கு இணையாக ஈடாகஇல்லை. இத்துரோணாச்சாரியார் பிராமணர்கள், சத்திரியர் ஆகிய இரு குலங்களைச் சேர்ந்தவர்களைத் தவிர மற்றவர்களைச் சீடர்களாக ஏற்றுக் கொள்வதில்லை என்பதை கதைக் குறிப்பு கூறுகிறது.

இத்தகைய குலப்பாகுபாடுகள் வேறுபாடுகள் பற்றிய பலகருத்துக்களையும் கருத்து மோதல்களையும் பழைய சாத்திரங்கள் பலவற்றிலும் குறிப்பாக இதிகாசங்களிலும் புராணக்கதைகளிலும் காண்கிறோம். இத்தகைய சாதிப்பாகுபாடுகளையும் வேறுபாடுகளையும் எதிர்த்து புத்தமும் சமணமும் சர்வஜன சமத்துவக்கருத்துக்களை முன்வைத்து வெற்றி கண்டிருக்கிறது. இருப்பினும் பின்னர் ஏற்பட்ட வரலாற்று நிகழ்ச்சிகள், மீண்டும் சாதிப்பாகுபாடுகளும் வேறுபாடுகளும் இந்திய சமுயத்தில் நிலை பெற்றிருக்கின்றன என்பதையே காட்டுகின்றன. இந்த சாதிப்பாகுபாடுகளும் வேறுபாடுகளும் கொடுமைகளும் இந்திய சமுதாயத்தின் ஒற்றுமையை மிகப் பெரிய அளவில் பாதித்திருக்கிறது.

பகவத்கீதையில் குலங்களைப்பற்றி, வர்ணங்களைப் பற்றி குறிப்புகள் உள்ளன. ஆனால் (சாதிகள்) வர்ணங்கள் பிறப்பால் ஏற்பட்டதாகக் கீதை கூறவில்லை. குணத்தாலும் செய்கையாலும் நான்கு வர்ணங்களைப் படைத்ததாகவே பகவான் கூறுகிறார்.

" குணத்துக்கும் செய்கைக்கும் தக்கபடி நான் நான்கு வர்ணங்களை சமைத்தேன் (கீதை 4-13) எனவும்.
" பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் இவர்களுடைய தொழில்கள் அவரவரின், இயல்பில் விளையும் குணங்களின்படி வகுப்புற்றனவாம்" (கீதை 18-51) என்றும் கீதை குறிப்பிடுகிறது.

எந்த இடத்திலும் பிறப்பினால் குலங்கள் ஏற்பட்டதாக சுருதிகள் கூறவில்லை. கீதையும் குறிப்பிடவில்லை. இதை அறிந்த பாரதி சாதிப்பாகு பாடுகளையும்வேறுபாடுகளையும் மிகவும் கடுமையாகக் கண்டித்துப் பல இடங்களிலும் தனது கவிதைகளில்குறிப்பிடுகிறார்.

"நாலு குலங்கள் அமைத்தான் - அதை
நாசமுறப்புரிந்தனர் மூட மனிதர்
சீலம் அறிவு கருமம் - இவை
சிறந்தவர் குலத்தினில் சிறந்தவராம்
மேலவர் கீழவர் என்றே - வெறும்
வேடத்திற்பிறப்பினில் விதிப்பனவாம்
போலிச் சுவடியை யெல்லாம் - இன்று
பொசுக்கிவிட்டால் எவர்க்கும்
நன்மையுண்டென்பான்"

என்று பாரதி " கண்ணன் - என் தந்தை" எனும் பாடலில் மிகவும் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

"சாத்திரங்கள் பல தேடினேன் - அங்கு
சங்கையில்லாதன சங்கையாம் - பழங்
கோத்திரங்கள் சொல்லும் மூடர்தம் - பொய்மைக்
கூடையில் உண்மைகிடைக்குமோ" என்று

கண்ணன் - எனது சற்குரு என்னும் கவிதையில் குறிப்பிடுகிறார்.

நமது நாட்டில் வேறு எந்த ஒரு நாட்டிலும் இல்லாத ஒரு சாதி அமைப்புமுறை ஏற்பட்டிருப்பதும் அது நமது மூல இலக்கியங்களுக்கும் சாத்திரங்களுக்கும் மாறாக பிறப்பின் அடிப்படையில் நிறுவப்பட்டு நிலை

பெற்றிருப்பதும், அந்த சாதி அமைப்பு மூலம், சாதி வேறுபாடுகளும் பாகுபாடுகளும் கொடுமைகளும் சமுதாயப் பழக்கத்தில் கொண்டு வரப்பட்டதும் இந்த நாட்டின் சமுதாய வளர்ச்சியின் வரலாற்றில் ஒரு மிக முக்கியமான தீர்க்கப்பட வேண்டிய சமூக நீதிபற்றிய பிரச்சனையாகும்.

மறுபக்கத்தில் இந்த சாதிப்பாகுபாடுகள் வேறுபாடுகள் கொடுமைகளை இந்திய சமுதாயம் அடிபணிந்து ஏற்றுக்கொணடதுமில்லை. இந்தக் கொடுமைகள் என்று தோன்றினவோ அன்று முதல் இவைகளுக்கு எதிரான தொடர்ச்சியான போராட்டங்களும் அவை தொடர்பான கருத்துக்களும் நிகழ்ச்சிகளும் நமது பண்பாட்டு தள்த்தில் ஒரு முக்கிய பற்றுக்கோடாகும்.சாதிக் கொடுமைகளை எதிர்த்து தொடர்ச்சியாக நடைபெற்றுள்ள போராட்டங்களின் வ்ரலாற்று அனுபவங்களைத் தெளிவாக ஆய்வு செய்து அவைகளின் படிப்பினைகளைக் கைக்கொள்ள வேண்டியதும் மிக முக்கியமான பணியாகும்.

வேதங்கள், உபநிடதங்கள், சுருதிகள், ஸ்மிருதிகள், புராணங்கள் இதிகாசங்கள், முதலிய சாத்திரங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் நிகழ்ச்சிகள், புத்தம் சமணம் உருவாக்கிய சங்கம், அறப்பள்ளிகள், சர்வ ஜனசமத்துக் கொள்கை, இடைக்காலக் காப்பியங்கள் வெளியிட்ட கருத்துக்கள் நிகழ்ச்சிகள், குலதர்மங்களைப் பற்றி பகவத்கீதையில் பகவான் கூறியுள்ள அடிப்படைக்கருத்துக்கள், பின்னர் தோன்றிய கீதையின் பாஷ்யங்கள், பக்தி இயக்கங்கள், அவை அனைத்து பகுதி மக்களையும் ஈடுபடுத்திய சமுதாய நீரோட்டப் பெருவெள்ளங்கள், இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ சமயத்தாக்கங்கள், ஐரோப்பிய மறுமலர்ச்சி இயக்கங்களின் தலையீடுகள், நமது நாட்டில் சற்று முந்திய நூற்றாண்டுகளில் தோன்றி வளர்ந்த சமூக சீர்த்திருத்த இயக்கங்கள், தேசீய விடுதலை இயக்கம், அடிப்படை மக்களின் சமுதாயப் பொருளாதார அரசியல் கிளர்ச்சிகள், ஆகியவற்றின் தொடர்ச்சியாக பாரதி தனது கருத்துக்களை, கருத்தாழம் மிக்க கவிதைகளை மிகவும் தெளிவாகக் கூறியிருப்பதைக் காணலாம்.

பாரதி தனது நாட்டுப்பாடல்களில்,

"சாதி மதங்களைப் பாரோம் - உயர்
ஜன்மம் இத்தேசத்தில் எய்தினராயின்
வேதியராயினும் ஒன்றே - இன்றி
வேறு குலத்தினராயினும் ஒன்றே"

என்றும், " ஒன்று பட்டால் உண்டு வாழ்வு - நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே" என்று அனைத்து மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தியும்,

"ஜாதி நூறு சொல்லுவாய், போ, போ, போ

என்வும்,

"பறையருக்கும் இங்கு தீயர்
புலையருக்கும் விடுதலை
பரவரோடு குறவருக்கும்
மறவருக்கும் விடுதலை
"திறமைகொண்ட தீமையற்ற
தொழில்புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானம் எய்தி
வாழ்வம் இந்த நாட்டிலே" என்றும்
"எல்லோரும் ஒன்றென்னும் காலம் வந்ததே - பொய்யும்
ஏமாற்றும் தொலைகின்ற காலம் வந்ததே - இனி
நல்லோர் பெரியர் என்னும் காலம் வந்ததே - கெட்ட
நயவஞ்சக்காரருக்கு நாசம் வந்ததே!"
என்றும், குரு கோவிந்தர் என்னும் பாடலில்,

"ஆரியர் சாதியுள் ஆயிரம் சாதி
வகுப்பவர் வகுத்து மாய்க, நீர் அனைவீரும்
தருமம், கடவுள், சத்தியம், சுதந்திரம்
என்பவை போற்ற எழுந்திடும் வீரச்
சாதி ஒன்றனையே சார்ந்தோராவீர்"

எனவும் கூறுகிறார்.

பாப்பா' பாட்டில் பாரதி,

"சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம்
"நீதி உயர்ந்த மதி கல்வி - அன்பு
நிறைய உடையவர்கள்மேலோர்"

எனவும், முரசுப்பாட்டில்

"நாலு வகுப்பும் இங்கொன்றே - இந்த
நான்கினில் ஒன்று குறைந்தால்
வேலை தவறிச்சிதைந்தே - செத்து
வீழ்ந்திடும் மானிடச் சாதி" என்றும்
"சாதிக்கொடுமைகள் வேண்டாம் -அன்பு
தன்னில் செழிந்திடும் வையம்
ஆதரவுற்றிங்கு வாழ்வோம் - தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்'

என்றும் முரசு கொட்டுகிறார்.

"உயிர்பெற்ற தமிழர்' என்னும் தலைப்பில்

"மனிதரில் ஆயிரம் சாதி - என்ற
வஞ்சக வார்த்தையை ஒப்புவதில்லை"

எனவும்,

"ஒன்றுண்டு மானிட சாதி - பயின்று
உண்மைகள் கண்டவர் இன்பங்கள் சேர்வார்

என்றும்.

" நந்தனைப்போல் ஒரு பார்ப்பான் - இந்த
நாட்டினில்இல்லை, குணம் நல்லதாயின்
எந்தக் குலத்தினரேனும் - உணர்
வின்பம் அடைதல் எளிதெனக் கண்டோம்'

என்றும்,

"சூத்திரனுக்கு ஒரு நீதி - தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி எனச்
சாத்திரம் சொல்லிடுமாயின் - அது
சாத்திரம் அன்று சதியென்று கண்டோம்"

என்றும் தெளிவு படுத்திக் கூறுகிறார்.

முன்னர் தோன்றிய சாத்திரங்களைப் பயிலும்போது, காலத்திற்கேற்ற வகையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் கணக்கில் கொள்ள வேண்டும் என்பது பாரதியின் கொள்கை.

"பின்னும் பல ஸ்மிருதிகள் செய்தார் - அவை
பேணும் மனிதர் உலகினில் இல்லை
மன்னும் இயல்பினவல்ல - இவை
மாறிப்பயிலும்இயல்பினவாகும்"

என்று குறிப்பிடுகிறார்.

" குணத்தாலும் செய்கையாலும் நான்கு வர்ணங்களைப் படைத்தேன்" என்று கண்ணபிரான் கூறும்போது வர்ணங்கள் எப்படி பின்னர்குலங்கள்ஆயின என்பது கேள்விக்குரிய பொருளாகும். இங்கே வர்ணம் என்பது புறத்தோற்றம் அல்ல, அகப்பண்பாடு ஆகும். சத்துவம், ராஜசம், தாமசம் என்றும் மனித குணங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டு பயிலப்பட்டிருக்கிறது. இம்முக்குணங்களில் எது மேலோங்கி ஒருவனிடம் இருக்கிறதோ அதன்படி அவனுடைய செயல்பாடு அமைகிறது என்பதை தத்துவ சாத்திரங்கள் குறிப்பிடுகின்றன.

பாரதி தனது பகவத் கீதை மொழிபெயர்ப்பு நூலுக்கு எழுதியுள்ள முன்னுரையில் "கண்ணபிரான் மனிதருக்குள் சாதி வேற்றுமையும், அறிவு

வேற்றுமையும் பார்க்கக்கூடாது என்பது மட்டுமேயன்றி எல்லா உயிர்களுக்குள்ளேயும் எவ்வித வேற்றுமையும் பாராதிருத்தலே ஞானிகளுக்கு லட்சணமென்று சொல்லுகிறார் என்று குறிப்பிட்டுள்ளார்.

சாத்திரங்களின் மூல நூல்களில் உள்ள கருத்துக்களுக்கு மாறாக சாதி வேறுபாடுகள், பாகுபாடுகள், கொடுமைகள், இழிவுகள், தீண்டாமை முதலிய கொடுமைகள், சமுதாயத்தின் மேல்தட்டில் இருந்த சில பிரிவுகளின் சுயநலம் காரணமாக ஏற்பட்டன என்பதும் அதற்காகப் பொய்மைச் சாத்திரங்கள் பல தோன்றின என்பதையும் பாரதி தனது பாடல்களில் பல இடங்களிலும் குறிப்பிட்டுக்காட்டுகிறார். பாரத சமுதாயத்தின் அனைத்து பகுதி மக்களுடைய முழுமையான விடுதலைக்காக பாரதி சிந்தனைகள் வெளிப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

**பெண்ணின் மேன்மையும் பெருமையும் பற்றி:**

மிகப்பண்டைய காலத்தில் பெண்ணிற்கு சமுதாயத்தில் பெருமையும் மேன்மையும் தலைமையும் இருந்தது. தாய்வழி சமுதாயமே மனித குலத்தின் தொடக்கமாகும். பாரத மக்கள் பெண்ணிற்கு தெய்வீகத்தன்மையைக் கொடுத்துக் கொண்டாடினர். சமுதாயத்தின் இருகண்களாக பெண்ணும் ஆணும் கருதப்பட்டனர். இடைக்காலத்தில் ஆதிக்கத்தில் இருந்தவர்கள் பெண்ணைத் தாழ்த்திவிட்டனர். பெண் அடிமைபோல் ஆக்கப்பட்டாள். பெண்களும் சூத்திரர்களும் வேதங்களையும் நூல்களையும் படிக்கலாகாது என்று சில பொய்மைச்சாத்திரங்களில் எழுதிவைத்தார்கள். வேறு சில பகுதிகளிலும் பெண்பாற் புலவர்கள் பலரும் தோன்றி "ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்" என்னும் மகாவாக்கியத்தைக் கூறிய புண்ணிய பூமியாக இருந்தது.

பிற்காலத்தில் பெண்கள் மேலும் அடிமைப்படுத்தப்பட்டு பிற்படுத்தப்பட்டனர். பின்னுக்குத் தள்ளப்பட்டனர். தற்காலத்தில் பெண் குலத்தில் பெரிய அளவில் எழுச்சி ஏற்பட்டு வருகின்றன. பெண்ணுரிமை இயக்கம், புதுமைப் பெண் இயக்கம் முதலியன பெருகி வருகின்றன. சகல துறைகளிலும் பெண்களுக்கு சமவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்னும் உணர்வு நிலை, விழிப்புணர்வு பெருகி வருகிறது. புதுமைப் பெண் இயக்கத்தின் முன்னோடியாக பாரதி விளங்குகிறார், அவருடைய கவிதைகளும் எழுத்துக்களும் விளங்குகின்றன.

பாரத நாட்டின் பண்பாட்டு வழியில் பாரதி, பெண்ணைத் தெய்வமாகப் பாராட்டுகிறார். பெண்ணை சக்தியின் வடிவமாகக் காண்கிறார். நாட்டைப் பெண்ணாக வடித்து தனது கவிதைகளைத் தொகுத்துள்ளார். வந்தே மாதரகீதத்தை அந்த முறையில் பாரதி பெருமையுடன் பாடுகிறார்.

"வந்தே மாதரம் என்போம் - எங்கள்
மாநிலத்தாயை வணங்குதும் என்போம்"

என்பதே பாரதியின் நாட்டுப்பாடல் தொகுப்பின் தொடக்கமாக அமைந்துள்ளது. பாரத மாதா, எங்கள் தாய், வெறிகொண்ட தாய், பாரத மாதா திருப்பள்ளியெழுச்சி, பாரத மாதா நவரத்தினமாலை, பாரத தேவியின் திருத்தசாங்கம் தாயின் மணிக்கொடி, சுதந்திர தேவியின் துதி, பாரத தேவியின் அடிமை, தமிழ்த்தாய் என்னும் தலைப்புகளிலேயே பாரதி தனது தேசபக்தப் பாடல்கள் பலவற்றையும் எழுதியுள்ளார்.

முருகனைப் பாடத்தொடங்கிய பாரதி வள்ளியையும் பாடுகிறார். " பல்லினைக் காட்டி வெண்முத்தைப் பழித்திடும் வள்ளியை ஒரு பார்ப்பனக் கோலம் தரித்துக் கரம் தொட்ட வேலவா " என வேலன்பாட்டில் பாடுவது சிறப்பாகும்.

சிவசக்தி, பராசக்தி, மகாசக்தி, ஓம்சக்தி, சக்திக்கூத்து, சக்தி, காளி, மகாகாளி, முத்துமாரி, தேசமுத்து மாரி, கோமதி, திருமகள், கலைமகள், நவராத்திரி ஆகிய த்லைப்புகளிலேதான் பாரதியின் உணர்ச்சி மிக்க தெய்வ பக்திப்பாடல்கள், அதிகமாகக் காணப்படுகின்றன. பாரதியின் மகாசக்திக்குள்ள வலிமை அனந்தமானது.

கண்ணனைப் பல கோணங்களிலும், பல வடிவங்களிலும் பாடும் பாரதி, கண்ணம்மாவாகவும் பாடி மகிழ்கிறார். புதிய ஆத்திசூடியில்" தையலை உயர்வு செய்"என்று கூறுகிறார்.

பாரதி ஒரு மகாகவி. பாரதி பல கவிதைகளை எழுதியுள்ள போதிலும், கம்பனுக்குப் பிறகு தமிழில் ஒரு காவியம் இல்லை என்னும் குறையைப் போக்க பாரதி ஒரு காவியத்தை எழுதினார். அதற்குப் பாஞ்சாலி சபதம் எனப் பெயரிட்டார். பாரதி பாஞ்சாலியை துருபதன் மகளாகவோ, ஐவரின் தேவியாகவோ மட்டும் காணவில்லை. அவன் பாஞ்சாலியை அடிமைப்பட்டிருந்த பாரத தேவியாகவே கண்டான். பாஞ்சாலியைப் பெண்ணுரிமைக்காக வாதாடிய வீரத்தாயாகவே கண்டான்.

பாஞ்சாலி சபதம் என்னும் காவியத்திற்கு கடவுள் வணக்கம் பாடிய பாரதி சூழ்ச்சிச் சருக்கத்தில் சரஸ்வதி வணக்கம். சூதாட்டச் சருக்கத்தில் வாணியை வேண்டுதல், அடிமைச் சருக்கத்தில் பராசக்தி வணக்கம், சரஸ்வதி வணக்கம் ஆகிய துதிப்பாடல்கள் முக்கிய இடம்பெறுகின்றன.

துரியோதனன் சபையில் பாஞ்சாலி நடத்தியவாதம், பாரதி தமிழுக்கு அளித்த ஒரு தனிச் சிறப்பான இலக்கியக் கருத்தாகும்.

புதுமைப் பெண்ணின் சிறப்புகளைப் பற்றி ஒரு முழுமையான சித்திரத்தை பாரதி தனது கவிதைகளில் வடிவத்திருப்பது காலத்திற்கேற்றது மட்டுமல்லாமல், எக்காலத்திற்கும் பொருந்துவதான பொது நெறியாகும். புது நெறியாகும். பெண்மைவாழ்க வென்றும் பெண்கள் விடுதலைக் கும்மியென்றும். பெண் விடுதலையென்றும் பெண்ணுரிமைகளைப் பற்றி ஒரு புதிய கொள்கையை பாரதி, பாரத நாட்டின் முழு விடுதலையின் பகுதியாக முன் வைத்துள்ளார்.

பெண் விடுதலை, பெண்ணின் பெருமை, பெண்ணின் மேன்மை பற்றி, பாரதி தனது கவிதைகளில் கூறியுள்ள கருத்துக்கள் பற்றி எழுதத் தொடங்கினால் அதுவே விரிவடைந்து பெரிய நூலாகிவிடும். எனினும் பாரதி நமது பண்பாட்டு தளத்தில் வேரூன்றி நின்று எவ்வாறு அதில் உள்ள சில அழுகிப் போன பழமை, பொய்மைகளை நீக்கி புது நெறியை முன் வைத்துள்ளார் என்பது நாம் கற்றறிய வேண்டியதாகும். பாரதப் பெண்மையின் முழு வடிவத்தை அனைத்துப் பரிமாணங்களிலும் பாரதி கூறியிருப்பது சிறப்பானதாகும்.

"செய்யாளினியாள்ஸ்ரீதேவி
செந்தாமரையிற் சேர்ந்திருப்பாள்
"கையாளென நின்றடியேன் செய்
தொழில்கள் யாவும் கை கலந்து
"செய்வாள், புகழ் சேர்வாணியும் என்
உள்ளே நின்று தீங்க விதை
"பெய்வாள், சக்தி துணைபுரிவாள்
பிள்ளாய் நின்னைப்பே சிடிலே'

என்று முப்பெரும் தெய்வங்களையும் சக்தி வடிவில் பாடுகிறாள்.

வேண்டுவன என்னும் தலைப்பிலான கவிதையில் மனதில் உறுதி வேண்டும் என்று தொடங்கி "

"கண் திறந்திட வேண்டும்
காரியத்தில் உறுதி வேண்டும்
பெண் விடுதலை வேண்டும்
பெரிய கடவுள் காக்க வேண்டும்"

என்று பாடுகிறார்.

பாரதி தனது விடுதலைப்பாட்டில் விடுதலையின் முழுமையான பரிமாணத்தை மொத்தமான அடையாளத்தை, பரிபூரண சுதந்திரத்தின் முழுப்பொருளைக் குறித்துக் காட்டுகிறார். விடுதலை என்றால் அரசியல் விடுதலை, பொருளாதார விடுதலை, சமுதாய விடுதலை, பெண் விடுதலை, கல்லாமையிலிருந்து விடுதலை, மூடப்பழக்க வழக்கங்களிலிருந்து விடுதலை, இவ்வாறு அனைத்துத் துறைகளிலும் விடுதலை என்னும் உயர்ந்த விரிவான கருத்தை பாரதி தெளிவுபடுத்துகிறார். பறையர், தீயர், புலையர், பரவர், குறவர், மறவர், முதலிய அனைத்து மக்களுக்கும் சமுதாய இழிவுகளிலிருந்தும் தாழ்த்தப்பட்ட நிலையிலிருந்தும் பிற்படுத்தப்பட்ட நிலையிலிருந்தும் அறியாமையிலிருந்தும் கல்லாமையிலிருந்தும், வறுமையிலிருந்தும், பசி பட்டினி முதலிய கொடுமைகளிலிருந்தும் முழுமையான விடுதலை கிடைக்க வேண்டும் என்பது பாரதியின் கருத்தாகும்.

"திறமை கொண்ட தீமையற்ற
தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞான மெய்தி.
வாழ்வம் இந்த நாட்டிலே" , என்பது

பாரதியின் லட்சியமாகும்.

ஏழையென்றும் அடிமையென்றும், சாதியில் இழிவு கொண்ட மனிதர் என்பவர் இந்த நாட்டில் யாரும் இல்லை என்று.

"வாழி கல்வி செல்வமெய்தி
மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரும் ஒரு நிகர்ச
மானமாக வாழ்வமே!"

என்று விடுதலை பெற்ற பாரத சமுதாயத்தின் சமநிலையைப் பற்றி தனது லட்சியக் கருத்தைக் கூறுகிறார். அத்தகைதொரு புதிய சமுதாயத்தில்

"மாதர்தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்து வோம்
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையிலும் நமக்குள்ளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வம் இந்த நாட்டிலே"

என்று ஆண் பெண் சரிசமத்துவமாக வாழ்வோம் என்று ஒரு தெளிவான கொள்கையே வகுத்துக் கூறுகிறார்.

**பெண் விடுதலை**

`பாரதி அறுபத்தாறு' என்னும் கவிதைத் தொகுப்பில் பாரதி பெண் விடுதலையைப் பற்றிப் பேசுகிறார். பெண் விடுதலையைப் பற்றி ஒரு புதிய கொள்கையை வகுத்துக் கூறுகிறார்.

"பெண்ணுக்கு விடுதலையென்றிங்கோர் நீதி பிறப்பித்தேன் அதற்குரிய பெற்றிகேளீர்" என்று தொடங்கி "மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வமென்றால், மனையாளும் தெய்வ மன்றோ" என்று ஒரு கேள்வியை எழுப்பி 'பெண்ணுக்கு விடுதலை. நீரில்லையென்றால் பின்னிந்த உலகினிலே வாழ்க்கையில்லை' என்று ஒரு முடிவு கூறுகிறார்.

மேலும் "பெண்டாட்டி தன்னை அடிமைப்படுத்த வேண்டிப்பெண்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ? என்றும், உண்டாக்கிப்பாலூட்டி வளர்த்த தாயை உமையவள் என்று அறியீரோ' என்றும் கேட்டு,
" பண்டாய்ச்சி ஔவை - அன்னையும் பிதாவும் பாரிடை முன்னறிதெய்வம் என்றாளன்றோ" என்றும்சுட்டிக்காட்டுகிறார்.

"தாய்க்கு மேல் இங்கேயோர் தெய்வமுண்டோ
தாய் பெண்ணேல்லளோ, தமக்கை தங்கை
வாய்க்கும் பெண் மகவெல்லாம் பெண்ணேயன்றோ?
மனைவியொருத்தியை அடிமைப்படுத்த வேண்டித்
தாய்க்குலத்தை முழுதடிமைப்படுத்தலாமோ?
தாயைப் போலே பிள்ளை யென்று முன்னோர்
வாக்குளதன்றோ? பெண்மை அடிமையுற்றால்
மக்கள் எல்லாம் அடிமையுறல் வியப்பொன்றாமோ?

என்றும்,

"ஆதி சக்திதனையுடம்பில் அரசனும் கோத்தான்
அயன்வாணி தன்னை நாவில் அமர்த்திக் கொண்டான்
சோதி மணி முகத்தினளைச் செல்வமெல்லாம்
சுரந்தருளும் விழியாளைத் திருவை மார்பில்
மாதவனும் ஏந்தினான், வானோர்க்கேனும்
மாதரின்பம் போல் பிறிதோர் இன்பமுண்டோ?
காதல் செய்யும் மனைவியே சக்தி, கண்டீர்
கடவுள்நிலை அவளாலே எய்த வேண்டும்"

என்றும் கூறி பெண்மையைக் கடவுள் நிலைக்கு உயர்த்தி நமது நாட்டு மரபு வழியில் பெண்விடுதலையை பாரதி வலியுறுத்துகிறார்.

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.

" கண்கள் இரண்டில் ஒன்றைக் - குத்திக்
காட்சிகொடுத்திடலாமோ
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமையற்றிடும் காணீர் "

3892

பெண்ணுரிமைபற்றியும் பெண்விடுதலை பற்றியும் உலகில் தற்காலத்தில் சில வகைக் கருத்துக்கள் எழுந்துள்ளன. பொதுவாக மேல் நாடுகளில் பெண்கள் சுதந்திரமாக உள்ளார்கள் என்றும் இந்தியா போன்ற கிழக்கு நாடுகளில் பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள் என்றும் பேசப்படுகிறது.

மேல்நாடுகளில் நிலவுவது காதல் விடுதலைதான். பெண் விடுதலையல்ல என்பது எமதுகருத்தாகும். பாரதி கூறுவதைக் காண்போம்.

" காதலிலே விடுதலை யென்றாங்கோர் கொள்கை
கடுகிவளர்ந்திடும் என்பார் யூரோப்பாவில்
மாதரெல்லாம் தம் முடைய விருப்பின் வண்ணம்
மனிதருடன் வாழ்ந்திடலாம் என்பார் அன்னோர்
பேதமின்றிமிருகங்கள் கலத்தல்போல
பிரியம்வந்தால் கலந்து அன்பு பிரிந்துவிட்டால்
வேதனை யொன்றில்லாதே பிரிந்து சென்று
வேறொருவன்றனைக் கூடவேண்டுமென்பார்
வீரமிலாமனிதர் சொலும் வார்த்தைகண்டீர்
விடுதலையாம் காதலெனில் பொய்மைக் காதல்"

என்று கூறுகிறார்.

காதலில் விடுதலையென்றால் அதுபொய்மைக்காதலாகும். அது மனிதனை மிருக நிலைக்குத்தள்ளிவிடும். இத்தகைய பொய்மைக்காதல் யூரோப்பாவில் மட்டுமல்ல எல்லா நாடுகளிலும் உள்ளனவேயாகும். சில இடங்களில் வெளிப்படையாகவும், சில இடங்களில் மறைமுகமாகவும், சில இடங்களில் பட்டும் படாமல் இலைமறைவு காயாகவும் நிலவுகின்றன. எனவே . அதைப் பொய்மை என்றும் போலி என்றும் பாரதி கூற முனைந்தார்.

மனிதன் ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி தனிமனிதனல்ல. சமுதாயத்துடனும் குடும்ப அமைப்புடனும் இணைந்தவராகும். சமுதாயத்தின் அங்கமாக இருந்து தொழில் செய்தும், குடும்பத்தின் அங்கமாக இருந்து வாழ்க்கை நடத்தியும் ஆணும் பெண்ணும் சரி சமமாக இருந்து தங்கள் கடமைகளை ஆற்றி சமுதாய முன்னேற்றத்திலும் குடும்பவளர்ச்சியிலும் பங்கு கொள்ள வேண்டும்.

பாரதி இந்தியப் பண்பாட்டின் வழியில் நின்று இதுபற்றி ஒரு புதிய கருத்தைத் தெளிவு படக் கூறுகிறார்.

இந்த இடத்தில் பால் ஒழுக்கத்தைப் பற்றி கம்பன் காட்டும் ஒரு அருமையான காட்சியை இங்கு நினைவு கூறலாம்.

இராமன் வாலி மீது மறைந்து நின்று அம்பெய்து வாலி வீழ்ந்து கிடக்கிறான். அப்போது வாலி தன்மீது அம்பெய்தக் காரணம் கேட்டு இராமனுடன் பேசுகிறான். அந்த உரையாடல் ஒரு அற்புதமாகக் காட்சியாகும்.

இராமன் வாலியிடம் கூறுகிறான்

"மறம் திறம்பல, வலியன் எனாமனம்
புறம் திறம்ப எளியவர் பொங்குதல்
அறம் திறம்பல் அரும்கடி மங்கையர்
திறம்திறம்பல், தெளிவுடையோர்க்கெலாம்",

என்றும்,

"தருமம் இன்னது எனும் தகைத்தன்மையும்
இருமையும் தெரிந்து எண்ணலை, எண்ணினால்
இருமை உம்பிதன் ஆருயிர்த் தேவியைப்
பெருமை நீங்கினை எய்தப் பெறுதியோ?"

என்றும் கேட்கிறான். அதற்கு வாலி

"ஐய! நுங்கள் அரும்குலக்கற்பின் அப்
பொய்யில் மங்கையர்க்கு ஏய்ந்த புணர்ச்சி போல்
செய்திலன், எமைதேமலர் மேலவன்,
எய்தின் எய்தியதாக இயற்றினான்"

என்றும்

"மணமும் இல்லை மறைநெறிவந்தன,
குணமும் இல்லைக் குல முதற்கு ஒத்தன,
உணர்வு சென்றுழி செல்லும் ஒழுக்கலால்
நிணமும் நெய்யும் இணங்கிய நேமியாய்"

என்று மனம் போனபடி செல்லும் விலங்கியல் முறையைக் குறிப்பிடுகிறான். அதை மறுத்து இராமன் நன்று தீதென்று அறியாமல் வாழ்வது விலங்கியல், தக்கது இன்னதகாதன இன்ன் என்று அறிந்து செயல்பட்டால் விலங்குகளும் தேவ நிலை எய்தலாம் எனறு கூறுகிறான்.

"நன்று தீதென்று இயல்தெரி நல்லறிவு
இன்றி, வாழ்வது அன்றோ விலங்கின் இயல்
நின்ற நன்னெறி, நீ அறியாநெறி
ஒன்றும் இன்மை உன்வாய்மை உணர்த்துமால்

என்றும்,

" தக்க இன்ன தகாதன இன்ன என்று
ஒக்க உன்னலர் ஆயின், உயர்ந்துள
மக்களும் விலங்கே, மனுவின் நெறி
புக்க வேல், அவ்விலங்கும் புத்தேளிரே,

என்று இராமன் கூறி மனையின் மாட்சியைப் பாதுகாத்தல்பற்றி கூறுகிறார்.

மாதர்களுக்கு சுதந்திரம் உண்டு என்னும் சொல், நாரதன் வீணையைப் போல கண்ணனின் குழலிசையைப் போல இன்ப மளிப்பதாக இருக்கிறது. வேதமே பொன்னால் ஆன அழகிய கன்னிகையாக வருவதைப் போல் இருக்கிறது. அமரத்தன்மையை அளிக்கும் அமிழ்தத்தைப் போல் அமைந்திருக்கிறது, என்று பாரதி கூறுகிறார்.

பெண்ணை அடிமைப்படுத்த நினைப்பவர் மாய்ந்துவிட்டார் என்று பாரதி எதிர்காலத்தை கணித்துக் கூறுகிறார்.

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று
எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்,
வீட்டிற்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போம் என்ற
விந்தை மனிதர் த்லை கவிழ்ந்தார்'

என்றும்,

"கற்புநிலையன்று சொல்லவந்தால் இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளிமிதித்திடுவோம்"

என்றும் பாரதி கும்மியடிக்கக் கூறுகிறார்.

".அறிவு கொண்ட மனித உயிர்களை அடிமை
யாக்கமுயல்பவர் பித்தராம்", என்றும்

"நெறிகள் யாவினும் மேம்பட்டு மானிடர்
நேர்மை கொண்டு உயர்தேவர்கள் ஆதற்கே
சிறிய தொண்டுகள்தீர்த்தடிமைச் சுருள்
தீயிலிட்டுப் பொசுக்கிடவேண்டுமாம்"

என்றும் பெண்ணுரிமைக்கு எதிரானவர்களைச் சாடுகிறார்.

புதுமைப் பெண்ணின் சொற்கள் எல்லாம் இக்கலிகாலத்திற்கு வேண்டுமானால் புதிதாகத் தோன்றலாம். பண்டய நாளில் பெண்கள் உரிமையுடன் இருந்தனர் என்னும் கருத்தில்,

"புதுமைப் பெண்ணிவள் சொற்களும் செய்கையும்
பொய்மை கண்ட கலிக்கும் புதிதன்றிச்
சதுமறைப்படி மாந்தர் இருந்த நாள்
தன்னிலே பொதுவான வழக்கமாம்"

"மாதவப் பெரியோருடன் ஒப்புற்றே
முதுமைக் காலத்தில் வேதங்கள் பேசிய
முறைமை மாறிடக் கேடுவிளைந்ததாம்"

என்று பிற்காலத்தில் ஏற்பட்ட கொடுமைகளைச் சுட்டிக்காட்டுகிறார்.

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவில் ஓங்கி இவ்வையம் தழைக்குமாம்
பூணும் நல்லறத் தோடிங்கு பெண்ணுருப்
போந்து நிற்பது தாய் சிவசக்தியாம்
நாணும் அச்சமும் நாய்களுக்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுகள் கேட்டீரோ"

என்று பெண்மைத் தெய்வத்தின் பேச்சுகளைப்பற்றி குறிப்பிடுகிறார்

"நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
நிமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மைமாதர் திறம்புவதில்லையாம்
அமிழ்ந்து பேரிருளாம் அறியாமையில்
அவலமெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணறமாகுமாம்
உதய கன்னி உரைப்பதைக் கேட்டீரோ"

என்று புதிய பெண் பேசுவதைக் கூறுகிறார்.

"உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்
" ஓதுபற்பல நூல்கள் கற்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவும் சென்று புதுமை கொணர்ந்திங்கே
தில கவாணுதலார் நாங்கள் பாரத
தேச மோங்க உழைத்திடல் வேண்டுமாம்
விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்"

என்றும்

"சாத்திரங்கள் பல பல கற்பராம்
சவுரியங்கள் பல பல செய்வராம்
மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பராம்
மூடக் கட்டுகள் யாவும் தகர்ப்பராம்.

"காத்து மானிடர் செய்கையனைத்தையும்
கடவுளர்க் கினிதாகச் சமைப்பராம்
ஏத்தியாண்மக்கள் யாவும் அழிப்பராம்
இளைய நங்கையின் எண்ணங்கள் கேட்டீரோ"

என்றெல்லாம் புதுமைப் பெண்ணின் புதிய கருத்துக்கள் ஒலிப்பதாக பாரதி மகிழ்ச்சி கொண்டு பாடுகிறார்.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
அட்டமறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காண் என்று கும்மியடி'
'வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டிவந்தோ மென்று கும்மியடி
சாதம் படைக்கவும் செய்திடுவோம் தெய்வச்
சாதிபடைக்கவும் செய்திடுவோம்"

"காதல் ஒருவனைக் கைப்பிடித்தே அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து
மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி"

என்று புதுமைப்பெண்ணிற்கு இலக்கணம் வகுத்து புதிய குடும்ப அமைப்பை வகுத்துக் கொள்ளும் பாரதக் கொள்கையை பாரதி முன்வைக்கிறார்.

## 2. தெய்வீகப் பாத்திரங்களைப் பற்றி

பாரதி தனது பல வகையான பாடல்களிலும் தெய்வீகப் பாத்திரங்களைக் குறிப்புக் காட்டி உணர்ச்சி பொங்கப் பேசுகிறார். நாட்டுப் பாடல்களிலோ, தேசத்தலைவர்களைப் பற்றிய பாடல்களிலோ மற்றும் இதர பாடல்களிலோ, நமது புராணங்கள் இதிகாசங்கள் கதைகளில் வரும் தெய்வீகப்பாத்திரங்களைக் குறிப்பிட்டு மிகுந்த ஈடுபாட்டுடன் பாரதி பாடுவதைக் காண்கிறோம்.

இராமன், இலக்குவன், பரதன்,.கண்ணன், வீட்டுமன், தர்மன், அர்ஜுனன், பீமன், கருணன், இந்திரசித்தன் முதலிய பல பாத்திரங்களும் வடிவங்களும் பாரதியின் கண் முன்பு வந்து நிற்கின்றனர். அவர்களை பாரதி வெறும் கதாபாத்திரங்களாகக் காணவில்லை. பாரத நாட்டின் தலைசிறந்த, பெருமைக்கும் வணக்கத்திற்கும் உரிய நடமாடும் சின்னங்களாகக் காண்கிறான்.

இராமனுடைய முழுமையான தெய்விக மனிதவடிவம், அர்ஜுனனுடைய வீரம், வீட்டுமனுடைய அளப்பறிய தியாகம், தருமனுடைய அறம், பாரதத்தாயின் வடிவங்களாக, குணச்சிறப்புகளாகக் காண்கிறான். நமது நாட்டுப் பெரியார்களின் அறிவு, கல்வி, ஆற்றல், வீரம், அன்பு, கருணை, செல்வங்கள் முதலிய சகல சிறப்புகளையும் பாரத தேவியின் விஸ்வரூபத்தில் பாரதி காண்கிறார். அதுவே அவர்காணும் பாரதப் பண்பாட்டு தளம்.

தேசபக்திப் பாடல்களை நூலாக வெளியிட்டு அதை சமர்ப்பிக்கும் போது " ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விசுவரூபம் காட்டி, ஆத்துமநிலைவிளக்கிய தொப்ப எனக்கு பாரத தேவியின் சம்பூரண ரூபத்தைக் காட்டி ஸ்வதேச பக்தி உபதேசம் புரிந்தருளிய குருவின் சரணமலர்களில் இச்சிறுநூலை சமர்ப்பிக்கிறேன் என்று பாரதி கூறியுள்ளதை இங்கு மீண்டும் நினைவு கொள்கிறோம்.

"மாரத வீரர் மலிந்த நன்னாடு
மாமுனிவோர் பலர் வாழ்ந்த பொன்னாடு
நாரத கானம் நலம் திகழ்நாடு
நல்லனயாவையும் நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர்பிரான் அருள் பொங்கியநாடு
பாரதநாடு பழம் பெரும் நாடே"

என்று பாரத நாடு உலகிலேயே ஒரு இணையற்ற நாடாக பாரதிக்குக் காட்சிதருகிறது.

பாரத மாதா என்னும் தலைப்பில் தாயின் வீரம், தெய்வத்தன்மை, கைத்திறன், சொல் சிறப்பு, ஒளி, தோள்வலி, கொடைச்சிறப்பு, ஞானம் புகன்ற திருவாய்மகிமை, தியாக உள்ளம், மொழி உயர்வு, மதியூகம், அருள், கவிதைத்திறன், ஆகியவைகளை தெய்வீகப் பாத்திரச் சிறப்புகள் மூலம் வடித்துக் காட்டும் தனிச்சிறப்பைக் காணலாம்.

இராமாயணத்தில், இலங்கை நகரம், செல்வச் செழிப்பிலும், நாகரிக வளர்ச்சியிலும், கல்விச் சிறப்பிலும், போர்ப் பயிற்சியிலும் இசை ஞானத்திலும், படைவல்லமையிலும் சிறந்த நாடாக விளங்கியது. அந்நகரை ஆண்ட இராவணன், யாராலும் வெல்ல முடியாத வல்லமை மிக்கவனாக இருந்தான். பஞ்சபூத சக்திகளும் அவனுடைய ஆணைக்கு அடங்கியிருந்தன. " முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய தவ பலமும், எக்கோடியாராலும் வெலப்படாய் என்ற வரங்களின், பலமும்" கோட்டை பலமும், ஆயுதவலுவும், ஆண்மையும் வீரமும் வல்லமையும் கொண்டவனாக இருந்தான். ஆயினும் தன்னகங்காரத்தின் உச்சத்திலும் அதர்மமும் இரக்கமற்ற அரக்கத்தனமும் கொண்டவனாக இருந்த காரணத்தால் போரில் அழிந்தான். இலங்கை அரசனைப் போரில் வென்றான் இராமன். இராமன் சாதாரணமனித வடிவில் வானரப்படையைவைத்து இலங்கையை அழித்தான் என்பது அரசியலில் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

"குரங்கை விடுத்துப் பகைவரின் தீவைக்
கொளுத்திய, அரங்கத்திலே திருமாதுடன்
பள்ளி கொண்டான் மருகா"

என்று விநாயகரைப் பாடுகிறான் பாரதி.

"நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தி
நலம் புரிவாள் எங்கள் தாய்- அவர்
அல்லவராயின் அவரை விழுங்கிப்பின்
ஆனந்தக் கூத்திடுவாள்"

என்பது தான் பாரதத்தாயின் இயல்பாகவே பாரதி காண்கிறான். எனவே,

"முன்னை இலங்கை அரக்கர் அழிய
முடித்தவில் யாருடையவில் - எங்கள்
அன்னை பயங்கரி பாரத தேவி நல்
ஆரிய ராணியின் வில்"

என்று பாரத மாதாவின் முழுவடிவத்தைப் பற்றி எடுத்துக் கூறத் தொடங்குகிறார்.

இராவணனுடைய தலைமகன் மேகநாதன். அவன் மிகப் பெரிய வல்லமை மிக்க வீரன். போரில் தனது தந்தையைக் காட்டிலும் அதிகமான சாக-சங்களைச் செய்தவன் என்று கூடக் கூறலாம். வில்வித்தையில் வல்லவன். எல்லா அஸ்திரங்களையும் கற்றவன். இதர போர்ப்பயிற்சிகளையும் பெற்றவன். மாயாஜாலப் போர் கற்றவன் ஆகாயத்தில்மறைந்து நின்றும் பேர் புரியும் வல்லமைபடைத்தவன். பல வகைத்தவங்களும் வேள்விகளும் செய்து வரங்களும் பலமும் பெற்றவன்.இந்திரனையே வென்று இந்திரசித்தன் என்னும் பெயரும் புகழும் பெற்றவன். தேவர்களும் அவனுக்கு அஞ்சி வாழ்ந்தனர். அனுமனையும் கூட பிரம்மாஸ்திரத்தால் கட்டியவன். இலக்குவனையும் மற்றவர்களயையும் எதிர்த்தும் மாயாஸ்திரங்களையும் நாகாஸ்திரங்களையும் நான்முகன் படையையும் ஏவி இருமுறை போரில் வெற்றி கண்டவன். வீடணனும் அனுமனும் இல்லாதிருந்திருந்தால் இந்திரசித்தனை வெல்வது கடினமாக இருந்திருக்கும். அத்தகைய ஒரு வீரன் இராவணன் பக்கத்தில், அதர்மத்தின் பக்கத்தில் நின்றதால் போர்க்கள்தில் இறந்து பட்டான். இலக்குவனின் கணைகளால் இரண்டு துண்டாக்கப்பட்டான். இந்தக் கணைகள் பாரத ராணியின் வில்லிலிருந்து வெளிவந்த கணைகள்.

"இந்திரசித்தன் இரண்டு துண்டாக
எடுத்தவில் யாருடைய வில்? - எங்கள்
மந்திரத் தெய்வ நம் பாரத ராணி
வயிரவி தன்னுடைய வில்"

என்று பாரதி பாடுகிறார்.

இந்து தர்மத்தின் மய்யமான தத்துவக்கருத்து பரம் பொருள் ஒன்று அதுவே பிரபஞ்சத்திலுள்ள சகல விதமான பொருள்களிலும் நிலை கொண்டிருக்கிறது. உலகமே, இப்பேருலகமே அப்பரம் பொருள் மயமானது. "சர்வம் விஷ்ணு மயம் ஜகத்' உலகில் உள்ள அனைத்தும் விஷ்ணுமயமானது என்பது கீதையின்மய்யக் கருத்தாகும். அப்பரம் பொருளின் மக்களே நாம் எல்லோரும். மக்கள் மட்டுமல்ல அனைத்து ஜீவராசிகளும் அதன்படிவங்களேயாகும். இத்தகைய பரம் பொருளின் வடிவ்மாகிய இவ்வுலகம் இன்பமயமானது. வாழ்க்கைக்கு உகந்தது. இந்த பூமி, அதில் உள்ள கடல்கள் மலைகள், ஆறுகள், மரங்கள், இதர தாவரங்கள், விலங்குகள், பறவைகள், இதர பஞ்சபூதசக்திகள், விண்வெளி, நட்சத்திரங்கள், சூரியன்,சந்திரன், இதர கோள்கள், அனைத்தும் இன்பமய மானவை.

இதனிடையில் அமைந்த மனித வாழ்க்கை அறிதானது, இன்பமயமானது, என்பது இந்து தர்மத்தின் ஆதாரதத்துவமாகும். இதையே வேதங்களும் இதர சாத்திரங்களும் கூறுகின்றன.இதை பாரதி தனது கவிதைகளில் அடிநாதமாக இணைத்து இசைத்துக் கொண்டு செல்கிறான்.

இந்த தத்துவ ஞானக்கருத்தை பாரத மாதாவின் வடிவமாக, அதன் அங்கமாகவே பாரதி காண்கிறார்.

"ஒன்று பரம்பொருள் நாம் அதன் மக்கள்
உலகின்பக் கேணி யென்றே - மிக
நன்றுபல்வேதம் வரைந்த கை பாரத
நாயகி தன் திருக்கை"

இத்தகைய உயர்ந்த தத்துவங்களை வரைந்து உலகுக்கு ஒளி காட்டி வழி வகுத்த பாரத நாட்டின் ஞானிகள், அறிஞர்கள், தவப்புதல்களின் சிந்தனைகளும் எழுது கோல்களும் பாரத தேவியின் சிந்தனையும்எழுது கோலுமாகும்.

நமது நாட்டின் அறிஞர்களில் ஒரு பிரிவினர் சித்தர்கள். அவர்களில் சிலர் தத்துவ ஞானிகள், சிலர் விஞ்ஞானிகள், சிலர் வைத்தியர்கள், இத்தனை அறிவுத்துறைகளும் இணைந்தவர்கள். பஞ்சபூதங்களின் செயல்திறன்களைக் கற்றவர்கள். மனித உயிரையும் உடலையும் மனதையும் பொறிகளையும் அதன் செயல்களையும் கட்டுப்படுத்தும் பயிற்சி பெற்றவர்கள். பாரதியும் தன்னை ஒரு சித்தர் என்று கூறிக்கொண்டார்.

"எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தாரப்பா
யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்"

என்று பாரதி கூறுகிறார்

"அறிவிலே தெளிவு நெஞ்சிலே உறுதி
அகத்திலேயன்பினோர் வெள்ளம்
பொறிகளி ன்மீது தனியரசாணை
பொழுதெல்லாம் நினது பேரருளின்
நெறியிலே நாட்டம், கருமயோகத்தில்
நிலைத்திடல் என்றிவையருளாய்
குறிகுணம் ஏதும் இல்லாதாய் அனைத்தாய்க்
குலவிடும் தனிப்பரம்பொருளே!

என்று உலகம் சித்த மயம் என பாரதி கூறுகிறார்.

இவ்வுலகம் சித்தமயம் என்பதும் அந்த உறுதி நமது சித்ததில் நிலைபெற்று ஓங்கிவிட்டால் உலகனைத்தையும் வெல்லலாம் என்றும் சித்தர்களின் சொல், நீர் மேல் நடக்கலாம், காற்றிலே உலாவலாம். நெருப்பிலே செல்லலாம், மிருகங்களை அடக்கலாம், இவ்வாறாகக் கூறிய சொற்கள் பாரதத்தாயின் சொற்களாகும்.

"சித்தமயம் இவ்வுலகம் உறுதி நம்
சித்தத்தில் ஓங்கிவிட்டால் - துன்பம்
அத்தனையும் வெல்லலாம் என்று சொன்ன சொல்
ஆரியராணியின் சொல் "

என்பது பாரதியின் கவிதையாகும்.

அரச குலத்தின் முழுமையான வீரத்தையும் வித்தைகளையும், அந்தணர் குலத்தின் முழுமையான அறிவாற்றலையும் யாக பலத்தையும் ஒரு சேரப் பெற்று பிரம்மரிஷி என்னும் பட்டத்தைப் பெற்று தனிச்சிறப்போடு விளங்கிய விசுவாமித்திரருக்கும் சகல கலைகளிலும் தேர்ச்சி பெற்று, அழகிற் சிறந்த பேரழகியான மேனகைக்கும் பிறந்த சகுந்தலை பெற்ற பிள்ளை பரதன்.அந்த பரதன் பெயரிலேயே இந்த நாடு பாரத நாடு என்றும் பரத கண்டம் என்றும் சிறப்புப் பெயர் பெற்று விளங்குகிறது. அப்பரதன் வீரத்தின் வடிவம், துணிவின் சின்னம், சிறு பிள்ளையாக இருக்கும் போதே சிங்கத்தைத் தட்டி விளையாடிய தீரன். மனிதன் தனது தலை சிறந்த அறிவாலும் ஆற்றலாலும் மிருகங்கள் பலவற்றையும் அடக்கி அடிபணியச் செய்தான். அது வீரத்தின் அடையாளம். சிங்கத்தினையே தட்டி விளையாடிய பரதன் பாரத ராணியின் பிள்ளை, அதை

"சகுந்தலை பெற்றதோர்பிள்ளை சிங்கத்தினைத்தட்டி விளையாடி - நன்று
உகந்ததோர் பிள்ளை முன்பாரத ராணி
எளியுறப் பெற்ற பிள்ளை" என்று பாரதி பாடுகிறார்.

பஞ்சவர்களில் பார்த்தன், வீரர்களில் சிறந்தவன். அந்த அர்ஜுனனில் வில்லிற்குக் காண்டீவம் என்று பெயர். முந்திய யுகத்தில் இராமபிரானின் வில்லிற்கு கோதண்டம் என்னும் சிறப்புப் பெயர் உண்டு. அடுத்தாற்போல் சிறப்புப் பெயர் பெற்றது அர்ஜுனனுடைய வில்லாகும்.

"கன்னாணுந்திண்டோள் களவீரன் பார்த்தன் ஒரு
வில்நாண்ஒலி கேட்ட மேன்மைத்திருநாடு" என்று பார்த்தனின் தோள்வலி, வில்நாண் ஒலி ஆகியவற்றை பாரதி குறிப்பிடுகிறார்.

"இன்று கட்டுண்டோம், பொருத்திருப்போம்
காலம் மாறும், தருமத்தை அப்போது
வெல்லக்காண்போம், தனுவுண்டு
காண்டீவம் அதன்பேர் என்றான்

என்று பாஞ்சாலி சபதத்தில் பார்த்தன் கூறியதை பாரதி குறிப்பிடுகிறர்.

அர்ஜுனன் தனது காண்டீவத்தைக் கொண்டு உலகத்தையே வெல்வதற்கான வல்லமையைப் பெற்றவன். அத்தகைய வெற்றிக்குரிய வீரத்தோள்கள் பாரத தேவியின் தோள்களாகும். அதையே

"காண்டீவ மேந்தி உலகினை வென்றது
கல் ஒத்ததோள் எவர்தோள்? - எம்மை
ஆண்டருள் செய்பவள், பெற்று வளர்ப்பவள்
ஆரியர் தேவியின் தோள்"

என்று பாரதி பாடுகிறார்.

பாரதக் கதையில் கருணன் ஒரு மிக முக்கியமான பாத்திரமாகும். கர்ணன் ஈடு இணையில்லாத மாவீரன், வீரத்திலும் தீரத்திலும் மிகச்சிறந்தவன். பயம்என்பதை அறியாதவன்.தானதருமங்களில் அவனுக்கு நிகர் அவனே. நட்பிற்கு இலக்கணமானவன். கொடையில் சிறந்தவன் கன்னனோடு கொடை போயிற்று என்று புகழ் பெற்றவன். கால வசத்தால், சூழ்நிலையின் கட்டாயத்தால் கர்ணன் துரியோதனன் பக்கம் நின்றான். ஆயினும் கர்ணன் சகல துறைகளிலும் தனித்தன்மை பெற்றவன். போற்றுதலுக்குரியவன். பாரதி கர்ணனின் சிறப்பை தனது பாடல்களில் பல இடங்களிலும் மிகவும் சிறப்பித்துக் கூறுகிறான். கர்ணனுடைய சீரிய சிறப்புகளில் முதன்மை பெற்று நிற்பது அவனுடைய கொடைச் சிறப்பு.

பாரதி தனது பாஞ்சாலி சபதத்தில் துரியோதனன் சபையில் இருந்த பல பெரியோர்களையும் குறிப்பிட்டுக் கூறிவிட்டு கர்ணன் அங்கு இருந்ததையும் கீழே கண்ட்வாறு குறிப்பிடுகிறார்.

" மைந்நெறிவான் கொடையான் - உயர்
மானமும் வீரமும் மதியும் உளோன்
உய்ந்நெறியறியாதான் - இறைக்
குயிர் நிகர்கன்னனும் உடனிருந்தான்"

இங்கு கர்ணணை சிறப்பித்து பாரதி குறிப்பிடுவதைக் காணலாம்.

"மைந்நெறி வான் கொடையான்" என்று பாரதி கர்ணனை சிறப்பித்துக் கூறுவது அவனுடைய கொடைச் சிறப்பைப் பற்றியதாகும். இல்லையென்று வருவோருக்கு இல்லையென்று கூறாத நல்லிதயம் படைத்தோன் என்று கர்ணனைப் பற்றி பாரதக் கதை சிறப்பித்துக் கூறுகிறது. கர்ணனின் கொடைச்சிறப்பு, வேண்டியவர்க்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்தது மட்டுமல்ல, அவனிடம் இருக்கும் எதைக் கேட்டாலும் மனம் உவந்து அளிக்கக்கூடியவன்.

பாரதப் போருக்கான தயாரிப்புகள் நடந்து கொண்டிருந்தபோது கண்ணன் குந்தியை சந்தித்தான். அவளிடம் கர்ணனின் பிறப்பு ரகசியத்தை எடுத்துக்கூறி அவனே அவளது முதல் மகன் என்பதைத் தெரிவித்து அவனைக் கர்ணனிடம் அனுப்புகிறான். குந்திதேவி கர்ணனிடம் சென்று தான்தான் அவனுடைய தாய் என்பதை நிரூபித்துவிட்டு, கர்ணனைத் தனது தம்பியருடன் வந்துவிடும்படி கேட்கிறாள். கர்ணன் அதற்கு மறுப்பு தெரிவித்து துரியோதனனுடன் உள்ள தனது நட்பை சிறப்பித்துக் குறிப்பிட்டு அந்த ராஜராஜனுக்கு செருமுனை சென்று செஞ்சோற்றுக்கடன் களிப்பதே தனக்கினிக் கருமமும் தருமமும் எனக்கூறிவிடுகிறான். அதன் பின்னர் குந்தி ஏற்கனவே கண்ணன் கூறியிருந்த ஏற்பாட்டின்படி கர்ணனிடம் இருவரங்கள் கேட்கிறாள். ஒன்று அர்ஜுனன் மீது நாக பாணத்தை ஒரு தடவை மட்டும்தான் தொடுக்கவேண்டும் என்பது, இரண்டாவது மற்ற நால்வரில் எவரையும் போரில் கொல்லுதல் கூடாது என்று கேட்கிறாள். கொடையில் சிறந்த கர்ணன், அந்த வரங்களில் தனக்கு உள்ள பேராபத்தையும் பொருட்படுத்தாமல் :

"தொறுகணை யொன்று தொடுக்கவும் முனைந்து
செருச் செய்வோன் சென்னியோடிருந்தால்
மறுகணை தொடுப்பது ஆண்மையோ வலியோ
மானமோ மன்னவர்க்கு அறமோ
உறுகணை யொன்றே பார்த்தன்மேல் தொடுப்பன்
உய்த்துள்ளோர் உய்வர்என்றுரைத்தாள்
தறுகணலர்க்கும் தறு கணானவர்க்கும் தண்ணளி
நிறைந்த செங்கண்ணான்"

எனத் தனது தாய் கேட்ட தானங்களை மனம் உவந்து கொடுத்தான் மாவீரன் கர்ணன்.

"தறுகணலர்க்கும் 'தறுகணானவர்க்கும்' தண்ணளி நிறைந்த செங்கண்ணான்' என்று கர்ணனது கொடைச்சிறப்பைக் கூறுவது வில்லியின் வாக்காகும்.

கர்ணனுக்கு உடலோடு கவசமும் காதோடு குண்டலமும் உடன்பிறந்தவை. அவை அவனுடைய உடலில் இருக்கும்வரை அவனுடைய உயிருக்கு ஆபத்து இல்லை. அவனை யாரும் கொல்ல முடியாது. அவனுடைய கவசம் அவனது உயிருக்குப் பாதுகாப்பானதாகும். எனவே கர்ணனிடம் அவனுடைய கவச குண்டலங்கள் இருக்கும்வரை அவனைப் பார்த்தனால் கொல்லமுடியாது. எனவே கண்ணன் மற்றொரு சூது செய்கிறான். இந்திரனை அழைத்து, மாறு வேடத்தில் கர்ணனிடம் சென்று அவனுடைய கவச குண்டலங்களை யாசித்துப் பெறுமாறு கூறுகிறான். கர்ணன் கோர்க்கோலம் பூண்டு விட்டான். துரியோதனன் படைக்கு தளபதியாகிபோரை நடத்திக் கொண்டிருந்த நேரத்தில் இந்திரன் தனது மகன் அர்ஜுனனுடைய வெற்றிக்காக மாறு வேடத்தில் கர்ணனிடம் சென்று கவச குண்டலங்களை தானமாகக் கேட்கிறான். சூரியனுடைய அசரீறு வாக்கையும்எச்சரிக்கையையும் பொருட்படுத்தாது, தானம் கேட்டவனுக்கு தனது கவச குண்டலங்களைக் கொடுத்துவிட்டான். சாகும்பொழுதிலும் கர்ணனுடைய கொடை உள்ளத்தைக் கண்டு இந்திரனும் ஆச்சரியமடைந்து அவனைப் பாராட்டுகிறான்.

இன்னும்கர்ணனது வள்ளல் தன்மையின் சிகரத்தை எடுத்துக்காட்டும் நிகழ்ச்சி நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. கர்ணனுடைய சக்தி ஆயுதங்கள் பலவும் தீர்ந்து விட்டன. இவனது உயிருக்குப் பாதுகாப்பான கவச குண்டலங்களும் இந்திரனுக்குத் தானமாககப் போய்விட்டன. கர்ணன் கற்றவித்தைகள் பலவும்அவனது குருவான பரசுராமனின் சாபத்தால் அவ்வப்போது நினைவுக்கு வராமல் போகிறது. அர்ஜுனனுடைய சாரதி கண்ணன் மிகவும் திறமையாக, சாதுர்யமாக, தேரையும் செலுத்திக் கொண்டு பார்த்தனுக்கு பல நல்ல ஆலோசனை களையும் கூறி வழிகாட்டுகிறான்.

கர்ணனுக்கு கடைசி நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. திடீரென்று போர்க்களத்தில் கர்ணனுடைய தேர்ச்சக்கரம் பூமியில் பதிந்து விட்டது. தேரிலிருந்து இரங்கி கர்ணன் தனது தோள்களில் தேர்ச்சக்கரத்தைத் தாங்கி தேரைத் தூக்கி நிறுத்த முயற்சிக்கிறான். அந்த நேரத்தில்அவன்மீது கணைகளை ஏவுமாறு கண்ணன் பார்த்தனுக்கு வழிகாட்டுகிறான். பார்த்தன் அம்புகளை ஏவுகிறான். ஆனால் அந்த அம்புகள் எல்லாம் கர்ணனுடைய புண்ணியத்தின் முன் தலை வணங்கி மலர்களாக மாறுகின்றன. கண்ணன் தனது தேரை சற்று நிறுத்திவிட்டு, ஒரு ஏழை அந்தணன் வேடத்தில், மண்ணில் பதிந்திருந்த தேர்ச் சக்கரத்தைத் தோள் கொடுத்துத் தூக்கிக் கொண்டிருந்த கர்ணனிடம் போய் யாசகம்கேட்கிறான். தான் வறுமையில் வாடுவதாகவும் தனக்கு உதவி கேட்டும் யாசித்தான்.

அப்போது கர்ணனுடைய கண்கள் கலங்குகின்றன. அவனது உடம்பில்தைத்த அம்புகளால் ஏற்பட்ட காயங்களிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. 'நான் அந்திமகாலத்தில் நிச்சயமற்ற நிலையில் போர்களத்தில் இருக்கிறேன். எனது ஆவி அகத்ததோ புறத்ததோ அறியேன். உனக்கு உதவி செய்யும் பக்குவ நிலையில் நான் இருக்கும்போது நீ வந்திருக்கக்கூடாதா என்னிடம் இப்போது எதுவும் இல்லையே, எனது புண்ணியம் மட்டும்தானே இருக்கிறது' என்று கர்ணன் கண் கலங்கி கூறுகிறான்.இந்தப் புண்ணியத்தையே தானமாத் தருமாறு அந்த பிராமண வேடக் கண்ணன் கேட்டுக் கொள்கிறான்.

கர்ணன் பெருமகிழ்ச்சியடைந்து தனது உடம்பில் தைத்திருந்த அம்பினை உருவி அதிலிருந்து வடிந்த ரத்தத்தைத்தாரை வார்த்துக் கொடுத்து தனது புண்ணிய மனைத்தையும் யாசித்து வந்த கண்ணனுக்குக் கொடுத்துவிட்டான்.

கர்ணனது புண்ணிய மனைத்தையும் பெற்றுக் கொண்ட கண்ணன் பெரும் மகிழ்ச்சியடைந்து தனது நாராயண வடிவத்தை, உலகப் பெருவடிவத்தைக் காட்டி கர்ணனைக்கட்டித்தழுவி அன்பு நீர் செ ாரிந்து வேண்டிய வரம்கேட்குமாறு கூறினான். அதற்கு கர்ணன் ஆனந்தக் கண்ணீர்விட்டு தான் ஏழேழு பிறவி எடுத்தாலும் இல்லை என்று வருபவர்களுக்கு இல்லையென்று கூறாத இதயம் வேண்டுமென்று கேட்டான். கண்ணன் பெருமகிழ்ச்சிடைந்து எத்தனை பிறவி எடுத்தாலும் ஈகையும் பொருளும் பெற்று இறுதியில் முக்தியும் பெறுவாயாக என்று வாழ்த்தி வரம் கொடுத்து மீண்டான்.அதன்பின்னர் புண்ணியத்தையும் இழந்து தனியனாய் நின்ற கர்ணன் மீது விஜயன் தனது கணையை ஏவி கர்ணனது ஆவி பிரிந்தது.

"சாகும் பொழுதில் இரு செவிக் குண்டலம்
தந்த தெவர் கொடைக்கை - சுவைப்
பாடுமொழியில் புலவர்கள் போற்றிடும்
பாரத ராணியின் கை"

என்று பாரதி கூறுகிறார்.

கர்ணனின் கருணையும் ஈகையும் கொடையும் பாரத ராணியின் தனிப்பெரும் குணச் சிறப்புகளாகும்.

பாரதநாடு படைத்த தலைசிறந்த நூல்களில் ஒன்று பகவத்கீதை. இந்து தர்மத்தில் மூன்று முக்கிய தூண்களில் ஒன்றாக பகவத் கீதை கருதப்படுகிறது. உலகப்பிரசித்தி பெற்ற இந்த நூல் உலகின் பலமொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. பாரத நாட்டில் பகவத் கீதைக்கு பாஷ்யம் (விளக்கம்) எழுதியவர்களில் சங்கரர், இராமானுஜர், மத்துவர்ஆகிய மூவரும் தலைசிறந்த தத்துவஞானிகளாக வரலாற்றில் இடம்பெற்றிருக்கிறார்கள்.

அர்ஜுனன், தர்மக்ஷேத்திரமான குரு க்ஷேத்திரப்போர்க்களத்தில் எதிர்தரப்புப்படையில் தனது பாட்டான்மார், பங்காளிகள், மாதுலர், குரு சிரேஷ்டர்கள் மற்றும் தனக்கு மிகவும் வேண்டியவர்களும் வணக்கத்திற்குரியவர்களும் நிற்பதைக்கண்டு போர் செய்யமறுத்து தனது ஆயுதங்களைக் கீழே போட்டு சோர்வடைகிறான்.

"முன்னையோர் பார்த்தன் முனைத்திசை நின்று
தன்னெதிர் நின்ற தளத்தினை நோக்கிட
மாதுலர், சோதரர்; மைத்துனர், தாதையர்
காதலின் நண்பர் கலைதரு குரவரென்று
இன்னவர் இருத்தல் கண்டு இதயம் நொந்தோனாய்
தன்னருந்தெய்விக சாரதி முன்னர்

"ஐயனே, இவர்மீது அம்பையோ தொடுப்பேன்?
வையகத்தரசும் வானக ஆட்சியும்
போயினும் இவர்தமைப் போரினில் வீழ்த்தேன்
மெய்யினில் நடுக்கம் மேவுகின்றது வால்
கையினில் வில்லும் கழன்று வீழ்கின்றது.

வாயுலர்கின்றது, மனம் பதைக்கின்றது.
ஒய்வுறுங்கால்கள், உலைந்தது சிரமும்
வெற்றியை விரும்பேன், மேன்மையை விரும்பேன்
எனை இவர்கொல்லினும் இவரையான் தீண்டேன்
சினையறுத்திட்டபின் செய்வதோ ஆட்சி
எனப்பல கூறி அவ்விந்திரன் புதல்வன்
கனப்படை வில்லைக் களத்தினில் எறிந்து
சோர்வொடு வீழ்ந்தனன்" என்று பாரதி கூறுகிறார்.

இதைக் கண்ட தெய்வீகப் பெருமான் வாசு தேவக்கண்ணன்,

'வில்லெறிந்திருந்த வீரனை நோக்கி
புல்லிய அறிவொடு புலம்புகின்றனையால்
அறத்தினைப்பிரிந்த சுயோதனாதியரைச்
செறுத்தினி மாய்ப்பது தீமை யென்கின்றாய்
உண்மையை அறியாய் உறவையே கருதிப்
பெண்மை கொண்டேதோ பிதற்றி நிற்கின்றாய்
வஞ்சகர், தீயர் மனிதரை வருத்துவோர்
நெஞ்சகத்தருக் குடை நீசர்கள் இன்னோர்
தம்மொடு பிறந்த சகோதரராயினும்
வெம்மையோ டொறுத்தல் வீரர்தம் செயலாம்
ஆரிய நீதி நீ அறிகிலை போலும்
பூரியர் போல் மனம் புழுங்குரலாயினை
அரும்புகழ் தேய்ப்பதும் அனாரியத்தகைத்தும்
பெரும்பதத்தடையுமாம் பெண்மையெங்கெய்தினை
பேடிமையகற்று, நின்பெருமையை மறந்திடேல்
ஈடிலாப்புகழினாய் எழுகவோ, ஏழுக'
என்று மெய்ஞானம் நம் இறைவர் கூற'

என்று பாரதி விவரித்துக் கூறுகிறார்.

பகவத் கீதை வெறும் போர் செய்வதற்குத் தூண்டும் நூல் என்று கருதுவது சரியாகாது, பகவத் கீதை ஒரு தலை சிறந்த தத்துவஞான நூலாகும். கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் (செயல், பக்தி, தேர்ந்த அறிவு) ஆகியவைகளை விளக்கும் தத்துவநூலாகும்.

பகவத் கீதை மனிதனை செயலில் ஊக்கத்துடன் ஈடுபடத்தூண்டுகிறது. மனிதனை, தனது செயலில் பலனை எதிர்பாராது பக்தியுடன் தன்னை அர்ப்பணித்து தியாக உணர்வுடன் ஈடுபடத் தூண்டுகிறது. ஒருவன் தனது கடமைகளில் செயலில், முழுமையாக ஈடுபடும்போது அவனுக்கு அச்செயல்பற்றியும்அது சம்மந்தப்பட்ட சகல துறைகளையும் பற்றிய ஞானம் ஏற்படுகிறது.

பாரதி இந்த மகத்தான நூலை நன்கு படித்து கிரகித்தும் தமிழில் மொழி பெயர்த்தும் எழுதியுள்ளார். பகவத்கீதை பாரதியின் தமிழாக்கம் சிறந்த மொழியாக்கமாகும். அத்துடன் அவர் அந்த தமிழாக்க நூலுக்கு ஒரு சிறந்த முன்னுரையும் எழுதியுள்ளார். அம்முன்னுரையே ஒரு மிகச் சிறந்த இலக்கியமாக அமைந்துள்ளது பகவத் கீதை பற்றிய ஒரு சிறிய சீரிய

விளக்கமாக அந்த முன்னுரை அமைந்துள்ளது. பகவத்கீதை பாரதத்தாய் உலகிற்கு அளித்த காணிக்கையாகும். பகவத்கீதை புகன்றவாய் பாரத தேவியின் வாயாகும். பாரத மாதாவின் வடிவத்தில் அது ஒரு அங்கமாகும்.

"போர்க்களத்தே பரஞான மெய்க்கீதை
புகன்ற தெவருடைவாய்? - பகை
தீர்க்கத்திறந்தரு பேரினள் பாரத
தேவிமலர்த்திருவாய்"

என்பது பாரதியின் கவிதை வரிகளாகும்.

மகாபாரதக்கதையில் வரும் தலைசிறந்த தெய்வீகப்பாத்திரங்களில் ஒன்று (பீஷ்மன்) வீட்டுமன் என்று புகழ்படைத்த தேவவிரதன்

"பன்னரும்புகழுடைப் பார்த்தனும் கண்ணனும் விமனும் துரோணனும் வீட்டுமன்தானும் இராமனும் வேறுள இருந்திறல் வீரரும் நற்றுணை புரிவர்" என்று பாரதி பாரத நாட்டின் சிறந்த வீரர்களைக் குறிப்பிடுகிறான்.

## பாரத மாதா

"அந்த மில் புகழுடையான் - அந்த
ஆரிய வீட்டுமன் அறமறிந்தோன்" என்றும்
லஜபதிராய் பிரலாபம் என்னும் கவிதையில்
"ஆரியர் தம் தர்ம நிலை ஆதரிப்பான் வீட்டுமனார்
நாரியர்தம் காதல் துறந்திருந்த நன்னாடு"

என்றும் மிகவும் சிறப்பித்துக் குறிப்பிடுகிறார்.

மகாபாரதக்கதையில் வீட்டுமன் ஒரு தனித்தன்மையான தெய்வீகப் படைப்பு - தன்னல மற்ற தனி தியாகத்திற்கும் நாட்டுப்பற்றுக்கும் எடுத்துக் காட்டாக விளங்கும் மனித குல திலகமாகும்.

சந்திர குலத்தரசன் சந்தனுமகாராஜனுக்கும் கங்கைக்கும் பிறந்தவன் தேவ விரதன். கங்கை மைந்தன் என்று பெயர் பெற்றவன். தனது தந்தை சந்தனுமகாராஜன் செம்படவப் பெண்ணான சத்தியவாதி மீது காதல் கொண்டான். அவளைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினான். ஆனால் சத்தியவதியின் தந்தையோ தன் மகள் வயிற்றுப்பிள்ளைகளுக்கு அரசுப் பட்டத்தைக் கொடுப்பதாக இருந்தால் தான் தனது மகளைத்தருவேன் என்று கூற, அப்போது சந்தனுராஜன் அதற்குத் தயங்க, தேவவிரதன் முன்வந்து தனது தந்தையின் காதலுக்காக தனக்கு வரும் அரச பதவி வேண்டாம் என்று வாக்குறுதி அளித்து, அவனது பிள்ளைகள் நாளைக்கு உரிமை கொண்டாடி

விடுவார்களோ என்னும் அச்சத்தைப்போக்க, தான் திருமணமே செய்து கொள்ள மாட்டேன் என்று விரதம் பூண்டு தியாகத்தின் சின்னமாக வீட்டுமன் என்னும் பெயர் பெற்று பிதாமகனாக அத்தினாபுரத்தைத்தன் பலத்தால் காத்து நின்றான்..

வீட்டுமன் யாராலும் வெல்ல முடியாத வல்லமை பெற்றவன். சகல கலைகளையும் கற்றவன். வில்வித்தைகளிலும் போர்ப் பயிற்சியிலும் தேர்ச்சிப்பெற்றவன். மகாரதன், அதிரதன். தான் விரும்பும் போது தான் மரணம் ஏற்படும் என்னும் சாகாவரம் பெற்றவன். அரசியல் நெறி, ராஜ நீதி நன்கு கற்றவன், எனினும் தனக்கென எதுவும் இல்லாமல், தன தந்தைக்காக தனது சகோதரர்களுக்காக, தனது சகோதரர்களின் பிள்ளைகளுக்காக நாட்டிற்காக, அத்தினாபுரத்தின் நலனுக்காக தனது வாழ்நாட்களை அர்ப்பணித்தவன். திருமணமே செய்து கொள்ளாமல் தியாகம் செய்து தனியாக வாழ்ந்தவன். இத்தகைய தியாக சீலர்கள் பாரத நாட்டில் பலர் உண்டு. அது பாரதத்தாயின் தியாக உள்ளம்.

"தந்தை இனிதுறத்தான் அரசாட்சியும்
தையலர் தம் உறவும் - இனி
இந்த உலகினில் விரும்புகிலேன் என்ற
தெம்மனை செய்தவுள்ளம்"

என்று பாரதி பாடியுள்ளான்.

உலகின் துன்ப துயரங்கள் தீர அன்பு வழியொன்றே வழி என்பது புத்தன் மொழியாகும்.

"பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர்பிரான் அருள் பொங்கிய நாடு"

என்று பாரதி மற்றொரு இடத்தில் பாடுவதைக் காண்கிறோம். மகாபுத்தனின் அன்பு மொழியும் அருள் மொழியும் பாரத தேவியின் மொழியாகும்.

"அன்புசிவம் உலகத்துயர் யாவையும்
அன்பினிற் போகுமென்றே - இங்கு
முன்புமொழிந்துலகு ஆண்ட தோர்புத்தன்
மொழி எங்கள் அன்னை மொழி"

என்று பாரதி கூறுகிறார்.

மிதிலையை ஆண்ட சனகன் மதியூகம் மிக்கவன். ராஜரிஷி என்னும் பட்டம் பெற்றவன். சகல வேதங்களையும் சாத்திரங்களையும் கற்றவன். சனகன் மதி பாரத தேவியின் மதி என்று பாரதி கூறுகிறான்.

"மிதிலை எரிந்திட வேதப் பொருளை
வினவும் சனகன் ம்தி - தன்
மதியினில் கொண்டதை நின்று முடிப்பது
வல்ல நம் அன்னை மதி"

என்று பாரதி தனது கவிதையில் கூறுகிறார்

கவிதையில் புகழ்பெற்றது காளிதாசன் கவிதை. காளிதாசன் கவிதை மீது மீளாத பற்று கொண்டவர் பாரதி. கற்றாரைக் கற்றாரே காமுறுவர். காளிதாசன்உலக மகா கவிகளில் ஒருவன் எனப் புகழ்பெற்றுள்ளான். காளிதாசனைப் பற்றிப் பல இடங்களிலும் பாரதி பெருமையுடன் குறிப்பிடுகிறார். காளிதாசனின் "சாகுந்தலம்" அமர காவியம் "கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும், காளிதாசன் கவிதை புனைந்ததும்" என பாரதி தனது சுய சரிதைப் பாடல்களில் குறிப்பீடுகிறார்.

"தெய்வீக சாகுந்தலம் என்னும் நாடகம்
செய்தது எவர்கவிதை - அயன்
செய்வதனைத்தின் குறிப்புணர் பாரத
தேவி அருட்கவிதை"

என்று பாரதி பாடுகிறார்.

பாரத தேவியின் பன்முகம் கொண்ட பெருவடிவத்தை பாரதி தனது கவிதையில் வடித்துக் காட்டுகிறார்.

பாரதத்தாயின் வீரம், மந்திரபலம் அறிவாற்றலை வெளிப்படுத்தும் கைத்திறன் சீரிய சொற்கள் ஒளிமிக்க பிள்ளைகளைப் பெற்றவயிறு காண்டீவம் ஏந்திய தோள், தியாக உள்ளம், அன்பு மொழி, யூகமதி, கவிதைத்திறன் இவையனைத்தும் பாரத தேவியின் பண்பாட்டு தளத்திலிருந்து எழுந்தவை. அந்த வழியில்

"முன்னைப் பார்த்தன் கண்ணன் இவர் நேரா-
என்னை உய்யக் கொண்டருளவேண்டும் - அடி
உன்னைக் கோடி முறைதொழுதேன் - இனி
வையத்தலைமை எனக்கருள்வாய்

என்று பார்த்தன்,கண்ணன் வழியில் உலகத்தின் தலைமை எனக்கு வேண்டும்

என்று வரம் கேட்டு உலகிற்கு புது நெறி காட்டி உலகத்தலைமையை பாரதம் ஏற்க வேண்டும் என்பது பாரதியின் விருப்பமும் கனவு மாகும்.

**கண்ணனைப் பற்றி**

கண்ணன் பாரதியின் உயிர். கண்ணனைத் தெய்வமாகவும் தெய்வீகப்பாத்திரமாகவும் உணர்ந்து பாரதி பாடுகிறான். ஆழ்வார்களும் இதர பக்தர்களும் கண்ணனை தெய்வமாக வரித்து பக்தி கொண்டு, கண்ணனிடம் சரணடைந்து பாடினார்கள். கண்ணனைக் குழந்தையாக பாலகனாக, விளையாட்டுப் பிள்ளையாக தங்கள் காதலனாக, நாயகனாக வரித்துப் பாடினர்கள். பாடி உருகினார்கள். கண்ணனுடன் கலந்து அவனது மலரடிகளில் சேர்ந்தார்கள்.

பாரதி கண்ணனை சர்வ சக்தியாகக் கண்டான். தெய்வ சக்தியாக மட்டுமல்லாமல் தெய்வ வடிவில், தெய்வீகத் தன்மை கொண்ட பலவேறு சக்திகளாகக் கண்டான். பாரதி கண்ணனைத் தனது உயிருக்கும் உயிரான கண்ணம்மாவாகவும் கண்டான்.

கண்ணனைத் தோழனாக, தாயாக, தந்தையாக, சேவகனாக, அரச னாக, சீடனாக, குருவாக, விளையாட்டுப் பிள்ளையாக, காதலனாக, காந்தனாக, ஆண்டவனாக, கண்ணம்மாவைக் குழந்தையாக, காதலியாக, குல தெய்வமாக அப்படிக் கண்ணனைப் பல வடிவங்களிலும் பாடியுள்ளது பாரதியின் தனிச்சிறப்பாகும்.

கண்ணன் என் தோழன் என்று தலைப்பிடும் போது பாரதி தன்னைப் பார்த்தனாகக் கருதிக் கொள்கிறான். கண்ணனும் பார்த்தனும் பாரதக்தையில் இணைந்தவர்கள். நர நாராயணர்கள். தத்துவஞான நோக்கின்படி கண்ணன் பரமாத்மா, பார்த்தன் ஜீவாத்மா, கண்ணன் கடவுள். பார்த்தன் பக்தன். போர்க்களத்தில் பார்த்தன் வில்வீரன் கண்ணன் சாரதி. தத்துவ போதனையில் கண்ணன் குரு பார்த்தன் சீடன். உறவில் கண்ணனுக்குப் பார்த்தன் அத்தைமகன். மைத்துனன், தங்கையை மணந்தவன். துன்பத்தில் துணைவன். வாழ்வில் தோழன்.

தோழமையின் சிறப்பை பாரதி இங்கே கூறுகிறார். கண்ணனுடைய தங்கை சுபத்திரையும் பார்த்தனும் ஒருவருக்கொருவர் உயிருக்குயிராக நேசித்தனர். காதல் கொண்டனர். திருமணம் செய்து கொள்ள விரும்பினர். ஆனால் கண்ணனுடைய அண்ணன் பலராமன் சுபத்திரையை துரியோதனனுக்கு மணம் முடித்துக் கொடுக்க வாக்குக் கொடுத்துவிட்டார்

இதையறிந்து இரகசியமாக இரவோடு இரவாக சுபத்திரையைத் தூக்கிக் கொண்டு செல்வதற்கு பார்த்தனுக்குக் கண்ணன் உதவி செய்கிறான். இது ஒரு தோழன் செய்யும் உதவியாகும்.

"பொன்னவிர் மேனிச் சுபத்திரைமாதை
புறங்கொண்டு போவதற்கே - இனி
என்ன வழியென்று கேட்கில் உபாயம்
இருகணத்தே உரைப்பான்"

என்று பாரதி கூறுகிறார்.

போர்க்களத்தில் பார்த்தனுக்கு முதன்மையான எதிரிகர்ணன். அக்கர்ணன் மகாவீரன். அவன் பரசுராமனுடைய சீடன். மிகப்பெரிய அளவில் பராக்கிரமம் படைத்தவன். தானத்தில் சிறந்த புண்ணியன். போரில் பார்த்தனைக் கொல்லக் கூடிய சக்தி ஆயுதங்களை கையில் வைத்திருப்பவன். தன்னை யாரும் கொல்ல முடியாத அளவில் தனது உடம்பில் கவச குண்டலங்களைக் கொண்டவன். அம்மாவீரன் கர்ணனை போர்க்களத்தில் போர் நியாயத்தின்படி கொல்வது எளிதல்ல. யுத்ததர்மத்தின்படி போர் நடத்தினால் அவனைக் களத்தில் கொல்ல முடியாது.

வீட்டுமனும் துரோணனும் வீழ்ந்த பின் கௌரவர் படையின் தளபதி கர்ணன். அவனுக்கும் பார்த்தனுக்கும் கடும்போர் நடைபெறுகிறது. அர்ஜுனன் தனது வல்லமை முழுவதையும் ஆற்றல் அனைத்தையும் தனது சக்தி ஆயுதங்கள் தெய்வீக ஆயுதங்கள் அனைத்தையும் பயன்படுத்தி வீரப்போர் நடத்தினான். கண்ணனை சாரதியாகக் கொண்டு போர்க்களத்தில் அத்தனை சாகசங்களையும் செய்து பார்க்கிறான். ஆயினும் கர்ணனை அசைக்க முடியவில்லை. பார்த்தனைக் கொல்வதற்கு அவனுடைய தலைக்குக் குறிவைத்து கர்ணன் நாகபாணத்தை ஏவினான். கண்ணன் அதைக் கண்டு, தனது தேரை அழுத்தி, நாகக்கணையின் குறி தவறச் செய்து பார்த்தனைக் காப்பாற்றி விட்டான். தலைக்கு வந்த ஆபத்து தலைப்பாகையுடன் போய்விட்டது.

போர் நீடித்துக் கொண்டிருந்தது. கர்ணனைக் கொல்வதற்கு என்ன உபாயம் என்று பார்த்தன் கண்ணனைச் சரணடைந்தான். தோழன் கண்ணன் அதற்கான உபாயங்களையும் சூழ்ச்சிகளையும் செய்தான். கர்ணனுக்குப் பாதுகாப்பாக இருந்த கவச குண்டலங்களையும் புண்ணியம் அனைத்தையும் தானமாக வாங்கச் செய்து, போர்க்களத்தில் கர்ணன் மிகவும் சங்கடமாக இருந்த நேரத்தில் நிராயுத பாணியாக, போர் செய்ய முடியாமல் இருந்த நேரத்தில் அவன் மீது பார்த்தனைக் கொடுகணை ஒன்றை ஏவச் செய்து அவ்வாறு சூதாகக் கர்ணன் கொல்லப்பட்டான்.

"கன்னன் வில்லாளர் தலைவனைக் கொன்றிடக்
காணும் வழி யொன்றில்லேன் - வந்திங்
குன்னை அடைந்தனன், என்னில் உபாயம்
ஒரு கணத்தே உரைப்பான்"

என்று தோழன் கண்ணனைப் பற்றி பாரதி கூறுகிறார்.

தொடர்ந்து கண்ணன் - என்தோழன் என்னும் கவிதை வரிகளில், கண்ணனுடைய சிறப்புகளைப் பற்றி, ஒரு தோழன் என்னும் முறையில் அவன் புரியும்சாதனைகளைப் பற்றி பாரதி பல வரிகளில் பாடுகிறார். அதில் ஒவ்வொருவரியும் ஒரு கோடி பெறும். நமது உள்ளத்தை நெகிழவைக்கும். நமது அறிவை வளர்க்கும்.

" கானகத்திலே சுற்றிக் கொண்டிருந்த போது நெஞ்சில் கலக்கம் ஏற்படாதவாறு உதவி செய்வான். பெரும் சேனைத்தலை நின்று போர் செய்யும் போதினில் தேர் நடத்திக் கொடுப்பான். என்றன் ஊனைவருத்திடும் நோய்வரும் போதினில் உற்ற மருந்து சொல்வான். நெஞ்சம் ஈனக் கவலைகள் எய்திடும் போதில் இதம் சொல்லி மாற்றிடுவான்" என்று கூறுகிறார்.

"பிழைக்கும் வழி சொல்ல வேண்டும் என்றால் ஒரு
பேச்சினிலே சொல்லுவான்
"உழைக்கும் வழி வினையாளும் வழி பயன்
உண்ணும் வழியுரைப்பான்
"அழைக்கும் பொழுதினில் போக்கு சொல்லாமல்
அரைநொடிக்குள் வருவான்
"மழைக்குக் குடை, பசிநேரத்துணவு என்றன்
வாழ்வினுக்கு எங்கள் கண்ணன்" என்று கூறுகிறான்.
"கேட்ட பொழுதில் பொருள் கொடுப்பான் சொல்லும்
கேலிபொருத்திடுவான் - எனை ஆட்டங்கள் காட்டியும்
பாட்டுக்கள் பாடியும் ஆறுதல் செய்திடுவான் - என்றன்
நாட்டத்திற்கொண்ட குறிப்பினை யி.·.தென்று
நான் சொல்லுமுன் உணர்வான் - அன்பர்
கூட்டத்திலே இந்த கண்ணனைப் போல் அன்பு
கொண்டவர்வேறுளரோ?" என்று கூறிப்பாடுகிறார்.

"உள்ளத்திலே கருவங்கொண்ட போதினில்
ஓங்கியடித்திடுவான் - நெஞ்சில்
கள்ளத்தைக் கொண்டொரு வார்த்தை சொன்னால் அங்கு
காறி உமிழ்ந்திடுவான் - சிறு
பள்ளத்திலே நெடுநாள் அழுகிக் கெட்ட
பாசியை எற்றிவிடும் - பெரு
வெள்ளத்தைப் போல் அருள் வார்த்தைகள் சொல்லி
மெலிவு தவிர்த்திடுவான்.

"சின்னக்குழந்தைகள் போல் விளையாடிச்
சிரித்துக்களித்திடுவான் - நல்ல
வன்னமகளிர்வசப்படவே பல
மாயங்கள் சூழ்ந்திடுவான் - அவன்
சொன்னபடி நடவா விடிலோ மிகத்
தொல்லையிழைத்திடுவான் - கண்ணன்
தன்னையிழந்துவிடில், ஐயகோ, பின்
சகத்தினில் வாழ்வதிலேன்" என்று பாடுகிறார்.

"கோபத்திலே யொரு சொல்லிற் சிரித்துக்
குலுங்கிடச் செய்திடுவான் - மனஸ்
தாபத்திலே யொன்று செய்து மகிழ்ச்சி
தளிர்த்திடச் செய்திடுவான் - பெரும்
ஆபத்தினில் வந்து பக்கத்திலே நின்று
அதனை விலக்கிடுவான் - சுடர்த்
தீபத்திலே விழும் பூச்சிகள் போல்வரும்
தீமைகள் கொன்றிடுவான்"என்றும்

"உண்மை தவறி நடப்பவர் தம்மை
உதைத்து நசுக்கிடுவான் - அருள்
வண்மையினால் அவன் மாத்திரம் பொய்கள்
மலைமலையாய் உரைப்பான் - நல்ல
பெண்மை குணமுடையான் - சில நேரத்தில்
பித்தர் குணமுடையான் - மிகத்
தண்மை குணமுடையான் - சில நேரம்
தழலின் குணமுடையான்" என்றும்

"கொல்லும் கொலைக்கஞ்சிடாத மறவர்
குணமிகத்தானுடையான் - கண்ணன்
சொல்லு மொழிகள் குழந்தைகள் போலொரு
சூதறியாது சொல்வான் - என்றும்

நல்லவருக்கொருதீங்கு நண்ணாது
நலமுறக்காத்திடுவான் - கண்ணன்
அல்லவருக்கு விடத்தினில் நோயில்
அழலினிலும் கொடியான்" என்றும்

"காதல் விளைய மயக்கிடும் பாட்டினில்
கண் மகிழ்சித்திரத்தில் - பகை
மோதும் படைத்தொழில் யாவினுமே திற
முற்றிய பண்டிதன் காண் - உயர்
வேத முணர்ந்த முனிவர் உணர்வினில்
மேவுபரம் பொருள் காண் - நல்ல
கீதையுரைத்தெனை இன்புறச் செய்தவன்
கீர்த்திகள் வாழ்த்திடுவேன்"

என்றும் கண்ணனின் கீர்த்திகளைப் பாடுகிறான்.

**கண்ணன் எனும் தாய்:**

"உணண உண்ணத்தெவிட்டாதே - அம்மை
உயிரெனும் முலையினில், உணர்வெனும் பால்
வண்ணமுற வந்தெனக்கே - என்றன்
வாயினில் கொண்டு ஊட்டுமோர் வண்மை
யுடையாள்" -என்று தொடங்கி,

"கண்ணான் எனும் பெயருடையாள் - என்னைக்
கட்டி நிறைவான் எனுந்தன் கையில் அணைத்து
மண்ணெனும் தன் மடியில் வைத்தே - பல
மாய முறுங்கதை சொல்லிமனங்களிப்பாள்"
என்று மேலும் தொடர்கிறான்.

" இன்பமெனச்சில கதைகள் எனக்கு ஏற்றமென்றும் வெற்றியென்றும் சில கதைகள், துன்பமெனச் சில கதைகள், கெட்ட தோல்வி என்றும் வீழ்ச்சி யென்றும் சில கதைகள், முதலியவற்றை, எனது பருவம், எனது விருப்பம், என்பதற்கிணங்க, அன்புடன் சொல்லி என்னை மகிழ்விப்பான்" என்றும் பாடுகிறார்.

விந்தை விந்தையாக உலகின் பலவிதத் தோற்றங்களைக் காண்பித்தாள், சந்திரன் அதன் அமுதம் போன்ற ஒளி, மந்தை மந்தையாக மேகங்கள், அவைபொழியும் மழை, சூரியன் அதன் பேரொளி, வானத்து மீன்கள், அவைமின்னும் அழகு, கானத்து மலைகள், அவை இடம் பெயராது மோனத்தில் இருக்கும். நல்ல நல்ல நதிகள், அவை நாடெங்கும் ஓடிவரும் காட்சி, அவை போய்விழும் விரிகடல், அதன் எல்லையற்ற காட்சி, அதன் அலைகள், அவைகளில் ஓம் எனும் ஒலி.

சோலைகள், காவினங்க்ள், அங்குள்ள இனிய மணிமலர்கள், அங்கு தொங்கும் கனிவகைகள் முதலியனவற்றைக் கோடி கோடியாக எனக்குக் காட்டினாள்.

தின்றிடப் பண்டங்கள், செவிக்கினிய நல்ல பாட்டுகள், சேர்ந்து விளையாட மெய்த்தோழர்கள், நன்றியல் காதலுக்கு நல்ல நாரியர், இறகுடைப்பறவைகள், நிலத்தில் திரிந்திடும் விலங்குகள், ஊர்வனகள், கடல் நிறைந்த பல்வகைச் சுறவுகள் மீன்வகைகள் முதலிய பலவகைத் தோழர்களையும் எ்னக்குக் காட்டினாள். அதில் நான் அடைந்த ஆனந்தத்திற்கு அளவில்லை

கோடி சாத்திரங்கள், அதினுள் ஞானம், அத்துடன் நகைப் பிற்கிடமான பல பொய் வேதங்கள், மதக்கொலைகள், அரசர்களின் கூத்துகள், மூத்தவர் பொய் நடை, சில மூடர்களின் கவலை முதலியவைகளையும் புனைந்து வைத்தாள் என்று கூறுகிறான்.

கண்ணன் எனது தாய் என்னும் தலைப்பில் பாரதி பாடியுள்ள இந்தக் கவிதை மிக அற்புதமானது. கடைசியில் என்னை ஆண்டருள்புரிந்திடுவாள், அண்ணன் அர்ஜுனன் போல் என்னை ஆக்கிடுவாள். புகழும் பெருமையும் அவள் கொடுப்பாள் என்று முடிப்பது மிகவும் அருமையாக அமைந்துள்ளது.

தந்தை கண்ணன் என்னை பூமிக்கு அனுப்பினார். அங்கு எனது தம்பிமார்கள் இருந்தனர். எங்கள் இனத்தார் அங்கு தங்கள் மனம் போல இருந்து ஆண்டுவந்தனர்.

இப்பூமியில் செல்வங்களுக்கோர் குறைவில்லை. எல்லா செல்வங்களும் உள்ளன. அளவில்லா பொற்குவியல்களை எனது தந்தை சேமித்து வைத்திருந்தான். அவன் கல்வியில் பெரியோன். அவனுடைய கவிதைகளில் இனிமைக்கோர் அளவில்லை. அவனிடம் பலவகை மாண்புகள் இருந்தன. எனினும் அவனிடம் அடிக்கடி பயித்தியம் தோன்றும். நல்வழியில் செல்பவர்களைப் பல சோதனைகளுக்குள்ளாக்கி மனம் நொந்து வேகும் அளவிற்குக் கொண்டு சென்றுவிடுவான்.

அவனுக்கு மூவகை பெயர்கள் உண்டு. இந்த உண்மை அறியாதவர்கள் அவர்களுக்குள் சண்டையடித்துக் கொள்கிறார்கள்.

**கண்ணன்**

"பிறந்தது மறக்குலத்தில் - அவன்
பேத மறவளர்ந்ததும் இடைக்குலத்தில்
சிறந்தது பார்ப்பனருள்ளே - சில
செட்டிமக்களோடு மிகப்பழக்க முண்டு.
நிறத்தினில் கருமை கொண்டோன் - அவன்
நேயமுறக்களிப்பது பொன்னிறப் பெண்கள்
துறந்த நடைகளுடையான் - அவன்
சூனியப் பொய்ச் சாத்திரங்கள் கண்டு நகைப்பான்

என்று பாரதி குறிப்பிடுகிறார்

"ஏழைகளைத் தோழமை கொள்வான் - செல்வம்
ஏறியார் தமைக் கண்டு சீறிவிழுவான்
தாழவரும் துன்பமதிலும் - நெஞ்சத்
தளர்ச்சி கொள்ளாதவர்க்குச் செல்வமளிப்பான்"

என்றும்

"இன்பத்தை இனிதெனவும் - துன்பம்
இனிதில்லை யென்றுமவன் எண்ணுவதில்லை
அன்புமிகவுடையான் - தெளிந்
தறிவினில் உயிர்குலம் ஏற்றமுறவே
அன்புகள் பலபுரிவான்"

என்றும் கூறுகிறார்.

வேதங்களைப் பற்றி பாரதி இக்கவிதையில் தனது தனித்தன்மையான கருத்தை மிகவும் சிறப்பாக எடுத்துக் கூறுகிறார். இதை ஏற்கனவே முதல் அத்தியாயத்தில் மேற்கொள் காட்டியிருக்கிறோம். இங்கு தொடர்ச்சிகருதி மீண்டும் அவ்வரிகளை நினைவு கொள்ளலாம்.

"வேதங்கள் கோத்து வைத்தான் - அந்த
வேதங்கள் மனிதர் தம்மொழியில் இல்லை
வேதங்கள் என்று புவியோர் - சொல்லும்
வெறும் கதைத்திரளில் அவ்வேத மில்லை
வேதங்கள் என்றவற்றுள்ளே - அவன்
வேதத்தில் சிலசில கலந்த துண்டு
வேதங்கள் அன்றி ஒன்றில்லை - இந்த
மேதினி மாந்தர் சொலும் வார்த்தைகளெல்லாம்"

என்று குறிப்பிடுவது சிந்திக்கத் தக்கது.

வேதங்கள் என்பது மெய்யறிவாகவும் பொய்க்கதைகள் பல கலந்தும் மக்களிடம் பரவியுள்ளன. நமது வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள் இதிகாசங்கள், கதைகள், இலக்கியங்கள் முதலியன பலவும் அவைகளிலுள்ள அவைகளில் கலந்துள்ள கருத்துக்களும் இடைச் செருகல்களும் மக்களிடையில் இடைவிடாது உரையாடப்பட்டு வந்திருக்கின்றன. அது வாழையடி வாழையாக பரம்பரை பரம்பரையாக பரவி வந்ததுள்ளன.

"இயற்கை விதியை அனுசரித்து வாழவேண்டும். அதனால் எவ்விதமான தீமையும் எய்தமாட்டாது, எனவே, சாதாரண புத்தியே பரம மெய்ஞ்ஞானம். இதனை ஆங்கிலேயர் காமன்சென்ஸ்(பொது அறவு) என்பர் சுத்தமான, மாசுபடாத, கலங்காத, அஞ்சாத, பிழைபடாத, சாதாரண அறிவே

பரம மெய்ஞ்ஞானமாகும் என்று பாரதி தனது பகவத்கீதை நூலின் முன்னுரையில் குறிப்பிடுகிறார். அதுவே பொது அறிவு எனறு அனைவராலும் குறிப்பிடப்படுவதாகும்.

நாலு குலங்கள் பற்றி பல இடங்களிலும் பாரதி தனதுகருத்துக்களை மிகத் தெளிவாக முன்வைத்துள்ளார்.இக்கவிதையில் முன்வைத்துள்ள வரிகளையும் ஏற்கனவே முந்திய அத்தியாயத்தில் மேற்கோளாகக் காட்டியுள்ளோம். தொடர்ச்சி கருதி மீண்டும் இங்கு குறிப்பிட்டுள்ளோம். திரும்பத்திரும்ப இக்கருத்துக்களைக் குறிப்பிட்டாலும் கூறியது கூறல் என்றும்குற்றம் ஏற்படாமல் அவ்வரிகளில் பொதிந்துள்ள கருத்துக்களை மீண்டும் மீண்டும் படித்தும் சிந்தித்தும் செயல் படுத்தத்தக்கனவாகும்.

"நாலுகுலங்கள் அமைத்தான் - அதை
நாசமுறப்புரிந்தனர் மூடமனிதர்
சீலம் அறிவு தர்மம் -இவை
சிறந்தவர் குலத்தினில் சிறந்தவராம்
மேலவர் கீழவர் என்றே - வெறும்
வேடத்தில் பிறப்பினில் விதிப்பனவாம்
போலிச்சுவடியை யெல்லாம் - இன்று
பொசுக்கிவிட்டால் எவர்க்கும் நன்மை
உண்டென்பான்" என்று தந்தை கண்ணன் கூறுவதாகப் பாரதி குறிப்பிடுகிறார்.

வயது முதிர்ந்து விடினும் எந்தைக்கும் வாலிபக்களை மாறவில்லை. அது என்றும் மாறுவதில்லை. துயரில்லை. மூப்புமில்லை. என்றும் சோர்வில்லை. நேர்ய் ஒன்றும் தொடுவதில்லை பயமில்லை. பரிவொன்றில்லை எவர்பக்கமும் நின்று எதிர்ப்பக்கம் வாட்டுவதில்லை. நயம் மிகத்தெரிந்தவன். நடு நின்று விதிச் செயல்கண்டு மகிழ்பவன் கண்ணன் என்பது பாரதியின் வாக்கு. இவையெல்லாம் பாரதி மீண்டும் மீண்டும் கூறும் மூலமந்திரங்களாகும்.

"அன்பிணைக்கைக் கொள் என்பான் துன்பம்
அத்தனையும் அப்பொழுது தீர்ந்திடு மென்பான்

என்றும்,

"இன்பத்தை எண்ணுபவர்க்கே - என்றும்
இன்பம் மிகத்தருவதில் இன்பமுடையான்"

என்று இக்கவிதை வரிகளை முடிக்கிறார் பாரதியார்.

கண்ணன் என் சேவகன் என்னும் கவிதை மிகவும் அற்புத மான ஒரு கவிதையாகும். அக்கவிதை மூலம் பாரதி கூறியுள்ள கருத்துக்கள் தினசரி நமக்கு ஏற்படும் அனுபவங்களாகும். உழைப்பின் மேன்மை, தெய்வீகத்தன்மை ஆகியவற்றைஅற்புதமான முறையில் பாரதி கூறியிருப்பது அவருடைய தனித்தன்மையான சிறப்பிற்கு மற்றொரு எடுத்துக் காட்டாகும். கவிதை முழுவதிலும் பக்திரசம் இழையோடியிருப்புதையும் நாம் காண முடிகிறது. பச்யையான சில உண்மைகளை நாடக பாணியில் நகைச்சுவையுடன் இலக்கியரசனையுடன், உள்ள தத்துவநெறி நிறைந்த இந்தவரிகள் பாரதியின் அற்புதமான படைப்புகளில் ஒன்றாகும்.

"கூலிமிகக் கேட்பார் கொடுத்ததெலாம்தாம் மறப்பார்
வேலைமிக வைத்திருந்தால் வீட்டிலே தங்கிடுவார்,
"ஏனடா நீ நேற்றைக்கு இங்கு வரவில்லை யென்றால்,
பானையிலே தேள் இருந்து பல்லால் கடித்ததென்பார்
வீட்டிலே பெண்டாட்டிமேல் பூதம் வந்ததென்பார்
பாட்டியார் செத்துவிட்ட பனிரெண்டாம் நாள் என்பார்,
"ஓயாமல் பொய்யுரைப்பார், ஒன்றுரைக்க வேறுசெய்வார்
தாயாதியோடு தனியிடத்தே பேசிடுவார்
உள்வீட்டுச் செய்தியெல்லாம் ஊரம்பலத்துரைப்பார்,
"எள்வீட்டில் இல்லை யென்றால் எங்கும் முரசரைவார்
சேவகரால்பட்ட சிரமம் மிகவுண்டு கண்டீர்
சேவகர் இல்லா விடிலோ செய்கை நடக்கவில்லை

என்று பாரதி மிகவும் நகைச் சுவையுடன் நுண்புலத்துடன் கவிதையைத் தொடங்கி

"எங்கிருந்தோ வந்தான் இடைச் சாதிநான் என்றான்" என்று
"பக்திரசம் ததும்பக்கவிதையைத் தொடர்கிறார்.

"மாடுகன்று மேய்த்திடுவேன் மக்களை நான் காத்திடுவேன்
வீடுபெருக்கிவிளக்கேற்றி வைத்திடுவேன்
சொன்னபடி கேட்பேன், துணி மணிகள் காத்திடுவேன்
சின்னக் குழந்தைக்கு சிங்காரப் பாட்டிசைத்தே
ஆட்டங்கள் காட்டி அழாதபடி பார்த்திடுவேன்
காட்டுவழியானாலும் கள்ளர் பயமானாலும்
இரவிற்பகலிலே எந்நேரமானாலும்
சிரமத்தைப் பார்ப்பதில்லை, தேவரீர்தம்முடனே,
சுற்றுவேன், தங்களுக்கோர் துன்பமுறாமல் காப்பேன்
கற்றவித்தை ஏதுமில்லை காட்டு மனிதன் ஐயே,

ஆனபொழுதும், கோலடி, குத்துப்போர், மற்போர்,
நானறிவேன் சற்றும் நயவஞ்சனையும் புரியேன்,
என்று பல சொல்லி நின்றர்ன்

என்று அக்கண்ணன் கூறியதாகபாரதி குறிப்பிடுகிறான. அக்கண்ணனை நான்,

"ஆளாகக் கொண்டுவிட்டேன், அன்று முதற்கொண்டு
நாளாக நாளாக நம்மிடத்தே கண்ணனுக்கு
பற்று மிகுந்துவரல் பார்க்கின்றேன் கண்ணனால்,
பெற்றுவரும் நன்மை யெல்லாம் பேசி முடியாது

என்று பெருமையுடன் தொடங்கி,

" கணணை இமையிரண்டும் காப்பது போல் என்குடும்பம்,
வண்ண முறக்காக்கின்றான் வாய் முணுத்தல் கண்டறியேன்
வீதி பெருக்குகிறான். வீடுசுத்தமாக்குகிறான்
தாதியர் செய்குற்றமெலாம் தட்டி அடக்குகிறான்.
மக்களுக்கு வாத்தி, வளர்ப்புத்தாய், வைத்தியனாய்,
ஒக்க நயம் காட்டுகிறான். ஒன்றும் குறைவின்றிப்
பண்டம் எலாம் சேர்த்து வைத்துப்பால் வாங்கி மோர் வாங்கிப்
பெண்டுகளைத்தாய் போல் பிரியமுற ஆதரித்து
நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய்
பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய்
எங்கிருந்தோவந்தான்"என்றெல்லாம்

கண்ணனுடைய சேவையைப் பாராட்டி.

" இங்கிவனையான் பெறவே என்னதவம் செய்துவிட்டேன்"

என்று போற்றி பெருமைப்பட்டு,

"கண்ணன் எனதகத்தே கால்வைத்த நாள் முதலாய்
எண்ணம் விசாரம் எதுவும் அவன் பொறுப்பாய்
செல்வம், இளமாண்பு, சீர், சிறப்பு, நற்கீர்த்தி
கல்வி, அறிவு, கவிதை, சிவயோகம்
தெளிவே வடிவாம் சிவஞானம் என்றும்
ஒளி சேர் நலமனைத்தும் ஓங்கி வருகின்றன காண்.
கண்ணனை நான் ஆட்கொண்டேன்
கண்கொண்டேன் கண்கொண்டேன்"

என்று பரவசமடைந்துபாடுகிறான் பாரதி சிறப்புமிக்க இந்தக் கவிதைவரிகளைப் பாடப்பாடத் தெவிட்டாத சுவையும் அறிவுக்கு விருந்தும் பொருளும் கிடைக்கிறது.

**கண்ணன் - என் அரசன் என்னும் கவிதையில்**

பகைமை முற்றி முதிர்ந்திடும் வரையில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பான். சிரித்துக்கொண்டே பொருமையுடன் நாட்கள், மாதங்கள், ஆண்டுகள் பொறுத்துக் கொண்டிருப்பான் கண்ணன் வந்து பகைமை ஒழிந்து காண்பது அறிதாகும். நாமும் அதை நினைத்து எண்ணமிட்டு, எண்ணமிட்டு யுகங்களாகிவிடும். படைகளைச் சேர்ப்பது, பரிசனம் சேர்ப்பது, பணமுண்டாக்குவது எதுவும் செய்திடான். இடையன், வீரமில்லாதவன், பயந்தவன் என்றெல்லாம் எவரும் ஏசினாலும் நாண மாட்டான்.

தன்னைக் கொல்லுவதற்கு பூதத்தை அனுப்பும் மாமன், கோலுயர்த்தி உலகை ஆண்டு கொண்டுகளித்திருப்பதைக் கண்டும் காணாமல் பாட்டிலும் மாதர் கூட்டிலும் மோகமுற்று பொழுது போக்குவான்.

அவன் காலைப்பற்றிக் கொண்டுநாம் கதி எமக்கொன்று காட்டுவாய் எனக்கேட்டால் நாலில் ஒன்று பலித்திடும் என்று கூறிச்செல்வான். அதன் பொருள் நமக்கு விளங்காது. அவன்வலுவை நம்பி நாம் இருக்க நாணமில்லாமல் அவன் எங்கோ போய் பதுங்கிக் கொள்வான். தீமையை விலக்கவும் செல்வான். சிறுமை கொண்டு ஒளிந்து ஓடவும் செய்வான்.

தந்திரங்கள் பயிலவும் செய்வான். சவுரியங்கள் பழகவும் செய்வான். மந்திரங்கள் பலவின் திறனும் காட்டுவான். வலிமையின்றி சிறுமையிலும் வாழ்வான்.

காலம் வந்து கை கூடும் போது கணத்திலே புதிய தோற்றம் எடுத்து ஆலகால விஷம் போல் சீறி எழுந்து அகிலம் முழுவதையும் அசைத்திடுவான் என்றெல்லாம் கண்ணன் என் அரசன் என்னும் தலைப்பில் விவரித்துக் கூறி காலம் வந்துற்ற போது துள்ளி எழுந்து,

"வேரும் வேரடி மண்ணும் இல்லாமலே
வெந்து போக பகைமை பொசுக்குவான்
பாரும் வானும் ஆயிரம் ஆண்டுகள்
பட்டதுன்பம் கணத்திடை மாற்றுவான்
"சக்கரத்தை எடுப்பது ஒரு கணம்,
தருமம் பாரில் தளைத்தல் மறுகணம்
"இக்கணத்தில் இடைக்கண மொன்றுண்டோ
இதனுள்ளே பகை மாய்த்திடவல்லன் காண்!

"கண்ணன் எங்கள் அரசன் புகழினைக்
கவிதை கொண்டு எந்தக் காலமும் போற்றுவேன்"

என்று பாடி பரவசமடைகிறார்.

திண்ணைவாயில் பெருக்க வந்த என்னை தேசம் போற்றத் தன் மந்திரியாக்கிக் கொண்டான். நித்தம் சோறினுக்காக ஏவல் செயவந்தேன். எனக்கு நிகரிலாப் பெரும் செல்வம் கொடுத்து உதவினான். வித்தை நன்கு கற்பதற்காக எனக்கு வேத நுட்பம் விளங்கிடச் செய்தான். அத்தகைய என் கண்ணபிரான் அருள் வாழ்க, கலியழிந்து புவித்தலம் வெல்க " அண்ணலின் அருள் நாடிய நாடுதான் அவலம் நீங்கிப்புகழில் உயர்க" என்று போற்றி வழிபாடு செய்கிறான்.

"எவரும் யாவையும் எல்லாப் பொருளும்
கவர்வின்றித்தன்னுள் ஒடுங்க நின்ற
பவர் கொள் ஞான வெள்ளச் சுடர் மூர்த்தி"

என்று நம்மாழ்வார் பாடுகிறார்.

பாரதி கண்ணன் என் சீடன் என்னும் கவிதையில் "யானேயாகி என்னலாற்பிறவாய் யானும் அவனுமாய் இரண்டினும் வேறாய் யாதோ பொருளாம் மாயக் கண்ணன்' என்று மாயக்கண்ணனைத்தனது சீடனாக வரித்துப் பாடுகிறார்.

என்னைவிட அறிவினிற் குறைந்தவன் போலவும், என்னால் மேம்பாடு எய்தலாம் போலவும் என்கவிதை பெருமையுடையன எனக் கருதுவான் போலவும் கண்ணன் என்னிடம் சீடனாகவந்து சேர்ந்தனன் என்று கூறுவது பாரதியின் கவியுள்ளம்.

"------ இந்த சகத்திலே உள்ள
மாந்தர்க்கு உள்ள துயரெலாம் மாற்றி
இன்பத்திருத்தவும் எண்ணிய குற்றத்திற்காக
எனக்கு தண்டனை கொடுப்பதற்காக என்னைப் பலவாறு
புகழ்ந்து, எனது கவிதைகளைவியந்து என்னிடம் சீடனாக வந்து சேர்ந்தான்.

கண்ணனைச் சீடனாக் கொண்டு அவனுக்கு பாரதி அறிவுரை போதித்ததாகக் கூறுகிறான். அக்கண்ணனை,

"உயர்நிலைப் படுத்தலில் ஊக்கமிக்கவனாய்
இன்னது செய்திடேல் இவரொடு பழகேல்
இவ்வகை மொழிந்திடேல் இனையனவிரும்பேல்
இன்னது கற்றிடேல் இன்னநூல் கற்பாய்
இன்னவர் உறவு கொள் இன்னவை விரும்புவாய்
எனப் பலதர்மம் எடுத்தெடுத்தோதி
ஒய்விலாது அவனோடு உயிர்விடலானேன்"

என்று கூறுகிறான்.

கண்ணன் சீடவடிவத்தில் இந்த பூமியில் உள்ள பல கோடிக்கணக்கான குழந்தைகள் ஒவ்வொன்றின் பால பருவவடிவங்களாகும். இளம்பருவத்தில் உள்ள ஒரு சீடனின் குண இயல்புகளை பாரதி இங்கு கவிதையில் வடித்துள்ளான். நமது இல்லத்தில் உள்ள நமது சிறுவன் சுட்டித்தனம், ஓயாத ஆற்றல் ஓடி விளையாடும் உரம் எதற்கும் கவலைப்படாத யாருக்கும் கட்டுப்படாத உள்ளமும் துடிப்பும் கொண்டவன்.

கதையில் வரும் கணவன் சொல்வதற்கெல்லாம் எதிர்ச் சொல்கூறும் மனைவி போல கண்ணன், " நான் காட்டும் நெறியினுக் கெல்லாம் நேர் எதிர் நெறியே நடப்பானாயினன்" என்று பாரதி குறிப்பிடுகிறார்

வித்தையில் விருப்பம் இல்லாதவனாய் கல்வியிலே கவனம் இல்லாதவனாய் நல்ல செயல்களிலே நாட்டமில்லாதவனாய் வேளாவேளைக்கு உணவருந்தாமல் ஊர் சுற்றித்திரிந்து கொண்டுவரும் கண்ணனை எல்லோரும் ஏளனம் செய்தனர். கிறுக்கன்என்று கூறிச்சிரித்தனர். அதைக் கேட்ட போது அச்சொற்கள் எனது நெஞ்சை அறுத்தது. உள்ளம் வெதும்பிற்று.

"முத்தனாக்கிட நான் முயன்றதோர் இளைஞன்
பித்தன் என்று உலகினர் பேசிய பேச்சுஎன்
நெஞ்சினை அறுத்தது' என்று கவலையுற்று மனம் வெந்து
"----- நீதிகள் பலவும்
தந்திரம் பலவும் சாத்திரம் பலவும்
சொல்லி நான் கண்ணனைத் தொளைத்திடலானேன்
'தேவநிலையிலே சேர்ந்திடாவிடினும்
மானுடம் தவறி மடிவுறா வண்ணம்
கண்ணனை நானும் காத்திடவிரும்பி'

என்று நாட்டிலுள்ள ஒவ்வொரு இளைஞனையும் தன் கண் முன்னால் நிறுத்தி பாரதி பாடுகிறார். தேவ நிலைக்கு உயர்த்தா விட்டாலும் மானுடம் தவறிமடிவுராவண்ணம் நமது நாட்டு இளைஞனை உயர்த்த பாரதி பாடுகிறார்.

அதற்காக எத்தனையோ முயற்சிகள் செய்தும் நல்லவார்த்தைகள் கூறியும் கெஞ்சிக் கேட்டும், அதட்டிக் கூறியும் தன் வழிக்குக் கொண்டு வர முயன்றும் முடியவில்லை.

"கண்ணன் பித்தனாய்க் காட்டானாகி
எவ்வகைத் தொழிலிலும் எண்ண மற்றவனாய்
எவ்வகைப் பயனிலும் கருத்திழந்தவனாய்
குரங்காய், கரடியாய், கொம்புடைப் பிசாசாய்
யாதோ பொருளாய் எங்கோ நின்றான்

என்று மிகவும் வருந்தமடைந்து,

எவ்வாறேனும் இவனை
யோர் தொழிலில்
ஓரிடந்தன்னில் ஒருவழி வலிய
நிறுத்துவோ மாயின் நேருற்றிடுவான்

என்று எண்ணிக்காத்திருந்தேன். ஒரு நாள் கண்ணனைத்தனியே வீட்டிற்கு அழைத்துவந்து,

"மகனே, என்பால் வரம்பிலா நேசமும்
அன்பு நீ உடையை அதனை யான் நம்பி
நின்னிடம் ஒன்று கேட்பேன், நீயது
செய்திடல் வேண்டும், சேர்க்கையின் படியே
மாந்தர்தம் செயலெலாம் வகுப்புறல் கண்டாய்
"சாத்திர நாட்டமும் தருக்கமும் கவிதையில்
மெய்ப்பொருள் ஆய்வதில் மிஞ்சிய விளைவும்
"கொண்டோர் தமையே அருகினில் கொண்டு
பொருளினுக் கலையும் நேரம்போக
மிஞ்சிய பொழுதெலாம் அவருடன் மேவி
இருந்திடல் ஆகுமேல் எனக்கு நன்றுண்டாம்"

என்று கூறிதன்னுடன் இருக்கும்படி கண்ணனிடம் வற்புறுத்திக் கூற, அதற்குக் கண்ணனும் தனது ஒப்புதல் தெரிவித்து,

"அங்ஙனே புரிவேன் ஆயினின்னிடத்தே
தொழில் இலாது யாங்ஙனம் சோம்பரில் இருப்பது
காரியம் ஒன்று காட்டுவையாயின்
இருப்பேன்" என்றான்.
கண்ணனுடைய இயல்பையும் திறமையையும் கருதி "

என் செய்யுளையெல்லாம் நல்லதோர் பிரதியில் நாள் தோறும் எழுதிக் கொடுத்திடும் தொழிலினைக் கொள்ளுதி" என்றேன். நன்றெனக்கூறி ஒரு நாழிகை இருந்தான். பின்னர் செல்கிறேன் என்றான். பல முறை சொல்லியும் கேட்கவில்லை. எனக்கும் கோபம் மேலிட்டு "போ போ" என்றேன்.

"கண்ணனும் எழுந்து செல்குவானாயினன்",
விழிநீர் சோர்ந்திட நான்
"மகனே போகுதி வாழ்க நீ நின்னைத்
தேவர் காத்திடுக நின்றனைச் செம்மை

செய்திடக் கருதி ஏதேதோ செய்தேன்
தோற்றுவிட்டேனடா! சூழ்ச்சிகள் அழிந்தேன்
மறித்தினிவாராய் செல்லுதி வாழிநீ"
என்று துயர்நீக்கி அமைதியோடிருந்தேன்" எனப்பாடுகிறார் பாரதி.

கண்ணன் சென்றனன். திரும்பி ஓர் கணத்தேவந்தான். நல்ல தோர் எழுது கோல்கொணர்ந்தான். நான் காட்டிய பகுதியை கவினுறவரைந்தான்.

"ஐயனே! நின்வழியனைத்தையும் கொள்வேன்
தொழில் பல புரிவேன் துன்பம் இங்கென்றும்
இனி நினக்கு என்னால் எய்திடா" தெனப் பல
நல்ல சொல் உரைத்து நகைத்தனன் மறைந்தான்
மறைந்ததோர் கண்ணன் மறு கணத்தென்றன்
நெஞ்சிலே தோன்றி நிகழ்த்துவானாயினன்
"மகனே ஒன்றையாக்குதல் மாற்றுதல்
அழித்திடல் எல்லாம் நின் செயலன்று காண்
தோற்றேன் என நீ உரைத்திடும் பொழுதிலே
வென்றாய், உலகினில் வேண்டிய தொழிலெலாம்
ஆசையும் தாபமும் அகற்றியே புரிந்து
வாழ்க நீ என்றான். வாழ்க மற்றவனே"
என்று அந்த அற்புதமான கவிதையைப் பாடி முடிக்கிறார்.

பாரதியின் இந்தப் பாடல் நெஞ்சை அள்ளுவதாகும். உலக அனுபவமும் கடமையும் பக்தியும் இணைந்து அன்புடன் கண்ணனை இந்நாட்டின் இளைஞன் வடிவத்தில் கண்டு ஆணையிட்டு வாழ்த்திக் கடைசியில் கண்ணனிடமே அறிவுரையும் வாழ்த்தும் பெற்று அவனையும் வாழ்த்திக் கவிதையை முடிக்கிறார்.

ஆண்டவனுக்கே பல்லாண்டு பாடிய மரபு நமது மரபாகும். கண்ணனுக்கே வாழ்த்துக் கூறி பாரதி தனது பாட்டை முடிக்கிறார்.

கண்ணனைச் சீடனாகக் கண்ட பாரதி அவனை தனது சத்குருவாகவும் கண்டு அற்புதமான முறையில் பக்திப் பரவசத்துடன் புன்னாக வராளி ராகத்தில் ஒரு கவிதையைப் பாடுகிறார்.

"சாத்திரங்கள் பல தேடினேன் - அங்கு
சங்கையில்லாதன சங்கையாம் - பழங்
கோத்திரங்கள் சொல்லு மூடர்தம் - பொய்மைக்
கூடையில் உண்மை கிடைக்குமோ"
என்று பாரதி தனது கவிதையைத் தொடங்குகிறார்.

பாரதி "நாடு முழுதும் சுற்றி பல நாட்கள் அலைந்து திரிந்து கடைசியில் யமுனைக் கரையில் தடி யூன்றிச் சென்று கொண்டிருந்த ஒரு கிழவரைக் கண்டார்.

" ஒளிகூடும் முகமும் தெளிவு குடிகொண்ட விழிகளும், சடைகளும் வெள்ளைத் தாடியும் கொண்ட அந்தக் கிழவனாரை வணங்கித் தனது உள்ளத்து ஆசையைக் கூறுகையில்,

"தம்பி
நின்னுள்ளத்திற்குத் தகுந்தவன் - சுடர்
நித்திய மோனத்திருப்பவன் - உயர்
மன்னர் குலத்திற்பிறந்தவன் - வட
மாமதுரைப்பதி ஆள்கிறான் - கண்ணன்
தன்னைச் சரணென்று போவையால்
அவன் சத்தியம் கூறுவர்" என்றனர்

அவர் கூறியதைக் கேட்டு. அம்மாமதுரைக்குச் சென்றேன். அங்கு வாழ்கின்ற கண்ணனைப்போற்றி, எனது பெயரையும் ஊரையும் கருத்தையும் கூறி எனக்கு நன்மைதரும்படி வேண்டினேன். ஆனால் அந்தக் கண்ணன் அங்கு எப்படியிருந்தான், என்ன செய்து கொண்டிருந்தான்,

"காமனைப் போன்ற வடிவமும் - இளங்
காளையர் நட்பும் வழக்கமும் - கெட்ட
பூமியைக் காக்கும் தொழிலிலே - எந்தப்
போதும் செலுத்திடும் சிந்தையும்
ஆடலும் பாடலும்" கண்டேன். ஆற்றங்கரையில் கண்ட கிழவன் மீது எனக்குக் கடுங்கோபம் ஏற்பட்டது.

"சிறு நாடு புரந்திடு மன்னவன் - கண்ணன்
நாளும் கவலையில் மூழ்கினோன் - தவப்
பாடுபட்டோர்க்கும் விளங்கிடா - உண்மை
பார்த்திவன் எங்ஙனம் கூறுவான்?
என்று கருதியிருந்தேன். ஆனால் அக்கண்ணன் என்னைத்தனி இடத்திற்கு அழைத்துச் சென்று

"மைந்தனே! - பர
ஞானமுரைத்திடல் கேட்பை நீ - நெஞ்சில்
ஒன்றும் கவலையில்லாமலே - சிந்தை
ஊன்ற நிறுத்திக்களைப்புற்றே - தன்னை
வென்று மறந்திடும் போழ்தினில் - அங்கு
விண்ணையளக்கும் அறிவு" கிட்டும்
என்று தத்துவ போதனையுடன் தொடங்குகிறான்.

"சந்திரன் சோதியுடையதாம் - அது
சத்திய நித்திய வஸ்துவாம் - அதைச்
"சிந்திக்கும் போதினில் வந்து தான் - நினைச்
சேர்ந்து தழுவியருள் செயும் - அதன்
மந்திரத்தால் இவ்வுலகெலாம் - வந்த
மாயக் களிப்பெருங்கூத்துக் காண்- இதைச்
சந்ததம் பொய் யென்று உரைத்திடும் - மடச்
சாத்திரம் பொய் யென்று தள்ளடா

என்று கூறுகிறார்

"ஆதித்தனிப்பொருள் ஆகுமோர் - கடல்
ஆரும் குமிழி உயிர்களாம் - அந்தச்
சோதி அறிவென்னும் ஞாயிறு - த்ன்னைச்
சூழ்ந்த கதிர்கள் உயிர்களாம் - இங்கு
மீதிப் பொருள்கள் எவையுமே - அதன்
மேனியில் தோன்றிடும் வண்ணங்கள் - வண்ண
நீதியறிந்தின்பமெய்தியே - ஒரு
நேர்மைத் தொழிலில் இயங்குவார்

என்று பாடுகிறார்.

"சோதியறிவில் விளங்கவும் - உயர்
சூழ்ச்சி மதியில் விளங்கவும் - அற
நீதி முறை வழுவாமலே - எந்த
நேரமும் பூமித் தொழில் செய்து - கலை
ஓதிப்பொருளியல் கண்டு தாம் - பிறர்
உற்றிடும் தொல்லைகள் மாற்றியே - இன்ப
மோதிவிழிக்கும் விழியினார் - பெண்மை
மோகத்தில் செல்வத்தில் கீர்த்தியில்" - என்றும்,

"ஆடுதல் பாடுதல் சித்திரம் - கவி
யாதி இனைய கலைகளில் - உள்ளம்
ஈடுபட்டென்று நடப்பவர் - பிறர்
ஈனர் நிலை கண்டு துள்ளுவார் - அவர்
நாடும் பொருள்கள் அனைத்தையும் - சில
நாளினில் எய்தப் பெறுகுவார் - அவர்
காடு புதரினில் வளரினும் - தெய்வக்
காவன மென்றதைப் போற்றலாம்" என்றும்,

"ஞானியர் தம்மியல் கூறினேன் - அந்த
ஞானம் விரைவினில் எய்து வாய் - எனத்
தேனிலின் இனிய குரலிலே - கண்ணன்
செப்பவும் உண்மைநிலை கண்டேன் - பண்டை
ஈன மனிதக் கனவெல்லாம் - எங்ஙன்
ஏகி மறைந்தது கண்டிலேன் - அறி

வானதனிச்சுடர் நான் கண்டேன் - அதன்
ஆடல் உலகென நான் கண்டேன்" என்றும்

துள்ளிக் குதித்துப் பாடலை முடிக்கிறார்.

அறிவில் ஒளிவீச வேண்டும். மதியில் நுட்பம் விளங்க வேண்டும். அறநெறி வழியில் நீதி முறைவழுவாமல் பூமியில் தொழில்கள் செய்ய வேண்டும். சகலகலைகளும் வளர்ச்சியடைந்து தெளிவு பெறவேண்டும். மிகவும் சிறப்பாக, பொருளியல் கண்டு தெளிய வேண்டும். மக்களுக்கு ஏற்படும் தொல்லைகள் தீர வேண்டும். இன்பநிலை இனிய குடும்ப நிலை செல்வம் கீர்த்தி ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி முதலிய அனைத்துக் கலைகளிலும் மக்களின் உள்ளம் ஈடுபட்டு சமுதாய நிலை உயரவேண்டும். ஈனநிலை எவருக்கும் ஏற்படக்கூடாது. அனைவருக்கும் அவர் நாடும் நல்லன அனைத்தும் கிடைக்க வேண்டும். இந்த ஞானம் அனைவருக்கும் ஏற்பட வேண்டும் என்று கண்ணன் சற்குருவடிவில் நின்று பாரதப் பண்பாட்டின் திசைவழியில் பாரதியிடம் போதனை செய்வதாகக் கூறும் இந்தக் கருத்துக்களே பாரதியின் சமுதாய நெறிக்கருத்துக்களாகும். இந்த போதனைகளில் பாரதி அறிவுச்சுடரையும் அச்சுடரில் அசைந்தாடும் முழு உலகையும உலக வடிவையும் காண்கிறார்.

அடுத்த படியாக கண்ணனைக் குழந்தையாக விளையாட்டுப் பிள்ளையாக காதலனாக கண்ணம்மாவைக் காதலியாக பாவித்து பாரதி பாடியுள்ள கவிதைகள் அதி அற்புதமான அன்பைக் காதலை இனிய குடும்பச்சூழலை இயற்கையுடன் இணைத்து கவிதை வடிவில் வடித்து எடுத்திருப்பது தேனும்பாலும் கலந்த இனிப்பாகும். சத்தும் சுவையும் நிறைந்த உணவாகும். இந்தியப் பண்பாட்டுதளம் காதலுக்கும் குடும்ப வாழ்க்கைக்கும் ஒரு தனித்தன்மையான இலக்கணத்தையே வகுத்துள்ளது. வாத்சாயனரின் காமசூத்திரமும் வள்ளுவரின் காமத்துப்பாலும் மிகச் சிறப்பான தனி இலக்கியங்களாகும். இரதியையும் மன்மதனையும் உருவாக்கி காதலின் இயல்பை இனிமையை இணைப்பை தெய்வீக நிலைக்கு உயர்த்திய பெருமை இந்திய மரபுக்குண்டு.

சொல்லித் தெரிவதில்லை மன்மதக் கலை என்னும் சொற்களில் பாரதி எத்தனை உயிரோட்டமான கருத்தைக் கூறியுள்ளார் என்பது இக்கவிதைகளின் பெருமையாகும்.

கடைசியில் கண்ணம்மாவைக்குல தெய்வமாக்கி, கண்ணனைச் சரணடைந்து உலகத்து நன்மையை வேண்டுவது மிகவும் அற்புதமான கவிதையாகும். சரணகதி தத்துவம் இந்து தர்ம தரிசனத்தில் ஒரு தனித் தன்மையான தத்துவமாகும்.

கண்ணம்மா பாரதியின் குலதெய்வம். பாரத நாட்டின் குலதெய்வம். பொன்னை, உயர்வை, புகழை, விரும்பிடும் என்னைக் கவலைகள் நெருங்காமல் காப்பாற்றுவாயாக என்று எனது நெஞ்சத்தில் புகுந்துள்ள மிடிமையையும் அச்சத்தையும் கொன்று ஒழித்திடுவாய் என்றும் துன்பம் இனி இல்லை, சோர்வில்லை, தோல்வியில்லை அன்பு நெறியில் அறங்கள் வளர்ந்திட வேண்டும் என்றும் நல்லது நாட்டுக, தீமையை ஒட்டுக என்றும் வேண்டி பாரதி தனது குலதெய்வத்திடம் சரணடைகிறார்.

புன்னாக வராளி ராகத்தில் பாரதி தனது குல தெய்வத்தை நோக்கிப் பாடும் இந்த அருமையான பாடலை பாரதநாடு முழுவதிலும் வீடுதோறும் நாள்தோறும் பாட வேண்டிய பாடலாகும்.

1. "நின்னைச் சரணடைந்தேன் - கண்ணம்மா
நின்னைச் சரணடைந்தேன்

2. பொன்னை உயர்வைக் புகழை விரும்பிடும்
என்னைக் கவலைகள் தின்னத்தகாதென்று (நின்னை)

3. மிடிமையுமச்சமும் மேவி என்நெஞ்சில்
குடிமைபுகுந்தன கொன்றவை போக் கென்று (நின்னை)

4. தன்செயல் எண்ணித்தவிப்பது தீர்ந்திங்கு
நின் செயல் செய்து நிறைவு பெறும் வணம் (நின்னை)

5. துன்பமில்லை சோர்வில்லை தோற்பில்லை
அன்பு நெறியில் அறங்கள் வளர்த்திட (நின்னை)

6. நல்லது தீயது நாமறியோம் அன்னை
நல்லது நாட்டுக தீமையை ஒட்டுக (நின்னை)

என்று பாடி கண்ணன் பாட்டுத் தொகுப்பை பாரதி நிறைவுச் செய்கிறார்.

பாஞ்சாலி சபதத்தில் பாரதி:

தமிழ்சாதிக்குப் புதியவாழ்வுதர வேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்கும் பராசக்தியே என்னை இத்தொழிலில் தூண்டினாள் என பாஞ்சாலி சபதக் காவியத்தைப் பாடத்தொடங்குகிறார் பாரதி. அடிமைப்பட்ட பராசக்தி தனது அடிமை விலங்குகளை உடைத்தெரியத் தனது மக்களைத் தூண்டுவதற்காக இந்த சபதம் என்று கருத்தில் கொண்டு பாரதி பாஞ்சாலி சபதத்தைப் பாடுகிறார்.

பாரதப் பெருங்கதையின் தெய்வீகப்பாத்திரங்களெல்லாம் இக்கதையில் வருகின்றனர்.

பிரம்மஸ்துதியும் சரஸ்வதி வணக்கமும் வாணியை வேண்டுதலும் பராசக்தி வணக்கமும் மீண்டும் சரஸ்வதி வணக்கமும் பாஞ்சாலி சபத நூலில் பாரதி பாடும் கடவுள் வாழ்த்துப் பாடல்களாகும்.

"ஓம் எனப் பெரியோர்கள் - என்றும்
ஓதுவதாய் வினைமோதுவதாய்
தீமைகள் மாய்ப்பதுவாய் - துயர்
தேய்ப்பது வாய் நலம் வாய்ப்பது வாய்"

என்ற பிரம்மஸ்துதி பாடலைத் துவக்குகிறார்.

பாஞ்சாலி சபத காவியத்தில் மூன்று தொடக்கங்களில் வாணியை வேண்டுகிறார். கதையின் தொடக்கத்தில் சரஸ்வதி வணக்கம். அதில் வாணியை உருவகப்படுத்துகிறார். அவளுடைய கண்கள் வேதங்கள் அவ்வேதங்களுக்கு பல உரைகள் எழுதப்பட்டுள்ளன. அவ்வுரைகளே அவளுடைய க்ண்களில் இட்ட கருமை. அவளுடைய நுதல்கள் மதியின் கதிர்வீச்சுகள். அவளுடைய நீண்ட கூந்தல் சிந்தனைச் செல்வம். வாதங்களும் தருக்கங்களும் அவளுடைய செவிகள். துணிவே அவளுடைய செவிகளில் அணிந்துள்ள தோடுகள். அவளுடைய நாசிகளே போதமாகும். அவளுடைய வாய் பொங்கிவரும் பல சாத்திரங்களாகும்.

கற்பனையென்னும் தேன் சுவையான இதழ்களையும் சுவையான காவியங்களைப் போன்ற கொங்கைகளையும்சிற்பம் முதலிய பல கலைத்திறன்களையும் உடைய கைகளையும் கொண்டவள். சொல் நயம் அறிந்த இசைத் தொகுப்புகளின் சுவையறிந்த தமிழ்ப்புலவர் என்னும் மேலோர்களின் நாவே அவளுடைய மலர்ப்பதங்கள் இதுவே பாரதியினுடைய சரஸ்வதியின் அற்புத வடிவம்.

"வேதத் திருவிழியாள் - அதில்
மிக்க பல்லுரையெனும் கருமையிட்டாள்
சீதக் கதிர் மதியே - நுதல்
சிந்தனையே குழல் என்றுடையாள்
வாதத்தருக்கமெனும் - செவி
வாய்ந்த நற்றுணிவெனும் தோடணிந்தாள்
போதமென்னாசியினாள் - நலம்
பொங்குபல் சாத்திரவாயுடையாள்" என்றும்

"கற்பனைத் தேனிதழாள் - சுவைக்
காவிய மெனும் மணிக்கொங்கையினாள்
சிற்பமுதற்கலைகள் - பல
தே மலர்க்கரமெனத் திகழ்ந்திருப்பாள்
சொற்படு நய மறிவார் - இசை
தோய்ந்திடத் தொகுப்பதின் சுவையறியார்
விற்பனத்தமிழ்ப்புலவோர் - அந்த
மேலவர்நாவெனும் மலர்ப்பதத்தாள்"

என்றும் பாடி மகிழ்ந்து வாணியைச் சரண் புகுந்தேன் என்று கடவுள்வணக்கத்தில் பாரதி கூறுகிறார்.

பாஞ்சாலி சபதத்தின் இரண்டாம் பாகத்தின் கடவுள் வணக்கத்திலும் முதலில் பராசக்தி வணக்கத்தில்.

"ஆங்கொரு கல்லை வாயிற்படி யென்று
அமைத்தனன் சிற்பி மற்றொன்றை
ஓங்கிய பெருமைக் கடவுளின் வடிவென்று
உயர்த்தினான், உலகினோர் தாய் நீ
உனக்கு எவரை எங்ஙனம் சமைத்தற்கு எண்ணமோ"

" அங்ஙனம் சமைப்பாய் உன்னை நான் சரணடைந்தேன் என்னை இருங்கலைப் புலவனக்குவாயாக" என்று வேண்டிக் கொண்டு அடுத்து சரஸ்வதி வணக்கங்கூறி அக்கவிதையில் மிகவும் நுட்பமான முறையில் அறிவியலையும் தத்துவ இயலையும் இணைத்து தனது மெய்ப்பொருள் விளக்கத்தைக் கூறுவதைக் காணலாம்.

"இடையின்றி அணுக்களெலாம் சுழலுமென
இயல்நூலார் இசைத்தல் கேட்டோம்
இடையின்றி கதிர்களெல்லாம் சுழலுமென
வானூலார் இயம்புகின்றார்
இடையின்றித் தொழில் புரிதல் உலகினிடைப்
பொருட்கெல்லாம் இயற்கையாயின்
இடையின்றி கலை மகளே நினதருளில்
எனதுள்ளம் இயங்கொணாதோ

என்று பாரதி கலைமகளை வேண்டுகிறார். இதுவே பாரதப் பண்பாட்டின் வழியில் சிந்திக்கும் பாரதியின் தொடர்ச்சியான கருத்து வடிவம் என்பதைக் காண்கிறோம்.

கதையில் அஸ்தினாபுர நகரையும் அந்நகரமக்களையும் வர்ணிக்கும் போது "சிந்தையில் அறமுண்டாம் எனிற் சேர்ந்திடும் கலி செயும் மறமும் உண்டாம்" என்றும்.

" மெய்தவர்பலருண்டாம் வேடங்கள் பூண்டவர் பலருண்டாம்" என்று இருவகை மக்களையும் குறிப்பிடுகிறார். இது பாரதி கவிதை முறையில் எதார்த்தவாதப் போக்காகும்.

துரியோதனனுடைய சபையைக் குறித்து விவரிக்கும்போது துரியோதனப் பெயரான் நெஞ்சத்துணிவுடையான் முடிபணி வறியான் " என்று துரியோதனன் குறித்தும்

"அந்தமில் புகழுடையான் - அந்த
ஆரிய வீட்டுமன் அறம்அறிந்தோன்" என்று
வீட்டுமனைக்குறித்தும், விதுரனைப்பற்றி

" மெய்ந் நெறியுணர்விதுரன்" என்று பொய்ந் நெறிந்தம்பியரும் அந்தப் புலைநடைச்சகுனியும் வுடனிருந்தார் என்று தம்பியரையும் சகுனியைப் பற்றியும்

"மைந்நெறிவான் கொடையான் - உயர்
மானமும் வீரமும் மதியுமுளோன்
உய்ந்நெறி அறியாதான் - இறைக்
குயிர்நிகர் கன்னனும் உடன் இருந்தான் என்று கர்ணனைப்
பற்றியும் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

பாண்டவரில் மூத்த தருமனைப்பற்றி துரியோதனன் வாய் மொழியாக பாரதி கூறிடும் கருத்துக்கள் அத்துரியோதனனுடைய உள்ளக்கிடக்கையைக் கூறுவதாக இருப்பினும் எக்காலத்திற்கும் எல்லா இடங்களுக்கும் பொருந்துவதான சில அரசியல் கருத்துவடிவங்களையும் அதில் காண முடிகிறது.

"வீர மிலாதருமன் - தனை
வேந்தர் முதலென விதித்தனவே" என்றும்
"கிழவியர் தபசியர் போல்-பழங்
கிளிக்கதைபடிப்பவன், பொறுமை என்றும்
பழவினை முடிவென்றும் - சொலிப்
பதுங்கி நிற்போன், மறத்தன்மையிலான்
வழவழத்தர்மனுக்கோ - இந்த
மாநிலமன்னவர் தலைமைதந்தார்" என்றும் துரியோதனன் பேசியதை பாரதி குறிப்பிடுகிறார். இத்துடன் வேறு இடங்களிலும் பாரதி தர்மனைப் பற்றி உயர்த்தியோ பாராட்டியோ பேசவில்லை. பாரதக்கதையில் வீட்டுமன் கருணன் அர்ஜுனன் பீமன் துரோணன் முதலியோரைக் குறிப்பிடுவது போல் தருமனைப் பற்றி பாரதி பாராட்டிப் பேசவில்லை.

அத்துடன் பாஞ்சாலி சபதத்தில் தர்மனைக் கடுமையாகச் சாடியே பேசியுள்ளான்.

"மேலும் பாரதி அறுபத்தாறு" கவிதையில்

பொறுமையினை அறக்கடவுள் புதல்வனென்னும்
யுதிட்டிரனு நெடுநாளிப்புவி மேற்காத்தான்
இறுதியிலே பொறுமை நெறி தவறி விட்டான்
ஆதலால் போர்புரிந்தானிளையா ரோடே
பொறுமையின்றிப் போர் செய்து பாரத நாட்டைப்
போர்க்களத்தே அழித்து விட்டுப் புவியின்மீது
வறுமையையும் கலியினையும் நிறுத்திவிட்டு
மலைமீது சென்றான் பின் வானம் சென்றான்"

என்று பாரதி குறிப்பிடுகிறார்.

பாமர மக்களின் பொதுநிலை பற்றி துரியோதனன் வாயிலாக பாரதி கூறும் ஒரு பொதுச் செய்தி.

"நிதி செய்தாரைப் பணிகுவர்
மானிடர் மாமனே - எந்த
நெறியினால் அது செய்யினும்
நாயேன நீள்புவி
துதி செய்தே நக்குதல்
கண்டனை மாமனே - வெறுஞ்
சொல்லுக்கே யறநூல்கள்
உரைக்கும் துணிவெலாம்"

என்று கூறுவது பொருத்தமான கருத்தாகும்.

மறுவிருந்துக்கு வந்த பாண்டவர்களை சகுனி வலிந்து சூதுக்கழைத்தான். தருமன் முதலில் மறுத்தான். அதற்கு சகுனி, பதில் கூறும் வகையில் சூதாடுதல், பொழுது போக்குதல், அது அரசர் காக்கும் பழக்கவழக்கங்கள் தானே மன்னர் வல்லினுக்கு அழைத்திடில் மறுப்பது உண்டோ என்றும்

" தேர்ந்தவன் வென்றிடுவான் - தொழில் தேர்ச்சியில்லாதவன்
"தோற்றிடுவான்.

இவை சூதென்றும் சதியென்றும் சொல்வாரோ, வல்லவன் வென்றிடுவான், தொழில் வன்மையில்லாதவன் தோற்றிடுவான் " எனறெல்லாம் கேலியாகவும் கிண்டலாகவும் பழைய பழ்க்கவழக்கம் என்றும் வாடிக்கை என்றும் பேசினான்.

முன்பிருந்த பழக்கம் என்பதை பாரதி மிக வலுவாகச் சாடுகிறான். முன்பிருந்தவழக்கம்எனக்கருதி தருமன் சூதாட இணங்கிவிட்டான்.

"பொய்யதாகும்சிறுவழக் கொன்றைப்
புலனில்லாதவர் தம்முடன் பாட்டை
ஐயன் நெஞ்சில் அறமெனக் கொண்டான்"

என்பதை, தர்மன் சூதாட இணங்கியதை, எத்தனை கடுமையாகச் சாடியுள்ளான் என்பதை அவனுடைய அடுத்த கவிதை வரிகளில் காணலாம். அப்பாடல் வரிகளில் பாரதி கூறும் கருத்துக்கள், பாரதிக்கே உரிய தனித்தன்மையான அதே சமயத்தில் மரபு வழியிலான கருத்துக்களும் ஆகும். அக்கருத்துக்கள், நமது பண்பாட்டு தளத்தின் மேம்பாட்டின் அடிநாதமாகும்.

" முன்பிருந்தோர் காரணத்தாலே
மூடரே பொய்யை மெய்யெனலாமோ
முன்பெனச் சொலுங்காலமதற்கு
மூடரே ஒரு வரையறையுண்டோ
முன்பெனச் சொல்லின் நேற்று முன்பேயாம்
மூன்று கோடிவருடமும் முன்பே
முன்பிருந்த தெண்ணிலாது புவிமேல்
மொய்த்த மக்களெல்லாம் முனிவரோ?

"நீர் பிறக்கு முன் பார்மிசை மூடர்
நேர்ந்ததில்லை யென நினைந்தீரோ?
பார் பிறந்தது தொட்டு இன்று மட்டும்
பலபலப்பல பற்பல கோடி
கார்பிறக்கும் மழைத்துளிப்போல
கண்ட மக்கள் அனைவருள்ளேயும்
நீர்பிறப்பதன் முன்பு, மடமை
நீசத்தன்மை யிருந்தனவன்றோ?
பொய்யொழுக்கை அறமென்று கொண்டும்
பொய்யர் கேலியைச் சாத்திரமென்றும்,

"ஐயகோ, நங்கள் பாரத நாட்டில்
அறிவிலார் அறப்பற்று மிக்குள்ளோர்
நொய்யராகியழிந்தவர் கோடி"

என்று தனது வலுவான கருத்துக்களைக் கூறி மேலும் கதையைத் தொடர்கிறார்.

"நூல் வகை பல தேர்ந்து தெளிந்தோன்
மெய்யறிந்தவர் தம்முள் உயர்ந்தோன்
விதியினால் அத்தருமனும் வீழ்ந்தான்"

என்றும் தர்மன் மீது சற்று பரிதாபப்பட்டும் பாரதி குறிப்பிடுகிறார்.

தர்மன் சூதாட்டத்தில் நாட்டை பணயமாக வைத்து இழந்தான். இந்த நிகழ்ச்சியைக் கதையில் கூறும்போது பாரதிக்கு ஏற்பட்டிருந்த கோபத்திற்கு அளவே இல்லை. பாரதம் அடிமைப்பட்டிருந்த நிலையும் அந்நியர் ஆட்சியின் கொடுமையும் பாரதியின் கண்ணுக்கு முன்னே வந்து நிற்கிறது.

"கோயிற் பூசை செய்வோர் - சிலையைக்
கொண்டுவிற்றல் போலும்
வாயில் காத்து நிற்போன் - வீட்டை
வைத்திழத்தல் போலும்
ஆயிரங்களான - நீதி
அவை உணர்ந்த தருமன்
தேயம் வைத்திழந்தான் - சிச்சீ
சிறியர் செய்கை செய்தான்"

என்று பாரதி கூறும்போது அவருடைய அரசியல் நெறிபற்றிய கருத்தும் தேச பக்தியும் மக்களாட்சி உணர்வும் மேலோங்கி நிற்கிறது.ஒரு வீட்டிற்கு வாயில் காப்போனாக இருப்பதைப் போல நாட்டிற்குக் காவலனாக அரசன் இருக்க வேண்டும் என்று இங்கு பாரதி கூறும் கருத்து நமது நாட்டின் மரபு வழி வந்த அரசியல் நெறியாகும். மன்னன் உடம்பென்றும் மக்கள் உயிரென்றும் கம்பன் கூறிய புதுக்கருத்தும் இங்கு கவனிக்கற்பாலதாகும். பாரதி மேலும் கூறுகிறார்.

"நாட்டு மாந்தர் எல்லாம் - தம்போல்
நரர்கள் என்று கருதார்
ஆட்டுமந்தையாம் என்று - உலகை
அரசர் எண்ணிவிட்டார்
காட்டும் உண்மை நூல்கள் -பலதாங்
காட்டினார்களேனும்
நாட்டு ராஜநீதி - மனிதர்
நன்கு செய்யவில்லை.

"ஓரஞ்செய்திடாமே - தருமத்
துறுதி கொன்றிடாமே
சோரம் செய்திடாமே - பிறரைத்
துயரில் வீழ்த்திடாமே

ஊரையாளும் முறைமை - உலகில்
ஓர் புறத்துமில்லை"

என்று கூறி பாரதி அரசியல் நெறியின்,ஆட்சி முறையின் அவல நிலைப்பற்றி உள்ளம் நொந்து குறிப்பிடுகிறார்.

காயுருட்டலில் பாஞ்சாலியை பணயமாகச் சகுனி வென்றுவிட்டான். துரியோதனன் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்து துள்ளி எழுந்தான். கூத்தாடினான். மாமனைக் கட்டித் தழுவிக் கொண்டான். பாஞ்சாலியை சபைக்கு அழைத்து வரும்படி துரியோதனன் ஆணையிட்டான். அப்போது உலகில் அதர்மக் குழப்பம் ஏற்பட்டதாக குறிப்பிடுகிறார்.

திரௌபதியை துரியோதனன் மன்றுக்கு அழைத்துவரச் சொல்லியது பற்றி ஜகத்தில் உண்டான அதர்மக் குழப்பம் என்னும் தலைப்பில் பாரதி தனது கவிதை வரிகளில் ஒரு அபூவர்மான காட்சியை முன்வைக்கிறார். அது ஒரு ஈணையற்ற ஒரு அற்புதமான இலக்கியக் காட்சியாகும். இவை நமது உள்ளத்தை உருக்கும் கவிதை வரிகளாகும். காவியத்தின் இந்தக் கவிதை வரிகள் பாரதியின் கவிதா மண்டலத்தின் சிகரத்தை எட்டி இருக்கிறது எனக் கூறலாம்.

தர்மமே அழிந்து விட்டது. சத்திமே பொய்யாகிவிட்டது. பெருமை மிக்க தவங்கள் எல்லாம் பெயர் கெட்டுப்போய் மண்ணாகிவிட்டன. தேவலோகத்தில் வாழும் தேவர்களின் வயிற்றில் எல்லாம் நெருப்புப் பற்றி அவர்கள் எரிந்து போனார்கள். மோன நிலையில் இருந்த முனிவர்கள் எல்லாம் முறைகெட்டுப் போய் மயங்கிடக்கிறார்கள். வேதங்கள் எல்லாம் அர்த்தமற்றுப் போய் வெறும் சொற்கள் ஆகிவிட்டன. இசை நாதங்கள் எல்லாம் சீர்குலைந்து போய்ப் பாழாகிக் கெட்டுவிட்டன. அழகிய கந்தர்வர்கள் எல்லாம் களையிழந்து போனார்கள். சித்தர்முதல் அந்தரத்தில் வாழ்வோர் எல்லாம் பித்தம் பிடித்து அலைகிறார்கள். படைப்புக் கடவுளான நான்முகனுடைய பேச்சு அடங்கிவிட்டன. கல்விக்கடவுளான நாமகட்கு புத்திகெட்டுவிட்டது. நீலமேக வண்ணனான திருமால் பல கோயில்களில் பள்ளிகொண்ட பெருமானாக இருக்கிறார். திருவரங்கத்தில் கிடந்த வண்ணத்தில் இருக்கிறார். திருவனந்த புரத்தில் அனந்த பயனத்தில் இருக்கிறார். இதை அறிதுயில் என்று கூறுவார்கள் அதாவது தூங்குவதாக ஒரு பாவனையேயாகும். அந்த அறிதுயிலை விட்டு பெரிய பெருமாள் ஆழ்துயிலில் நிரந்தரமாகத் தூங்கிவிட்டார் போலும். செல்வமும் பேரழகும் வாய்ந்த திருமகள் தனது அழகு கெட்டுப்புகை மூடிப்போனாள். நீக்கல் கடவுளான நீலகண்ட மகாதேவன். யோக நிலையை விட்டு மதி மயக்கம் கொண்டு விட்டான். இன்னும் பராசக்தியை அவள் மீது தீராத பக்தி கொண்ட பாரதி வாலை, உமாதேவி, மாகாளி வீறுடையாள், மூலமகாசக்தி, திரிசூலம் ஏந்தியவள், மகாமாயை, சிங்கவாகனத்தில் ஏறி உலகைச் சீராகக் காப்பவள், காலனுக்கே ஏவல் செய்பவள், பல் கணத்தாள் இவ்வாறு பலவாறு போற்றப்படும் ஆதிபரா சக்தியின் நெஞ்சமும்கல்லாகிவிட்டது. ஒளி மிக்க சூரியன் முகத்திலேயே இருள் படர்ந்து விட்டது.

உலகில் தர்மக் குழப்பம் ஏற்படும்போது எவ்வாறு தெய்வக் குழப்பம் ஏற்படுகிறது என்பதை ஏதாவது கொடுமை நிகழும்போது "கடவுளுக்கு கண் இல்லையா" என்று சாதாரணமக்கள் கூறுவதை, கவிஞன் தனது மகா சக்தி நிறைந்த கவித்திறனால்அற்புதமான கவிதை வரிகளில் உலகையும் உலக மக்களையும் விழிப்படையச் செய்யும் நோக்கோடு இந்த வரிகளை மனம் நொந்து எடுத்துக் கூறுகிறான். பாரதியின் அந்த வன்மை மிக்க வரிகளைக் கேளுங்கள்.

"தருமம் அழிவெய்தச் சத்திய மும்பொய்யாக,
பெருமைத்தவங்கள் பெயர் கெட்டு மண்ணாக,
வானத்துத் தேவர் வயிற்றிலே தீப்பாய,
மோன முனிவர் முறைகெட்டுத் தாமயங்க,
வேதம் பொருளின்றி வெற்றுரையேயாகிவிட,
நாதம் குலைந்து நடுமையின்றிப் பாழாக,
கந்தருவரெல்லாம் களையிழக்கச் சித்தர்முதல்
அந்தரத்து வாழ்வோர் அனைவோரும் பித்துறவே,
நான் முகனார் நாவடைக்க, நாமகட்கு புத்திகெட,
வான்முகிலைப் போன்ற தொரு வண்ணத்திருமாலும்
அறிதுயில் போய் மற்றாங்கே ஆழ்ந்த துயிலெய்திவிட
செறிதரு நற் சீரழகு செல்வமெலாந்தானாகுஞ்
சீதேவி தன் வதனம் செம்மை போய்க் காரடைய
மாதேவன் யோகம் மதிமயக்கமாகி விட
வாலை, உமாதேவி, மாகாளி, வீறுடையாள்.
"மூலமாசக்தி யொரு மூவிலை வேல்கை யேற்றாள்
மாயை தொலைக்கு மகாமாயை தானாவாள்,
பேயைக் கொலையைப் பிணக்குவையைக்கண்டுவப்பாள்
சிங்கத்திலேறிச் சிரிப்பால் உலகழிப்பாள்
சிங்கத்திலேறிச் சிரித்தெவையும் காத்திடுவாள்,
நோவுங்கொலையுறுவலொணாப்பீடைகளும்
சாவுஞ்சலிப்பு மெனத்தான் பல் கணமுடையாள்
கடர்வெறுமையேறுங்கரு நிறத்துக் காலனார்
இடாது பணி செய்ய இலங்கு மகாராணி
மங்களஞ்செல்வம் வளர்வாழ்நாள் நற்கீர்த்தி
துங்கமுறுகல்வியெனச் சூழும் பல் கணத்தால்
ஆக்கந்தானாவாள், அழிவு நிலையாவாள்,
போக்குவர வெய்தும் புதுமை யெலாம் தானாவாள்,
மாறிமாறிப் பின்னு மாறிமாறிப் பின்னும்
ம்ாறிமாறிப்போம் வழக்கமே தானாவாள்
ஆதி பராசக்தி - அவணைஞ்சம் வண்மையுற

சோதிக்ககதிர்விடுக்கும் சூரியனாம் தெய்வத்தின் முகத்தேயிருள் படர," என்பது பாரதியாரின் சிறப்புமிக்க நீண்ட கவிதைவரிகளாகும்.

உலகில் அக்கிரமங்களும் அநியாயங்களும் அதிகரிக்கும் போது ஆண்டவனை நிந்தித்துப்பாடுவதும் பக்தியின் சிகரங்களில் ஒன்றாகும். பாரதியின் இந்த பாணி தனிச்சிறப்பாக வடிவம் பெற்றுத் திகழ்வதைக் காண்கிறோம்.

ஒரு இடத்தில், ஒரு ஊரில், ஒரு நாட்டில் அக்கிரமங்களும் அநியாயங்களும், கொடுமைகளும் நடக்கும்போது அதை வேடிக்கை பார்த்துக்கொண்டு இருப்பது கண்டனத்துக்குரியதாகும்.அது கோழைத்தனம். அதைக் கவிஞன் சாடுகிறான். அரசன் தவறு செய்யும்போது அதை இடித்துரைப்பது, சுட்டிக்காட்டித் திருத்துவது என்பது நமது நாட்டின் ராஜ நீதியின் அரசியல் இலக்கணத்தின் நெறியாகும்.

சீதையை இராவணன் கவர்ந்துக் கொண்டு செல்லும்போது அதைக் கண்ட ஜடாயு, அரக்கனை எதிர்த்துப் போரிட்டான். இராவணனுடைய செய்கையை அவனுடைய தாய் வழிப்பாட்டனான மாலியவானும், "வேறு ஒரு குலத்தோன் தேவியை நயந்து சிறைவைத்த செயல் நன்றோ? பாவியர் கூறும்பழி, இதின்பழியும் உண்டோ?" என்று கூறுகிறான்.

துரியோதனன் ஆணையிட அவன்தம்பி துர்ச்சாதனன் பாஞ்சாலி இருந்த இடத்திற்குச் சென்று அவளுடைய ஆட்சேபணைளையும் பொருட்படுத்தாமல் அவள் பக்கத்தில் சென்று அவளுடைய கூந்தலினைப் பற் றிஅத்தினாபுரத்துத் தெருக்களின் வழியாக கரகர வென இழுத்துச் சென்ற பொழுது "ஊரவர் என்ன கொடுமையிது" என்றுகூட்டமாக நின்று வேடிக்கைதான் பார்த்தனர் என்று பாரதி கடும்கோபத்துடன் அத்தினாபுரத்து மக்களை திட்டுகிறான்.

அந்தக் கொடுஞ்செயல் புரிந்த துர்ச்சாதனனைத்தடுத்து அவனை மிதித்துக் தள்ளி விட்டுப் பாஞ்சாலியை அந்தப்புரத்தில் கொண்டு போய்ச் சேர்க்காமல் அத்தினாபுரத்துத் தெருக்களில் கூடியிருந்த மக்கள், நெட்டை மரங்களைப் போல் நின்று, பெட்டைப் புலம்பல் புலம்பினர் என்றும் வீரமிலா நாய்கள் என்றெல்லாம் கடுஞ்சொற்களில் பாரதி சாடுகிறான்.

"ஐயகோ! வென்றே அலறியுணர் வற்றுப்
பாண்டவர்தம் தேவியவள் பாதியுயிர் கொண்டுவர,
நீண்ட கருங்குழலை நீசன் கரம்பற்றி,

"முன்னிழுத்துச் சென்றான். வழிநெடுகமொய்த்தவராய்
என்ன கொடுமையிது வென்று பார்த்திருந்தார்"
ஊரவர்தம் கீழ்மை உரைக்கும் தரமாமோ?
வீரமிலா நாய்கள், விலங்காம் இளவரசன்
தன்னைமிதித்துத் தராதலத்தில் போக்கியே
பொன்னையவளந்தப் புரத்தினிலே சேர்க்காமல்
நெட்டை மரங்களென நின்று புலம்பினர்,
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத்துணையாமோ?

என்று பாரதி தனது கவிதை வரிகளில் கடுமையான சொற்களில் கூறுகிறார்.

நமது தெய்வங்களின் கைகளில் உள்ள ஆயுதங்கள் எல்லாம் கொடுமைகளையும் அக்கிரமங்களையும் அநியாயங்களையும் எதிர்க்கும் ஆயுதங்களாகும். அவைகளின் பிரதிநிதிகளாகவே பாரதமக்கள் திகழ வேண்டும். அதுவே நமது இயல்பான குணமாக இருக்க வேண்டும் என்பதே பாரதியின் கொள்கை கோட்பாடாகும்.

காவியத்தின் உச்ச கட்டமாக, பாரதி ஒரு அபூர்வமான அவலம் நிறைந்த காட்சியை நம்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார். வியாச பாரதத்தின் வழியிலே வார்த்தைக்கு வார்த்தை அதன் மொழி பெயர்ப்பாகவே இக்கதையை எழுதியிருக்கிறேன். என்று பாரதி தனது முன்னுரையில் குறிப்பிட்டிருந்த போதிலும் பாரதி தனது சொந்த சரக்காக வளர்ச்சிப் போக்கின் வடிவமாக, புதியகாலத்தின் தேவையாக நம்மை மிக உயர்ந்த ஒரு சிந்தனை கட்டத்திற்கு இட்டுச் சென்று பாரதத்தின் மேன்மையை உயர்த்துகிறார். பாரதியின் பாஞ்சாலி சபதம் நமது பாரத நாடு படைத்ததுள்ள தலை சிறந்த இலக்கியங்களின் வரிசையில் முன்நிற்கிறது. பாஞ்சாலி சபதத்தின்கதைப்பகுதி மகாபாரதப் பெருங்கதையின் ஒரு சிறு நிகழ்ச்சிதான். ஆயினும் அது முக்கியமான நிகழ்ச்சியாகும். கதையின் முக்கியமான திருப்பத்திற்கான கருவாகும். பாரத நாட்டையே குலுங்க வைத்த, என்றென்றைக்கும் மறக்க முடியாத, நமது நெஞ்சில் நிரந்தரமாக நிலைத்து நிற்கும் ஒரு நிகழ்ச்சியாகும். எனவே தான் பாரதி தனது காவியத்திற்கு இந்தக் கதை நிகழ்ச்சியை தேர்ந்தெடுப்பதற்கான ஆதர்சம் அவனுடைய உள்ளத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும்.

பாரதிக்கு கண்ணனிடமும் இராமனிடமும் அபாரமான பக்தியும் பற்றும் ஈடுபாடும் இருந்திருக்கிறது. நமது நாட்டின் காவியங்களில் பெருங்காவியமாக இலக்கியங்களில் பேரிலக்கியங்களாக பாரத நாட்டின் இலக்கியங்களின் இருகண்களாக அமைந்திருப்பது இராமாயணமும் மகாபாரதமுமாகும் என்பதை நாம் அறிவோம். இவ்விரண்டையும் இருபெரும் இதிகாசங்களாக நாம் போற்றுகிறோம்.

இராமனும் கண்ணனும் பாரத நாடு முழுவதிலும் இமயம் முதல் இந்துமாகடல்வரை அனைத்துமக்களிடமும் பரவியுள்ள தெய்வீகப் பெயர்களாகும். இராமன் கிருஷ்ணன் என்ற இரு பெயர்களும் இந்து சமுதாயத்தில் சாதி, சமய, மொழி, இன, பால் நிறவேறுபாடின்றிஅனைத்து மக்களுக்கிடையிலும் நடமாடும் உயிர்த்துடிப்பான பெயர்களாகும். நமது புண்ணிய பூமியில் எந்த மூலையில் எந்த ஊரில், எந்தத் தெருவில், எந்த இல்லத்தில் இராமனும் கிருஷ்ணனும் இல்லை? இப்பெயர்கள் பாரத மக்களின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் குறிக்கும் பெயர்களாக நமது உள்ளங்களில் இடம் பெற்றிருக்கின்றன. நிலை பெற்றிருக்கின்றன.

இராமன் இமயத்தின் அடிவாரத்தில் உள்ள அயோத்தியில் பிறந்து வளர்ந்து, தெற்கு நோக்கி இலங்கை வரை நடந்தே சென்று தனது அவதாரக்கடமைகளை நிறைவேற்றி நந்தி கிராமத்தில் தியாகத்தின் உயர்ந்த வடிவமான பரதனின் நீதியான அரசியல் நிர்வாகத்திற்கு வழி வகுத்துக் கொடுத்துவிட்டு குகனையும் சுக்கிரீவனையும் வீடணனையும் தனது உள்ளத்தால் அன்பால் அரவணைப்பால் வென்று அவர்களைத் தனது சகோதரர்களாக உடன் பிறப்புகளாக அரவணைத்துக் கொண்டு பாரதத்திருநாட்டை சிந்தனையில் ஒன்றாக ஒன்றுபடுத்திய மகத்தான பண்டய வரலாற்றியல் பண்பாட்டில் பாரதிக்கு மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டிருக்கிறது. ஆயினும் பாரதி நூல்களையும் கவிதைகளயையும் ஆழ்ந்து படிக்கும் போது அவனுக்கு பாரதக் கதையிலும் அதன் தெய்வீகப் பாத்திரங்களிலும் எல்லாவற்றிற்கும் மேலாகக் கண்ணனிடம் மிகுந்த பற்றும் பாசமும் ஈடுபாடும் ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். கண்ணனின் எண்ணற்ற அனந்தமான வடிவங்கள் பாரதியை மயக்கியிருக்கிறது. பாரதி, தான் கண்ட உணர்ந்த அனுபவித்த சிந்தித்த அனைத்திலும் தான் வாழ்ந்த உழைத்த நடந்த கவிதைகளை எழுதிய பாடிய அனைத்து நிலைகளிலும் கண்ணனைக் கண்டிருக்கிறான். பாரதி தான் கண்ட அனைத்து உயிர்ப்பொருள்களையும் ஜடப்பொருள்களையும் மனிதர்களையும் மக்களையும் பஞ்சபூதங்களையும் அவைகளின் பகுதிகளையும் அவைகளின் அசைவுகளையும் செயல்பாடுகளையும் வளர்ச்சி நிலைகளையும் கண்ணனாகவே கண்டு மகிழ்ச்சி அடைந்து ஆனந்தக் கூத்தாடியிருக்கிறார். பாரதியின் கண்ணன் உலகப் பெருவடிவத்தின் உலகப் பெருவடிவம். விஸ்வரூபத்தின் விஸ்வரூபம்.

துரியோதனனுடைய வேண்டுதலின் பேரிலும் தூண்டுதலின் பேரிலும் சகுனி தனது சூழ்ச்சி முறையால் திருதராட்டிரனிடம் போய் பாண்டவர்களை மறுவிருந்துக்கு அழைக்கவும் சூதாட்டத்திற்கு ஏற்பாடு செய்யவும் சம்மதிக்கும்படியும்அதற்கான அனுமதிகளை வழங்கும்படியும் ஆணைகளை இடும்படியும் வாதிடுகிறான். திருதராட்டிரன் எத்தனையோ புத்திமதிகளைக் கூறி சகுனியைத்திருத்த முயலுகிறான். பாரதி இதைத்தனது அற்புதமான கவிதை வரிகளில் எடுத்துக் கூறுகிறார்.

"சோதரர் தம்முட்பகையுண்டோ? - ஒரு
சுற்றத்திலே பெருஞ்செற்றமோ? தம்மில்
ஆதரங்கொண்டவரல்லரோ - முன்னர்
ஆயிரம் சூழ்ச்சியிவன் செய்தும் - அந்தச்
சீதரன்தன் அருளாலும் ஓர் - பெருஞ்
சீலத்தினாலும் புயவலி - கொண்டும்
யாதொரு தீங்கும் இலாமலே - பிழைத்
தெண்ணருங்கீர்த்தி பெற்றாரன்றோ?

என்று திருதராட்டிரன் சகுனியிடம் கூறுவதைப்பாரதி குறிப்பிடுகிறார்.

யாதொரு தீங்குமில்லாமல் பிழைக்கவும் அரும் கீர்த்தி பெறவும் நல்வாழ்வும் புகழும் பெற கண்ணனுடைய தண்ணருள் அத்துடன் பெரும் சீலம் (சிறந்த குணநலன்கள்) புயவலி (வல்லமை) ஆகியவற்றின் அவசியத்தையும் அவற்றைப் பாண்டவர் பெற்றிருந்தது பற்றியும் பாரதி அவ்வரிகளில் குறிப்பிட்டிருப்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

கண்ணனுக்கு முதல் மரியாதை செய்ததைக்குறை கூறிப் பேசிய சகுனியின் வார்த்தைகளுக்கு பதில் கூறும் முறையில் திருதராட்டிரன் கூறிய வாசகங்கள் வார்த்தைகள் கண்ணனைப் பற்றி பாரதி கொண்டிருந்த மிக உயர்வான கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன.

"ஆதி பரம்பொருள் நாரணன் - தெளி
வாகிய பாற்கடல் மீதிலே - நல்ல
சோதிப் பணாமுடியாயிரம் - கொண்ட
தொல்லறிவென்னுமோர் பாம்பின் மேல் - ஒரு
போதத்துயில் கொளுநாயகன் - கலை
போந்து புவிமிசைத் தோன்றினான் - இந்தச்
சீதக்குவளை விழியினான் - என்று
செப்புவர் உண்மை தெரிந்தவர்.
"நானெனும் ஆணவம் தள்ளலும் - இந்த
ஞாலத்தைத் தானெனக் கொள்ளலும் - பர
மோன நிலையினடத்தலும் - ஒரு
மூவகைக் காலங்கடத்தலும் - நடு
வானகருமங்கள் செய்தலும் - உயிர்
யாவிற்கும் நல்லருள் பெய்தலும் - பிறர்
ஊனைச் சிதைத்திடும் போதிலும் - தன
துள்ள மருளினெ குதலும்."

"ஆயிரங்காலமுயற்சியால் - பெற
லாவரிபேறுகள் ஞானிகள் - இனை
தாயின் வயிற்றிற் பிறந்த்ன்றே - தமைச்
சார்ந்து விளங்கப் பெறுவரேல் - இந்த
மாயிரு ஞாலம் அவர்தமைத் - தெய்வ
மாண்டுடையார் என்று போற்றுங்காண் - ஒரு
பேயினை வேதம் உணர்த்தல் போல் - கண்ணன்
பெற்றி உனக்கெவர் பேசுவார்

என்று திருதராட்டிரன் கூறுவதாகப் பாரதி பாடியுள்ள பாடல்கள் மிகச்சிறந்த தத்துவ ஞானக்கருத்துக்களைக் கொண்டதாக உள்ளது. ஆழ்வார்களின் பல பாசுரங்களுக்கு ஈடாக இந்த வரிகள் அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

திரெளபதி நீதி கேட்டு வாதிட்டாள் : பாரத நாட்டின் வரலாற்றில் கதைகளில் இதிகாசங்களில் காப்பியங்களில் காவியங்களில் நீதி கேட்டு வாதிட்ட நியாயத்திற்காகப் போராடிய் வீராங்கனைகள் பலர் உண்டு.

ஜானகி அசோகவனத்தில் சத்தியவிரதம் இருந்து அநியாயத்தை எதிர்த்தாள். இலங்கேஸ்வரனை எதிாத்து அவனுக்கு புத்திபுகட்டிவாதிட்டாள். தனது கற்பு நிலையைக் காத்துச் சிறையில் இருந்தாள்.

"வில் பெருந்தடந்தோள் வீர வீங்கு நீர் இலங்கை வெற்பில்
நற்பெரும் தவத்தளாய நங்கையைக் கண்டேன் அல்லேன்
இற்பிறப்பு என்பது ஒன்றும் இரும்பொறை என்பது ஒன்றும்
கற்பெனும் பெயரது ஒன்றும் களிநடம் புரியக் கண்டேன்"

என்பது கம்பன் குறிக்கும் பாடல். நற்பெரும் தவத்தளாயநங்கை இற்பிறப்பு இரும்பொறை கற்பு என்னும் பெயர் கொண்ட நங்கையாக சீதையை அனுமன் குறிப்பிடுகிறான். பின்னர் அந்தக் கற்பு எனும் பெயர் கொண்ட நங்கை தனது கணவனது வீரத்தால் சிறை மீண்டாள்.

கண்ணகி, அநியாயமாகத்தனது கணவன் கொல்லப்பட்டதை எதிர்த்து பாண்டிய மன்னனிடம் நீதி கேட்டு வழக்காடி நீதியை நிலைநாட்டி மதுரை நகரையே எரித்தாள்.

பாஞ்சாலி நீதி கேட்டு பெரியோர் சபையில் வாதிட்டாள். முதலில் தனது கணவர்களிடம் அம்மிமிதித்து அருந்ததி காட்டி அக்கினி சாட்சியாக மணம் செய்து இந்தப் பாதகர் முன்பு இப்படி அவமானப்படும் படி ஏன் விட்டீர்கள் எனக் கேட்கிறாள். விஜயனும் வீமனும் நெஞ்சு குமுறி நின்றனர். தருமன் தலை குனிந்து நின்றான்.

சபையில் வேறு பலரும் இருந்தனர். அறிவுடையோர், நல்லோர், வேள்வித்தவம் புறிந்த வேதியர்கள், மேலோர் மற்றும் பலரும் இருந்தனர். அவர்களை நோக்கி முறையிட்டாள். அவர்களும் மௌனமாகவே அமர்ந்திருந்தனர்.

"விம்மியழுதாள் - விதியோ கணவரே·
அம்மிமிதித்தே யருந்ததியைக் காட்டி யெனை,
வேதச் சுடர் தீமுன் வேண்டிமணம் செய்து
பாதகர் முன் இந்நாள் பரிசழிதல் காண்பீரோ
என்றான். விஜயனுடனேறுதிறல் வீமனுமே
குன்றாமணித்தோள் குறிப்புடனே நோக்கினார்.
தர்மனுமற்றாங்கே தலை குனிந்து நின்றிட்டான்"

என்று கவிஞன் கண்கலங்கிக் கூறுகிறார்.

" பொருமியவள் பின்னும் புலம்புவாள் - வான் சபையில்
கேள்விபலவுடையோர், கேடிலா நல்லிசையோர்,
வேள்விதவங்கள் மிகப்புரிந்த வேதியர்கள்
மேலோர் இருக்கின்றீர், வெஞ்சினமன் கொள்கிலீரோ?

என்று கேட்டாள். கூடியிருந்த வேந்தர் பலரும் கட்டுண்டு வாய் மூடியிருந்தனர்.

"வேலோரெனையுடைய வேந்தர் பிணிப்புண்டா"

என்று பாரதி குறிப்பிடுகிறார்.

இவர்களையெல்லாம் சொல்லிக்குற்றமில்லை. மன்னர்சபை தனில் என்னைப் பிடித்து இழுத்து ஏச்சுக்கள் பல சொல்லி அவமானப்படுத்துவதைப் பார்த்து உன்னை" நிறுத்தடா என்று சொல்லுவதற்கு யாருமில்லையே என்ன செய்வேன்" என்று துடித்துக் கொண்டே பாஞ்சாலி தன் கணவன் மாரை நோக்கினாள்.

"இங்கவர்மேல் குற்றமியம்ப வழியில்லை, சபைதனிலே
என்னைப் பிடித்திழுத்தே ஏச்சுக்கள் சொல்லுகிறாய்
நின்னையெவரும் " நிறுத்தடா என்பதிலர்.
என்செய்வேன் என்றேயிரைந்தழுதாள் பாண்டவரை
மின்செய்கதிர் விழியால் வெந்நோக்கு நோக்கினாள்
மற்றவர்தா முன் போல் வாயிழந்து சீர்குன்றி
பற்றைகள் போல் நிற்பதைப்பார்த்து வெறி கொண்டு
தாதியடி தாதி யெனத்துச் சாதனன் அவளைத்
தீதுரைகள் கூறினான் கர்ணன் சிரித்திட்டான்
சகுனி புகழ்ந்தான் சபையோர் வீற்றிருந்தார்"

என்று பாரதி குறிப்பிடுகிறார்.

பாஞ்சாலி சூதோர் சபையில் வாதிட்டு அலரிய இந்த அவலக்காட்சியில் அடுத்த திருப்பம் பெண்ணடிமை பெண்ணுரிமை பற்றிய ஒரு கடும் வாதம் பிதாமகர் வீட்டுமனுக்கும் பாதிக்கப்பட்ட பாஞ்சாலிக்கும் நடக்கிறது. இந்த வாதத்தில் பாரதியின் உள்ளத்தைக் காணலாம்.

வீட்டுமன் கூறும் சாத்திரவாதமும் அதற்கு பதிலளித்து பாஞ்சாலி கூறும் சத்தியவாதமும் உரிமைக்குரலும் பதில் வாதமும் வீமனின் துடிப்பும் விஜயனின் சத்தியக்குரலும் பாட்டனுக்கு பதிலளித்து விகர்ணன் கூறிய மறுப்புகளும் மரபு வழியில் விவாதிக்கப்பட்ட ஒரு பேரிலக்கியமாகும். பாரதியின் தனித்தன்மை பெற்ற இந்தப் பேரிலக்கியம் தலைசிறந்த இந்தக் காவியத்தின் மய்யமான கருத்தாகவும் அமைந்துள்ளது. இந்த மரபுகளை பண்பாடுகளை மீறி துகிலுறிதல் கொடுமை நிகழ்கிறது.

கண்ணனின் கருணை மழை கண்டோரை வியக்கச் செய்யும் அதி அற்புத நிகழ்ச்சியாக அமைகிறது. கொடுமையை எதிர்த்து பழிக்குப் பழி சபதங்களாக எழுகின்றன. அச்சபதங்கள் பெரும்போருக்கு வித்தாகிறது. போர்விளைகிறது. சபதம் நிறைவேறுகிறது. காலம்காலமாக யுக யுகாந்திரமாக பாரதமக்கள் இந்த வீரக்கதைகளைக் கேட்டுக் கேட்டு திரும்பத்திரும்பக்கேட்டு தெவிட்டாத சிந்தனை வளமும் நீதி நெறியும் பெற்று பாரத சமுதாயம் சிரஞ்சீவியாக எத்தனை இன்னல்கள் வந்துற்றாலும் அவைகளைத் தாங்கி நின்று முன்சென்று கொண்டு வருகிறது.

"தகுதியுயர் வீட்டுமனும் சொல்லுகிறான்" எனத் தனது வாதங்களைப் பிதாமகர் தொடங்குவதை பாரதி குறிப்பிடுகிறார். சபையில் மூத்தவர் பிதாமகர் வீட்டுமன். பாண்டவருக்கும் கவுரவர்களுக்கும் பாட்டன். சகல வேதங்களையும் சாத்திரங்களையும் நீதி முறைகளையும் கற்றறிந்தவர். ராஜ நீதியையும் அரசியல் நெறிமுறைகளையும் பற்றி முற்றிலும் தெளிவாக அறிந்தவர். போரில் வல்லவர். யாராலும் வெல்ல முடியாத வல்லமை மிக்கவர். தனக்குத்தானே விரும்பாமல் அவருக்கு மரணம் நேராது என வரம் பெற்றவர். அத்தினாபுரத்தைக் கடைசிவரை தனது வலிமையால் பேணிக்காக்கக் கங்கணம் பூண்டவர். நியாயம் எது அநியாயம் எது என்பதையும் தர்மம் எது அதர்மம் எது என்பதையும்தெரிந்தவர். என்றாலும் திருதராட்டிரன் புத்திரபாச த்தால் துரியோதனனுடைய வற்புறுத்தலுக்கு இணங்கியதைப் போல அத்தினாபுரத்து நாட்டு விசுவாசத்தால் கவுரவர்களின் செயல்களுக்கு துணைபோகும் சூழ்நிலைக்கு வீட்டுமனார் கட்டுப் பட்டு நின்றாரோ? எந்தத் தன்னலமும் இல்லாமல் யாரை நம்பியும் இல்லாமல் அறத்தின் பால் நின்று நீதி கூறுவதற்கு எல்லாத்தகுதிகளையும் படைத்திருந்த பிதாமகர் வீட்டுமனார் நியாயத்தின் பக்கம் நிற்காமல் போனது ஏன்?

விதுரன், அனைத்து நீதிகளையும் அறநெறிகளையும் நன்கறிந்த மகாத்தமா விதுரர் ஒரு போர்நிகழ்ந்து அத்தினாபுரம் அழியாதிருக்க, அத்தனை நெறிகளையும் எடுத்துக் கூறியதை முழுவதும் கேட்ட பின்னரும் அந்த தியாகச் செம்மல் பிதாமகனார் மவுனம் சாதித்தது ஏன்? அது ஒரு புதிரேயாகும்.

கடைசியில் பிதாமகரின் மவுனம் கலைந்து சபையில் நடந்த அக்கிரமங்களையும் பாஞ்சாலிக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையும் வீட்டுமனார் நியாயப்படுத்திய முறை இன்னும் புதிரானது.

வீட்டுமரின்சொற்கள் தேசீய இயக்கததில் மிதவாதத்தலைவர்களின் சொற்களைப் போல பாரதிக்குத் தோன்றியது போலும். புதுச்சேரியில் அவர் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் பாஞ்சாலி சபதம் என்னும் அந்த அமரகாவியத்தை எழுதினார். அவர் கூறிய வாதத்தைத் தொடங்குகிறார்.

"தகுதியுயர் வீட்டுமனும் சொல்லுகிறான் தையலே
சூதாடி நின்னையுதிட்டிரனே தோற்றுவிட்டான்
வாதாடி நீயவன்றன் செய்கை மறுக்கின்றாய்
சூதிலே வல்லான் சகுனி தொழில் வலியால்
மாதரசே நின்னுடைய மன்னவனை வீழ்த்திவிட்டான்
மற்றிதனில் உன்னை யொரு பந்தயமா வைத்ததே
குற்றம் என்று சொல்லுகிறாய் கோமகளே பண்டையுக
வேத முனிவர் விதிப்படி நீ சொல்வது
நீதமெனக் கூடும்நெடுங்காலச் செய்ததியது
ஆணோடு பெண் முற்று நிகரெனவே யந்நாளில்
பேணிவந்தார் பின்னாளில் இது பெயர்ந்து போய்
இப்பொழுதை நூல்களினை பெண்ணுங்கால் ஆடவருக்
கொப்பில்லை மாதர் ஒருவன் தன்தாரத்தை
விற்றிடலாம் தானமெனவேற்றுவர்க்கு தந்திடலாம்
முற்றும் விலங்கு முறைமையன்றி வேறில்லை
தன்னையடிமையென விற்றபின்னும் தருமன்
நின்னையடிமை யெனக் கொள்வதற்கு நீதியுண்டு
செல்லுநெறியறியார் செய்கையிங்கு பாத்திடிலோ
கல்லுநடுங்கும் விலங்குகளும் கண்புதைக்கும்
செய்கை அநீதி யென்று தேர்ந்தாலும் சாத்திரந்தான்
வைகுநெறியும் வழக்கமும் நீ கேட்பதனால்
ஆங்கவையும் நின்சார்பில் ஆகாவகையுரைத்தேன்
தீங்குதடுக்கும் திறமிலேன் என்றந்த
மேலோன் தலைகவிழ்ந்தான்"

என்று வீட்டுமன் கூறிய சாத்திரமுறைக்கு பாஞ்சாலிபதில் கூறுகிறாள். கண் கலங்கி நின்று சபைமுன் மீண்டும் கூறுகிறாள்.

"சால நன்கு கூறினீர் ஐயா, தருமநெறி
பண்டோர் இராவணனும் சீதை தன்னைப் பாதகத்தால்
கொண்டோர் வனத்திடையே வைத்துப் பின்கூட்டமுற
மந்திரிமார் சாத்திரிமார் தம்மை வர வழைத்தே
செந்திருவைப்பற்றிவந்த செய்தி உரைத்திடுங்கால்
தக்கது நீர் செய்தீர் தர்மத்துக் கிச்செய்கை
ஒக்கும்" எனக்கூறியுகந்தனராம் சாத்திரிமார்
"பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்
மாயமுணராத மன்னவனைச் சூதாட
வற்புறுத்திக் கேட்டது தான் வஞ்சனையோ? நேர்மையோ?
முற்படவே சூழ்ந்து முடித்த தொரு செய்கை யன்றோ?
மண்டபநீர்கட்டியது மாநிலத்தைக் கொள்ளவன்றோ?
பெண்டிர் தமையுடையீர் பெண்களுடன் பிறந்தீர்
பெண்பாவமன்றோ? பெரிய வசை கொள்வீரோ?
கண்பார்க்க வேண்டும்" கையெடுத்துக் கும்பிட்டாள்.

பாஞ்சாலி அழுது புலம்பினாள். ஆடை குலைந்து நின்றனள். துச்சாதனன் பேச்சுக்கள் பல பேசி அவளுடைய கூந்தலைப் பற்றி இழுத்தான். இதைக் கண்ட வீமனால் பொருக்க முடியவில்லை. அவனுடைய கோபம் கரைபுரண்டது. அண்ணன் தருமனை நோக்கி ஆவேசமாகப் பேசினான். இந்தக் காட்சியை பாரதி சோகமும் கோபமும் கொண்டு தனது கவிதை வரிகளில் பேசினான்.

"சூதர்மனைகளிலே - அண்ணே
தொண்டு மகளிர் உண்டு.
சூதிற் பணய மென்றே - அங்கோர்
தொண்டச்சி போவதில்லை

"ஏது கருதிவைத்தாய் - அண்ணே
யாரைப்பணயம் வைத்தாய்
மாதர் குலவிளக்கை - அன்பே
வாய்ந்த வடிவழகை

" பூமியரசரெல்லாம் - கண்டே
போற்ற விளங்குகிறான்
சாமிபுகழினுக்கே - வெம்போர்ச்
சண்டெனப் பாஞ்சாலன்

"அவன் சுடர்மகளை - அண்ணே
ஆடியிழந்துவிட்டாய்
தவறு செய்துவிட்டாய் - அண்ணே

தருமம் கொன்று விட்டாய்.
"சோரத்தில் கொண்டதில்லை - அண்ணே
சூதிற்படைத்ததில்லை
வீரத்தினாற்படைத்தோம் - வெம்போர்
வெற்றியினாற்படைத்தோம்.
"சக்கரவர்த்தி யென்றே - மேலாந்
தன்மை படைத்திருந்தோம்.
பொக்கென ஓர் கணத்தே - எல்லாம்
போகத் தொலைத்துவிட்டாய்
"நாட்டை யெல்லாம் தொலைத்தாய் - அண்ணே
நாங்கள் பொருத்திருந்தோம்
மீட்டும் எமையடிமை செய்தாய்
மேலும் பொறுத்திருந்தோம்
"துருபதன் மகளைத் திட்டத்
துய்நன் உடன்பிறப்பை
இருபகடை யென்றாய் - ஐயோ
இவர்க்கடிமை யென்றாய்
**"இது' பொருப்பதில்லை - தம்பி**
**எரிதழல் கொண்டுவா**
**கதிரைவைத்திழந்தான் - அண்ணன்**
**கையை எரித்திடுவோம்".**

என்று வீமன் கோபக்குரலில் சகதேவனிடம் கூறியதை நம்மை நெஞ்சுருக வைத்து பாரதி தனது கவிதை வரிகளில் குறிப்பிடுவது அவலச்சுவையின் உச்சமாகும். தவறுகள் எந்த இடத்தில் ஏற்பட்டாலும் அதை எதிர்க்கும் இயல்பை வீமன் மூலம் பாரதி காட்டுகிறார்.

வீமன் சினம் மிகுந்து கூறிய இந்த கடுஞ்சொற்கள் விஜயனை உலுக்கி விட்டது. சூதர் சபைதனில் அனைவரின் முன்பாக அண்ணனைக் கடிந்து பேசியது அர்ஜுனன் மனதை வலுவாக வருத்தியது.

"மனமாரச் சொன்னாயோ? வீமா என்ன
வார்த்தை சொன்னாய்? எங்கு சொன்னாய்? யாவர் முன்னே?
சினமான தீயறிவைப்புகைத்தலாலே
திரிலோக நாயகனைச் சினந்து சொன்னாய்"

என்று வீமனை அதைிப்படுத்தி வில்விஜயன் கூறுகிறான்.

**தர்மத்தின் வாழ்வதனை சூதுகவ்வும்**
**தருமம் மறுபடிவெல்லும் எனுமியற்கை**
**மருமத்தை நம்மாலே உலகங்கற்கும்**
**வழிதேடி விதி இந்த செய்கை செய்தான்.**

கருமத்தைமேன் மேலும் காண்போம் - இன்று
கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்
தருமத்தையப் போது வெல்லக்காண்போம்
தனுவுண்டு காண்டீவம் அதன்பேர் என்றான்.

இங்கு வீமனின் கோபத்தீயும் வில்விஜயனின் தர்மநீதியும் இணைந்து ஒரு புதிய அறத்தின் எழுச்சிக்குரலை எழுப்பியிருக்கிறது. அதன் முடிவில் காண்டீபத்தின் நாண் ஒலி கேட்பதைக் காணலாம். பாரதியின் இந்த கவிதைக்குரல் காலம் காலத்திற்கு ஒலிக்கும் தர்மக்குரலாகும். பாரதியின் இந்த அற்புதமான அபூர்வமான கவிதைவரிகள் அமரத்வம் வாய்ந்த வரிகளாகும்.

பாஞ்சாலியி ன்அழுகுரல் சபையில் மேலும் சலனத்தை உண்டாக்கிற்று. அர்ஜுனனின் வீரவார்த்தைகள் வீமனை அமைதிப்படுத்திற்று. சினம் தணிந்து வீமன் அண்ணனை வணங்கி நின்றனன். அப்போது விகர்ணன் எழுந்தான். விகர்ணன் நூற்றுவரில் ஒருவன். நூறு பேரில் தொண்ணூற்று ஒன்பது பேர் பொல்லாதவர்கள் இருந்தாலும் ஒருவனாவது நல்லவனாக இருப்பான் என்பதற்கு உதாரணமாக கௌரவர் கூட்டத்தில் விகர்ணன் இருந்தான். விகர்ணன் வயதில் இளையவன். ஆயினும் அறத்தால் நிற்பவன். துரியோதனன் சபையிலும் துணிவுடன் நியாயத்தை எடுத்துக் கூறும் பண்பும் விவேகமும் மிக்கவன்.

சபையில் நடந்த வாதத்தில் பிதாமகர் கூறிய சொற்களுக்கு மறுப்புக் கூறி நீதியை எடுத்துரைத்து விகர்ணன் எச்சரிக்கை செய்கிறான். இதைப் பாரதி மிகவும்அழகாக விவரித்துக் கதையைக் கொண்டு செல்கிறார்.

"அப்போது விகர்ணன் எழுந்து அவைமுன் சொல்வான்
பெண்ணரசி கேள்விக்குப் பாட்டன் சொன்ன
பேச்சதனை நான் கொள்ளேன் பெண்டிர்தம்மை
எண்ணமதில் விலங்கெனவே கணவர் எண்ணி
ஏதெனிலும் செய்திடலாமென்றான் பாட்டான்
வண்ணமுயர் தேவ நெறிமாறிப் பின்னாள்
வழங்குவதிந் நெறியென்றான் வழுவே சொன்னான்.
எந்தையர்தம் மனைவியரை விற்றதுண்டோ?

என்னும் கேள்வியை எழுப்புகிறான்.

"இது காறும் அரசியரைச் சூதில் தோற்ற
விந்தையைநீர் கேட்டதுண்டோ? என்னும்
கேள்வியை மேலும் கேட்டுத்தன் கருத்தைத்
தொடர்ந்து கூறுகிறான்.

"-------விலை மாதர்க்கு
விதித்ததையே பிற்கால நீதிக் காரர்
சொந்தமெனச் சாத்திரத்தில் புகுத்திவிட்டார்!
சொல்லளவே தானாலும் வழக்கந்தன்னில்
இந்த விதம் செய்வதில்லை, சூதர் வீட்டில்
ஏவற்பெண்பணாய் மில்லையென்றும் கேட்டோம்

என்று கூறி மேலும் தொடர்ந்து

"தன்னையிவனிழந்தடிமையான பின்னர்த்
தாரமேது? வீடேது? தாதனான
பின்னயு மோருடைமையுண்டோ என்று நும்மைப்
பெண்ணரசி கேட்கின்றாள், பெண்மை வாயால்

என்று பாஞ்சாலி கிளப்பிய வாதத்தை மீண்டும் அதற்கான பதிலையும் உள்ளடக்கியகேள்வியாக விகர்ணன் சபையில் கூடியிருந்த மன்னர்களை நோக்கி சுட்டிக் காட்டி மேலும் தொடர்கிறான்.

"மன்னர்களே களிப்பது தான் சூதென்றாலும்
மனு நீதி துறந்திங்கே வலியபாவந்
தன்னையிருவிழி பார்க்க வாய் பேசீரோ?
தாத்தனே நீதியீது தகுமோ என்றான்"

என்று மன்னர்களிடமும் தனது தாத்தனான நீதி அறிந்த பிதாமகர் வீட்டுமனிடமும் சுடச்சுடக் கேள்விகளை அடுக்கிக் கேட்டான்

விகர்ணன் இந்த நியாய வாதங்களை எடுத்துக் கூறியவுடன் சபையில் சிறிய சல சலப்பு ஏற்பட்டது.

"எழுந்திட்டார் சில வேந்தர் இரைச்சல் இட்டார்
ஒவ்வாது சகுனி செய்யும் கொடுமை யென்பார்
ஒரு நாளும் உலகி தனை மறக்காதென்பார்
எவ்வாறு புகைந்தாலும் புதைந்து போவீர்
ஏந்திழையை அவைக்களத்ததே இகழ்தல் வேண்டா
செவ்வானம் படர்ந்தாற்போல் இரத்தம் பாயச்
செருக்களத்தே தீரு மடா பழியி.'.தென்பார்"

என்று மகாபாரதப் போருக்கான முன் எச்சரிக்கை எழுந்தது. எனினும் கொடுமை தொடர்ந்தது. அண்ணன் ஆணைப்படி

"துச்சாதனன் எழுந்தே - அன்னை
துகிலினை மன்றிடை யுரியலுற்றான்"

அக்கிரமத்தின் சிகரமாக அவலத்தின் உச்சமாக துகிலுறிதல் கொடுமை சபை நடுவில் தொடங்கியது.

"அச்சோ தேவர்களே - என்று
அலரி அவ்விதுரனும் தரை சாய்ந்தான்"

இந்த அவலக்காட்சியை கொடுமையின் கொடுமுடியைக் காண சகிக்க முடியாமல் மகாத்மா விதுரன் மயங்கி விழுந்தான் என்பதைப் பாரதி குறிப்பிடுகிறார்.

"பிச்சேறியவனைப் போல - இந்தப்
பேயனும் துகிலினை யுரிகையிலே
உட்ஜோதியில் கலந்தாள் - அன்னை
உலகத்தை மறந்தாள் - ஒருமையுற்றாள்.

பாஞ்சாலி, ஹரி, ஹரி, என்றாள் - கண்ணா, கண்ணா, கண்ணா என்று அபயக்குரல் கொடுத்தாள். அவள் இருகைகளையும் உயரத்தூக்கினாள். தன்னை மறந்தாள். உலகை மறந்தாள். தெய்வத்துடன் ஒருமையுற்றாள், என்று பாரதி கூறும் இந்தக் காட்சியில் கண்ணனை, அவன் பெருமையை, அவன் அருளை, அவனது மகிமையை, கண்ணனது முழுமையான காட்சியை அவனது அருஞ்செயலை, தனது கவிதைகளில் முன்வைக்கிறார்.

கண்ணனது பெருமையைக் குறிக்கும் இந்தப் பாடல்கள் பாரதி பாடல்களிலும் குறிப்பாக பாஞ்சாலி சபதத்திலும் ஒரு தனித்தன்மையான பக்தி இலக்கியப் பாடல்களாகும். கண்ணன் பாட்டுக்கு அடுத்தாற் போல கண்ணன் பெருமையைக் கூறும் பாடல்களைப் பற்றிஏற்கனவே திருதராட்டிரன் கூறியதைக் குறிப்பிட்டுள்ளோம். இங்கு பாஞ்சாலிக்கு அருள் புரிந்து அவள் மானத்தைக் காக்கும் கண்ணன் பாரதத்தின் மானத்தையும் காப்பான் என்னும்பக்தி உணர்வோடு பரவசமாகப்பாடும் பாடல்களாகும்.

"ஹரி, ஹரி, ஹரி என்றாள் - கண்ணா
அபயம். அபயமுனக்கபயம் என்றான்
கரியினுக்கருள் புரிந்தே - அன்று
கயத்திடை முதலையினுயிர் மடித்தாய்,
கரிய நன்னிற முடையாய் - அன்று
காளிங்கன் தலைமிசை நடம்புரிந்தாய்
பெரிய தோர் பொருளாவாய் - கண்ணா
பேசரும் பழமறைப் பொருளாவாய்
சக்கரமேந்தி நின்றாய் - கண்ணா
சார்ங்கமென்றொரு வில்லைக் கரத்துடையாய்,

"அட்சரப் பொருளாவாய் - கண்ணா
அக்கார அமுதுண்ணும் பசுங்குழந்தாய்
துக்கங்களழித்திடுவாய் - கண்ணா
தொண்டர் தமைக்காப்பாய் - அந்தச்
சதுர் முக வேதனைப் படைத்து விட்டாய்"

"வானத்துள் வானாவாய் - தீ
மண், நீர், காற்றினில் அவையாவாய்
மோனத்துள் வீழ்ந்திருப்பார் - தவ
முனிவர்தம் அகத்தினில் ஒளிர்தருவாய்
கானத்துப் பொய்கையிலே - தனிக்
கமலமென்பூமிசை வீற்றிருப்பாள்
தானத்து ஸ்ரீதேவி - அவள்
தாளிணை கைக் கொண்டு மகிழ்ந்திருப்பாய்"

"ஆதியில் ஆதியப்பா - கண்ணா
அறிவினைக் கடந்த விண்ணகப் பொருளே
சோதிக்கு சோதியப்பா - என்றன்
சொல்லினைக் கேட்டருள் செய்திடுவாய்
மாதிக்கு வெளியினிலே - நடு
வானத்தில் பறந்திடும் கருடன் மிசை
சோதிக்குள் ஊர்ந்திடுவாய் - கண்ணா
சுடர்ப்பொருளே, பேரடற்பொருளே"

"கம்பத்தில் உள்ளானோ - அட
காட்டுன்றன் கடவுளைத் தூணிடத்தே
வம்புரை செயு மூடா - என்று
மகன் மிசை உறுமியத்தூணுதைத்தான்
செம்பவிர்க்குழலுடையான் - அந்தத்
தீயவல்லிரணியனுடல் பிளந்தாய்
நம்பி நின்னடி தொழுதேன் - என்னை
நாணழியாதிங்கு காத்தருள்வாய்"

"வாக்கினுக்கீசனையும் - நின்றான்
வாக்கினிலசைத்திடும் வலிமையினாய்
ஆக்கினைகரத்துடையாய் - என்றன்
அன்புடையெந்தை, என் அருட்கடலே

நோக்கினிற் கதிருடையாய் - இங்கு
நூற்றுவர்கொடுமையைத் தவிர்த்தருள்வாய்
தேக்கு நல்வான முதே - இங்கு
சிற்றிடையாய்ச்சியில் வெண்ணெயுண்டாய்

"வையகங்காத்திடுவாய் - கண்ணா
மணிவண்ணா, என்றன் மனச்சுடரே
ஐய நின் பதமலரே - சரண்
ஹரி, ஹரி, ஹரி, ஹரி, ஹரி என்றாள்,
பொய்யர்தம் துயரினைப் போல் - நல்ல
புண்ணியவாளர் தம் புகழினைப் போல்
தையலர் கருணையைப் போல் - கடல்
சல சலத்தெறிந்திடும் அலைகளைப் போல்

" பெண்ணொளி வாழ்த்திடுவார் - அந்தப்
பெருமக்கள் செல்வத்தின் பெருகுதல் போல்
கண்ணபிரான் அருளால் - தம்பி
கழற்றிடக் கழற்றிடத் துணிபுதிதாய்
வண்ணப்பொற் சேலைகளாம் - அவை
வளர்ந்தன வளர்ந்தன வளர்ந்தனவே
எண்ணத்தில் அடங்காவே - அவை
எத்தனை எத்தனை நிறத்தனவே.

"பொன்னிழைப் பட்டிழையும் - பல
புதுப்புதுப் புதுப்புதுப் புதுமைகளாய்
சென்னியிற்கை குவித்தாள் - அவள்
செவ்விய மேனியைச் சார்ந்து நின்றே
முன்னி ய ஹரி நாமம் - தன்னில்
மூளு நற்பயனுலகறிந்திடவே
துன்னிய துயிற்கூட்டம் - கண்டு
தொழும்பத்துச் சாதனன் விழ்ந்து விட்டான்.

" தேவர்கள் பூச்சொரிந்தார் - ஓம்
ஜெய, ஜெய, பாரத சக்தி யென்றே
ஆவலொடெழுந்து நின்று - முன்னை
ஆரிய வீட்டுமன்கை தொழுதான்.

"சாவடிமறவர் எல்லாம் - ஓம்
சக்தி சக்தி சக்தி யென்று கரங்குவித்தார்
காவலின் நெறிபிழைத்தான் - கொடி
கடியரவுடையவன் தலை கவிழ்ந்தான்"

என்று பாஞ்சாலியின் வேண்டுதலை அக்குரல் கேட்டுக் கண்ணன் காட்டிய கருணையை மிகவும் அற்புதமான கவிதை வரிகளில் பாரதி நமக்குப் படைத்தருளியுள்ளான்.

வீமனும், வில்விஜயனும் வீரபஞ்சாலியும கண்ணன் ஆணையாகச் சபதம் ஏற்றனர். பாரதப் போர்க் களத்தில் அச்சபதங்கள் நிறைவேறின.

## 3. வரலாற்றுச் சிறப்புமிக்க பேரறிஞர்கள், ஞானிகள், பெரியோர்கள் பற்றி

இந்திய நாட்டின் வரலாற்றுப் பாரம்பரியத்தை நினைவு கூர்ந்து, இப்பாரம்பரியங்களையும் மரபுகளையும் தொடர வேண்டும் என்பதைப் பாரதி தனது பாடல்களில் சுட்டிக்காட்டுகிறார். இதில் தமிழ் நாட்டின் வளமான பாரம்பரிய மரபுகளுக்குத் தனி இடம் இருப்பதையும் காணலாம்.

ஆதி சங்கரரும், இராமானுஜரும் மத்துவரும், கம்பனும், வள்ளுவரும், இளங்கோவடிகளும், காளிதாசனும், பாஸ்கரனும், புத்தனும், ஔவையும் அகத்தியரும், பாணினியும், சேரசோழ பாண்டியர்களும், சிவாஜியும், குருகோவிந்தரும், தாயுமானவரும் வள்ளலாரும். பாரதியின் கவிதைகளில் நாம் காணும் வாழையடி வாழையாக வந்த வழிகாட்டிகளாகும்.

"புத்த பகவான் - எங்கள்
புத்த பகவான் - அவன்
சுத்தமெய்ஞ்ஞானச் சுடர்முகம் கண்டேன்"

என்று பொன்மரத்தின் கீழ் சின்மயமான தோர் தேவன் புத்தபகவானைக் கண்டேன் என்று பாரதி பாடுகிறார்.

வானில் பறக்கின்ற பறவைகள், மண்ணில் திரியும் விலங்குகள், கானில் வளரும் மரங்கள், காற்று, புனல் கடல், விண்ணில் தெரியும் மீன்கள், வெட்ட வெளியின் விரிவு மண்ணில் கிடக்கும் புழுக்கள், உலகில் உள்ள உயிர்கள் அனைத்தும் நான் என்று கூறும் பாரதி,

"கம்பன் இசைத்த கவியெலாம் நான்
காருகர் தீட்டும் உருவெலாம் நான்"

என்று பாடுகிறார்.

"சாதியிரண்டொழிய வேறில்லையென்றே
தமிழ்மகள் சொல்லிய சொல்அமிழ்தமென்போம்
நீதி நெறியினில் நின்று பிறர்க்குதவும்
நேர்மையவர் மேலவர், கீழவர் மற்றோர்

என அவ்வை கூறிய சொற்களை நினைவூட்டி பாரத தேச மக்களுக்கான ஒரு புதிய திட்டத்தை பாரதி முன்வைக்கிறார்.

ஆழ்வார்கள், ஆண்டவனுக்கு அரங்கநாதனுக்கு பள்ளியெழுச்சி பாடினார்கள். அந்த மரபில், தூக்கத்தில் இருந்த பாரத நாட்டு மக்களைத்தட்டி

எழுப்ப, பாரதமாதா திருப்பள்ளியெழுச்சியைப் பாடினார். அப்பாடல்களில் புதிய கருத்துக்களையும் முன்வைத்தார்.

"சுருதிகள் பயந்தனை, சாத்திரங்கோடி
சொல்லருமாண்பின ஈன்றனையம்மே!

என்றும்

"விதமுறு நின்மொழி பதினெட்டும் கூறி
வேண்டியவாறுனைப் பாடுதும் காணாய்

என்றும் குறிப்பிட்டு, நாட்டின் பெருமையையும் ஒறுமைப்பாட்டையும் வெளிப்படுத்திப் பாடுகிறார்.

தமிழ்நாடு பற்றிய பாடல்களில் பாரதி தமிழ்நாட்டின் தனிச்சிறப்புகளைப் பற்றியும் வளத்தைப் பற்றியும் சேர சோழ, பாண்டிய மன்னர்களின் சிறப்பான ஆட்சிமுறைகளைப் பற்றியும் கம்பன், வள்ளுவன், இளங்கோவடிகளின் தனிச்சிறப்புகளைப் பற்றியும் பெருமைப் படுத்திப்பாடுகிறார்.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே"

என்று பாரதி துள்ளிக் குதித்துப் பாடத் தொடங்குகிறார்.

"வேதம் நிறைந்த தமிழ்நாடு" என்றும்
"உயர்வீரம் செரிந்த தமிழ்நாடு" என்றும்
"காவிரி, தென்பண்ணை, பாலாறு - தமிழ்
கண்டதோர் வைகை பொருநைநதி - யென
மேவிய ஆறுபல வோட - திரு
மேனி செழித்த தமிழ் நாடு' என்றும் நாட்டுவளத்தையும் சிறப்பையும் குறித்துப் பாடுகிறார்.

**தமிழ் கண்ட வைகையும் பொருனையும் என்பது தனிச்சிறப்பாகும். வைகையும் பொருனையும் நாட்டை மட்டும் வளப்படுத்வில்லை. தமிழ்சங்கம் வளர்த்த மதுரையும் தமிழின்பம் வளர்த்த பொதிகையும் வைகை, பொருனை நதிகளுடன் இணைந்து பெருமை கொண்டதாகும்.**

இன்னும் செல்வம் எத்தனையுண்டு புவிமீதே, அவையாவும் படைத்த தமிழ்நாடு என்று தமிழ்நாட்டின் செல்வ வளத்தை உச்சத்தில் வைத்து பாரதி பாடுகிறார்.

கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு என்றும்
வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து
வான்புகழ் கொண்டதமிழ்நாடு - நெஞ்சை
அள்ளும் சிலப்பதிகாரமென்றோர் மணி
ஆரம்படைத்த தமிழ்நாடு

என்றும் தமிழ்நாட்டின் கல்விச் சிறப்பையும் அறிவுச் சிறப்பையும் புகழ்ந்து பாடுகிறார்.

தமிழ்த்தாய் தனது மக்களைப் புதிய சாத்திரங்களைப் படைக்குமாறு கூறுவதாக பாரதி பாடியுள்ள பாடல் தமிழ்நாட்டு மக்களுக்கு புதிய கடமைகளை நிறைவேற்ற ஆணைபிறப்பித்ததைப் போல அமைந்துள்ளது. தமிழ் நாட்டின் வரலாற்றுச் சிறப்பை எடுத்துக் காட்டி பாரதி தனது காலத்திய அவல நிலையைக் கவலையுடன் சுட்டிக்காட்டி எதிர்காலதில் உயர்வடைய ஆற்றவேண்டிய கடமைகளை எடுத்துக் காட்டுகிறார்.

"ஆதிசிவன் பெற்று விட்டான் - என்னை
ஆரியமைந்தன் அகத்தியன் என்றோர்.

"வேதியன் கண்டு மகிழ்ந்தே - நின்ற
மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்
மூன்று குலத்தமிழ் மன்னர் - என்னை
மூண்ட நல்ல அன்பொடுநித்தம் வளர்த்தார்
ஆன்ற மொழிகளில் உள்ளே - உயர்
ஆரியத்திற்கு நிகர் என வாழ்ந்தேன்,

என்று தமிழின் வரலாற்றுச் சிறப்பை எடுத்துக்காட்டிக் கவிதையைத் தொடங்குகிறார்.

"சாத்திரங்கள் பலதந்தார் - இந்த
தரணியெங்கும்புகழ்ந்திட வாழ்ந்தேன்.

என்று பண்டயச் சிறப்பையும்சுட்டிக் காட்டி

"தந்தை அருள் வலியாலும் - முன்பு
சான்ற புலவர் தவ வலியாலும்
இந்தக் கணமட்டும் காலன் - என்னை
ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சியிருந்தான்.

என்று கூறி இப்போது ஒரு வசைச் சொல்வந்துள்ளது. அதை நீக்கி தமிழை மேன்மையுறச் செய்ய வேண்டும் என்று ஆணையிட்டுக் கூறுகிறான்.

"புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்தவளருது மேற்கே - அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை

என்றும்,

அவை சொல்லும் திறமை தமிழ் மொழிக்கில்லை,
மெல்லத்தமிழ் இனிச்சாகும் - அந்த
மேற்கு மொழிகள் புவி மிசை ஓங்கும்

என்னும் வசை மொழியை அந்தப் பேதை உரைத்தான் என்று கண்கலங்கிப் பேசி இந்த வசை எனக்கு எய்திடலாமோ **சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்** என்று தமிழ்த் தாய் தனது மக்களுக்கு ஆணையிடுவதாக பாரதி கூறுவது நம்மையெல்லாம் உணர்வூட்டி தமிழை வளர்க்க, அதற்காக செயலில் இரங்க ஊக்கப்படுத்துவதாகும். இந்த முழு நம்பிக்கையுடன்

"தந்தை அருள்வலியாலும் - இன்று
சார்ந்த புலவர் தவ வலியாலும்
இந்தப் பெரும் பழி தீரும் - புகழ்
ஏறிப்புவிமிசையென்று மிருப்பேன்"

என்று தமிழ்த்தாய் தன்னம்பிக்கை கொண்டிருப்பதை பாரதி எடுத்துக் காட்டியுள்ளார்.

பாரதி இந்தப் பாடலை இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாடியுள்ளார். நாடு அடிமைப்பட்டு அன்னிய ஆட்சியின் கீழ் இருந்த காலத்தில்பாடிய பாடலாகும் என்றாலும் இன்றும் இக்கருத்துக்குப் பொருத்தம் இருக்கிறது.

நாடு விடுதலை பெற்றுவிட்டது. விடுதலை பெற்று அரை நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக இந்திய நாடும் தமிழகமும் முன்னேற்றம் கண்டிருக்கிறது. தொடர்ந்து முன் சென்று கொண்டிருக்கிறது. அனைத்து கலைகளும், கலைச் செல்வங்களும், பஞ்ச பூத நுட்பங்களும் அறிவியல் செல்வங்களும் **தமிழில் கிடைக்க, தமிழில் படிக்க, அத்துறைகளில்தமிழை வளர்க்க**, பாரதியின் கட்டளைகளை தொடர்ந்து நிறைவேற்ற முயற்சிகள் தொடர வேண்டும்.

" மேலும் தமிழ் என்னும் தலைப்பிலான கவிதைகளில், பாரதி, தமிழ் மொழியின் தமிழ்ப் புலவர்களின் வரலாற்றுச் சிறப்புகளை எடுத்துக்கூறி அந்தப்பாரம்பரியத்தில் அடுத்துவரும் காலத்தில் தமிழுக்கும் தமிழ் மொழிக்கும் தமிழ்நாட்டிற்கும் நாம் ஆற்றவேண்டிய கடமைகளைப் பற்றி ஒரு விரிந்த செயல்திட்டத்தையே பாரதி நம்முன்வைக்கிறார்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம் "

எனவே,

"தேமதுரத்தமிழோசை உலகெலாம்
பரவும் வகைசெய்தல் வேண்டும்"

என்று கட்டளையிடுகிறார்.

" யாமறிந்த புலவரிலேகம்பனைப்போல்
வள்ளுவர்போல, இளங்கோவைப் போல
பூமிதனில் யாங்கணுமே பிறந்த தில்லை
உண்மைவெறும் புகழ்ச்சியில்லை

என்று பெருமையுடன் பேசும் பாரதி

"ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ஒரு சொற்கேளீர்
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்

என்று கட்டளையிடுகிறார். அத்துடன் தமிழ் வளர்ச்சிக்கு பாரதியின் செயல்திட்டம்

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமையில்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்
உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்"

என்று தனது திட்டத்தை நம் முன்வைத்து அதை நிறைவேற்ற நமக்குக் கட்டளையிடுகிறார்.

" தமிழ்ச்சாதி என்னும் தலைப்பில் 'சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும் திருக்குறளுறுதியும் தெளிவும் பொருளின் ஆழமும் விரிவும் அழகும் கருதியும் எல்லையொன்றிமை யெனும் பொருளதனைக் கம்பன் குறிகளால் காட்டிட முயலும் முயற்சியைக் கருதியும் முன்புநான் தமிழ்ச் ச ாதியை அமரத்தன்மைவாய்ந்தது என்று உறுதி கொண்டிருந்தேன் என்று குறிப்பிட்டு தமிழகத்தில் உள்ள போலிப்புதுமை வாதிகளுக்கும் பழமை வாதிகளுக்கும் இடையில் நடைபெறும் வழக்காடல்களைக் கண்டனம் செ ய்து தனது கருத்தாக

"நன்மையும் அறிவும்
எத்திசைத் தெனினும் யாவரே காட்டினும்
மற்றவை தழுவி வாழ்வீராயின்
அச்சமொன்றில்லை' என்று கூறுகிறார்.

பாரதியின் இந்தக் கருத்து எக்காலத்துக்கும் எல்லா நாட்டினருக்கும் பொருந்துவனவாகும். விண்பழம் பெருமை பேசும் பழமைவாதிகளுக்கும் போலிப்புதுமை வாதிகளுக்கும் சிறந்த அறிவுரையாகும்.

### சுயசரிதையில்

பாரதியின் கவிதைகளில் ஒரு சிறந்த கவிதைத் தொகுப்பு சுயச ரிதைத் தொகுப்பாகும். அத்தொகுப்பில் ஆங்கிலப் பயிற்சி என்னும் தலைப்பில் ஆங்கிலேய ஆட்சியினர் நமது நாட்டில் புகுத்திய கல்வி முறையைப் பற்றி பாரதி கடுமையாகச் சாடுகிறார். அதில் நமது நாட்டின் வரலாற்று மரபில் எழுந்து வளர்ச்சி பெற்றிருந்த அறிவுச் செல்வங்களைப் பற்றி பாரதி சுட்டிக் காட்டியிருப்பது மிகச் சிறப்பான செய்தியாகும். பாரத நாட்டிற்கான ஒரு புதிய கல்வித்திட்டத்தின் பகுதியாக ஒரு புதிய கல்விக் கொள்கையை பாரதி வலியுறுத்திக் கூறுவதைக் காணலாம். பாரதி கூறும் அந்தக் கல்விக் கொள்கை இன்றும் கூட நமக்கு நன்கு பொருந்துவதாக உள்ளது.

நமது நாடு விடுதலை பெற்றவுடன் நமது கல்விக் கொள்கையில் மாற்றம் காணவும், புதிய கல்விக் கொள்கையயும் பாடத்திட்டங்களையும் வகுக்கவும் தீர்மானிக்கப்பட்டது. ஆயினும் அத்தீர்மானம் செயலுக்கு வரவில்லை என்றே கூறலாம். இன்றும் கூட நமது பாடத்திட்டங்களில் அடிப்படையில் பழய ஆங்கிலக் கல்வியின் வழிமுறையே நீடிக்கிறது என்பதைக் காண முடிகிறது.

"நரியுயிர்ச் சிறு சேவகர் தாதர்கள்
நாயெனத்திரியொற்றர் உணவினைப்
பெரிதெனக் கொடுதம்முயிர் விற்றிடும்
பேடியர் பிறர்க்கிச்சகம் பேசுவோர்
கருதுமிவ்வகை மாக்கள் பயின்றிடுங்
கலைபயில் கென என்னை விடுத்தனன்
அருமைமிக்க மயிலைப் பிரிந்து மிவ்
வற்பர்கல்வியில் என் நெஞ்சு பொருந்துமோ"

என்று ஆங்கிலேயர் காலத்துக் கல்வி முறையைப் பற்றி பாரதி கூறுகிறார்.

இந்திய மக்களை அடக்கி ஒடுக்கித் தங்களுடைய ஆட்சி அதிகாரத்தை நிலை நாட்டிக் கொள்வதற்காக ஆங்கிலேயே ஆட்சியாளர்கள் இந்தியாவில் தங்களுடைய நிர்வாக முறையை நிறுவினார்கள். அந்த நிர்வாக முறை அடிப்படை நோக்கமாக இருந்தது இந்த நாட்டில் ஆங்கில ஆட்சியி ன் நலன்களைப் பாதுகாப்பதும், அதற்காக இந்திய மக்களைத் தங்களது ஆட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதுமேயாகும். அத்தகைய நிர்வாக அமைப்பிற்கு அவசியமான அதிகாரிகளை அலுவலர்களை, மற்றும் தேவையான பணியாளர்களை உருவாக்குவதற்கான வகையில் ஆங்கிலேயர் ஆட்சிகாலக்கல்விமுறை உருவாயிற்று. இந்த நாட்டின் மக்களின் முன்னேற்றத்திற்கான அடிப்படை ஞானத்தை, அறிவைப்பெறுவதற்கான கல்வியாக அது இருக்க வில்லை. அதைப் பற்றி பாரதி மேலும் கூறுகிறார்.

"கணிதம் பன்னிரண்டு ஆண்டு பயில்வர் பின்
கார் கொள்வானிலோர் மீன்நிலை தேர்ந்திலர்
அணி செய்காவியம் ஆயிரம் கற்கினும்
ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கிலார்,
வணிகமும் பொருள் நூலும் பிதற்றுவார்
வாழும் நாட்டின் பொருள்கெடல் கேட்டிலார்
துணியும் ஆயிரம் சாத்திர நாமங்கள்
சொல்லுவார் எட்டுணைப்பயனும் கண்டிலார்,

என்று கூறுகிறார். மேலும்.

"கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்
காளிதாசன் கவிதை புனைந்ததும்
உம்பர்வானத்து கோளையும் மீனையும்
ஓர்ந்து அளந்த தோர் பாஸ்கரன் மாட்சியும்
நம்பருந்திறலோடு ஒரு பாணிணி

ஞானமீதில் இலக்கணம் கண்டதும்
இம்பர் வாழ்வின் இறுதி கண்டு உண்மையின்
இயல்புணர்த்திய சங்கரன் ஏற்றமும்
சேரன்தம்பி சிலம்பை இசைத்ததும்
தெய்வவள்ளுவன் வான் மறை செய்ததும்
பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள்
பாரளித்துத் தர்மம் வளர்த்ததும்
பேரருள் சுடர்வாள் கொண்டு அசோகனார்
பிழைபடாது புவித்தலம் காத்ததும்
வீரர் வாழ்த்த மிலேச்சர் தம்தீய கோல்
வீழத்தி வென்ற சிவாஜியின் வெற்றியும்

அன்னயாவும் அறிந்திலர் பாரதத்து
ஆங்கிலம் பயில் பள்ளியுட்போகுநர்
முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டிருக்கும் இந்நாளின் இகழ்ச்சியும்
பின்னர் நாடுறு பெற்றியும் தேர்கிலார்
பேடிக்கல்வி பயின்றுழல் பித்தர்கள்
என்ன கூறிமற்றெங்கணுணர்த்துவேன்
இங்கிவர்க்கெனதுள்ளமெரிவதே

"ஐயர் என்றும் துரையென்றும் மற்றெனக்கு
ஆங்கிலக்க லை யென்றொன்றுணர்த்திய
பொய்யருக்கிது கூறுவன், கேட்பிரால்
பொழுதெலாம் உங்கள் பாடததில் போக்கி நான்,
மெய் அயர்ந்து விழி குழி வெய்திட,
வீறிழந்து எனதுள்ளம் நொய்தாகிட
ஐயம் விஞ்சிச் சுதந்திரம் நீங்கியென்
அறிவு வாரித்துரும் பென்றலைந்ததால்
செலவு தந்தைக்கு ஓராயிரஞ் சென்றது
தீதெனக்குப் பல்லாயிரம் சேர்ந்தன
நலமோரெட்டுணையும் கண்டிலேன் இதை
நாற்பதாயிரம் கோயிலில் சொல்லுவேன்"

என்று சத்தியப்பிரமாணம் செய்து பாரதி கூறி முடித்துள்ளார்.

ஆங்கிலக் கல்விபற்றிய பாரதியின் கருத்துக்களும் அவைகளின் இன்றைய பொருத்தங்களும் ஆழ்ந்து சித்திக்கத்தக்கன. ஆய்வு செய்யத்தக்கன.

இன்றய இந்திய உயர்கல்வியில் இயற்பியல், வேதியில், வானவியல், விலங்கியல், தாவரவியல், உயிரியல், பொறியியல், வைத்தியம், கணிதம் முதலிய மற்றும் இதர அறிவியல் துறைகள், மற்றும் இலக்கியம் வரலாறு பொருளியல், வணிகவியல், சட்டவியல், வாணிபம், தத்துவ ஞானம், கட்டிடவியல் முதலிய பலவேறு துறைகளும் இந்திய மண்ணில் வேர்விட்டுத் தொடங்கி, இந்திய வரலாற்று அனுபவத்தில் இணைந்து உருப்பெற்றுவளர்ச்சி பெற்று, உலக அறிவையும்சேகரித்து இணைத்துக் கொண்டு, நமது நாட்டின் தற்கால, எதிர்கால தேவைகளை முழுமைப்படுத்திக் கொள்ளும் வகையில் அமைவதே சீரான கல்வியாக அமையும் என்பதை வலியுறுத்திக்காட்டுகிறது.

பல துறைகளிலும் பாரத நாட்டில் அறிவுத்துறையை வளர்த்து, அதன் உச்சிக்குச் சென்றுள்ள பல அறிஞர்கள், பேரறிஞர்கள், தனிச்சிறப்பு மிக்க ஞானிகள், மேலோர்கள் வீரர்கள், அரசர்கள், மேதைகள், முதலியவர்களைக் குறிப்பிட்டு அவர்களின் அறிவுத்துறை சாதனைகளை நாட்டின் பொது அறிவுத்துயின் வ்ளர்ச்சிக்கு வளப்படுத்திப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை பாரதியின் கவிதைகளும் கவிதைக்கருத்துக்களும் தெளிவுபடக் கூறுவதைக் காணலாம். அந்தப் பண்பாட்டின் பாரம்பரியத்தில் பாரதி தன்னைத் தெளிவாக அடையாளம் காட்டிக் கொள்கிறார்.

பாரதி தனது சுய சரிதைத் தொகுப்பைத் தொடங்கும் போது பட்டினத்துப் பிள்ளையின் பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப்போனதுவே என்னும் தத்துவ ஞானவாசகத்துடன் தொடங்குகிறார்.

பாரதி அறுபத்தாறு என்னும் கவிதைத் தொகுப்பைத் தொடங்கும் போது,

எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தாராப்பா
யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்

3892

என்று தொடங்குகிறார்.

## சிவாஜியும் குருகோவிந்தரும்

வரலாற்றுப் பாரம்பரியத்தில் வந்த மாவீரர்களையும் சிறந்த சிந்தனையாளர்களையும்அறிவுத்துறைச் செல்வர்களையும் பற்றிப் பாடும் பாரதி, மராட்டியவீரன் சிவாஜி தனது போர்ப்படையினருக்கு விடுத்த வேண்டு கோளைப் பற்றியும் குரு கோவிந்தசிம்மர் தனது சீடர்களுக்கு விடுத்த அறிவுரைகளையும் பற்றித் தனது பாடல்களில் தனித்தனிக் கவிதைகளாகத் தொகுத்துக் கூறியுள்ளார்.

டில்லி மாநகரைத்தலைமையாகக் கொண்டு இந்திய நாட்டை, ஆங்கிலேயருக்கு முன் ஆண்ட மொகலாயப் பேரரசின் சக்திவாய்ந்தக் கடைசிப் பேரரசனாக, சக்கரவர்த்தியாக ஔரங்கசீப் கருதப்படுகிறான்.

ஔரங்கசீப்பின் ஆட்சிகாலத்தில் மொகலாய மன்னராட்சி முறை அதன் உச்ச நிலையில் இருந்தது எனக்கூறலாம். ஔரங்கசீப் ஆட்சி காலத்தில், டில்லி சாம்ராஜ்ய ஆதிக்கத்திற்கு எதிராக, இந்தியாவின் பல பகுதிகளிலும், மன்னராட்சி முறைக்கொடுமைகளுக்கெதிரான மக்களுடைய கலவரங்களும் எழுந்தன. இவைகளில் முக்கியமானது தெற்கில் மராட்டியருடைய எழுச்சியும், மேற்கில் பாஞ்சாலத்தில் சீக்கியர்களுடைய பேரெழுச்சியுமாகும். இவ்விரண்டையும் எடுத்துக் காட்டும் முறையில் பாரதி முறையே சிவாஜியைப் பற்றியும் குருகோவிந்தரைப் பற்றியும் தனது சிறப்புமிக்க தனிக்கவிதைகளில் பேசுகிறார்.

சத்திரபதி சிவாஜி தனது படைவீரர்களிடம் பேசுவதை, பாரதி குறிப்பிடுகிறார்.

"சேனைத்தலைவர்காள் சிறந்த மந்திரிகாள்
யானைத்தலைவரும் அருந்திறல் வீரர்காள்
"அதிரத மன்னர்காள் துரகதத்ததிபர்காள்
எதிரிகள் துணிக்குற இடித்திடுபதாதிகாள்
வேலெறிபடைகாள் சூலெறிமறவர்காள்
காலன் உருக்கொளும் கணைதுரந்திடுவீர்
மற்றும் ஆயிரம் விதம் பற்றலர்தம்மைச்
செற்றடுந்திறனுடைத் தீரரத்தினங்காள்
யாவிரும் வாழியே, யாவிரும் வாழியே"

என்று அனைவரையும் அழைத்து முதலில் தாய் நாட்டின் பெருமையைப் பற்றி எடுத்துக் கூறுகிறார்.

"மாற்றலர் தம்புலை நாற்றமேயறியா
ஆற்றல் கொண்டிருந்ததிவ்வரும் புகழ்நாடு

என்று கூறுகிறார்.

வேத நூல் பழிக்கும் வெளித்திசைமிலேச்சர்
பாதமும் பொருப்பளோபாரத தேவி

என்று கூறுகிறார்.

வீரரும் வரிசை விரித்திடுபுலவரும்
பாரெல்லாம் பெரும்புகழ் பரப்பியநாடு

என்று கூறுகிறார்.

தர்மமே உருவமாய்த் தழைத்த பேரரசரும்
நிர்மல முனிவரும் நிறைந்த நன்னாடு

என்றும்

வீரரைப் பெறாத மென்மை தீர்மங்கையை
ஊரவர்மலடி என்றுரைத்ததிரு நாடு

என்றும் கூறி

**பாரத பூமி பழம்பெரும் பூமி**
**நீரதன்புதல்வர் இந்நினைவகற்றாதீர்**
**பாரத நாடு பாருக்கெலாம் திலகம்**
**நீ ரதன் புலவர் இந்நினைவகற்றாதீர்**

என்று படைவீரர்களுக்கு வீரமூட்டுகிறார்.

பன்னரும் புகழுடைப் பார்த்தனும் கண்ணனும்
வீமனும் துரோணனும் வீட்டுமன்தானும்
ராமனும் வேறுள இருந்திறல் வீரரும்
நற்றுணை புரிவர்வானக நாடுறும்
வெற்றியேயன்றி வேறெதும் பெறுகிலேம்

என்று நம்பிக்கையூட்டுகிறார்.

வஞ்சகர், தீயர், மனிதரைவருத்துவோர்
நெஞ்சகத்தருக் குடை நீசர்கள் - இன்னோர்
தம்மொடு பிறந்த சகோதரராயினும்
வெம்மையோடொறுத்தல் வீரர்தம் செயலாம்

என்று கீதையின் தத்துவத்தைக் காட்டி

பேடிமையகற்று நின்பெருமையை மறந்திடேல்
ஈடிலாப்புகழினாய் எழுகவோ எழுக

என்று உணர்வூட்டி அன்னியரை எதிர்த்துப் போரிட அரைகூவி அழைக்கிறார்.

குருகோவிந்தர்

ஆயிரத்தெழு நூற்றம்பத்தாறு
விக்ரமனாண்டு, வீரருக்கமுதாம்
ஆனந்த புரத்திலார்ந்தினிதிருந்தனன்
பாஞ்சாலத்துப்படர் தரு சிங்கக்
குலத்தினை வகுத்த குருமணியாவான்

ஞானப் பெருங்கடல், நல்லிசைக் கவிஞன்
வானம் வீழ்ந்து திரினும்வாள்கொடுதடுக்கும்
வீரர் நாயகன் மேதினிகாத்த
குருகோவிந்த சிங்கமாங்கோமகன்

சீக்கியர் பெருமக்களைக் கொண்ட பெரும் கூட்டத்தைத் திரட்டி காலசா அமைப்பை உருவாக்கி, கொள்கை அறிக்கைவிடுத்தான். குரு கோவிந்தர் தலைமையில் அவர்களுடைய சீடர்கள் திரண்டு காலசா அமைப்பின் மூலம் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினர்.

சீடர்கள்அனைவரும் தீட்சையி.·.தடைந்தனர்
ஐயன் சொல்வான் அன்பர்காள் நீவிர்
செய்திடப் பெற்ற தீட்சையின் நாமம்
அமிர்த மென்றறிமின் அரும்பேராமிது
பெற்றார்யாவரும் பேரருள் பெற்றார்
நுமக்கினித்தரும நுவன்றிடக் கேண்மின்

என்று தொடங்கித் தங்கள் கொள்கைப் பிரகடனத்தைச் செய்தார்.

ஒன்றாம் கடவுள் உலகிடைத்தோன்றிய
மானிடர் எல்லாம் சோதரர் மானுடர்
சமத்துவமுடையார் சுதந்திரம் சார்ந்தவர்
சீடர்காள் குலத்தினும் செயலினும் அனைத்தினும்
இக்கணந்தொட்டு நீர் யாவருமொன்றே
பிரிவுகள் துடைப்பீர்! பிரிதலே சாதல்
ஆரியர் சாதியுள் ஆயிரஞ்சாதி
வகுப்பவர் வகுத்து மாய்க நீரனை வீருந்
தருமம் கடவுள் சத்தியம் சுதந்திரம்
என்பவை போற்ற எழுந்திடும் வீரச்
சாதி யொன்றனையே சார்ந்தோராவீர்
அநீதியும் கொடுமையும் அழிந்திடும் சாதி
மழித்திடல் அறியா வன்முகசாதி
இரும்பு முதிரையும்இறுகிய கச்சையும்
கையினில் வாளும் கழன்றிடாச்சாதி
சோதர நட்புத் தொடர்ந்திடு சாதி
அரசனில்லாது தெய்வமே யரசா
மானுடர் துணை வரா மறமேபகையாக்
குடியரசியற்றும் கொள்கையார் சாதி
அறத்தினை வெறுக்கிலீர் மறத்தினை பொறுக்கிலீர்
தாய்த்திரு நாட்டைச் சந்ததம் போற்றிப்
புகழொடு வாழ்மின் புகழொடு வாழ்மின்
என்றுரைத்து ஐயன் இன்புற வாழ்த்தினன்
அவனடிபோற்றியார்த்தனர் சீடர்கள்
குருகோவிந்தக் கோமகனாட்டிய
கொடியுயர்ந்தசையக் குவலயம் புகழ்ந்த
ஆடியே மாய்ந்ததவுரங்கசீப் ஆட்சி

என்று பாரதி கூறி முடிக்கிறார்.

# 4. தேசியத்தலைவர்கள் பற்றி:

பாரதி நமது நாட்டின் தேசீய விடுதலை இயக்கத்தில்முன்னணியில் நின்றார் என்பதை அனைவரும் அறிவர். அவர் தேசீய மகாகவி. புரட்சிகரஜன நாயகப்பெரும்புலவராக விளங்கியவர். சிறந்த பத்திரிகையாளராகவும் பணியாற்றியுள்ளார். பத்திரிகைத்துறையில் புதிய பல உத்திகளையும் கையாண்டு தமிழ்ப்பத்திரிக்கைத் துறைக்கு முன்னோடியாக விளங்கியுள்ளார்.

அவர் தேசீய காங்கிரஸ் மகா சபையில் தீவிரவாதப் பிரிவுக்கு ஆதரவளித்தார். வடக்கில் பாலகங்காதரத்திலகர், லாலா லஜபதி ராய், விபின் சந்திரபால் முதலியவர்களுக்கு ஆதரவு கொடுத்தார். தமிழ் நாட்டில் வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்ரமணிய சிவா, சிங்கார வேல் செட்டியார், மண்டயம் சீனிவாசாச்சாரியார், வா.வே.சு அய்யர்முதலியவர்களுடன் தொடர்பு கொண்டு பணியாற்றியுள்ளார்.

பின்னர், தாகூர், மகாத்மா காந்தி, ஆகியோருக்கும் ஆதரவளித்தார். ஆயினும் கால மாற்றத்தாலும் காலத்தின் கட்டாயத்தாலும், சூழ்நிலைமைகளின் காரணங்களாலும் பாரதி தனது அரசியல், தத்துவ, சமுதாயக் கருத்துக்களைச் சற்று திருத்தியும் மாற்றியும் வெளிப்படுத்தியிருந்தாலும் அவருடைய தீவிரக் கருத்துக்களே அவருடைய கவிதைகளில் உயிரும் உணர்வுமாக இழையோடி தனித்தன்மை பெற்றிருக்கின்றன.

பாரதி தனது பாடல் தொகுப்புகளில் தாகூர், மகாத்மாகாந்தி, பால கங்காதரத்திலகர், வ.உ.சிதம்பரம் பிள்ளை தாதாபாய் நவுரோஜி, விவேகானந்தர், லாலாலஜபதிராய் முதலியோரைப்பற்றி பல பாடல்களைப் பாடியுள்ளார்.

பாரதி பாடிய தேசீய கீதங்களில் பாரத மாதா நவரத்தின மாலை ஒரு சிறந்த பாடலாகும். இப்பாடலில் ரவீந்திர நாதரைக்குறிப்பிடுகிறார். மோகனதாஸ்கரம் சந்திரகாந்தியைப் பாராட்டிப் போற்றுகிறார். பாரதம் காட்டவல்ல புதிய நெறியைக் காட்டுகிறார்.

அன்னையே அந்நாளில் அவனிக்கெல்லாம்
ஆணிமுத்துப் போன்ற மணிமொழிகளாலே
பன்னி நீ வேதங்கள், உபநிடதங்கள்
பரவு புகழ்புராணங்கள் இதிகாசங்கள்

"இன்னும் பன்னூல்களிலே இசைத்த ஞானம்,
என்னென்று புகழ்ந்துரைப்போம் அதனையிந்நாள்
மின்னுகின்ற பேரொளிகாண், காலம் கொன்ற
விருந்து காண், கடவுளுக்கோர் வெற்றி காணே"

என்றும் பாடல் மூலம் பாரத நாட்டின் ஆணிமுத்துப் போன்ற ஆதாரசுருதியை சுட்டிக் காட்டி அந்த மாபெரும் மகத்தான பண்பாட்டு தளத்திலிருந்து பாரதமாதா நவரத்தினமாலையைப் பாரதி தொடங்குகிறார்.

"வெற்றி கூறுமின், வெண்சங்கு ஊதுமின்
கற்றவராலே உலகு காப்புற்றது,
உற்றது இங்கு இந்நாள்! உலகினுக் கெல்லாம்
இற்றைநாள் வரையிலும் அறமிலாமறவர்
குற்றமேதமது மகுடமாகக் கொண்டோர்
மற்றை மனிதரை அடிமைப்படுத்தலே
முற்றிய அறிவின் முறையென்று எண்ணுவார்
பற்றையரசர் பழிபடுபடையுடன்
சொற்றை நீதி தொகுத்து வைத்திருந்தார்

என்று மனித குல வரலாற்றின் இழையோடிருந்த ஆட்சிக் கொடுமையை வரலாற்றியலுக்கு ஆதாரமான ஒரு புதிய பார்வையை பாரதி தொகுத்துக் காட்டியுள்ளார். இதில் கவியின் ஆழ்ந்த உள்ளத்தையும் உண்மை ஒளியையும் தெளிந்த கருத்து வடிவத்தையும்காண்கிறோம்.

"இற்றை நாள்
பாரில் உள்ள பல நாட்டினர்க்கும்
பாரத நாடு புது நெறி பழக்க
ஒற்றதிங்கிந்நாள் உலகெலாம்புகழ்
இன்பவளஞ்செறி பண்பல பயிற்றும்
கவீந்திரனாகிய ரவீந்திர நாதன்
சொற்றது கேளீர்"

என்று கவி ரவீந்திர நாதர் கூறியதை மேற் கோள்காட்டி மோகனதாஸ்கரம் சந்திர காந்தியை அடையாளம் காட்டுகிறார்.

"புவிமிசையின்று
மனிதர்க் கெல்லாம் தலைப்படுமனிதன்
தர்மமே உருவாம் மோகனதாஸ்
கர்மசந்திர காந்தி யென்றுரைத்தான்
அத்தகைய காந்தியை அரசியல் நெறியிலே
தலைவனாகக் கொண்டு புவிமிசைத்தருமமே
அரசியல் அதனிலும் பிற இயல் அனைத்திலும்
வெற்றிதரும் என வேதம் சொன்னதை

"முற்றும் பேண முற்பட்டு நின்றார்
பாரதமக்கள் இதனால் படைஞர் தம்
செருக்கொழிந்து உலகில் அறம்திறம்பாத
கற்றோர் தலைப்படக் காண்போம் விரைவிலே
வெற்றி கூறு மின் வெண்சங்கு ஊதுமின்

என்று காந்தியின் தலைமையில் புது நெறியை நிலைநாட்ட பாரத மக்கள் முன்வந்துள்ளதாக காந்தியை பாரதி பாராட்டுகிறார். இங்கு அரசியல் நெறியிலும் சரி இதர இயல் அனைத்திற்கும் அறவழியே சிறந்தது என்று நமது சாத்திரங்கள் கூறுவதை பாரதி இங்கு தெளிவாக வலியுறுத்திக் கூறுகிறார்.

காந்தி நெறியை தீது சிறிதும் பயிலாச் செம்மணிமா நெறி என்றும் அந்த ஒத்துழையாமை என்னும் அகிம்சா நெறியால் விடுதலை நிச்சயம் என்றும் கூறிக் களிப்படைகிறார்.

"தீது சிறிதும் பயிலாச் செம்மணிமா நெறி கண்டோம்
வேதனைகள் இனி வேண்டா, விடுதலையோ திண்ணமே"

என்று பாடுகிறார்.

"விடுதலை பெறுவீர் விரைவா நீர்
வெற்றி கொள்வீர் என்றுரைத் தெங்கும்
கெடுதலின்றி நம்தாய்த் திருநாட்டின்
கிளர்ச்சி தன்னை வளர்ச்சி செய்கின்றான்
சுடுதலும் குளிரும் உயிருக்கில்லை
சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக்கில்லை
எடுமினோ அறப்போரினை யென்றான்
எங்கோ மேதக மேந்திய காந்தி என்றும்
"பாரதப் பொன்னாடெங்கும்
மாந்தரெல்லாம் சோர்வை
அச்சத்தை மறந்து விட்டார்
"காந்தி சொற்கேட்டார், காண்பார்
விடுதலைகணத்தினுள்ளே"

என்று கூறி காந்தி வழியில் இந்திய விடுதலை உறுதி என்று காலத்தைக் கணித்துக் கூறுகிறார்.

மகாத்மா காந்தி பஞ்சகம் என்னும் தலைப்பில் காந்தியைப் பற்றி பாரதி மிகவும் சிறப்பா னதொரு பாடலைப் பாடியுள்ளார்.

வாழ்க நீ எம்மான் என்று தொடங்கி
இந்த
வையத்து நாட்டில் எல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்

பாழ்பட்டு நின்றதாமோர்
பாரத தேசம் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா நீ வாழ்க வாழ்க

என்று உள்ளம் உருகிப் பாடுகிறார்

அடிமை வாழ்வு அகன்று இந்நாட்டார்
விடுதலை பெற்று செல்வம்
குடிமையில் உயர்வு கல்வி
ஞானமும் கூடி ஓங்கிப்
படி மிசைத் தலைமை எய்தும்
படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்
புவிக்குள்ளே முதன்மை பெற்றாய்

என்று காந்தியைப் போற்றிப் பாடுகிறார்.

மகாத்மா காந்தியின் அரசியல் போராட்ட உத்திகளில் ஒன்று ஒத்துழையாமை இயக்கம். இந்த அறப்போரை முதலாம் உலகப் போர் முடிவுற்ற பின்னர் *1919-22*ம் ஆண்டுகளில் காந்தி துவக்கினார். அதை வரவேற்றுப் பாராட்டி காந்திக்கு வாழ்த்துக் கூறிய பாடலில், பாரதி இந்திரசித்தன், இராமாயணப் போரில், இலக்குவனையும் அவனுடன் இருந்தவானரப்படையினரையும் தனது நாகபாசத்தால் வீழ்த்தி விட்டான். அனைவரும் மயக்கமடைந்து மண்ணில் சாய்ந்து கிடந்தனர். இந்த மயக்கத்திலிருந்து இலக்குவனையும் வானரப்படைவீரர்களையும் எழுப்பச் செய்வதற்கு அனுமன் உயிர் எழுப்பும் மூலிகைகள் நிறைந்த சஞ்சீவி மலையைத்தனது ஆற்றலால் சுமந்து கொண்டு வந்தவன். இந்த அனுமனுக்கொப்ப, மயக்கத்தில் வீழ்ந்து கிடக்கும் பாரத மக்களைத்தட்டி எழுப்ப, காந்தி ஒத்துழையாமை என்னும் மூலிகையைக் கொண்டு வந்தான் என்று உவமையுடன் கூறும் வகையில்,

"கொடிய செந்நாக பாசத்தை மாற்ற
மூலிகை கொணர்ந்தவ னென்கோ"

என்று காந்தியைப் பாராட்டிப் பாடுகிறார்.

ஆயர்பாடியை இடிமின்னல் மழை தாக்கியபோது கண்ணன் கோவர்த்தன கிரியைக்குடையாகப் பிடித்து ஆயர்குல மக்களைக் காப்பாற்றியதைப் போல அந்நிய ஆட்சியால் தாக்குண்ட பாரத மக்களைக் காப்பாற்றுவதற்கு காந்தி ஒத்துழையாமை என்னும் குடையைக் கொண்டுவந்தான் என்னும் முறையில்

"இடி மின்னல் காக்கும் குடைசெய்தான் என்கோ

என்று குறிப்பிட்டு

"என்சொலிப்புகழ்வதிங்குனையே"
என்று புகழ்ந்து பாராட்டுகிறார்.

"விடிவிலாத்துன்பஞ்செயும் பராதீன
வெம்பிணி அகற்றிடும் வண்ணம்
படிமிசைப்புதிதாய்ச் சாலவும் எளிதாம்
படிக்கொரு சூழ்ச்சி நீ படைத்தாய்"
என்று காந்தியின் அறப்போர் உத்தியைப் பாராட்டுகிறார்.

"மன்னுயிரெல்லாம் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்கள் என்று உணர்தல்
இன்னமெய்ஞானத்துணிவினை மற்றாங்கு
இழிபடுபோர் கொலை தண்டம்
பின்னியே கிடக்கும் அரசியல் அதனில்
பிணைத்திடத்துணிந்தனை பெருமான்"
என்று அறப்போர் அரசியலுக்கு ஒரு புதியவிளக்கம் கொடுத்து பாரதி பாடுகிறார். இவ்வாறு ஒத்துழையாமை நெறியினால் இந்திய விடுதலைக்கு வழி கிடைக்கும் என்று கூறுகிறார்.

காந்தியின் அறப்போர் வழியைப் பற்றி பாரதி கூறும் போது இந்திய நாட்டின் பாரம்பரியமான அறவ்ழி அரசியலை நினைவு கூர்ந்து அந்த மரபு வழியில் பாரதி காந்தியையும் காண்கிறார்.

தாதாபாய் நவுரோஜி

தாதாபாய் நவுரோஜி பாரதத்தாய் பெற்றெடுத்த தவப் புதல்வர்களில் ஒருவர். தேசீய விடுதலை இயக்கத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவர். இந்திய தேசீய காங்கிரஸ் மகா சபைக்குத் தலைமை தாங்கியவர். இந்திய நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் நடத்திய பொருளாதாரச் சுரண்டல் கொள்ளையைத் தொகுத்து எழுதி உலகிற்குக் காட்டியவர். அந்த மகானைப் பற்றி, பாரதி,

"முன்னாளில் இராமபிரான் கோதமனரா
திய புதல்வர் முறையினின்று
பன்னாடு முடிவணங்கத் தலைமைநிறுத்
திய வெமது பாரத கண்டமதில்
என்று தொடங்கி இந்நாளில் ஏற்பட்டுள்ள துயர் தவிர்க்க வந்த முதியோன் என்று தொடர்ந்து

"கல்வியைப் போல் அறிவும் அறிவினைப் போலக்
கருணையும் அக்கருணை போலப்
பல்வித வூக்கங்கள் செய்யும் திறனுமொரு
நிகரின்றி படைத்த வீரன்" என்றும்

வில்விறலாற் போய் செய்தல் பயனிலதா
மெனவதனை வெறுத்தேயுண்மைச்
சொல்விறலால் போர் செய்வோன் பிறர்க்கன்றித்
தனக்குழையாத்துறவியாவோன்'

என்றும்,

"தாதாவாய் விளங்குறு நற்றாதாவாய்
நவுரோஜி சரணம் வாழ்க" என்று புகழ்ந்து பாராட்டிப் பாடுகிறார்.

## லோகமான்ய பாலகங்காதரத் திலகர்

இந்தியதேசிய விடுதலை இயக்கத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவர் திலகர். **"சுதந்திரம் எனது பிறப்புரிமை"** என்று அன்னிய ஆட்சியிலிருந்து பாரத நாடுவிடுதலை பெறுவதற்கு மிகத் தீவிரமாகப் போராடியவர். இந்திய தேசீய காங்கிரஸில் தீவிரவாதப் பிரிவின் தலைவராக விளங்கினார்.

திலகர் மீது பாரதி மிகவும் பற்று கொண்டவராகஇருந்தார். 1905 ம் ஆண்டுகளில் தேசீய காங்கிரஸ் மகா சபையில் தீவிரவாதிகள் என்றும் மிதவாதிகள் என்றும் பிரிவுகள் தோன்றியபோது திலகர் லஜபதிராய் போன்றோர் தீவிர வாதிகளின் தலைவர்களாக இருந்தனர். பாரதி தீவிரவாதிகளை ஆதரித்தார்.இந்த முறையில் திலகரைப் பற்றியும் லஜபதிராய் அவர்களைப் பற்றியும் சிறந்த பாடல்களை பாரதி பாடியுள்ளார்.

**"வாழ்க திலகன் நாமம்"** என்னும் பாரதியின் பாடல் அக்காலத்தில் தமிழகத்தில் மிகவும் பிரபலமான பாடல்களில் ஒன்றாகும். சுதந்திரப் போராட்டத்தில் மக்களுக்கு உணர்வும்-ஊக்கமும் ஊட்டுவதற்கு தேசபக்தர்களுக்கு இப்பாடல் ஒரு பேராயுதமாக விளங்கிற்று.

"வாழ்கத்திலகன் நாமம் வாழ்க வாழ்கவே
வீழ்கக் கொடுங்கோன்மை வீழ்கவீழ்கவே

என்னும் வீர முழக்கத்துடன் இப்பாடல் துவங்குகிறது.

"நாலு திசையும் ஸ்வாதந்தர்ய நாதம் எழுகவே
நரகமொத்த அடிமைவாழ்வுநைந்து கழிகவே

ஏலுமனிதர் அறிவை அடர்க்கும் இருள் அழிகவே
எந்த நாளும் உலகமீதில் அச்சம் ஒழிகவே"

என்று அவ்வீரமுழக்கம் வேகத்துடன் தொடர்கிறது.

"கல்வியென்னும் வலிமை கொண்ட கோட்டை கட்டினான் - நல்ல
சோர்வெனும் பேயை ஒட்டும் சூழ்ச்சி அவன்பெயர்
அன்பெனும் தேனூறித்ததும்பும் புதுமலர் அவன் பேர்

என்றும்

துன்பம் என்னும் கடலைக் கடக்கும் தோணியவன் பெயர்
சோர்வெனும் பேயை ஒட்டும் சூழ்ச்சி அவன்பெயர்
அன்பெனும் தேனூறித்ததும்பும் புதுமலர் அவன்பேர்
ஆண்மையென்னும் பொருளைக் காட்டும் அறிகுறி அவன்பெயர்

என்னும் விடுதலை முழக்கங்களைத் திலகன் நாமத்தின் வீர முழக்கங்களாக பாரதி பாடல் மக்களிடம் விடுதலைப் போராட்ட வீரர்களிடம் இடம் பெற்றது. விடுதலைப் போராட்டத்தின் தணியாத தாகமாக பாரதி பாடல் விளங்கியது.

தேச விடுதலையுடன் அச்சம் ஒழியவும் கல்வியும் நல்ல கருத்துக்களும் வளரவும் துன்பத்தைத் துடைக்கவும் சோர்வு எனும் பேய்களை விரட்டவும்அன்பை வளர்க்கவும் ஆண்மை ஒங்கவும் பாரதி திலகன் பெயரால் பாடுகிறார். அச்சமும் கல்லாமையும் துன்பங்களும் சோர்வும் அடிமைத் தனத்தோடு இணைந்தவை. எனவே அடிமைத்தனம் போகும்போது அதனுடன் இணைந்துள்ள இதர தீமைகளும் நீங்கும் என்பது பாரதியின் முழு விடுதலை தத்துவமாகும்.

லாலா லஜபதி ராய்

லாலா லஜபதி ராய் பாஞ்சால சிங்கம் என்று புகழ் பெற்றவர். தேசீய விடுதலை இயக்கத்தின் தீவிரவாதப் பிரிவில் முன்னணியில் நின்றவர். விடுதலைப் போராட்டத்தில் பாஞ்சால மக்கள் மிகுந்த வீரத்துடனும் வேகத்துடனும் கலந்து கொண்டனர். ஆங்கில ஆட்சியாளர்கள் பாஞ்சால மக்கள் மீது தங்கள் கொடிய அடக்கு முறையை ஏவிவிட்டார்கள். ஜாலியன் வாலாபாக்படுகொலையை நடத்தி வெறிபிடித்து மக்களை வதைத்தனர். அந்த வீர மிக்க விடுதலைப் போராட்டத்தின் தலைவன் லாலா லஜபதி ராயை நெஞ்சிலே லத்திகளால் அடித்து குற்றுயிராக்கி கொடுந்தண்டனை கொடுத்து நாடு கடத்தி பர்மாவிலுள்ள மாண்டலே சிறையில் அடைத்தனர். அவர் நினைவாக பாரதி எழுதிய பாடல் நெஞ்சை உருக்கும் ஒரு நிகரில்லாத இலக்கியமாகும்.

"விண்ணகத்தேயிரவிதனைவைத்தாலும்
அதன் கதிர்கள் விரைந்து வந்து
கண்ணகத்தே ஒளி தருதல் காண்கிலமோ?

என்று தொடங்கி லஜபதியை நாடு கடத்தி வெகு தொலைவில் கொண்டுபோய் வைத்தாலும் அவனது வீரத்தை மறக்க மாட்டோம். விடுதலைப் போராட்டம் அவனிடமிருந்து ஆதர்சத்தைப் பெறும். நல்லவர்களுக்கு சோதனைகள் ஏற்படுவதை நாடு கண்டிருக்கிறது என்று பாரதி கூறுகிறார்.

"பேரன்பு செய்தாரில் யாவரே
பெருந்துயரம்பிழைத்து நின்றார்
ஆரன்பு நாரணன் பால் இரணியன் சேய்
செய்ததினால் அவனுக்குற்ற
கோரங்கள் சொலத்தகுமோ? - பாரத நாட்டில்
பத்தி குலவிவாழும்
வீரங்கொள் மனமுடையார் கொடுந்துயரம்
பலவடைதல் வியத்தற் கொன்றோ?

என்று பாடி நமக்கு ஆறுதல் கூறுகிறான் பாரதி.

நாரணன் மீது அன்பு கொண்ட பிரகலாதன் அடைந்த துன்பங்களை ஒப்பிட்டு லஜபதி தன் தாய் நாட்டின் மீது அன்பு கொண்ட காரணத்தால் இரணியனைப் போல கொடுங்கோல் ஆட்சியாளர்களான வெள்ளையர் ஆட்சி அவர்மீது இழைத்த கொடுமைகளைச் சுட்டிக் காட்டியது சிறப்பாகும். அது பாரதி வழியாகும்.

லஜபதி ராய் பிரலாபம் என்னும் தலைப்பில் பாரதி எழுதியுள்ள பாடல் மிகச் சிறந்த ஒரு இலக்கியமலராக அமைந்துள்ளது. பாரதியின் இந்தப்பாடல் சிறப்புமிக்கது. அதற்கு ஈடு இணையில்லை. லஜபதி ராய் நாடு கடத்தப்பட்டு மாண்டலே சிறையில் அடைப்பட்டுக் கிடக்கும் போது தனது பிறந்த மண்ணை நினைந்து எண்ணமிடும் காட்சியாக பாரதி இப்பாடலை அமைத்துள்ளார்.

"நாடிழந்து மக்களையும் நல்லாளையும் பிரிந்து
வீடிழந்து இங்குற்றேன் விதியினை என் சொல்கேனே
வேத முனிபோன்றோர் விருத்தராம் எந்தையிரு
பாதமலர்கண்டு பரவப் பெருவேனோ?

"ஆசைக் குமரன் அருச்சுனனைப் போல்வான்றன்
மாசற்ற சோதிவதன மினிக் காண்பேனோ-

என்றெல்லாம் லஜபதியின் பிரலாபமாக பாரதி கூறுகிறார்.

"வீடும் உறவும் வெறுத்தாலும் என்னருமை
நாடு பிரிந்த நலிவினுக்கென் செய்கேனே"

என்று தொடங்கி பாஞ்சாலத்திரு நாட்டின் ஒப்பிலாத பெருமையை பாரதி விளக்கிக் கூறுகிறார்.

"ஆதிமறை தோன்றிய நல்லாரிய நாடு எந்நாளும்
நீதி மறைவின்றி நிலைத்ததிருநாடு
சிந்து வெனும் செய்தவத்திரு நதியும் மற்றதிற்சேர்
ஐந்து மணியாறும் அளிக்கும் புனல்நாடு
ஐம்புலனை வென்ற எண்ணில் வீரருக்கும் தாய் நாடு
நல்லறத்தை நாட்டுதற்கு நம்பெருமான் கௌரவராம்
புல்லரைச் செற்றாழ்த்த புனிதப் பெருநாடு
கன்னாணுந்திண்டோள் களவீரன் பார்த்தன் ஒரு
வின்னாணொலி கேட்ட மேன்மைத்திருநாடு
கன்னனிருந்த கருணை நிலம் தர்மனெனு
மன்னனறங்கள் வளர்த்த புகழ்நாடு
ஆரியதர்தம் தர்ம நிலை ஆதரிப்பா ன்வீட்டு மனார்
நாரியர்தம் காதல் துறந்திருந்த நன்னாடு
வீமன் வளர்த்த விறனாடு வில்லசுவத்
தாமனிருந்து சமர்புரிந்த வீரநிலம்
சீக்கர் எனும் எங்கள் விறற்சிங்கங்கள் வாழ் தருநல்
ஆக்கமுயர் குன்ற மடர்ந்திருக்கும் பொன்னாடு
ஆரியர் பாழாகாது அருமறையின் உண்மை தந்த
சீரியர் மெய்ஞ்ஞான தயாநந்தர் திருநாடு
என்னருமைப் பாஞ்சாலம் என்றேனும் காண்பேனோ?
பன்னரிய துன்பம் படர்ந்திங்கு மாய்வேனோ?

என்றும்,

எத்தனை ஜன்மங்கள் இருட்சிறையில் இட்டாலும்
தத்து புனல் பாஞ்சாலம் தனில் வைத்தால் வாடுகிலேன்

என்றும் லஜபதியின் பிரலாபத்தை இனிய இலக்கியத்தமிழில் பாரதி பாடியுள்ளது நமது உள்ளத்தை உலுக்கிவிடுகிறது.

வ.உ.சிதம்பரம் பிள்ளை

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாரத நாட்டின் தென்கோடிப்பகுதியில் விடுதலைப் போராட்டத்தின் பேரலை வீசியது. தூத்துக்குடியில் தொழிலாளர் வேலைநிறுத்தம். அன்னியத்துணி நிராகரிப்பு சுதேசி இயக்கத்தின் இடியும் குமுறலும் தென்பாண்டிய மண்ணைக் குலுக்கியது. அன்னிய ஆட்சியின் தடையுத்தரவுகள் அடக்கு முறைக் கொடுமைகள்

அந்தக் கொடுமைகளுக்கெதிராக தூத்துக்குடியிலும் திருநெல்வேலியிலும் பொதுமக்கள் ஆர்ப்பாட்டங்கள் அர்த்தால்கள் நடைபெற்றன. அன்னிய ஆட்சியாளர்களின் தடியடிகளும் துப்பாக்கிப்பிரயோகங்களும் மக்களை வதைத்தன. இப்போராட்டங்களுக்குத் தலைமை தாங்கி வ.உ.சிதம்பரம்பிள்ளை சுப்ரமணிய சிவா ஆகியோர்அன்னிய ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்டு ஜன்மதண்டனை கொடுக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள். சிறையில் கொடுமைப்படுத்தப்பட்டு கடுங்காவலில் செக்கிழுக்க வைத்தனர். இதற்குக் காரணமான வெள்ளைக்காரக் கலெக்டர் ஆஷ் துரையை மணியாச்சி ஜங்ஷனில் வாஞ்சிநாதன் என்னும் இளம் தேசபக்தன் சுட்டுக் கொன்று விட்டு தன்னையும் சுட்டுக் கொண்டான். இத்தகைய தீவிரப் போராட்டநிகழ்ச்சிகள் நாட்டைக் குலுக்கிக் கொண்டிருந்தன.

ஆங்கிலேய கலெக்டர் விஞ்சு துரைக்கும் தேசபக்தச் செம்மல் வ.உ.சிதம்பரம்பிள்ளைக்கும் வாக்குவாதம் நடந்ததாகக் கற்பித்து பாரதி அன்றய அடக்குமுறைக் கொடுமைகளையும் அதை எதிர்த்து தேச பக்தர்களின் பதிலுமாக ஒரு அருமையான பாடல் வரிகளைப் பாடியுள்ளார். இப்பாடல்கள் அக்காலத்தில் சுதந்திரப் போராட்ட வீரர்கள் துணிவுடன் பாடிய பாடல்களாகும். இந்த இரு பாடல்களும் இங்கு முழுமையாக நினைவு கூறத்தக்கதாகும். ஆங்கிலேய அதிகாரி சுதேசபக்தன் சிதம்பரம் பிள்ளைக்குக் கூறியது :

நாட்டிலெங்கும் சுதந்திர வாஞ்சையை
நாட்டினாய் கனல் - மூட்டினாய்
வாட்டியுன்னை மடக்கி சிறைக்குள்ளே மாட்டுவேன்
வலி - காட்டுவேன்.
கூட்டங்கூடி வந்தேமாதரமென்று
கோஷித்தாய் - எமைத் தூஷித்தாய்
ஓட்ட நாங்கள் எடுக்க வென்றே கப்பல்
ஓட்டினாய் - பொருள் - ஈட்டினாய்
கோழைப்பட்ட ஜனங்களுக்குண்மைகள்
கூறினாய் - சட்ட - மீறினாய்
ஏழைப் பட்டிங்கிறத்தல் இழிவென்றே
யேசினாய் - வீரம் - பேசினாய்
அடிமைப்பேடிகள் தம்மை மனிதர்கள்
ஆக்கினாய் - புன்மை - போக்கினாய்
மிடிமை போதும் நமக்கென்றிருந்தோரை
மீட்டினாய் - ஆசை - யூட்டினாய்
தொண்டொன்றே தொழிலாக்கொண்டிருந்தோரைத்
தூண்டினாய் - புகழ் - வேண்டினாய்
கண்ட கண்ட தொழில் கற்க மார்க்கங்கள்
காட்டினாய் - சோர்வை - யோட்டினாய்.

எங்குமிந்தஸ்வராஜ்ய விருப்பத்தை
ஏவினாய் - விதை - தூவினாய்
சிங்கம் செய்யும் தொழிலைச் சிறுமுயல்
செய்யவோ - நீங்கள் - உய்யவோ?
சுட்டுவீழ்த்தியே புத்திவகுத்திடச்
சொல்லுவேன் - குத்திக் - கொல்லுவனே்
தட்டிப்பேசு வோருண்டோ? சிறைக்குள்ளே
தள்ளுவேன் பழி - கொள்ளுவேன்"

ஆங்கிலேய அதிகாரியின் இந்த மிரட்டல்களுக்கெல்லாம் தேச பக்தன் சிதம்பரம் பிள்ளை பதில் கூறுவதைப் பாரதி மிக அற்புதமான சுதந்திர உணர்வுடன் கூறுகிறார்.

1. சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம் - இனி -அஞ்சிடோம்
எந்த நாட்டினுமிந்த அநீதிகள்
ஏற்குமோ - தெய்வம் - பார்க்குமோ?

2. வந்தே மாதரம் என்றுயிர்போம்வரை
வாழ்த்துவோம் - முடி - தாழ்த்துவோம்
எந்தம் ஆருயிர் அன்னையைப் போற்றுதல்
ஈனமோ - அவ - மானமோ?

3. பொழுதெல்லாம் எங்கள் செல்வம்கொள்ளை கொண்டு,
போகவோ - நாங்கள் - சாகவோ?
அழுது கொண்டிருப்போமோ? ஆண்பிள்ளைகள் நாங்கள்
அல்லமோ? - உயிர் - வெல்லமோ?

4. நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்
நாய்களோ - பன்றிச் - சேய்களோ-
நீங்கள் மட்டும் மனிதர்களோ விது
நீதமோ? - பிடி - வாதமோ?

5. பாரதத்திடை அன்பு செலுத்துதல்
பாபமோ - மனஸ் - தாபமோ?
கூறுமெங்கள் மிடிமையைத் தீர்ப்பது
குற்றமோ - இதிற் - செற்றமோ?

6. ஒற்றுமை வழியொன்றே வழியென்ப
தோர்ந்திட்டோம் நன்கு -தேர்ந்திட்டோம்
மற்று நீங்கள் செய்யுங் கொடுமைக்கெலாம்
மலைவுறோம் - சித்தம் - கலைவுறோம்.

7. சதையைத் துண்டு துண்டாக்கினும் உன்னெண்ணம்
சாயுமோ? ஜீவன் - ஓயுமோ?
இதயத்துள்ளே இலங்கு மகாபக்தி
யேகுமோ? - நெஞ்சம் - வேகுமோ?

என்று பாடுகிறார். இந்தப் பாடல்கள் தனிச்சிறப்பு மிக்க பாடல்களாகும். அக்காலத்திய தேசபக்தர்களின் மன உணர்வையும் தேசபக்த வேகத்தையும் எடுத்துக் காட்டுகிறது. பாரதி இன்னும் தேசபக்தச் செம்மல் வ.உ.சிரம்பரம் பிள்ளை அவர்களை நினைத்து மேலும் சில பாடல்களைப் பாடியுள்ளார்.

"என்று தணியுமிந்த சுதந்திர தாகம்?
என்று மடியுமெங்கள் அடிமையில் மோகம்?
என்றெமதன்னையின் விலங்குகள் போகும்?
என்றெமதின்னல் கள் தீர்ந்து பொய்யாகும்?
அன்றொருபாரதம் ஆக்க வந்தோனே
ஆரியர் வாழ்வினை ஆதரிப்போனே
வென்றிதரும் துணை நின்னருளன்றோ?
மெய்யடியோம் இனும் வாடுதல் நன்றோ?

என்றும்

இதந்தருமனையினீங்கி
இடர்மிகு சிறைப்பட்டாலும்
பதந்தருவிரண்டு மாறிப்
பழிமிகுந்திழி வுற்றாலும்
விதந்தரு கோடியின்னல்
விளைந்தெனையழித்திட்டாலும்
சுதந்திர தேவி நின்னை
தொழுதிடல் மறக்கிலேனே

என்றெல்லாம் தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணியசிவா நினைவாக பாரதி நெஞ்சுருகப் பாடுகிறார்.

வ.உ.சிதம்பரம்பிள்ளை சுப்பிரமணியசிவா ஆகியோருடன் நேரடியாக அறிமுகமாகித் தொடர்பு கொண்டிருந்த பாரதி சிதம்பரம் பிள்ளை சிறையிலடைக்கப்பட்ட போது எழுதிய பாடல்.

"வேளாளன் சிறை புகுந்தான் தமிழகத்தார்
மன்னனென மீண்டான் என்றே
கேளாத கதை விரைவிற்கேட்பாய் நீ
வருந்தலை என் கேண்மைக்கோவே
தாளாண்மை சிறிது கொலோயாம் புரிவோம்
நீ இறைக்குத் தவங்கள் ஆற்றி

வாளாண்மை நின்துணைவர் பெறுகெனவே
வாழ்த்துதி நீ வாழ்தி வாழ்தி"

என்று பாரதி வாழ்த்திப் பாடுகிறார்.

## ஞானபானு

வ.உ.சிதம்பரம் பிள்ளையுடன் விடுதலை வேள்வியில் உடனிருந்து பங்கு கொண்டவர் சுப்ரமணிய சிவா. சிவா ஒரு சிறந்த தேசபக்தர். விடுதலை வீரர். தியாகச் செம்மல். அன்னிய ஆட்சியாளர்களின் அடக்கு முறைக் கொடுமைகளால் சிவா அடைந்த துன்பங்களுக்கு அளவேயில்லை. அந்த மாபெரும் தியாகியைப் பற்றிய செய்திகளை நமது நாட்டு மக்கள் நிறையத் தெரிந்து கொள்ள வேண்டும். சிவா ஒரு சிறந்த எழுத்தாளர் உணர்ச்சிமிக்க பேச்சாளர். அவர் ஞானபானு என்னும் பெயரில் ஒரு பத்திரிக்கை நடத்தினார். அதற்கு நல் வாழ்த்துக்கூறி பாரதி எழுதிய பாடல்.

1. **"திருவளர் வாழ்க்கை கீர்த்தி தீரம் நல்லறிவு வீரம்**
**மருவுபல் கலையின் வல்லமை என்பவெல்லாம்**
**வருவது ஞானத்தாலே வையகமுழுதுமெங்கள்**
**பெருமைதான் நிலவிநிற்கப் பிறந்தது ஞானபானு**

2. கவலைகள் சிறுமை நோவு கைதவம் வறுமைத்துன்பம்
அவலமாமனைத்தைக் காட்டில் அவலமாம் புலைமையச்சம்
இவையெல்லாம் அறிவிலாமை என்பதோர் இருளிற்பேயாம்.
நவமுறு ஞானபானு நண்ணுக, தொலைகபேய்கள்

3. அனைத்தையும் தேவர்க்காக்கிஅறத்தொழில் செய்யும் மேலோர்
மனத்திலே சக்தியாக வளர்வது நெருப்புத் தெய்வம்
தினத்தொளி ஞானம் கண்டீர் இரண்டுமே சேர்ந்தால் வானோர்
இனத்திலே கூடிவாழ்வர் மனிதர் என்றிவைக்கும் வேதம்

4. பண்ணிய முயற்சியெல்லாம் பயனுற வோங்கு மாங்கே,
எண்ணிய எண்ணமெல்லாம் எளிதிலே வெற்றியெய்தும்
திண்ணிய கருத்தினோடும் சிரித்திடும் முகத்தினோடும்
நண்ணிடு ஞானபானு அதனை நாம் நன்கு போற்றின்"

என்பது முழுமையான பாடலாகும். மரபு வழியில் பொருள் பொதிந்த இந்தக் கவிதையை பாரதி தனது தோழனின் தியாகத்திற்கும் அறிவுச் சுடருக்கும் காணிக்கையாக சமர்ப்பித்துள்ளார்.

பாரதி தன்காலத்திய தேசீய விடுதலை இயக்கத்தலைவர்களைப் பற்றிப் பாடியதுடன் ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்கிய அறிஞர்களைப்

பற்றியும் தனது கவிதைகளில் கொண்டு வந்துள்ளார்.

என்றும் தமிழோடு இருக்கும் தாயுமானவர், அருளுக்கு நிவேதனமாய் அன்பினுக்கு ஓர் கோயிலாக அமைந்த நிவேதிதா தேவி, சுருதியும் அரிய உபநிடதத்தின் தொகுதியும் பழுதர உணர்ந்த அபேதானந்த சுவாமிகள், ஓவியர்மணி இரவிவர்மா, இசையில்வல்ல சுப்பராம தீட்சதர், தமிழுக்குப் புத்துயிர் தந்த தமிழ்த் தாத்தா மகா மகோபாத்தியாய உ.வே.சாமிநாதய்யர் ஆகியோரின் ஆற்றல் அறிவுச் செல்வம் குறித்தும் அழகிய பாடல்கள் பாடியுள்ளார். அறிவைப்போற்றும் பாரதியின் பரந்த உள்ளத்தைக் காட்டுகின்றன இப்பாடல்கள்.

**காரைக்குடி இந்து மதாபிமான சங்கம்**

பாரதி ஒரு தடவை காரைக்குடி சென்றிருந்தார். அங்கு நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் பலரும்சேர்ந்து இந்து மதாபிமான சங்கம் என்னும் பெயரில் ஒரு சங்கம் அமைத்து செயல்படுத்திக் கொண்டு வருவதைக்கண்டு பாரதி மிகவும் மகிழ்ச்சியடைந்தார். அந்த இளைஞர்கள் பிற்காலத்தில் கம்பன் கழகம் அமைத்து கம்பன் புகழ்பாடி கன்னித்தமிழ் வளர்த்த சான்றோர்களான சா.கணேசன், ராய .செ ாக்கலிங்கம்முதலியோராவர். இந்த இளைஞர்களையும் அவர்களுடைய அமைப்பையும் அவர்களுடைய நற்பணிகளையும் பாராட்டி பாரதி அருமையான தொரு வாழ்த்துப் பாடலைப் பாடி அவர்களை ஊக்குவித்தார்.

அப்பாடலில் இந்து மதத்தின் அடிப்படைத்தத்துவத்தை மூலக்கருத்தை சுருக்கமாக தனக்கே உரித்தான கவிதை வடிவில் பாரதி வடித்துக் காட்டியுள்ளார்.

"மண்ணுலகின் மீதினிலே யெக்காலும்
அமரரைப் போல் மடிவில்லாமல்
திண்ணமுற வாழ்ந்திடலாம் அதற்குரிய
உபாயம் இங்கு செப்பக் கேளீர்

என்று தொடங்கி "திண்ணிய நல்லறி வொளியாய்த்திகழு மொருபரம் பொருளைக்" குறிப்பிட்டு,

"செய்கையெலாம் அதன் செய்கை நினைவெல்லாம்
அதன் நினைவு தெய்வமே நாம்
உய்கையுற நாமாகி நமக்குள்ளே
ஒளிர்வதென உறுதி கொண்டு
பொய், கயமை சினம், சோம்பர், கவலை

மயல், வீண், விருப்பம், புழுக்கம், அச்சம்
ஐயமெனும் பேயையெல்லாம் ஞானமெனும்
வாளாலே அறுத்துத் தள்ளி
"எப்போதும் ஆனந்தச் சுடர் நிலையில்
வாழ்ந்து உயிர்கட்கு இனிது செய்வோர்
தப்பாதே இவ்வுலகில் அமரநிலை பெற்றிடுவர்
சதுர்வேதங்கள்
மெய்யான சாத்திரங்கள் எனுமிவற்றால்
இவ்வுண்மை விளங்கக் கூறும்
துப்பானமதத்தினையே இந்து மதமெனப்
புவியோர் சொல்லுவாரே,

என்று சுருக்கமாக பெரும் பொருள் விளங்கக்கூறுகிறார்.

இத்தகைய இந்து மதச் சிறப்பை அறியாதார் கவலையெனும் நரகக் குழியில் வீழ்கிறார்கள் என்றும்,

" இத்தகைய துயர் நீக்கிக் கிருதயுகம்
தனையுலகில் இசைக்கவல்ல
புத்தமுதாம் இந்து மதப் பெருமைதனைப்
பாரறியப்புகட்டும்வண்ணம்
தத்துபுகழ்வளப்பாண்டி நாட்டினில்
காரைக்குடியூர் தனிலே சால
உத்தமராம் தனவணிகர் குலத்துதித்த
இளைஞர் பலர் ஊக்க மிக்கார்
" உண்மையே தாரக மென உணர்ந்திட்டார்
அன்பொன்றே யுறுதி யென்பார்,
வண்மையே குலதர்மமெனக் கொண்டார்
தொண்டொன்றே வழியாக் கண்டார்
ஒண்மையுயர் கடவுளிடத்தன் புடையார்
அவ்வன்பின் ஊற்றத்தாலே
திண்மையுறும் இந்துமத அபிமானசங்கம்
ஒன்று சேர்ந்திட்டாரே

என்று அந்த சங்கத்தைப் பாராட்டிஅவர்களுடைய சீரிய பணிகளையும் புகழ்ந்து வாழ்த்துகிறார்.

"பல நூல்கள் பதிப்பித்தும் பல பெரியோர்
பிரசங்கம் பண்ணுவித்தும்
நலமுடைய கலாசாலை புத்தக சாலை
பலவும் நாட்டியும் தம்

குலமுயர, நகருயர, நாடுயர உழைக்கின்றார்
கோடிமேன்மை
நிலவுற இச்சங்கத்தார் பல்லூழி வாழ்ந்தொளிர்க
நிலத்தின் மீதே"

என்று பாடி மகிழ்கிறார்.

நன்மையும் அறிவும் எங்கிருந்தாலும் மரபுவழியில் அதைத்தழுவி வாழ்த்துவது பாரதியின் பண்பாகக் காண்கிறோம்.

## 5. பாரதியின் புது நெறி

பாரதத்தின் பண்பாட்டு தளத்தில் நின்று பாரதி தனது கவிதைகளை, கதைகளைக் கட்டுரைகளை, எழுதி புதுநெறி காட்டியுள்ளார். நமது வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், கதைகள், தமிழகத்தில் கம்பன், வள்ளுவன், இளங்கோ, சங்க காலப்புலவர்கள் சான்றோர், சமணச் சான்றோர், ஆழ்வார்கள், நாயன் மார்கள், சமயக் குரவர்கள், சித்தர்கள், தாயுமானவர், அருணகிரியார், வள்ளலார், முதலியோர்களின் கருத்துக்கள், காவியங்கள், கவிதைகள் ஆகியவற்றின் வழிவழியாக வந்த மாபெரும் கவிஞனாக பாரதி தமிழ்நாட்டில் தோன்றி தமிழ்நாட்டிற்கும் தமிழ்மொழிக்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் பாரதப் பண்பாட்டிற்கும், தமிழகத்தின், பாரதத்தின் உலகின் எதிர்காலத்திற்கும் வழி காட்டியாக நிற்கிறார்.

பாரதி காட்டியுள்ள புதுநெறி சிலவற்றை இந்நூலின் நிறைவுரையாக நாம் நினைவில் கொண்டு நமது செயலாக்கத்திற்கும் செயலூக்கததிற்கும், வழிக் காட்டியாகக் கொள்ளலாம்.

பாரதியின் குரலோசைப்படி அச்சம் தீரவேண்டும், அமுதம் விளைய வேண்டும், வித்தை வளர வேண்டும். வேள்வி, முயற்சிகள், ஓங்க வேண்டும். நாம் அனைவரும் இங்கு இவ்வுலகில் அமரத்தன்மை பெறலாம்.

மனதில் சலனம் இல்லாமல் உறுதி ஏற்படவேண்டும் மதியில் இருள் படராமல் ஒளி ஓங்கச் செய்ய வேண்டும். அனைவரும் அனைத்து செல்வங்களும் பெற்று நூறுவயதுவரை நீண்ட ஆயுளுடன் இருக்க வேண்டும்.

இவையெல்லாம் தானாக வராது. அதற்கான முயற்சிகள், செயல், ஒருமுகப்படுத்தி மனதையும் செயலையும் ஈடுபடுத்துதல்,அதன் மூலம் ஞானமும் நல்லறிவு பெறுதலும் வேண்டும். அப்போது முக்திவிடுதலை பெறலாம். இந்த உலகிலேயே அந்த விடுதலையைப் பெறலாம்.

கடமை என்பது என்ன? தன்னைக்கட்டுதல், பிறர் துயர்தீர்த்தல், பிறர் நலம் வேண்டுதல் ஆகும். இதில் தனிமனித உரிமையும் மனித சமுதாய உரிமையும் அடங்கியிருக்கிறது. திடமான மன உறுதியும் அர்ப்பணிப்பும் அதற்கு அவசியமாகிறது.

கடமைகளைச் சரியாக, சீராக, செம்மையாக நிறைவேற்ற முயலும்போது அதன் பயன்கள் நான்கு அவை அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்குமாகும். இதை வடமொழியில் தர்மம், அர்த்தம், காமம், மோட்சம்

ஆகிய நான்கு புருஷார்த்தங்களாகக் கூறப்பட்டிருக்கின்றன என்பதை ஏற்கனவே முதலாவது அத்தியாயத்தில் பார்த்தோம். இந்த அறம், பொருள், இன்பம், வீடு என்னும் சொற்களுக்கான, பாரதியின் கருத்தும் விளக்கமும், முற்றிலும் புதுமையாக இருக்கின்றன. சாதாரண விளக்கங்களிலிருந்து வேறுபட்டதாக இருப்பதைக் காண்கிறோம்.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் பயன்பாடுகளுக்கு நீதி வகுத்த சுக்கிரன், வியாழன், வசிட்டன், வாமதேவர், வியாசர், விதுரர், வால்மீகி, மனு, பொருள் சாத்திரம் வகுத்த கௌடில்யர், மற்றும் தென்மொழியில் இப்புருஷார்த்தங்களை வகுத்த, வள்ளுவன், கம்பன், இளங்கோவும், இலக்கணம் பாடிய அகத்தியன், தொல்காப்பியன். சமணச் சான்றோர் முதலியோரும் மற்றவர்களும் கூறிய, சீரிய சிறந்தகருத்துக்கள் எல்லாம் புதிய காலதிற்கேற்ப மாற்றங்களும் வாளர்ச்சியும் பெற்று பாரதி காலத்தில் காலத்திற்கேற்றவாறு புதிய பரிமாணங்களைப் பெற்றிருக்கின்றன. அதை பாரதி தனக்கே உரிய தனித்தன்மையுடன் எடுத்து விளக்கியுள்ளார்.

அறம் என்பது, தனிமனிதன் மற்றும் சமுதாயத்தின் தன்னிலை, முன்னிலை புற நிலை அகநிலை உறவுகளின் பால் உள்ள கடமைகள் அனைத்தும் அடங்கும். பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் கணவனுக்கும் மனைவிக்கும், தனிமனிதனுக்கும் தனிமனிதனுக்கும், ஆசிரியனுக்கும் மாணாக்கனுக்கும், தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் இடையில் உள்ள அவர்களின் பாஸ்பர உறவுகளின் பாலுள்ள கடமைகள், தனிமனித தேவைகளுக்கும் சமுதாயத்தின் தேவைகளுக்கு மான சாதனங்கள், கருவிகள், பொருள்கள் அனைத்தையும் படைக்கவும் பாதுகாக்கவும் வகுக்கவுமான பணிகளில் ஈடுபட்டுள்ள மனித உறவுகளின் பால் உள்ள கடமைகள் முதலியனவும், அரசு, அமைச்சு, படை, குடி மற்றும் சமுதாயத்தின் மேல்க் கட்டுமானங்கள், அனைத்துத் துறைகளிலும் தொடர்புகள், சம்மந்தப்பட்ட தனிமனிதர்கள் மனிதக்குழுக்கள், மனிதக் கூட்டங்கள், ஆகியோர்களுக்கிடையிலான உறவுகளின் பால் உள்ள கடமைகள் முதலியன அனைத்தும் அடங்குவதாகும்.

இரண்டாவதாக பொருள் என்னும்கருத்துவடிவமும் இன்று மிகவும் விரிவான பொருளடக்கத்தைக் கொண்டிருக்கிறது. தத்துவ ஞானப் பொருள் என்பது பிரபஞ்சத்திலுள்ள சகலவிதமான சேதன, அசேதனப்பொருள்கள் அனைத்தும் அடங்கும். ஆனால் இங்கு நமது சாத்திரங்களில் கூறப்படும் அர்த்தம் என்னும் பொருள், மனித சமுதாயத்தில் இல்லாமையும் கல்லாமையும் நீங்கி தனிமனிதனும் குடும்பமும், சமுதாயமும், உயிர்ப்பொருள் அனைத்தும்,

சகல செல்வங்களையும்தேவைகளையும் பெறும் அளவிற்கு அனைத்து பொருள்களையும படைக்கவும், ஆக்கவும், சேர்க்கவும், சேமிக்கவும், சேகரிக்கவும் பாதுகாக்கவும் பராமரிக்கவும், சீராக செம்மையாக வகுக்கவுமான சமுதாய நிர்வாகம், உற்பத்திமுறை, அரசு, அமைச்சு, நிர்வாகம், சட்டம், நீதிநெறிமுறைகள், கலை, இலக்கியம், உடல்வளம், மனவளம், அறிவுவளம், முதலிய சகலபண்பாட்டுத்துறை வளர்ச்சியும் பெருக்கமும்.அடங்கியதாகும்.

மூன்றாவதாக இன்பம் என்பது இனிமையான, மகிழ்ச்சியான, மனநிறைவான குடும்ப அமைப்பாகும். மனித சமுதாயத்தின் ஆகச்சிறிய கூறு குடும்ப அமைப்பாகும். இன்பம் என்பது பெறும் ஆண்பெண் பாலுறவுபற்றியது மட்டுமல்ல. பாலுறவு மட்டுமல்ல குடும்ப அமைப்பின் அடிப்படை அக்குடும்ப அமைப்பில் கணவன், மனைவி, குழந்தைகள், பெற்றோர், உடன்பிறந்தோர் ஆகியோர் அடங்கிய அமைப்பாகும். இந்து தர்ம சம்பிரதாயத்தில் குடும்பம், கூட்டுக்குடும்பம் என்னும் கருத்துவடிவம் மிகவும் முக்கியமானதாகும். இதில் கணவன் குடும்பத்தலைவன், மனைவி குடும்பத்தலைவியாகும். குடும்பத்தை சிறப்புற நடத்திச் செல்வதில் இருவருக்கும் கூட்டுபொருப்பு அமைந்திருக்கிறது. குடும்ப அமைப்பில் குழந்தைகள் முக்கிய இடம் பெறுகிறார்கள். கணவன் மனைவி காதலின்பம், குழந்தைகளின்பம் என்பதில் கணவன் மனைவி உறவு கடமைப்பாடும் குழந்தையின்பம் பயன்பாடுமாகும்.

குழந்தைகள் பெறுவது அவர்களை திடமாக வளர்ப்பது, அவர்களுக்குக் கல்வியளித்து அறிவாளிகளாகிகுவது, உடல் வலுவை வளர்த்து பலவானாக்குவது, குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் பயனுள்ளவர்களாக அவர்களைப் பக்குவப்படுத்துவது, முதலியன குடும்ப அமைப்பில் அடங்கும். இக்குடும்ப அமைப்பில் மற்றொரு முக்கியமான கூறு முதியோர்களைப் பராமரித்துப் பாதுகாப்பதாகும்.

அக்குடும்பக் கடமைகள் சமுதாயக் கடமைகளோடு, அரசின் கடமைகளோடு அறம்பொருள் அமைப்புகளோடு இணைந்ததாகும். இதை இந்தியப்பண்பாடு மிக அழுத்தமாக வற்புறுத்துகிறது. ஆணும் பெண்ணும் ச மநிலையில், சம உறவுநிலையில் கூட்டுப் பொருப்புடன், அத்துடன் தனிப் பொருப்புகளையும் இணைத்து கூட்டுத் தலைமையாக அமைவதே சீரிய சிறந்த குடும்பமாகும். அதில் ஆண் பெண் இருவருக்கும் உள்ள கடமைகளும் உரிமைகளும் வலியுறுத்தப்படுகின்றன. இதைப் பாரதி

பாரதி மிகவும் தெளிவாக, துல்லியமாக, விரிவாக, உறுதியாக எடுத்துக் கூறுகிறார்.

நான்காவதான வீடு என்பது பாரதியின்கருத்துப்படி எங்கோ உள்ள சுவர்க்கமோ, மோட்சமோ, முற்றும் துறந்த முக்தியோ அல்ல. இந்த உலகில் மனித வாழ்வு சகல செல்வங்களும் 'நலன்களும் இன்பங்களும் பெற்று முழுமையான விடுதலை பெறவேண்டும் என்பதாகும்.

பாரத நாடு ஆன்மீகத்தையே அதிகமாக வலியுறுத்துகிறது. ஆதாரப்பட்டிருக்கிறது என்னும் கருத்தை மாற்றி, அந்த ஆன்மீக நிலைக்கே கல்வி, செல்வம், பொருள், ஞானம் ஆகியவையே ஆதாரம்என்பதை இந்த நாட்டின் சீரிய சிந்தனை வழியில் நின்று பாரதி வலியுறுத்திக் கூறுகிறார்.

அறம்பொருள் இன்பம் வீடு ஆகிய அனைத்திற்கும் கடின உழைப்பும் இடைவிடாத செயல்பாடும், செயல்திறனும் தொழிலும் தொழில் முயற்சியும் ஆதாரம் என்பது பாரதியின்கொள்கை, அத்தகைய கடின உழைப்பிற்கும் இடைவிடாத செயலுக்கும் தொழிலுக்கும் தொழில் முயற்சிகளுக்கும் இந்த நாடு, பாரத புண்ணிய பூமி உயர வேண்டும் என்பது பாரதியின் கொள்கையாகும். அதுவே பாரதி காட்டும் புதிய நெறியின் அடிநாதமாகும். தன்னைத்தான் ஆளும் தன்மையை ஒருவர் பெற்றுவிட்டால் எல்லாப் பயன்களும் தாமே எய்தும் என்று பாரதி அழுத்தமாகக் கூறுகிறார்.

யார்க்கும் எளியனாய், யார்க்கும் வலியனாய், யார்க்கும் அன்பனாய், யார்க்கும் இனியனாய், வாழ்ந்திட விரும்பினேன் என்று பாரதி கூறுவது தனக்காக மட்டுமல்ல, நம் அனைவருக்குமாகும்.

வேண்டாதனைத்தையும் நீக்கி வேண்டிய தனைத்தையும் அருள்வது உன் கடனே என்று பாரதி பாரபட்சமும் பாகுபாடும் இல்லாமல் அனைத்து கடவுள்களையும் வணங்கி வேண்டுகிறார்.

அச்சமில்லை என்பது பாரதியின் தாரக மந்திரம். நாட்டின் விடுதலைக்கு, மனித சமுதாய விடுதலைக்கு முதல் நிபந்தனை அச்சம் நீங்க வேண்டும் என்பதாகும். பாரதி பல இடங்களிலும் தனது கவிதைகளில், அச்சம் தீரும், அமுதம் விளையும் என்றும், அச்சம் இல்லை, அமுங்குதல் இல்லையென்றும், அண்டம் சிதரினாலும் அஞ்சமாட்டோம் என்றும், யார்க்கும் அஞ்சோம், எதற்கும் அஞ்சோம், என்றும் ஆசையைக் கொல்வோம் - புலையச் சத்தைக் கொன்று பொசுக்கிடுவோம் என்றும், அச்சமும் துயரும் இரு அசுரர் என்றும், அஞ்சேல் அஞ்சேல் என்றும் கூறி நமக்கு நல்லாண்மை சமைப்பவனை யென்றும், அச்சத்தைச் சுட்டங்கு சாம்பருமின்றி அழித்திடும்

வானவனையென்றும், ஐயம் தீர்ந்து விடல்வேண்டும். புலையச்சம் போயொழிதல் வேண்டும், என்றும் நெஞ்சிற்கவலை நிதமும் பயிராக்கி அஞ்சி உயிர்வாழ்தல் அறியாமை என்றும், ஐயமும் திகைப்பும் தொலைந்தன. ஆங்கே அச்சமும் தொலைந்தது சினமும் பொய்யும் என்றனைய புன்மைகள் எல்லாம் போயின வென்றும், யார்க்கும் குடியல்லேன் யானென்ப தோர்ந்தன உன்றன் போர்க்கஞ்சுவேனோ, பொடியாக்குவேன் உன்னை மாயையே என்றும், கூறுகிறார்.

அச்சமில்லையச்சமில்லை .அச்சமென்பதில்லையே இச்சகத்துளோர் எல்லாம் எதிர்த்து நின்ற போதிலும் ,அச்சமில்லை, அச்சமில்லை அச்ச மென்பதில்லையே என்று தொடங்கி, உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை. அச்சமில்லை அச்சமென்பதில்லையே என்று முடியும் ஒரு தனிப்பாடலையே பாரதி பாடியுள்ளார். அச்சமில்லை என்று அவ்வச் சத்தைப் போக்க வேண்டுமென்று ஒரு தனியான பாடலை அதற்கென்றே பாடிய தனிப்புலவன் பாரதி தான் என்று கூட கூறமுடியும்.

இன்னும் ஐயமுண்டு பயமில்லை மனமேயென்றும், பயமெனும், பேய்தனையடித்தோம்என்றும், அச்சமும் பேடிமையும் அடிமைச்சிறுமதியும் உச்சத்திற்கொண்ட ஊமைச் சனங்களடி என அடித்துக் கூறியும் பாரதி பாடுகிறார்.

எந்த நாளும் உலக மீதில் அச்சம் ஒழிகவே என்றும், அச்சத்தை வேட்கைதனை அழித்துவிட்டால் அப்போது சாவும் அங்கே அழிந்து போகும் என்றும், அச்சத்தால் நாடியெலாமவிந்து போகும் என்றும், புதிய ஆத்திசூடியின், குழந்தைகளுக்குப் பாடமாகப் பாடிய ஆத்திசூடியின் முதல் பாடலே அச்சம் தவிர் என்றும் பாதகம் செய்பவரைக் கண்டால் நாம் பயம் கொள்ளலாகாது பாப்பா மோதிமித்து விடு பாப்பா, அவர் முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா என்றும், மிடிமையும் அச்சமும் மேவியென்நெஞ்சில் குடிமை புகுந்தன, கொன்று அவைபொக்கென்று நின்னைச்சரணடைந்தேன் என்றெல்லாம் அச்சத்தைப்போக்கு என பாரதி பாரத நாட்டு மக்களுக்கு அறிவுரைக் கூறுகிறார்.

நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் என்றும் நாணும் அச்சமும் நாய்களுக்கு வேண்டுமாம், ஞான நல்லறம் வீரசுதந்திரம்பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம் என்றும் பாரதி பெண்ணுரிமைப் பற்றிய பாடல்களிலும் அச்சத்தைப் போக்குவதற்கு முக்கிய இடம் கொடுத்துள்ளது மிகவும் சிறப்பானது.

பாரதியின் புதுநெறியில், புதிய விழிப்புணர்வுக்கான அரை கூவலில் அச்சத்தை நீக்குவது, அச்சத்தைப் போக்குவது அடிப்படை சித்தாந்தமாகும்.

தன்னிலை விருப்பம்

"நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்
குழைத்தல் - இமைப் பொழுதும் சோரா
திருத்தல்" இதுவே பாரதியின் தன்னிலை
விருப்பமும் வேண்டுதலுமாகும்.

"பண்டைச்சிறுமைகள் போக்கி, பழுத்த சுவைத்
தெண்டமிழ்ப் பாடலொரு கோடி மேவிடச் செய்குவையே"

என்பது பாரதியின் விருப்பமும் வேண்டுதலுமாகும்.

"மொய்க்கும் கவலைப் பகைபோக்கி, முன்னோன் அருளைத்துணையாக்கி, எய்க்கு நெஞ்சைவலியுறுத்தி, உடலை இரும்புக்கு இணையாக்கி, மெய்க்கும் கலியை நான் கொன்றுபூலோகத்தார் கண் முன்னே மெய்க்கும் கிருதயுகத்தினையே கொணர்வேன்" என்று பாரதி நமக்கு சொல்லுகிறார். இது பாரதி எடுத்துக் கொண்ட விரதம். "பாரிடை மக்கள் கிருதயுகத்தினைக் கேடின்றி நிறுத்த விரதம்நான் கொண்டனன்" என்பது பாரதி நமக்கு வழிகாட்டும் புது நெறியாகும்.

பாரதி லக்ஷிமி பிரார்த்தனையில், "செல்வம் எட்டும் எய்தி நின்னால் செம்மையேறி வாழ்வேன், இல்லையென்ற கொடுமை உலகில் இல்லையாகவைப்பேன்" என்று சாதனை செய்ய லக்ஷிமியை வேண்டுகிறார். இந்த வேண்டுதல் தனக்காகமட்டுமல்ல, உலகதிற்காகவும் வேண்டுகிறார்.

பாரதி தனக்குத்தானே மட்டுமல்லாமல் உலகமனைத்துக்கும் வேண்டுவன என்று அத்தலைப்பிலேயே, தனது கவிதை வரிகளிலேயே அந்த வேண்டுதலை குறிப்பிடுகிறார். மனதில்உறுதி வேண்டும் வாக்கினிலே இனிமை வேண்டும், நினைவு நல்லது வேண்டும், நெருங்கினபொருள் கைப்படவேண்டும், கனவு மெய்ப்படவேண்டும். கைவசமாவது விரைவில் வேண்டும், தனமும் இன்பமும் வேண்டும், தரணியிலே பெருமை வேண்டும் என்றும், பாடுகிறார்.

"கண்திறந்திட வேண்டும், காரியத்தில் உறுதி வேண்டும் பெண்விடுதலை வேண்டும், பெரிய கடவுள் காக்க வேண்டும், உண்மை நின்றிட வேண்டும், என்று வேண்டுகிறார். இந்த வேண்டுதல்களில் கடமை

முயற்சியினாலும், நல்லசிந்தனையினாலும் கடுமையான உழைப்பின் மூலமும் நிறைவேற்ற வேண்டிய காரியங்கள் பல உண்டு. அதற்காக நம்மை ஊக்க மூட்டி நெறிப்படுத்தக்கருதுகிறார் பாரதி.

"மண்ணில் யார்க்கும் துயரின்றிச் செய்வேன், வறுமை என்பதை மண்மிசை மாய்ப்பேன். தானம், வேள்வி, தவம், கல்வியாவும் தரணி மீதில் நிலைபெறச் செய்வேன், ஞான மோங்கி வளர்ந்திடச் செய்வேன் என்றெல்லாம் சூளுரைத்து இவைகளையெல்லாம் செய்து முடித்திட காளி எனக்கு பலம் தருவாள் என்று கூறுகிறார்.

பாரதி தான் வாழ்ந்த காலத்தில் பல வகையான மனிதர்களையும் கண்டிருக்கிறார். சந்தித்திருக்கிறார். பேசியிருக்கிறார், பழகியிருக்கிறார், அவர்களுடன் பணியாற்றிருக்கிறார். தான் ஒரு கவிஞன், ஒரு எழுத்தாளன், ஒரு பத்திரிக்கையாளன் என்ற முறையில் பாரத நாட்டின் பலவகைப்பட்ட மனிதர்களையும் பற்றி நேரில் கண்டும், கற்பனையிலும் கண்டு அவர்களைப் பற்றி சிந்தித்திருக்கிறார். அதனால் மனிதர்களின் பெருமைகளையும் பாடியுள்ளார், சிறுமைகளையும் சுட்டிக்காட்டி பாடியுள்ளார்.

"நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மனிதரை நினைந்துவிட்டால்" என்று பாடுவார் "சாத்திரங்கள் ஒன்றும் காணார்" என்றும் "சூது செய்யும் நீசர்களைப் பணிந்திடுவார்" என்றும் "கஞ்சி குடிப்பதற்கிலார், அதன் காரணங்கள் இவையென்னும் அறிவுமிலர்" என்றும் எண்ணிலா நோயுடையார். இவர் எழுந்து நடப்பதற்கும் வலிமையிலார்" என்றும் தாம் தந்த வாக்குகளையும் தாம்தந்த வரிப்பொருள்களையும் கொண்டே ஆட்சி நடத்தும் ஆட்சியாளர்களையும் அவர்கள் நடத்தும் அரசியலையும் "அஞ்சுதரும் பேயென்றெண்ணி நெஞ்சமயர்வார்" என்றும் " கண்ணில்லாக்குழந்தைகள் போல் பிறர் காட்டிய வழியில் சென்று மாட்டிக் கொள்வார்" என்றும் கூறுகிறார்.

போகின்ற பாரதத்தை சபித்து போ, போ என்றும் வருகின்ற பாரதத்தை மகிழ்ச்சியுடன் வரவேற்று வா, வா என்றும் பாடுகிறார். நடிப்பு சுதேசிகளைப் பற்றி உளம் நொந்து பாடுகிறார்.

நண்ணிய பெருங்கலைகள், பத்து நாலாயிரம் கோடி நயந்து நிற்கும் இந்த பாரத புண்ணிய பூமியில் இவர் பொறியற்ற விலங்குகள் போல வாழ்வதைக்குறிப்பிட்டு வேதனைமிகுந்து பாரதி பாடுகிறார். இங்கு பாரதி பாரத நாட்டின் பத்து நாலாயிரம் கோடி நயந்து நிற்கும் பெருங்கலைகளைக் குறிப்பிட்டு, நமது பண்பாட்டுதளத்தில் காலூன்றி நின்று பாடுவதைக் காண்கிறோம்.

பாரதி பாடாத, வேண்டாத தெய்வங்களில்லை. அதிலும் சாதாரணமக்கள் வழிபடும் சிறு தெய்வங்கள் அனைத்தையும் பாடுகிறார். சக்தியை, காளியை, மாரியை, மிகவும் உருக்கத்துடனும் உள்ளத்தின் ஈடுபாடுடனும் பாடியிருக்கிறார். மாரியை முத்து மாரியாகவும் தேசமுத்து மாரியாகவும் வரித்துப் பாடியுள்ளார்.

சாதாரண மக்களை நல்வழிப்படுத்த முத்துமாரியை வேண்டுகிறார். இவையெல்லாம் பாரதியின் புது நெறியின் பகுதிகளாகும்.

" கலகம் செய்யும் அரக்கர் பலர் கருத்தினுள்ளே புகுந்துவிட்டார் பலகற்றும் பல கேட்டும் பயன் ஒன்று மில்லை, நிலையெங்கும் காணவில்லை, நின்பாதம் சரண்புகுந்தோம், துணிவெளுக்க மண்ணுண்டு, தோல்வெளுக்கச் சாம்பல் உண்டு. மணி வெளுக்க சாணையுண்டு, மனம் வெளுக்க வழியில்லை, பிணிகளுக்கு மாற்றுண்டு, பேதமைக்கு மாற்றில்லை, அடைக்கலம் இங்குனைப்புகுந்தோம். எங்கள் முத்து மாரியம்மா எங்கள் முத்து மாரியென்று பல இன்னல்களுக்கும் துன்பங்களுக்கும் காரணமான பேதமையைப் போக்குமாறு முத்துமாரியை வேண்டுகிறார்.

கேடுகளை நீக்கும்படி, கேட்டவரம் தரும்படி, கோடிநலன் செய்யும்படி ,குறைகளையெல்லாம் தீர்க்கும்படி தேசமுத்து மாரியை வேண்டுகிறார். துன்பமே இயற்கையெனும் சொல்லை மறந்திடுவோம். இன்பமே வேண்டிநிற்போம். யாவும் அவள் தருவாள் என்று அந்த தேச முத்துமாரியை வேண்டுகிறார்.

பொருள் செல்வங்களை தங்களுக்கு மட்டும் வைத்துக் கொள்வதற்கு சிலர் முயற்சிப்பதைப் போல, அறிவுச் செல்வத்தையும் தங்களுக்கு மட்டும் வைத்துக் கொள்வதற்கான முயற்சியை பாரதி ஏற்கவில்லை. எல்லாவற்றையும் ஒன்றிணைப்பதற்கே, செல்வங்கள் அனைத்தையும் அனைவருக்கும் கிடைக்கும் வகையில் பரவலாக்குவதற்கு. பாரதி நமது பண்பாட்டு வழியின் தொடர்ச்சியைக் கொண்டுவந்துள்ளதைக் காண்கிறோம்.

"தேடிச் சோறு நிதம் தின்று - பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி - மனம்
வாடித்துன்பம் மிக உழன்று - பிறர்
வாடப்பலச் செயல்கள் செய்து - நரை
கூடிக்கிழப்பருவம் எய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போல - நான்
வீழ்வேன் என்று நினைத்தாயோ?"

என்று பாரதி தனது தெய்வத்தைக் கேட்கிறார். இந்தப் பாடலில் பாரதியின் முழுவாழ்க்கைத் தத்துவமே அடங்கியிருக்கிறது. உலகில் பிறந்து மடியும் எத்தனையோ ஜீவராசிகளைப் போல் சில நாள் ஆடி ஓடிக்காலம் கடத்தி பூச்சிகளைப் போல் மடிவதை எத்தனை வலுவுடன் பாரதி நிராகரித்துள்ளார் என்பதை இந்தப் பாடல்வரிகளில் காணலாம். பின்னர் பாரதி என்ன வேண்டுகிறார் நாட்டின் நலனுக்காக வளர்ச்சிக்காக, மேம்பாட்டிற்காக பல வேண்டுதல்களையும் கேட்டு கடைசியில் முடிவாக,

" பலபையச் சொல்லுவதிங்கென்னே முன்னைப்
பார்த்தன் கண்ணன் இவர்நேரா - எனை
உய்யக் கொண்டருள வேண்டும் - . அடி
உன்னைக் கோடிமுறை தொழுதேன் · இனி
வையத்தலைமை எனக்கருள்வாய் - ,அன்னை
வாழி, நின்னதருள்வாழி" என பாரதிவேண்டுவது வையத்தலைமை வேண்டும் என்பதாகும். தனக்கு மட்டுமல்ல, பாரதத்திற்கே வையத்தலைமை வேண்டும் என்று பாரதி வேண்டுகிறார். உலகின்தலைமை பாரதத்திற்குத் தானாக வராது. அதற்கான பக்குவ நிலை தகுதி நிலைக்கு பாரதத்தை உயர்த்த வேண்டும் என்பதையே பாரதி பேசுகிறார்.

புதிய ஆத்திசூடியில், இந்த நாட்டின் இளைஞர்களுக்கு "வையத்தலைமை கொள்" என்றே பாடம் சொல்லிக் கொடுக்கிறார் உலகத்தின் தலைமைக்கு பாரதம் உயரவேண்டும். உலகிற்கு பாரதம் புது நெறி காட்ட வேண்டும் என்று பாரதி வலியுறுத்துகிறார். தன்னிலையிலிருந்து நாட்டை உயர்த்தும் நிலைவரை பாரதி அன்னைகாளியிடம் வேண்டுகிறார்.

பாரதி உலகத்தலைமைபற்றி குறிப்பிடும் போது தன்னை பார்த்தனுக்கும் கண்ணனுக்கும் இணையாக உயர்த்த வேண்டும் என்று கூறுவது நமது பண்பாட்டு மரபின் வழியாகும். கண்ணனையும் பார்த்தனையும் பாரதி பல இடங்களிலும் உயர்த்தி உதாரணம் காட்டிப் பாடுவதைக் காண்கிறோம்.

## பாரதியின் பாரத சமுதாயம்

அரசியலில் புது நெறி அமைய வேண்டும். பொருளாதாரத் துறையில் உழைப்பு. உற்பத்திப் பெருக்கம். செல்வச் செழிப்பு, இல்லாமை நீங்கி அனைவரும் சமநிலை எய்தல் ஆகிய நிலை அமைய வேண்டும். சமுதாயத்துறையில் அனைவரும் சமம், அடித்தட்டில் உள்ளோரைக்கை தூக்கி மேலே உயர்த்துதல்ஆகியவை நிறைவேற்றப்பட வேண்டும். கல்விஞானம் அறிவு வளர்ச்சி, கலைப்பெருக்கம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு அனைவருக்கும் முழுவாய்ப்புகள் ஏற்பட வேண்டும். தகுதியும் திறமையும்

தானாகவராது. அதற்கான முயற்சிகள் அனைத்து தரப்பிலும் நடைபெற வேண்டும். அனைவரும் தனி நிலையிலும் கூட்டு முறையிலும் இடைவிடாது தொழில்களும் தொழில் முயற்சிகளும் செய்தல் வேண்டும்.

பாரத சமுதாயம் அரசியல் நெறியிலும் செல்வச் செழிப்பிலும் கல்வி அறிவு ஞானத்திலும் உயர்ந்தும், உலகிற்கு புதுநெறி காட்டிவையத்தின் தலைமையாக உயர்வு கொள்ள வேண்டும். தலைமை என்பது யாராவது நியமனம்செய்வது மூலமாகவோ அல்லது ஒதுக்கீடு செய்வதன் மூலமாகவோ அல்ல. அது வெறும் சம்பிரதாய பூர்வமானதேயாகும். அதற்கு மாறாக, முயற்சியால், தகுதியால், திறமையால், அனைவரும் அங்கீகரித்து ஏற்றுக்கொள்வதன் மூலம் அமைவதாகும். வெறும்தோற்றத்திலும் வேடத்திலும் தலைமையில்லை.

இந்தப் புதுநெறிபடிப் படியாக முழுமை பெற வேண்டும். அதற்கான முன்னேற்றப் பாதையில் சிரமங்கள் ஏற்பட்டால், அவைகளையும் சமாளித்துக்கொண்டு முன் செல்ல வேண்டும். நெறி தவறியோரை பாரத அன்னை விழுங்கிக் கூத்தாடிவிடுவாள். பாரத மக்கள் அந்த விரும்பப் படாத சக்திகளை ஒதுக்கி நிராகரித்து விடுவார்கள். பாரத அன்னை அப்பாதகர்களை ஏறி மிதித்திடுவாள். காறி உமிழ்ந்திடுவாள். பொய் ஏடுகள் பொசுக்கப் படவேண்டும். அவ்வப்போது தர்மத்தின் வாழ்வை சூது கவ்வும் கட்டுண்டு பொறுத்திருந்து காலம் வரும்போது (காண்டீபம்) நமது வீரம் பதில் சொல்ல வேண்டும். நமக்குக் கண்ணனும்பார்த்தனும் துணை நிற்பார்கள். கண்ணன் நமது வழி காட்டி பார்த்தன் நமது செயல்வீரன் அவர்கள் பாரதத்தின் ஆன்மாக்கள். எங்கோ உள்ள மோட்சத்திற்குச் செல்வதற்காக அல்ல நமது முயற்சிகள் எல்லாம். இந்த பாரத புண்ணிய பூமியில் இந்த உலகில் மனிதகுலம் முழுமைக்கும் முழுமையான விடுதலை காண்பதற்கான முயற்சிகளாகும். அதுவே முக்தி அதுவே மோட்சம் அதுவே அறம் பொருள் இன்பத்தின் வழியில் அடையும் வீடுபேறு.

தனிமனிதனுடைய பசியை பிச்சைப்போட்டு போக்கி விடலாம். ஆனால் சமுதாயத்தின் பசியை பிச்சை போட்டு அடக்கி விட முடியாது. ஆற்றிவிட முடியாது போக்கிவிட முடியாது. உலகிலேயே அதிக மான அளவில் அனைத்து வளங்களும் செல்வவளமும் அறிவுவளமும் நிறைந்த பூமி பாரத புண்ணிய பூமி. ஆனால் காலக்கொடுமையால் இன்று வறுமை மிகுந்த நாடாக நீடிக்கிறது. வறுமையென்றால் வெறும் பொருள் வறுமை வாழ்க்கை வறுமை மட்டுமல்ல, உழைப்பில் வறுமை, உழைப்பு சக்தியின் வறுமை, உற்பத்தித்திறனில் வறுமை, கல்வியில் வறுமை, அறிவில் வறுமை, ஞானத்தில் வறுமை முதலியவைகளாகும். இத்தகைய பன்முக வறுமைகளின் கொடுமைகளைப் போக்க, ஒவ்வொருவரின் தனிமுயற்சியும் அனைவரின் கூட்டு முயற்சியும் தேவை. கூடித்தொழில் செய் என்று பாரதி கூறுகிறார்.

இன்று நாம் பல நேரங்களிலும் தோற்றத்திலும் வேடத்திலுமான போலியான சமத்துவத்தின் பேரால் வறுமையையும் அறியாமையையும் பங்கு போட முயற்சிக்கிறோம். அதனால் வீணான கலவரங்கள் தான் வளருகின்றன. நமது எண்ணங்களையும் கருத்துக்களையும் கொள்கை நிலைகளையும் ஏலம் போட முடியாது. நூறு கோடி நூல்கள் படைத்த நாடு. இன்னும் நுண்ணிய பெருங்கலைகள் பத்து நாலாயிரம் கோடி நயந்து நிற்கும் இந்தப் புண்ணிய நாட்டினில் நாம் பொறியற்ற விலங்குகள் போல வாழலாகாது.

பண்டைய நாட்களில் பல கலைகள் வளர்த்தோம். கல்வி வளர்த்தோம். கலைவாணிக்கு பூசை செய்தோம் என்று பேசிப் பயனில்லை. புத்தம் புதுக் கலைகளைப் படைக்க வேண்டும். உலகெங்கும் உள்ள சிறந்த கலைகள் அனைத்தையும் இங்கு கொண்டு வந்து சேர்க்க வேண்டும்.

எனவே பாரதி மீண்டும் மீண்டும் தொழில் செய், தொழில் செய் என்று கூறுகிறார். ஒரு சொல்லைப் பலநடவை அதன் பொருளை கருதாமல் திரும்பத் திரும்பக் கூறினால் அதுவே மந்திரம்போல்ஆகிவிடும். அவை பொருளற்ற வாய்ச் சொல்லாகி விடுகின்றன. ஆனால் சீரிய கருத்துக்களையும் அறிவுக் கதிர்களையும் இடைவிடாமல் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். அவைகளை மக்கள் மனத்தில் பதியவைக்க வேண்டும். கருத்துக்கள் மக்கள் மனதில் பதிந்து வேருன்றி வலுப்பெற்றுவிடுமானால், அதுவே ஒரு பௌதிக சக்தியாக பஞ்சபூத சக்தியைப் போன்று மாறி வளர்ச்சிப் பெற்று அம்மனிதனை அசகாய சூரத்தனமான செய்கையில் ஆக்கத் தொழிலில் ஈடுபடச் செய்யவைக்கும். அதனால் தான் நமது நாட்டில் மக்களை மேம்படுத்துவதற்காக, சோர்வை நீக்கி செயலில் ஈடுபடச் செய்வதற்காக இராமாயணம், மகாபாரதம் மற்றும் பல சாஸ்திரங்கள், கலைகள் முதலியவற்றை நமது மக்களிடம் இடைவிடாமல் திரும்பத் திரும்பப் பலவேறு முறைகளில் வடிவங்களில் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள்.

"வித்தைக் கிறைவா, கணநாதா, மேன்மைத் தொழிலில் என்னைப் பணிப்பாயாக" என்று பாரதி கணபதியை வேண்டுகிறார். "பண்டைச் சிறுமைகள்போக்கி என்னாவில் பழுத்த சுவைத்தெண்டமிழ்ப் பாடல் ஒரு கோடி மேவிடச் செய்குவையே" என்று பாரதி கணநாதனை வேண்டுகிறார்.

வஞ்சமற்ற தொழில் புரிந்துண்டு வாழும் மாந்தர்க்கு குல தெய்வமானவள் என்றும் வெஞ்சமர்க்குயிராகிய கொல்லர் வித்தையோர்ந்திடும் சிற்பியர், தச்சர் என்றும், மிஞ்ச நற்பொருள் வாணிபம் செய்வோர், வீரமன்னர், பின்வேதியர் யாரும் தஞ்சம் என்று வணங்கிடும் தெய்வம் என்றும் பாரதி குறிப்பிடுவதில் சிறந்த பொருளியல் கருத்துக்களைக் காணலாம்.

கை வருந்தி உழைப்பவர் தெய்வம், கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம், என்றும் உழைப்பையும் அறிவையும் தெய்வ நிலைக்கு பாரதி உயர்த்துகிறார்.

ஓங்கி கல்வி உழைப்பை மறந்தீர், மானமற்று விலங்குகள் ஒப்ப மண்ணில் வாழ்வதை வாழ்வெனலாமோ என்று கல்வியையும் உழைப்பையும் மறந்தவரை பாரதி, கண்டிக்கிறார்.

செல்வம் எட்டும் எய்தி நின்றால் செம்மையேறி வாழ்வேன் என்றும் இல்லையென்ற கொடுமை உலகில் இல்லையாக வைப்பேன் என்றும் பாரதி தனது கொள்கை நிலையுடன் உறுதி கூறுகிறார்.

செல்வம் எட்டும் எய்தி நின்றால் செம்மையேறி வாழ்வேன் என்றும் இல்லையென்ற கொடுமை உலகில் இல்லையாக வைப்பேன் என்றும் பாரதி தனது கொள்கை நிலையுடன் உறுதி கூறுகிறார்.

ஆடுகளும் மாடுகளும் அழகுடைய பரிகளும் வீடுகளும் நெடுநிலமும் விரைவினிலே தருவாய் என்று பாரதி சிரிதேவியை வேண்டுகிறார்.

தருவாய் தொழிலும் பயனும் என்று முருகனை வேண்டுகிறார். நீறுபடக் கொடும்பாவம் பிணி, பசி, யாவையும் இங்கு நீக்கி அடியாரைக் காக்குமாறு வேலவனை வேண்டுகிறார்.

திருவைப் பணிந்து நித்தம் செம்மைத் தொழில் புரிந்து மகிழ்வுற்றிருப்போம் என்று கூறுகிறார்.

அறிவுதான் பரம ஞானமாகும் என்றும், நீதியாக அரசு செய்வர், நிதிகள் பல கோடி துய்ப்பர், நீண்ட காலம் வாழ்வர் தரை மீது என்று அரசியல் நெறிக்கு பாரதி இலக்கணம் கூறுகிறார்.

ஆதாரசக்தி யென்றே அருமறைகள் கூறும், யாதானும் தொழில் புரிவோம், யாதும் அவள் தொழிலாம் என்று தேசமுத்து மாரியிடம் கூறுகிறார்.

தொழில் பண்ணப்பெருநிதியம் வேண்டும் அதில் பல்லோர் துணை புரிதல் வேண்டும் எனறு தொடங்கி,

"கல்லைவயிரமணியாக்கல் - செம்பைக்  
கட்டித்தங்கம் எனச் செய்தல் - வெறும்  
புல்லைநெல்லெனப் புரிதல் - பன்றிப்  
போத்தை சிங்கவேறாக்கல் - மண்ணை  
வெல்லத்தினிப்பு வரச் செய்தல் - என  
விந்தை தோன்றிட விந்நாட்டை - நான்

தொல்லை தீர்ந்து யர்வு கல்வி - வெற்றி
சூழும் வீரம் அறிவு ஆண்மை,
"கூடும் திரவியத்தின் குவைகள் - திறல்
கொள்ளும் கோடி வகைத் தொழில்கள் - இவை
நாடும் படிக்கு வினை செய்து - இந்த
நாட்டோர் கீர்த்தியெங்கும்ஓங்கக் - கலி
சாடும் திறன் எனக்குத் தருவாய் - அடி
தாயே உனக்கரிய துண்டோ - மதி
மூடும் பொய் மையிருள் எல்லாம் - என்னை
முற்றும் விட்டகல வேண்டும்"

என்று காளியை வரம் கேட்பதாகச் சொல்லி தொழில்கள் மூலம் தொழில் உழைப்பின் மூலம் மந்திரச் சக்தி போன்று நாட்டையே மாற்றியமைக்க கவிஞன் பாணியில் கூறுகிறார் பாரதி.

வஞ்சனை, சூது, பகை இன்றி வையத்து மாந்தர்எல்லாம், வாழவேண்டும் என்பது பாரதியின் அரசியல் மற்றும் சமுதாய நெறியாகும். "நாட்டுமக்கள் பிணியும் வறுமையும் நையப்பாடு என்று ஒரு தெய்வம் கூறுமே, கூட்டி மானிட ஜாதியை ஒன்றெனக் கொண்டு, வையமுழுதும் பயனுற பாட்டிலே அறம் காட்டவேண்டும்" என்றும் "நாட்டு மக்கள் நலமுற்று வாழவும் நாநிலத்தவர் மேனிலை எய்தவும், பாட்டிலும் பண்ணிலும் இசைத்து இன்பம் விளைதல் வேண்டும்" என்றும் பொது நெறி வகுத்தார் பாரதி.

" வேதங்கள் சொன்னபடிக்கு மனிதரை மேன்மையுறச் செய்ய வேண்டும்" என்று பாரதி விரும்பினார். மனசக்தி பெற்று நல்ல தொழில் செய்யும் உறுதி வேண்டும் என்றான். "சக்தி செய்யும் தொழில்களை எண்ணு நிதம் சக்தியுள்ள தொழில் பல பண்ணு" என்று சக்தி புகழ்பாடுகிறார். பயன் எண்ணாமல் உழைக்கச் சொன்னான் என்னும் தத்துவத்தை சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறார் பாரதி.

பயன் எண்ணாமல் உழைக்கச் சொன்னாள் என்பது கண்ணனுடைய கீதை. நிஷ்காமிய கர்மம் என்னும் பயனை எதிர்பாக்காமல் உன் கடமைகளை, உன் பணிகளை உன்தொழில்களை சோர்வு இல்லாமல் செய்து கொண்டேயிருக்க வேண்டும் என்பதாகும்.அழுது கொண்டேயிருந்தாலும் உழுதுகொண்டேயிருக்கவேண்டும் என்பது சாதாரண கிராமப்புற மக்களுடைய சொலவடையாகும். அதன் பொருள் தொழில் மட்டும் அதாவது வேலைகளை மட்டும் செய்து கொண்டேயிருக்க வேண்டும். அதன் பலன்கள்

தேவையல்ல என்பதல்ல. பலன்களை ஆண்டவனுடைய செயலுக்குவிட்டு விடவேண்டும் என்று கடமைகளில் தொழில்களில் மனிதன் செய்யும் வேலைகளில் தொய்வு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் அது வலியுறுத்தப்படுகிறது. தொழில் செய்யாவிட்டால் உலகம் அழிந்துவிடும்.

"எவனும் ஒரு கணப்பொழுதேனும் செய்கையின்றி இருப்பதில்லை. இயற்கையில் விளையும் குணங்களே எல்லா உயிர்களையும் அவசரமாகத் தொழில் செய்விக்கின்றன" என்று கீதாவாக்கியம் குறிப்பிடுகிறது.

ஆதலால் மனிதன் தொழில் செய்துதான் தீரவேண்டும். ஆனால் நீ தொழில் செய்யுமிடத்தே அதில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களுக்கு மனமுடைந்து ஓயாமல் துன்பப்பட்டுக்கொண்டே தொழில் செய்யும் உலகத்தாரைப்போல தொழில் செய்யாதே என்றும், தொழிலுக்குத் தன்னைத் தகுதியடையவனாகச் செய்து கொள்வதே யோகம் எனப்படும்" என்று பாரதி பகவத்கீதை முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

" மேலும் இங்கு தொழில் செய்யும்படி தூண்டியிருப்பது முக்கியமன்று. அதனை என்ன நிலையிருந்து என்ன மாதிரியாகச் செய்ய வேண்டுமென்று பகவான் காட்டியிருப்பதே மிகமிக முக்கியமாகக் கொள்ளத்தக்கது என்றும்,

" பற்று நீக்கித் தொழில் செய், பற்று நீக்கி, பற்று நீக்கி, பற்று நீக்கி, பற்று நீக்கி, இதுதான் முக்கியமான பாடம். தொழில்கள் நீ செய்து தீரவேண்டிய தாயிற்றே? நீ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இயற்கை உன்னை வற்புறுத்தித் தொழிலில் மூட்டுவதாயிற்றே எனவே அதை மீட்டும் மீட்டும் சொல்லவது கீதையின் முக்கிய நோக்கமன்று. தொழிலின் வலைகளில் (பந்தங்களில்) மாட்டிக்கொள்ளாதே அவற்றால் இடர்ப்படாதே, அவற்றால் பந்தப்படாதே, தளைப்படாதே, இதுதான் முக்கிய உபதேசம்" என்று பாரதி குறிப்பிடுகிறார்.

"எந்தவிதமான மனச் சோர்வுக்கும் கவலைக்கும், கலக்கத்துக்கும் பயத்துக்கும் ஐயத்திற்கும் இடம் கொடாதிரு" என்று பாரதி குறிப்பிடுகிறார். அத்துடன் ஒருவன் தனக்குரிய, தான் எடுத்துக் கொண்டுள்ள எந்தத் தொழிலாயினும் அதில்ஈடுபாடு கொள்ள வேண்டும், அர்ப்பணிப்பு கொள்ள வேண்டும்,அத்தொழிலைப் பற்றிய முழுமையான ஞானத்தையும் அதை நிறைவேற்றக்கூடிய தகுதியையும் திறமையையும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது பாரதியின் கருத்தாகும். அதனால்தான் "பண்ணிய முயற்சி

"யெல்லாம் பயனுற வோங்குமாங்கே, எண்ணிய எண்ணமெல்லாம் எளிதிலே வெற்றியெய்தும்" என்றும் கூறுகிறார்.

" இந்த உலகமே பொய் என்று கூறுவது அவச் சொல்லாகும். வீடு கட்டிக் குடித்தனம்பண்ணுவோருக்கு இந்த சாஸ்திரம் பயன்படாது.நமக்கு இந்த உலகத்திற்கு வேண்டியவை, நீண்ட வயது, நோயில்லாமை, அறிவு, செல்வம்என்ற நான்குமாகும். இவற்றைப் பெறுவதற்கு நாம் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.அறம், பொருள், இன்பம் என்ற மூன்றிலும் தெய்வ ஒளி காணவேண்டும். தெய்வ ஒளி கண்டால் நான்காம் நிலையாகிய வீடு தானாகவே கிடைக்கும் என்று பாரதி குறிப்பிடுகிறார்.

பாரதி தனது தேசியப்பாடல்களில்தேசபக்தி, தேசவிடுதலை, தேச முன்னேற்றம், தொழில் வளர்ச்சி, கல்வி ஆகிய அனைத்தையும் பற்றி வற்புறுத்துகிறார். இல்லாமையும் கல்லாமையும் நீங்கப் பாடுபடுவது விடுதலைக்கும் வழிவகுக்கும். விடுதலை பெறுவதன் மூலம் கல்லாமையையும் இல்லாமையையும் நீக்க வேண்டும் இரண்டையும் இணைத்து பாரதி கூறுவதைக் காண்கிறோம்.

பட்டினில் ஆடை, பஞ்சினில் உடை, ஆயுதம் செய்தல், காகிதம் செய்தல், ஆலைகள் வைத்தல், கல்விச் சாலைகள் வைத்தல், குடைகள் செய்தல், உழுபடைகள் செய்தல், கோணிகள் செய்தல், இரும்பாணிகள் செய்தல், வண்டிகள், கப்பல்கள் செய்தல்முதலிய பலவகைத் தொழில்களையும், கல்வி விஞ்ஞான வளர்ச்சி முதலிய அறிவுத் துறைகளைப் பற்றியும் குறிப்பிட்டு கடைசியில் உலகத் தொழில் அனைத்தும் உவந்து செய்வோம் என்று முடிக்கிறார்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்பதும் திறமை கொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும் தேர்ந்த கல்வி ஞானமெய்தி வாழ்வமிந்த நாட்டிலே என்பதும் பாரதியின் அடிப்படைத் தத்துவமாகும்.

"தொழில் என்னும் தலைப்பிலேயே
இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே
எந்திரங்கள் வகுத்திடுவீரே

என்று தொடங்கி, கரும்மைச் சாறு பிழியவும், கடலில் மூழ்கி முத்தெடுக்கவும் மற்றும் புவி மேல் உள்ள ஆயிரமாயிரம் தொழில்கள் செய்யவும் கூறுகிறார்.

மண்ணை எடுத்துக் குடங்கள் செய்யவும் மரத்தை வெட்டி மனைகள் செய்யவும், உண்ணக்காய் கனி உண்டாக்கவும், உழுது நஞ்சை

பயிர் செய்யவும், எண்ணையும் பாலும் பெருக்கிடவும் இழைகள் நூற்று நல்லாடைகள் செய்யவும், மேலும் பல்லாயிரம் தொழில்கள் செய்யவும் பாரதி ஆணையிட்டுக் கூறுகிறார்.

பாரதி எப்போதும், தொழில் செய்வது கல்வி கற்பது, அறிவை வளர்ப்பது பற்றி மட்டும்கூறுவதில்லை. அத்துடன், பாட்டு, செய்யுள், பரத நாட்டியம், கூத்து மற்றும் உலகத்தின் பொருள்கள் அனைத்தையும் பற்றியும் புதிய சாத்திரங்கள், நூல்கள் ஆகியவைகளைப் படைக்கவும் நாட்டில் நல்லறத்தை நிலைநாட்டி இன்பங்கள் ஊட்டவும் கூறி

"தேட்டமின்றி விழி எதிர்காணும்
தெய்வமாக விளங்குவிர் நீரே"என்று

பாடி முடிக்கிறார்.

அரசியல் நெறி பற்றி பாரத நாட்டின மரபு வழியில் நின்று பல புதுநெறிக் கருத்துக்கள் முன் வைக்கிறார். ஆட்சி முறையில் செங்கோன்மை, கொடுங்கோன்மை என்று நமது முன்னோர்கள் பல சாத்திரங்கள் மூலமாக இலக்கணம் வகுத்துள்ளனர். அரசு, அமைச்சு, அங்கம், நிர்வாகம், குடிமக்கள் பற்றிய பல சீரியகருத்துக்களை வகுத்துள்ளனர். சபை கூடிக்கலந்து பேசி முடிவுகளும் தீர்மானங்களும் எடுப்பது என்பது மன்னராட்சி காலத்திலும் கூட பல மரபுகளும் நெறிமுறைகளும் இருந்திருக்கின்றன. அதே சமயத்தில் கொடுங்கோன்மைகளும், போர்களும், கொடுமைகளும் படுகொலைகளும் நிகழ்ந்திருக்கின்றன.

பாஞ்சாலி சபத்தில் துரியோதனன் சபையைப் பற்றிக் குறிப்பிடும்போது அறமறிந்த வீட்டுமன், மெய்ந்நெறி விதுரன், பொய்ந் நெறிதம்பியர், புலை நடைச் சகுனி முதலியோர் இருந்ததைக் குறிப்பிடுகிறார். மதக் கொலைகளும் அரசர் தம் கூத்துக்களும், மூத்தவர் பொய்நடையும் நிலவிய கதைகளைப் பற்றியும் குறிப்பிடுகிறார்.

அரசியலில் இன்றை நாள் வரையிலும் அறமில்லாத மறவர், குற்றமே தனது மகுடமாகக் கொண்டோர், மற்றைய மனிதரை அடிமைப்படுத்தவே முற்றிய அறிவின் மறையென்றெண்ணுவார். பற்றையரசர் பழிபடு படையுடன் சொற்றை நீதி தொகுத்து வைத்திருந்தார். இத்தகைய பழிபடு அரசியலை மாற்றி, புவிமிசைத்தருமமே அரசியலதனிலும் பிற இயல் அனைத்திலும் வெற்றி தரும் என வேதம் சொன்னதை பாரத நாடு முற்றும் பேண முற்பட்டு உலகிற்கு புது நெறி காட்டப்போகிறது என்று கூறுகிறார். இது பாரதி கூறும் அரசியல் நெறியின் அடிப்படையாகும்.

அரசியல் கிளர்ச்சி முறைபற்றி, 'சுடுதலும் குளிரும் உயிருக்கில்லை, சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக்கில்லை எடுமினோ அறப் போரினை என்று காந்தி சொன்னதை அங்கீகரித்து பாரதி குறிப்பிடுகிறார்.

பாரத சமுதாயம், மூப்பது கோடி (இன்று நூறுகோடி யென்றாலும்) ஜனங்களின் சங்க முழுமைக்கும் பொதுவுடமை, ஒப்பில்லாத சமுதாயம், உலகத்திற்கொரு புதுமையாகத்திகழ வேண்டும் என்பது பாரதியின்அரசியல் சமுதாய லட்சியமாகக் குறிப்பிடுகிறார்.

(எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம் எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் இந்திய மக்கள், எல்லாரும் இந்நாட்டு மன்னர் எல்லாரும் அமரநிலை எய்தும் நன்முறையே இந்தியா உலகிற்களிக்கும் என்பதே பாரதியின் இலட்சியக்கனவு, அரசியல் நெறியாகும்.)

"நாட்டுமாந்தர் எல்லாம் - தம்போல்
நரர்களென்று கருதார்
ஆட்டு மந்தையாம் என்றுலகை
அரசர் எண்ணிவிட்டார்
காட்டும் உண்மை நூல்கள் - பலதாம்
காட்டினார்களேனும்
நாட்டு ராஜ நீதி - மனிதர்
நன்கு செய்யவில்லை' என்று தருமன்

சூதாட்டதில் நாட்டைப் பணயமாக வைத்து ஆடியதைக் கண்டித்துக் கூறுகிறார்.

" பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள் என்னும் கருத்தாழம் மிக்க ஒரு கவிதை வரியைக் கூறியிருப்பது பாரதியின் சிறப்பாகும்.

'நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தி
நயம் புரிவாள் எங்கள் தாய் - அவர்
அல்லவர்களாயின் அவரை விழுங்கி
ஆனந்தக் கூத்திடுவாள்'

என்று பாரதி கூறுகிறார். அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும். என்பது இளங்கோவடிகளின் வாக்காகும். நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ் சோம் என்பது அப்பரடிகள் வாக்காகும். அறம் வெல்லும், பாவம் தோற்கும் என்பது கம்பனது அரச நீதிக் கருத்தாகும். இது நமது நாட்டின்

பண்பாட்டு மரபு வழி அரசியல்கருத்தும் அனுபவமும் ஆகும். பாரதியின் இந்த வார்த்தைகள் நமது நாட்டு மக்களின் அரசியல் வாழ்வில் நமக்கு வழிகாட்டிச் செல்லும் கருத்தாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக பாரதி காட்டும் அரசியல் மற்றும் பொதுநெறி

**"தர்மத்தின் வாழ்வதனை சூதுகவ்வும்**
**தருமம் மறுபடி வெல்லும் எனுமியற்கை**
**மருமத்தை நம்மாலே யுலகங்கற்கும்**
**வழி தேடி விதியிந்தச் செய்கை செய்தான்**
**கருமத்தை மேன்மேலும் காண்போம். இன்று**
**கட்டுண்டோம், பொறுத்திருப்போம், காலம் மாறும்**
**தருமத்தையப்போது வெல்லக் காண்போம்**
**தனுவுண்டு காண்டீவ மதன்பேர் என்றான்"**

என்றுகூறிய பாரதியின் கவிதை வரிகள் என்றென்றும் நிலைத்து நிற்கும். அமரத்துவம் மிக்க கவிதைவரிகளாகும். உலகம் உள்ளளவும் தமிழ் கூறும் நல்லுலகம் உள்ளளவும் பாரதியின் இந்தக் கவிதை வரிகள் கம்பீர நாதத்துடன் ஒலித்துக் கொண்டிருக்கும்.

**பாரதியின் விடுதலை நோக்கின் பன்முகப் பரிமாணங்கள்**

பாரதியின் விடுதலை லட்சியங்கள் பரந்த பல பன்முக பரிமாணங்களைக் கொண்டது. பாரதி காலத்தில் அன்னிய ஆட்சி வலுவாக அமர்ந்திருந்தது. ஆங்கிலேய ஆட்சியின் கொடுமைகள் மலிந்திருந்தன. பாரத மக்களுக்கு எல்லா உரிமைகளும் மறுக்கப்பட்டிருந்தன. இம் என்றால் சிறைவாசம், ஏன் என்றால் வனவாசம் என்னும் தமிழ் சொற்களில் பாரதி தனது அனுபவத்திலிருந்தே தன் உணர்வை வெளிப்படுத்தியிருக்கிறார்.

மக்களுடைய வாழ்க்கை நிலை மிகவும் மோசமாக இருந்தது. பஞ்சம், பசி, பட்டினி, பட்டினிச்சாவுகள், வேலையின்மை, நோய், நொடி சுகாதாரக் கேடுகள், அறியாமை, மூடப்பழக்க வழக்கங்கள், தொல்லை இகழ்ச்சிகள், மலிந்திருந்தன. இன்னும் அடித்தட்டு மக்களிடையில் இந்தக் கொடுமைகள் மிக அதிகமாகப் பரவியிருந்தன. இந்த நிலைமைக்கு அன்னிய ஆட்சியின் கொள்ளைகளும் கொடுமைகளும் முக்கியமான முதன்மையான காரணமாக இருந்தன. வரிக்கொடுமை, வட்டிக் கொடுமையுடன் இயற்கைச் செல்வங்களும் ஆட்சியாளர்களால் சூரையாடப்பட்டன. பழைய பரம்பரைத் தொழில்கள், நசிவடைந்தது, புதிய தொழில்கள் வளரவிடாமல் தடுக்கப்பட்டன.

இவையெல்லாம் நாட்டு மக்களின் வறுமை நிலையை மேலும் அதிகரிக்கச் செய்து கொண்டே இருந்தது. அதையே பாரதி 'பொழுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை கொண்டு போகவோ, நாங்கள் சாகவோ' என்று பாடினார். இந்த தமிழ்ச் சொற்களுக்கு விளக்கம் தேவையில்லை. இன்னும் மானமற்று விலங்குகள் ஒப்ப மண்ணில் வாழ்ந்தனர்என்று கூறினார். அதனால்

நாட்டு மக்களின் பிணியும் வறுமையும் நையப் பாடினான். கவலைகள், சிறுமை, நோவு, கைதவம், வறுமைத் துன்பம், புலைமை அச்சம் முதலிய பேய்கள் எல்லாம் நிறைந்திருந்தன. அன்னிய ஆட்சியினர் பொருளினை சிதைத்தனர், மருளினைவிதைத்தனர் என்று பாடினார். அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும் நிறைந்திருந்தன. ஊக்கமும் உள்வலியும்உண்மையில்பற்று இல்லாமலும் மக்கள் பலரும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். உலகத்து நாடுகளில் எல்லாம் (வையத்து நாட்டில் எல்லாம்) தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டு பாழ்பட்டு நின்றது பாரத தேசம். புதிய ரஷ்யாவைப் பற்றிய பாடலில் கூட பாரதி இரணியன் போல் அரசாண்டான் கொடுங்கோலன் ஜார் எனும் பேரிசைந்த பாவி என்றும் பொய் சூது தீமையெல்லாம்உழுது விதைத்தறுப்பாருக்கு உணவில்லை. பிணிகள் பலவுண்டு, பொய்யைத் தொழுதடிமைச் செய்வாருக்கு செல்வங்களுண்டு, உண்மை சொல்வோருக்கெல்லாம் எழுதரிய பெருங்கொடுமைச் சிறையுண்டு, தூக்குண்டேயிறப்பதுண்டு, செம்மையெல்லாம் பாழாகி கொடுமையே அறமாகி இருந்ததாக, இந்திய நாட்டில் இருந்த அன்னிய ஆட்சியை நினைந்தே பாரதி பாடியிருக்கிறார்.

அத்துடன் இந்திய சமுதாயத்தின் உள்வலியும் குறைந்திருந்தது. சாதி மத வேறுபாடுகள், மாறுபாடுகள், பாகுபாடுகள், தீண்டாமை போன்ற சமூகக் கொடுமைகளும் நிலவியிருந்தன. மெள்ளப்பல தெய்வம்கூட்டி வளர்த்து வெறும் கதைகள் சேர்த்துப் பல கள்ள மதங்கள் பரவியிருந்தன.

'அஞ்சி அஞ்சிச் சாவார்
மந்திரவாதியென்பார்
எந்திர சூனியங்கள் என்பார்
சிப்பாயைக் கண்டஞ்சுவார்
யாரிடத்தும் பூனைகள் போல் அடங்கி நடப்பார்
கொஞ்சமோ பிரிவினைகள் - ஒரு
கோடியென்றால் அது பெரிதாமோ,
சாத்திரங்கள் ஒன்றும் காணார்
தம்மைச் சூது செய்யும் நீசர்களைப் பணிந்திடுவார்

"கஞ்சி குடிப்பதற்கிலார்
எண்ணிலா நோயுடையார்
இவர் எழுந்து நடப்பதற்கும் வலிமையிலார்
ஜாதி நூறு சொல்லுவார்
சோதிமிக்க மணியிலே காலத்தால்
சூழ்ந்த மாசு போன்றனை என்றெல்லாம் பாரதியின் கவிதைவரிகள் குறித்துக் காட்டுகின்றன.

தமிழின் பழம்பெருமையும், இந்நாளில் ஏற்பட்டிருக்கும் சிறுமையையும் பற்றிப் பாடியுள்ள அப்பாடல்களில் புதிய நெறிகளை புதிய கடமைகளை வற்புறுத்திக் கூறுகிறார்.

மக்களின்அறியாமை, கல்லாமை, தீண்டாமை மூட நம்பிக்கைகள், மூடப் பழக்க வழக்கங்கள் பெண்ணடிமை முதலிய கொடுமைகளையும் பரிதாப நிலைமைகளையும் கண்டு மனம் புழுங்கி புதிய நெறிகளை நமக்குக் காட்டி புதிய மார்க்த்திற்கு வழி காட்டுகிறார்.

இவ்வாறு பாரதியின் சுதந்திரம், விடுதலை என்னும் கருத்து வடிவங்கள் பன்முக பரிமாணங்களைக் கொண்டதாகும். அதையே அவர் முழுமையான சுதந்திரம் என்று கருதினார். கூறினார் அதையே பரிபூரண சுதந்திரம் என்று தேசீய விடுதலை இயக்கம் முன்வைத்தது.

அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவது அரசியல் சுதந்திரத்தின் முதல் கட்டம். இதை பாரதி எந்த வித தயக்கதிற்கும், ஊசலாட்டத்திற்கும் இடமில்லாமல், முன்பின் முரணில்லாமல் சுதந்திரம் என்னும் பிரச்சனையில் எந்த விதமான விட்டுக் கொடுத்தலுக்கும் சமரசத்திற்கும் இடமில்லாமல் வற்புறுத்தி புரட்சிகரஜனநாயக உணர்வு நிலையில் வலியுறுத்திப் பாடியுள்ளார்.

பாரதி சுதந்திரம், ஜனநாயகம் பற்றி, 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கூறிய அரசியல் கருத்துக்கள் பலவும் 1950-ம் ஆண்டில் வெளியிடப்பட்ட நமது அரசியல் சாசனத்தின் அடிப்படை உரிமைகளின் பகுதியிலும், வழிகாட்டும் கோட்பாடுகள் பகுதியிலும் இடம் பெற்றிருப்பதைக் காண்கிறோம்.

இரண்டாவதாக மனித வாழ்க்கைக்கு அடிப்படை ஆதாரமாக அமைந்துள்ள பொருளாதார வசதிகளும் வாய்ப்புகளுமாகும். உணவு, உடை, வீடு, கல்வி, சுகாதாரம், நல்வாழ்வு, வேலை, பொழுது போக்கு, வசதிகள், விளையாட்டு வசதிகள், நாகரிகமான மனித வாழ்க்கைக்கு அவசியமான அத்தனை வாய்ப்புகளும் வசதிகளும், ஏற்ற தாழ்வுகள் இல்லாமல் அனைவருக்கும் கிடைக்கச் செய்யவேண்டும் என்பதை பல,

இடங்களிலும் கட்டங்களிலும் பாரதி தனது கவிதைகளில் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்.

மூன்றாவதாக சமூகப் பாகுபாடுகள், கொடுமைகள், ஏற்றதாழ்வுகள், தீண்டாமை, பெண்ணடிமை முதலிய கொடுமைகளைப் பாரதி மிகக்கடுமையாகச் சாடியுள்ளார். சாதிகொடுகைகளும் சாதிப்பாகுபாடுகளும் வேறுபாடுகளும் நீங்க வேண்டும் என்பதை வலுவாக வலியுறுத்தி தெளிவான சொற்களில் கூறியுள்ளார். சாதி இரண்டொழிய வேறில்லை என்பது தமிழ்த்தாயின் சொற்கள், பாரதி சாதி மதங்களைப் பாரோம் என்றார். சாதி வேறுபாடுகளைக் கூறும்பொய்ச் சாத்திரங்களைப் பொசுக்கிடுவோம் என்று கூறுகிறார்.சாதி நூறு சொல்லுவாய் போ, போ, என்றுபாடினார். சாதியில் இழிவு கொண்ட மனிதர் என்பதிந்தியாவில் இல்லை, அனைவரும் கல்வி செல்வம் பெற்று சரி நிகர் சமானமாக வாழ்வோம் என்பது பாரதி வாக்கு.

"சாதிப்பிரிவுகள் சொல்லி - அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்
நீதிப்பிரிவுகள் செய்வார்
நித்தமும் சண்டைகள் செய்வார்

"சாதிக் கொடுமைகள் வேண்டாம் - அன்பு
தன்னிற்செழித்திடும் வையம்
ஆதரவுற்றிங்கு வாழ்வோம் - தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்" என்றும்

"அறிவை வளர்த்திட வேண்டும்- மக்கள்
அத்தனை பேருக்கும் ஒன்றாய்
சிறியரை மேம்படச் செய்தால் - பின்பு
தெய்வம் எல்லாரையும் வாழ்த்தும்

என்றும் கூறுகிறார். கடைசியாக எதிர்கால சந்ததியினரிடம்.

சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி, உயர்ந்த மதி, கல்வி - அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்

என்று பாப்பாப்பாட்டில் அனைவருக்குமான சமநீதியை சமூக நீதியை வலியுறுத்திப் பாடியுள்ளதைப் பார்க்கிறோம்.

முழுமையான சமூக நீதியோடு கூடிய சமூக விடுதலையைபாரதி வற்புறுத்தினார்.

நான்காவதாக, அறியாமையிலிருந்தும் கல்லாமையிலிருந்தும் விடுதலை என்பது பாரதியின் உயிர் மூச்சு, கல்வி, அறிவு, ஞானம், செல்வம், ஆகிய சொற்கள் பாரதி கவிதைகளின் அடிநாதமாகும். அறியாமையிலிருந்தும், கல்லாமையிலிருந்தும் விடுதலை பெறுவது அனைத்து விடுதலைக்கும் ஆதாரமானதாகும்.

வித்தை வளரவேண்டும். கல்வி பெருக வேண்டும். வீடுதோறும் கலையின் விளக்கம், வீதிதோறும் இரண்டொரு பள்ளி, நாடு முற்றிலும் உள்ள ஊர்கள், நகர்கள் எங்கும் பலபல பள்ளி, தேடுகல்வியிலாததொரு ஊரை தீக்கிரையாக்குவோம், கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை என்று பாரதியின் கருத்துக் கவிதைக்கு ஈடு இணையே இல்லை. உலகில் இத்தகைய உயரிய கவிஞன் இதுவரை பிறந்ததில்லை.

இன்னும் கல்வியையும் உழைப்பயையும்இணைக்கிறார். ஓங்கு கல்வி உழைப்பை மறக்காதீர் என்றார். எல்லாவற்றிற்கும் மேலாக கல்வி கற்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார். கல்வி கற்று அறிவுத் தெளிவு ஏற்பட்டுவிட்டால், இதர பிரச்சனைகளை தீர்ப்பதற்கான வல்லமை, மனோதிடம் நமக்கு ஏற்பட்டுவிடும். சோலைகள் செய்தல், சுனைகள் இயற்றல், அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயங்கள் பதினாயிரம் கட்டுதல், இன்னும் எத்தனையோ தர்ம காரியங்கள் செய்தாலும், அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்று பாரதி கூறிய சொல்லுக்கு இணையே இல்லை. கல்வியிலே மதியினை நீ தொடுக்க வேண்டும் என்று நமது கவனத்தை பாரதி ஈர்க்கிறார்.

**ஐந்தாவதாக, பெண் விடுதலை பற்றி இத்தனை சுத்தமாகப் பேசியவன் பாரதியைப் போல் யாருமில்லை என்பதை உறுதியாகக் கூறலாம்.**

மாதர்தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம், வைய வாழ்வு தனனில் எந்த வகையிலும் நமக்குள்ளே தாதர் என்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே என்றும்

அறிவுயாவும் பயிற்சியில் வென்றே கடமை செய்வீர், நம் தேசத்து வீரக்காரிகைக் கணத்தீர் துணிவுற்றே என்றும், கற்புநிலை என்றால் இருவருக்கும் பொதுவென்று வைப்போம் என்றும், நாணும் அச்சமும் நாய்களுக்கு வேண்டுமாம் என்றும் நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட

பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் என்றும், உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும், மூத்த பொய்மைகள் யாவும் அழிக்கவும் மூடக்கட்டுகள் யாவும் தகர்க்கவும் பெண்ணுரிமையைப் பாடுகிறார். பெண்ணுரிமைக்கும் பெண் விடுதலைக்கும் புதுமைப் பெண்ணுக்குமான புதுமைக்கருத்துக்களைக் கூறி அன்ன மூட்டிய தெய்வ மணிக்கையைப் பாராட்டி பெண்மை வீரத்தின் சின்னமாக பாஞ்சாலி சபதத்தைக் காவியமாகப் பாடி சிறப்புப் பெற்றார் பாரதி என்னும் மகாகவி.

அரசியல் விடுதலை, சமத்துவமும் சமவாயப்புகளும் பெற்ற பொருளாதார விடுதலை, சமூக விடுதலை, அறியாமை கல்லாமையிலிருந்து விடுதலை, பெண் விடுதலை ஆகியவை உள்ளிட்டமுழுமையான விடுதலையைப் பெற்ற பரிபூரண சுதந்திரத்தைப் பெற்ற பாரத அன்னையின் முழுமையான விஸ்வரூபத்தை பாரதி தனது தொலைநோக்கில் கண்டான்.

ஐரோப்பிய ஏகாதிபத்திய வல்லரசுகளின் அரசியியல் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற இந்தியாவும் இதர பல ஆசிய, ஆப்பிரிக்க, தென் அமெரிக்க நாடுகளும் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக சுதந்திரம் ஜனநாயகம் சமத்துவம் சோஷலிஸம் பெண்ணுரிமை பெண் விடுதலை தலித் மற்றும் கருப்பு இன மக்களின் விடுதலை சம உரிமை அறியாமையிலிருந்தும் கல்லாமையிலிருந்தும் வறுமை பசி, பட்டினியிலிருந்தும் விடுதலை, மனித உரிமை, மொழி உரிமை, தேசீய இன உரிமை, மனித இனத்தின் வாழும் உரிமை ஆகிய முழுமையான ஜனநாயக உலக வடிவம் தோன்றத் தொடங்கயிருக்கிறது. பாரதியின் சிந்தனைகள் இதற்கு விடிவெள்ளியாக அமைந்திருப்பதை அவருடைய கவிதைகளின் ஆழ்ந்த கருத்துக்களில் காண்கிறோம்.

## பாரதியின் கவிதையில் தமிழ் நாட்டின் தனித்தன்மை

பாரதி தமிழ்க் கவிஞன். தமிழ்ப்புலவன் அவன் தமிழில் தனது கவிதைகளைப்பாடினான். தமிழின், தமிழினத்தின், தமிழ் நாட்டின் தனித்தன்மைகளைப் போற்றி மரபு வழியில் நின்று தமிழனுக்கு. தமிழ் மக்களுக்குச் சில தனி ஆணைகளை விடுத்துள்ளான்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம் என்றான்
"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல
வள்ளுவர்போல இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை.

உண்மை வெறும் புகழ்ச்சியில்லை"

என்று பாடினார். இதன் மூலம் தனது மரபு வழியை வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்.

பாரதி தமிழ் மொழி மட்டும் அறிந்தவன் அல்ல. ஆங்கிலம், பிரஞ்சு, இந்தி, சமஸ்கிருதம், தெலுங்கு, மலையாளம் முதலிய மொழிகளிலும்அவருக்கு பயிற்சியும் பரிச்சயமும் உண்டு. வங்காளி மொழிபற்றியும் அவருக்கு பரிச்சயம் உண்டு. அதனால் தான் அவர் யாமறிந்த மொழிகளிலே என்று தொடங்கினார் போலும்.

பாரதி வியாசரையும் வால்மீகியையும், வேதங்களுக்கு விளக்கம்கூறிய வசிஷ்டரையும், வாம தேவரையும், இன்னும் மனுவையும்கௌடில்யரையும், அடுத்து வந்த காளி தாசரையும்தன் காலத்திய ரவீந்திரநாத்தாகூரையும் மற்றும் ஆங்கில பிரஞ்சுப் புலவர்களையும் படித்தவர்.அறிந்தவர். இருப்பினும் யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவன் போல இளங்கோவைப் போல, பூமியில் யாங்கணும் கண்டதில்லை என்று பெருமையுடன் பாடினார்.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே'

என்று தொடங்கி, வேதம் நிறைந்த தமிழ் நாடு. வீரம்செறிந்த தமிழ்நாடு, இளங்கன்னியர் சூழ்ந்த தமிழ்நாடு, முத்தமிழ் மாமுனிகாக்கும் தமிழ்நாடு கல்வி சிறந்த தமிழ்நாடு கம்பன் பிறந்த தமிழ்நாடு பலவித சாத்திரங்களின் மணம் பாரெங்கும் வீசும் தமிழ்நாடு, வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் படைத்த தமிழ்நாடு, கலை ஞானமும், படைத்தொழிலும், வாணிபமும் மிக நன்று வளர்த்த தமிழ்நாடு என்றெல்லாம் புகழ்ந்து பாடுகிறார். அதைக் கேட்கும் போது நமக்கு உடம்பு சிலிர்க்கிறது. உள்ளம்பூரிக்கிறது.

காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வைகை, பொருனை ஆகிய ஐந்து ஆறுகளும் பாரத நாட்டின் கங்கை, சிந்து, பிரம்ம புத்திரா, கோதாவரி, கிருஷ்ணா, நர்மதா நதிகளைப் போன்று புண்ணிய நதிகளாகப் பாடல் பெற்றவை. இந்த ஐந்து ஆறுகளுடன் மேலும் பல சிற்றாறுகளும்ஓடி தமிழகத்தின்மேனி செழித்து நாகரிகம் பரவியுள்ள திருநாடு.

தமிழ்த்தாயை ஆதி சிவன் பெற்றுவிட்டான் என்றும் அகத்தியன் இலக்கணம் செய்தான் என்றும் மூன்று குலத்தமிழ் மன்னர் ஆண்டார்கள் என்றும், ஆரியத்திற்கு நிகராகத் தமிழ்மொழி வாழ்ந்தது என்றும் புலவர்கள்

பலரும்தீஞ்சுவைக்காயங்களும் பல சாத்திரங்களும் செய்தார்கள் என்றெல்லாம், பெருமைப்பட்டாலும் தமிழின் தற்கால நிலைகண்டு பாரதி கலக்க முற்றான். புத்தம்புதுக்கலைகள் பஞ்சபூதச் செயல்களின் நுட்பங்கள், கூறும் மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை என்னும் வசைச் சொல்லைத்தடுக்க,

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும்கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

என்று பாரதி ஆணையிட்டார்

அத்துடன் தமிழனுக்கு மிகச் பெரிய கடமைகளை பாரதி வகுத்துக் கொடுத்துச் சென்றுள்ளான். வெறும் பழம்பெருமை பேசிப்பலன் இல்லை தமிழ் மொழிபோல் இனிய மொழி உலகில் வேறு எங்கும் இல்லை. இருப்பினும் நாம் பாமரராய் விலங்குகளாய் உலகோர் எல்லாம் இகழ்ச்சியாக நம்மைப் பேசுதவற்கு இடம் தரலாமா? எனவே நீ என்ன செய்ய வேண்டும்? தேமதுரத்தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்.

கம்பனும், வள்ளுவனும், இளங்கோவும் இதர பல புலவர்களும் பிறந்த இந்தத் தமிழ் மண்ணில் நாம் ஊமையராய், செவிடர்களாய் குருடர்களாய் வாழ்கின்றோமே இது சரியா? சேம முறவேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர் என்று பாரதி பேசுகிறார். இன்னும் பேசுகிறார்.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல்வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்.

மறைவாக நமக்குள்ள பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமையான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப் போல்கலைப் பெருக்கும்
கவிப் பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடர் எல்லாம்.

விழிபெற்றுப்பதவி கொள்வார்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைக்கண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்

என்னும் இனிய தமிழ்ப்பாடலைப் படைத்துக் காட்டி நமக்கு அறிவுரை கூறியுள்ளார்.

இன்று உலகில் பல நகரங்களிலும் தமிழ் சங்கங்கள் அல்லது தமிழர்அமைப்புகள்அமைந்துள்ளன. இந்தியாவின் பல பழய புதிய நகரங்களில் மட்டுமல்லாமல், ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியாக் கண்டங்களில் உள்ள பல நகரங்களிலும் உள்ள தமிழ் சங்கங்கள் மற்றும் தமிழர் அமைப்புகளின் செயல் திறனை விரிவுபடுத்த வேண்டும். நிதி நிறைந்தோரும் தமிழ் அறிஞர்பலரும் அதற்கு உதவிட வேண்டும்.

"வானம் பொய்க்கின் மடிந்திடும் உலகு போல்
தானமும் தவமும் தாழ்ந்திடல் பொறுத்து
ஞானம் பொய்க்க நசிக்குமோர் சாதி
சாத்திரங்கண்டாய் சாதியின் உயிர்த்தலம்
சாத்திரம் இன்றேல் சாதியில்லை
பொய்ம்மைச் சாத்திரம் புகுந்திடின் மக்கள்
பொய்மையாகி புழுவென மடிவர்

என்று ஒரு கடுமையான எச்சரிக்கையை பாரதி விடுத்துள்ளார். இது தமிழ்சாதிக்கும் பாரத சாதிக்கும் விடுத்த எச்சரிக்கையாகும். இதற்கு வழி என்ன?

பாரதியே வழி காட்டுகிறார். தமிழ் மக்களிடையில் அறிவுத் துறையில் தலைமையாய் உள்ளவர்களிடம் இருபிரிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு பிரிவு மேலைநாட்டு நாகரிகமே சிறந்தது என அதைத் தழுவிச் சென்று தமிழை மறத்தல், மற்றொன்று வெறும் பழமை பேசி பாசி படிந்த நாசப்புலவர் என்று குறிப்பிடுகிறார். பாரதி காலத்தில் இந்தப் பிரிவுகள் இரண்டும் தமிழகத்தில்வலுவாக இருந்தன. இப்போது சிறிது சிறிது மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தாலும் சீரான நிலை அடைவதற்கு நாம் இன்னும் வெகு தொலைவு செல்ல வேண்டியதிருக்கிறது. எனவே **"நன்மையும் அறிவும் எத்திசைத் தெனினும் யாவரே காட்டினும் மற்றவை தழுவி வாழ்வீராயின்அச்ச மொன்றில்லை"** என்னும் அருமையான தொரு பொதுக்கருத்தை பொருத்தமான முறையில் பாரதி எடுத்துக் காட்டியுள்ளார்.

**பாரதியின் உலகளாவிய தத்துவம்**

பாரதியின் தத்துவம் உலகளாவியதத்துவமாகும். உலகக் கண்ணோட்டம் கொண்டதாகும். மனிதனையும்இதர உயிர்ப் பொருள்கள் மற்றும் இயற்கைப் பொருள்கள்அனைத்தையும் உள்ளிட்டதாகும். பஞ்ச பூத சக்திகளுடனும் சூரியசந்திர நட்சத்திரங்கள் மற்றும் கிரகசக்திகளுடனும் இணைந்து வாழ்வதாகும்.

உலகில் உள்ள பொருள்கள் அனைத்தும் உலகமனைத்தும் மனிதனுக்காகவே படைக்கப்பட்டது எனவும் அதனால் மனிதன் அவைகளைத் தனக்காக எப்படியும் பயன்படுத்திக் கொள்ளலாம் எனவும் ஏற்பட்ட கருத்து மேலோங்கி, இன்று உலக அமைப்பில் சிதைவுகள் ஏற்பட்டும் இயற்கைச் சூழலும் சுற்றுச் சூழலும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நேரத்தில் பாரதியை நினைவு கூற வேண்டும். இந்திய தத்துவங்களே இயற்கையோடிசைவான வாழ்க்கைமுறையின் தத்துவங்களாகும். அது பாரதப் பண்பாட்டின்அடிப்படையாகும். நமது தெய்வங்களுக்குள்ள வாகனங்களும் கோவில்களில் உள்ள குளங்களும் ஸ்தலவிருட்சங்களும் இயற்கையோடு இணைந்த, இசைவான வாழ்க்கை அமைப்பைக் குறிப்பனவே யாகும். அதாவது நம்மைச் சுற்றியுள்ள, விலங்குகள், பறவைகள், விருட்சங்கள் இதர தாவரங்கள், நீர்நிலைகள் முதலியன வெல்லாம் நாம் வணங்கும் தெய்வங்களோடு இணைந்தவை. நமது வணக்கத்திற்கும் பூசைக்கும் உரியன.

இந்த தத்துவங்கள் எல்லாம் இடைக்காலத்தில் வளர்ச்சிகுன்றிப் போயின. சில பூசை அறைகளில் மட்டும் முடங்கிப் போயின. அன்னியதத்துவங்களின் தாக்கத்தாலும் தாக்குதல்களாலும் பாதிக்கப்பட்டுப் போயின. ஆங்கிலேயர் ஆட்சிகாலத்தில் அவை தாழ்த்தப்பட்டு புறக்கணிக்கப்பட்டன. மூடப்பழக்க வழக்கங்களோடும் சில பொய்மைச் சாத்திரங்களோடும் இணைக்கப்பட்டன. ஒதுக்கப்பட்டன. ஆனால் அண்மைக்காலமாக அனுபவத்தில் சில உண்மைகளை கடினமான உண்மைகளை சந்திக்க வேண்டியகட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. உலகம் முழுவதிலும் ஏற்பட்டுள்ள சில புதிய விழிப்புணர்வுகளும் பல புதிய உண்மைகளை தரை மேல்ட்டத்திற்கு கொண்டுவரப்பட்டு வெளிப்படுத்தியிருக்கின்றன.

உலகத்தைக் காக்க வேண்டும். அதை மனிதன் வாழ்வதற்கு உகந்ததாக ஆக்க வேண்டும் என்னும் கருத்துக்கள் வலுவாகத் தோன்றி வளரத் தொடங்கியுள்ளன. காற்று, கடல், மலைகள், காடுகள், ஆறுகள்,

கோள்கள் அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டும். மாசு படாமல் காக்கப்பட வேண்டும்.புல்பூண்டு செடி, கொடி, மரம் முதலிய தாவரங்கள், புழுக்கள் பூச்சிகள், ஊர்வன, பறப்பன நடப்பன முதலிய கால்நடைகள், விலங்கினங்கள் பறவையினங்களையும் அனைத்து உயிரினங்களையும் இயற்கையையும் காக்க வேண்டும் என்னும் குரல் விஞ்ஞான உலகிலும் தத்துவ ஞான உலகிலும் எழுந்துள்ளன.

3892

"உலகம் யாவையும் தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நிங்கலா
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே!

என்பது கம்பன் வாக்கு. ஆக்கலும் நிலைபெறுத்தலும் நீக்கலும் என்று கம்பன் குறிப்பிட்டிருப்பது கம்பனின் சிறப்பும் தமிழின் சிறப்புமாகும். இங்கு முத்தொழிலில் அழித்தலும் என்று கம்பன் கூறவில்லை. நீக்கலும் என்று குறிப்பிட்டிருப்பது தமிழ் சிறப்பாகும். நீக்கல் என்பது இந்தப்பிரபஞ்சத்திலுள்ள சகல விதமான பொருள்களும் ஒரு நிலையிலிருந்து நீங்கி, மறுநிலைக்கு அடைவதாகும். அது மாற்றத்தை, நிலை மாற்றத்தைக் குறிப்பதாகும். மாற்றமென்பது, உலகம் மாறிக் கொண்டேயிருக்கிறது என்பது இயற்கையாகும். இதை இந்திய தத்துவங்களும் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன.

"உலகின் எல்லா தோற்றங்களும் எல்லா வடிவங்களும் எல்லா உருவங்களும் எல்லாக் காட்சிகளும் எல்லா கோலங்களும் எல்லா நிலைமைகளும் எல்லா உயிர்களும் எல்லா பொருள்களும் எல்லா சக்திகளும் எல்லா நிகழ்ச்சிகளும் எல்லா செயல்களும் எல்லாம் ஈசன்மயம் ஆதலால் ஒன்றுக்கொன்று சமானம் என்று பாரதி தனது பகவத் கீதை மொழியாக்க நூலின் முன்னுரையில் மிக அற்புதமாகக் குறிப்பிடுகிறார்.

" கண்ணபிரான், மனிதருக்குள் சாதி வேற்றுமையும் அறிவு வேற்றுமையும் பார்க்கக்கூடாது என்பது மட்டுமேயன்றி எல்லா உயிர்களுக்குள்ளேயும் எவ்வித வேற்றுமையும் பாராதிருத்தலே ஞானிகளுக்கு லட்சணம் என்று சொல்லுகிறார் என்றும் பாரதியார் அம்முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

"இயற்கை விதிகளை அனுசரித்தே வாழவேண்டும். அதனால்எவ்விதமான தீமையும் எய்தமாட்டாது. எனவே சாதாரண புத்தியே பரம மெய்ஞ்ஞானமாகும். இதையே ஆங்கிலேயர் காமன் சென்ஸ் என்பார். சுத்தமான மாசுபடாத, கலங்காத, அஞ்சாத, பிழைபடாத சாதாரண அறிவே பரம மெய்ஞ்ஞானமாகும். என்றும் பாரதி குறிப்பிடுகிறார்.

" வானமுண்டு, மாரியுண்டு, ஞாயிறும், காற்றும் நல்லநீரும், தீயும், மண்ணும், திங்களும், மீன்களும், உடலும் அறிவும் உயிரும் உளவே"

என்று பாரதி பாடுகிறார்.

மண்மீதுள்ள மக்கள், பறவைகள், விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டு மரங்கள் - யாவும் என் வினையால் இடும்பை தீர்ந்தே இன்பமுற்று அன்புடன் இணங்கி வாழ்ந்திடவே செய்தல் வேண்டும் தேவ தேவா என்று விநாயகரிடம் வேண்டுகிறார்.

"காக்கை குருவி எங்கள் ஜாதி - நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை;
நோக்க நோக்கக் களியாட்டம்"

என்று பாரதி ஜயபேரிகை கொட்டுகிறார்.

"வானில் பறக்கின்ற புள் எல்லாம் நான்
மண்ணில் திரியும் விலங்கெலாம் நான்
கானில் வளரும் மரமெல்லாம் நான்
காற்றும் புனலும் கடலுமே நான்

"விண்ணில் எரிகின்ற மீன் எலாம் நான்
வெட்ட வெளியின் விரிவெலாம் நான்
மண்ணிற்கிடக்கும் புழுவெலாம் நான்
வாரியில் உள்ள உயிரெலாம் நான்"

என்று பாரதி பாடுகிறார். இது பாரதி தத்துவம்.

**கலியின் வீழ்ச்சியும்**
**கிருதயுகத்தின் தோற்றமும்**

பாரதி ஒரு பிரம்மஞானி ஜீவன்முக்தர், அவர் ஒரு கர்மயோகியாக வாழ்ந்தார். கடவுள் கர்மயோகிகளில் சிறந்தவன். அவன் ஜீவாத்மாவுக்கும் இடைவிடாத தொழிலை விதித்திருக்கிறான் என்று பாரதி குறிப்பிடுகிறார். பாரதி தனது சுயசரிதையில்

"அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி
அகத்திலே அன்பினோர் வெள்ளம்
பொறிகளின் மீது தனியரசாணை
பொழுதெலாம் நினது பேரருளின்

நெறியிலே நாட்டம், கரும யோகத்தில்
நிலைத்திடல் என்றிவையருளாய்
குறிகுணமேது மில்லதாய் அனைத்தாய்க்
குலவிடும் தனிப்பொருளே

என்று பாரதி பாடுகிறார். தன்னைக் கருமயோகத்தில் நிலைத்திட வேண்டுகிறார்.

பாரதி கண்ணனின் முழுமையான உலகப் பெருவடிவத்தையும் கர்மயோக வடிவத்திலேயே காண்கிறார்.அவர் தனது காளிதோத்திரத்தில்

"கர்மயோக மொன்றே - உலகில்
காக்கும் என்னும் வேதம்
தர்ம நீதி சிறிதும் -இங்கே
தவறிடல் என்பது இன்றி
மர்மமான பொருளாம் - நின்றன்
மலரடிக்கண் நெஞ்சம்
செம்மையுற்று நாளும் - சேர்ந்தே
தேசு கூடவேண்டும்" என்று பாடுகிறார்.

3982

பாரத நாட்டு மக்கள் கர்ம யோகத்தின் வழியில்கலியை வீழ்த்தி இந்தப் புண்ணிய பூமியில் கிருதயுகத்தைநிறுவிடக் கூறுகிறார்.

விநாயகர் நான் மணிமாலையில் "வீழ்கக்கலியின் வலியெலாம்கிருதயுகம் தான் மேவுகவே" என்று வேண்டுகிறார்.

" மெய்க்குங்கிருதயுகத்தினையே கொணர்வேன் தெய்வ விதியி.·.தே" என வலியுறுத்திக் கூறுகிறார்.

" கிருதயுகத்தினைக் கேடின்றி நிறுத்த விரதம்நான் கொண்டனன் வெற்றி தருஞ்சுடர் விநாயகன் தாளினை வாழியே என்று தான் கிருதயுகத்தினை நிறுத்திட விரதம் கொண்டுள்ளதாகக் கூறுகிறான்.

" சத்தியயுகத்தை அகத்திருத்தித் திறத்தை நமக்கு அருளிச்செய்யும் உத்தமி" என்று நவராத்திரிப் பாட்டில் உஜ்ஜயினியை வேண்டுகிறார்.

"இடிபட்ட சுவர்போல கலிவிழுந்தான்
கிருதயுகம் எழுகமாதோ"

என்று கிருதயுகத்தை அழைத்து,

எல்லா உயிர்களிலும் நானே இருக்கிறேன் என்றுரைத்தான் கண்ண பெருமான் எல்லாரும் அமரநிலையெய்தும் நன்முறையை இந்தியா உலகிற்கு அளிக்கும் என்னும் நம்பிக்கையுடன் பாரத சமுதாயத்தை வாழ்த்துகிறார்.

நமது பாரத புண்ணிய பூமி, அன்னிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக கடுமையான கரடு முரடான பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. பாரதியின் வழியில் இன்னும் வெதுதூரம் செல்லவேண்டியதிருக்கிறது. பாரதியின் பாரதத்துவ மரபுவழி தொடர வேண்டும்.

பாரதி தனது கவிதைகளைப் பாடும்போது பாரத நாட்டின் எல்லாவித இசை வழி மரபுகளையும் பண்பாடுகளையும்பின் பற்றியிருக்கிறார். கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை, நொண்டிச் சிந்து, கிளிக்கண்ணி, காவடிச்சிந்து, பண்டாரப்பாட்டு, பள்ளுப்பாட்டு, ஆனந்தக் களிப்பு மற்றும் அவர் காலத்தில் வாழையடி வாழையாக நிலவி வந்த பலவகையான நாட்டுப்புற இசை அமைப்பு முறைகளையும் பயன்படுத்தி எல்லாவகையான இசை ரசங்களையும் கையாண்டு வெண்பா, கலித்துறை விருத்தம் அகவல் வசன கவிதை முதலிய பலவகைத் தமிழகக் கவிதை வடிவங்களையும் முன் வைத்துப்பாடியுள்ளார். தமிழ் சமுதாயத்தின் அனைத்து பண்பாட்டு வடிவங்களின் கூட்டு உடன்பாட்டு நிலையில் பாரதி அனைத்தளாவிய தன்மை கொண்ட முழு வடிவத்திலான கவிக்குயிலாகத் திகழ்ந்துள்ளார்.

கடைசியாக அவர்குடுகுடுப்பைப் பாட்டு வடிவத்தையும் விடவில்லை. புதிய கோணங்கியாக வேடம் தரித்து குடுகுடுப்பபைக்காரனாக நம் முன்னே வந்து நின்று நல்ல காலம்வருகிறது என்று குறிசொல்லி மிகவும் அபூர்வமான பல சிறந்த கருத்துக்களை முன்வைத்துப் பாடுகிறார்.

"குடுகுடு, குடுகுடு, குடுகுடு, குடுகுடு
நல்லகாலம் வருகுது, நல்ல காலம் வருகுது.
சாதிகள் சேருது, சண்டைகள் தொலையுது
சொல்லடி சொல்லடி சக்தி, மகாகாளி,
வேத புரத்தாருக்கு நல்ல குறி சொல்லு,
"தரித்திரம் போகுது, செல்வம் வருகுது
படிப்பு வளருது, பாவம் தொலையுது
படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால்
போவான் போவான் ஐயோன்னு போவான்.

வேதபுரத்தில் வியாபாரம் பெருகுது
தொழில் பெருகுது, தொழிலாளி வாழ்வான்
சாத்திரம் வளருது, சூத்திரம் தெரியுது.
எந்திரம் பெருகுது தந்திரம் வளருது
மந்திரம் எல்லாம் வளருது வளருது.

குடுகுடு, குடுகுடு, குடுகுடு, குடுகுடு
சாமிமார்க்கெல்லாம் தைரியம் வளருது
தொப்பை சுருங்குது சுறுசுறுப்பு விளையுது,
எட்டுலட்சுமியும் ஏறிவளருது
பயம் தொலையுது, பாவம் தொலையுது
சாத்திரம் வளருது, சாதி குறையுது
நேத்திரம் திறக்குது நியாயம் தெரியுது
பழைய பயித்தியம் படீலென்று தெளியுது
வீரம் வருகுது மேன்மை கிடைக்குது
சொல்லடி சக்தி மலையாள பகவதி
தர்மம் பெருகுது, தருமம் பெருகுது

என்று பாரதி பாடுகிறார். பாரதி இந்தப் பாடலில் தனது தத்துவம், கொள்கை, வேலைத்திட்டம் முழுவதையும் முன்வைத்து பாரத நாட்டுமக்களுக்கு நல்ல காலம் வருகிறது என்று குடுகுடுப்பைக் காரனாக வந்து குறி சொல்லி நமக்கு நம்பிக் கையூட்டுகிறார்.

பாரதத்தின் பண்பாட்டு வழியில், பாரதி காட்டும் பாதையில் நமது நாடு முன்செல்லட்டும், உலகில் முதன்மை பெறட்டும்.

*****

SPRINGFIELD MATRIC. HR. SEC. No. 3892 CHENNAI



நூலாசிரியர் பற்றி :

இந்நூலாசிரியர் அ.சீனிவாசன் 1925-ம் ஆண்டு, இன்றைய விருதுநகர் மாவட்டம் திருவில்லிபுத்தூர் வட்டம் மகராஜபுரம் கிராமத்தில் பிறந்தவர். சிறு வயது முதலே தேசீய விடுதலை இயக்கத்திலும், காங்கிரஸ் சோஷலிஸ்டு இயக்கத்திலும் பொதுவுடமை இயக்கத்திலும் தொடர்பு கொண்டு தொழிற்சங்கப் பணிகளிலும் அரசியல் பணிகளிலும் ஈடுபட்டவர். தமிழ் இலக்கியங்களிலும் வைணவ இலக்கியங்களிலும் ஈடுபாடு கொண்டவர்.

தனது பள்ளிப்படிப்பை முடித்து விட்டு இரண்டாவது உலகப் போர்காலத்தில் இந்திய விமானப்படையில் தொழில் நுட்பத்துறையில் செய்தித் தொடர்புப் பொறியாளராகப் பயிற்சி பெற்று பணியாற்றியவர்.

விருதுநகர் மாவட்டத்திலும் சென்னை நகர்த்திலும் பல்வேறு தொழிற்சங்கங்களில் பொறுப்பேற்று தொழிற்சங்கத்தலைவராகப் பணியாற்றியவர். ஜன சக்தி நாளிதழின் ஆசிரியராகவும் மார்க்சீய ஒளி ஆசிரியராகவும் பத்து ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியவர்.

தத்துவம், இலக்கியம் பற்றி இருபதுக்கு மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார். தன்னுடைய சிறப்பான எழுத்துப்பணிக்காக சோவியத் நாடு நேரு விருது பெற்றவர். சிறந்த இதழாசிரியாகப் பணியாற்றியமைக்காக கௌரவப்பட்டயம் பெற்றவர்.

கம்பன், வள்ளுவன், இளங்கோ, பாரதி பால் ஈடுபாடுகொண்டு, இப்போது பல இலக்கிய நூல்களை எழுதிவருகிறார்.